46	பிராந்திய சர்வதேச இரட்டைப் பயன்பாட்டு புலனாய்வு கருத்தரங்கு	29.07.2024	02.08.2024	6	ஏற்புடையதல்ல
47	உலக சுங்க அமைப்பு தரவு மாதிரி திட்டக் குழு மற்றும் அதன் உற்றுநோக்குக் குழுவின் 69வது கூட்டம்	13.05.2024	17.05.2024	3	ஏற்புடையதல்ல
48	2024ஆம் ஆண்டுக்கான இந்திய அரசாங்கத்தின் வெளியுறவு அமைச்சின் ITEC புலமைப்பரிசில் -திரு. மதுசங்க	06.05.2024	17.05.2024	1	ஏற்புடையதல்ல
49	UNODC - GMCP பயிற்சி “நமது கடல் சார் எல்லையை வலுப்படுத்தல் : இடர், கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் பற்றியதொரு பார்வை”	01.05.2024	05.05.2024	4	ஏற்புடையதல்ல
		08.05.2024	12.05.2024		ஏற்புடையதல்ல
50	வினைத்திறன்மிக்க சுங்கம், பாதுகாப்புமிக்க எல்லைகள் மற்றும் விரைவான தொடர்பு குறித்த கருத்தரங்கு	23.05.2024	05.06.2024	3	ஏற்புடையதல்ல
51	உலக சுங்க அமைப்பு பிராந்திய சுங்க ஆய்வக வல்லுநர்கள் திட்டம்	14.10.2024	28.11.2024	0	ஏற்புடையதல்ல
52	இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பின் கீழ் இலங்கை பொதுச் சேவை அலுவலர்களுக்கான முதல் -நடுத்தர தொழில் பயிற்சித் திட்டம் 2024/2025	13.05.2024	24.05.2024	5	ஏற்புடையதல்ல
53	சுறாவின் இறகினை அடையாளங்காணல் திட்டம் குறித்த பாடநெறி	25.06.2024	27.06.2024	8	ஏற்புடையதல்ல
54	சர்வதேச நிதி அறிக்கையிடல் தரநிலைகளின் கீழ் சுங்க பெறுமதி மதிப்பீடு தொடர்பான கணக்கியல் பதிவுகளின் பகுப்பாய்வு குறித்த பணிக்குழு வரைவு	10.06.2024	10.06.2025	3	ஏற்புடையதல்ல
55	கடல் சார் பாதுகாப்புத்	03.06.2024	06.06.2024	1	ஏற்புடையதல்ல

	திட்டத்தில் அவுஸ்திரேலியா -வடகிழக்கு சமுத்தர பெண்கள் 2024				
55	உலக சுங்க அமைப்பின் 143/144வது பேரவை	27.06.2024	29.06.2024	2	ஏற்புடையதல்ல
56	இலங்கையில் கடல்சார் பாதுகாப்பினை வலுப்படுத்த கடல்சார் கள விழிப்புணர்வு தொடர்பான நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு	16.05.2024	17.05.2024	2	ஏற்புடையதல்ல
57	புலனாய்வு மற்றும் சான்றுகளைக் கையாளும் பயிற்சித் திட்டம்	27.05.2024	31.05.2024	6	ஏற்புடையதல்ல
58	செயல்திறன் திட்டம் 2024 இற்கான முன்னணி	03.06.2024	07.06.2024	6	ஏற்புடையதல்ல
59	செயல்பாடு Lynx தென்கிழக்காசியா (கட்டம் 2)	24.09.2024	25.09.2024	1	ஏற்புடையதல்ல
60	ஆரம்பகட்ட புலனாய்வு தொடர்பிலான கருத்தரங்கு	10.06.2024	14.06.2024	4	ஏற்புடையதல்ல
		17.06.2024	21.06.2024	4	ஏற்புடையதல்ல
61	சட்டவிரோத புகையிலை முன்னெடுப்பு	03.09.2024	04.09.2024	1	ஏற்புடையதல்ல
62	வனவிலங்கு மற்றும் வனக் குற்றங்களின் நிதி விசாரணைகள் குறித்த பயிற்சி	23.06.2024	26.06.2024	3	ஏற்புடையதல்ல
63	இலங்கையில் கடல்சார் கள விழிப்புணர்வு குறித்த கருத்தரங்கு	06.06.2024	07.06.2024	3	ஏற்புடையதல்ல
64	Wisconsin கருத்திட்ட இடர் அறிக்கை பயிற்சி 2024	18.06.2024	19.06.2024	5	ஏற்புடையதல்ல
65	மலேசியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான, இரசாயன ஆயுதங்களை தடை செய்வதற்கான அமைப்பின் (OPCW) வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம்	24.06.2024	28.06.2024	2	ஏற்புடையதல்ல
66	PCBT ACCU இற்கான உள் அச்சுறுத்தல் பயிற்சி	01.07.2024	05.07.2024	15	ஏற்புடையதல்ல
67	கிழக்கிந்திய சமுத்திரத்தில் போதைப்பொருள் கடத்தலுடன் தொர்புடைய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் வலையமைப்புகள் குறித்த செயல்பாட்டு ஆய்வு தொடர்பான தேசிய ஆலோசனை	24.06.2024	25.06.2024	3	ஏற்புடையதல்ல
68	PRAESIDIO III (Under INAMA இன் கீழான திட்டம்)	29.07.2024	31.07.2024	3	ஏற்புடையதல்ல
69	அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளுக்கான சுதந்திர வர்த்தக துறைமுகங்கள் மற்றும் விரிவான பிணைப்படுத்தப்பட்ட வலயங்கள் குறித்த கருத்தரங்கு	17.07.2024	30.07.2024	1	ஏற்புடையதல்ல
70	தென்கிழக்காசியா சைபர் குற்றத் திட்டம்	05.08.2024	14.08.2024	6	ஏற்புடையதல்ல
71	கள்ளத்தனமான பொருட்களின் வர்த்தகத்திற்கு எதிரான சட்ட அமுலாக்கல் குறித்த இந்து- பசுபிக் கருத்தரங்கு	30.07.2024	02.08.2024	1	ஏற்புடையதல்ல

72	THUNDER குறித்த செயல்பாடு	01.09.2024	15.01.2025	3	ஏற்புடையதல்ல
73	சீர்குலைக்கும் தொழில்நுட்பங்கள் குறித்த உலக சுங்க அமைப்பு ஆசிய பசுபிக் பிராந்திய கருத்தரங்கு	23.09.2024	27.09.2024	1	ஏற்புடையதல்ல
74	தரவு மற்றும் புள்ளிவிவரங்கள் குறித்த பணிக்குழு	02 ஜுலை 2024 முதல்	-	1	ஏற்புடையதல்ல
75	அழைப்பு ஆவணங்கள் - உலக சுங்க அமைப்பு மற்றும் விக்டோரியா பல்கலைக்கழகத்தின் உலகமயமாக்கல் ஆய்வகத்தில் எல்லைகள் (பிரிடிஷ் கொலம்பியா, கனடா)	-	-	1	ஏற்புடையதல்ல
76	அறிவுறுத்தல் சாராத ஆய்வு குறித்த தொழில்நுட்ப நிபுணர்கள் குழுவின் 11வது கூட்டம்	30.09.2024	01.10.2024	2	ஏற்புடையதல்ல
77	சுங்க தகவல் தொழில்நுட்ப முறைமைகளின் பயன்பாடு குறித்த பிராந்திய கருத்தரங்கு, குறிப்பாக அசிகுடா வேல்ட் முறைமை	14.08.2024	16.08.2024	2	ஏற்புடையதல்ல
78	சுங்க ஒழுங்கு முறை குறித்த அறிவுப்பகிர்வு திட்டம்	26.08.2024	30.08.2024	2	ஏற்புடையதல்ல
79	ஆசிய பசுபிக்குக்கான விநியோக தொடர் ஒருமைப்பாட்டுத் திட்டத்தின் 1வது பிராந்திய கருத்தரங்கு	23.09.2024	27.09.2024	2	ஏற்புடையதல்ல
80	தெற்காசிய மற்றும் மேற்காசிய சுங்க எல்லை கலந்துரையாடலுடனான தொடர்புகள் குறித்த இணைந்த கூட்டத்திற்கான பரிந்துரை, இந்தியா	26.09.2024	27.09.2024	1	ஏற்புடையதல்ல
81	ஆசிய- பசுபிக் பிராந்திய நாடுகளுக்கான இ-கழிவு மாற்றங்கள் குறித்த கருத்தரங்கு	09.09.2024	11.09.2024	1	ஏற்புடையதல்ல
82	பிலிப்பைன்ஸ் மூலோபாய வர்த்தக முகாமைத்துவ உச்சி மாநாடு (PHSTM 2024)	09.09.2024	12.09.2024	1	ஏற்புடையதல்ல
83	நிரந்தர தொழில்நுட்பக் குழுவின் 245/246வது அமர்வுகள்	23.10.2024	25.10.2024	4	ஏற்புடையதல்ல
84	வேச்சுவல் கஸ்டம்ஸ் எகடமியின் 20வது ஆங்கிலம்- பேசுகினிற அமர்வு – அங்கீகாரம் பெற்ற நிபுணர்கள்	09.09.2024	13.09.2024	1	ஏற்புடையதல்ல
85	வேச்சுவல் கஸ்டம்ஸ் எகடமியின் 20வது ஆங்கிலம்- பேசுகினிற அமர்வு – புதிதாக நியமிக்கப்பட்ட அலுவலர்கள்	09.09.2024	13.12.2024	5	ஏற்புடையதல்ல
86	சீனாவிற்கும் தெற்காசிய நாடுகளுக்கும் இடையிலான இ-வணிக தரப்படுத்தல் கூட்டுத்தாபனம் குறித்த கருத்தரங்கு. சீனாவில் இடம்பெற்றது	29.08.2024	11.09.2024	1	ஏற்புடையதல்ல
87	எல்லை தாண்டிய புலனாய்வு	26.08.2024	30.08.2024	5	ஏற்புடையதல்ல

	கருத்தரங்கு				
88	கிழக்கிந்திய சமுத்திரத்தில் போதைப்பொருள் கடத்தல் தொடர்புகளை வரைபடமாக்குவது குறித்த பிராந்திய வட்டமேசை மற்றும் முறைமை பகுப்பாய்வு பயிற்சி	27.08.2024	30.08.2024	2	ஏற்புடையதல்ல
89	இலங்கைக்கான சுதந்திர வர்த்தக வலய (துறைமுகம்) கட்டுமானம் குறித்த கருத்தரங்கு	06.09.2024	19.09.2024	1	ஏற்புடையதல்ல
90	உலக சுங்க அமைப்பின் தரவு மாதிரி திட்டக் குழுக்கள் மற்றும் அதன் உற்று நோக்கல் குழுவின் 70வது கூட்டம்	23.09.2024	27.09.2024	2	ஏற்புடையதல்ல
91	IWT பயிற்சி குறித்த INAMA திட்ட ஒன்லைன் பிராந்திய தொடர் கூட்டம்	01.10.2024	-	4	ஏற்புடையதல்ல
92	மீளமைக்கப்பட்ட கியோட்டோ பேரவை முகாமைத்துவ குழு	02.10.2024	03.10.2024	3	ஏற்புடையதல்ல
93	சர்வதேச சுங்க அலுவலர்களுக்கான சுங்க திறன் மேம்பாடு குறித்த 29வது CHRDI கருத்தரங்கு	21.10.2024	28.10.2024	2	ஏற்புடையதல்ல
94	பண மோசடி தொடர்பான ஆசிய பசுபிக் குழுவின் வருடாந்த கூட்டம்	22.09.2024	27.09.2024	1	84500 .00
95	சுங்க ஒத்துழைப்பு குறித்த சார்க் உப குழுவின் பத்தாவது கூட்டம், சார்க் செயலகம், காத்மண்டு. நேபாளம்	01.10.2024	02.10.2024	2	ஏற்புடையதல்ல
96	HSC இன் 74வது அமர்வும் மற்றும் அதன் அமர்வுக்கு முன்னரான பணிக்குழுக் கூட்டம்	16.09.2024	27.09.2024	3	1066500 .00
97	JICA அறிவு இணை உருவாக்கத்திட்டம், சுங்க நிருவாகம்	07.10.2024	01.11.2024	2	ஏற்புடையதல்ல
98	"பாரம்பரிய மற்றும் புதிய பங்காளர்களை நோக்கத்துடன் ஈடுபடுத்தல்" என்ற ஆசிய பசுபிக் சுங்க செய்தி வெளியீடு	-	-	1	ஏற்புடையதல்ல
99	சுங்கம் குறித்த தெற்காசிய உப பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு உப குழுவின் 12வது கூட்டம். திம்பு, பூட்டான்	24.09.2024	25.09.2024	3	ஏற்புடையதல்ல
100	இ- வணிகத் தொகுப்பின் 2வது மீளாய்வு	12.09.2024	13.09.2024	5	ஏற்புடையதல்ல
101	2024 பெல்ட் அன்ட் ரோட் சுங்க சட்ட அமுல்படுத்தல் கருத்தரங்கு	23.09.2024	27.09.2024	1	ஏற்புடையதல்ல
102	பீ.எஸ்.ஐ. எக்சைஸ் பசிபிக் ப்ரோரெக்டர் 24	24.09.2024	27.09.2024	1	ஏற்புடையதல்ல
103	இலங்கைச் சுங்கத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார செயற்படுத்துனர் குறித்த கருத்தரங்கு	07.10.2024	11.10.2024	8	ஏற்புடையதல்ல
104	ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் சுங்க தரவு நிபுணர்களுக்கான கலந்துரையாடல்	17.10.2024	18.10.2024	2	ஏற்புடையதல்ல

105	உலக சுங்க அமைப்பக ஆசிய பசுபிக் பிராந்திய தொடர்பு நிலையங்கள் கூட்டத்தின் 34வது அமர்வு	21.10.2024	25.10.2024	2	ஏற்புடையதல்ல
106	உலகளாவிய தகவல் மற்றும் புலனாய்வு மூலோபாய பணிக்குழுவின் 21வது கூட்டம்	21.10.2024	22.10.2024	16	ஏற்புடையதல்ல
107	தரவு மற்றும் புள்ளிவிவரங்கள் குறித்த பணிக்குழுவின் 5வது கூட்டம்	07.10.2024	09.10.2024	1	ஏற்புடையதல்ல
108	API மற்றும் BRI/PNR தரவு தொடர்பு குழு குறித்த தொடர்பு குழுவின் 19வது கூட்டம்	09.10.2024	10.10.2024	9	ஏற்புடையதல்ல
109	உலக சுங்க அமைப்பு போலியானவை மற்றும் உரிமை மீறிய வெளியீட்டுச் செயல் குறித்த 21வது கூட்டம்	29.10.2024	30.10.2024	2	ஏற்புடையதல்ல
110	செயல்திறன் அளவீட்டு பொறிமுறை திட்டக் குழுவின் 2வது கூட்டம்	25.11.2025	26.11.2025	4	ஏற்புடையதல்ல
111	பயிற்சி முகாமைத்துவம் குறித்த WCO பிராந்திய கருத்தரங்கு	19.11.2024	21.11.2024	1	ஏற்புடையதல்ல
112	WCO மூலோபாயத் திட்டம் 2025- 2028 குறித்த பிராந்திய கருத்தரங்கு	04.10.2024	-	8	ஏற்புடையதல்ல
113	SAFE பணிக் குழுவின் 30வது கூட்டம்	06.11.2024	08.11.2024	3	ஏற்புடையதல்ல
114	சுங்கத்தில் பாலின சமத்துவம் மற்றும் பன்முகத்தன்மைக்கான கட்டமைப்பு	01.10.2024	-	4	ஏற்புடையதல்ல
115	பிராந்திய பயிற்சி மற்றும் தயாரிப்புகளை அடையாளங் காணல் கருத்தரங்கு	06.11.2024	07.11.2024	2	ஏற்புடையதல்ல
116	சுங்க பெறுமதி மதிப்பிடல் குறித்த தொழில்நுட்ப குழுவின் 59வது அமர்வு	14.10.2024	18.10.2024	2	724,000.00
117	2024ஆம் ஆண்டிற்கான தெற்காசிய உப பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு திட்டத்தின் வியாபார வசதியளித்தல் பணிக்குழு கூட்டம் மற்றும் சிரேஷ்ட அலுவலர்கள் கூட்டம்	04.11.2024	06.11.2024	2	ஏற்புடையதல்ல
118	சட்டவிரோத சிகரெட்டுகளை எதிர்ப்பதற்கான பிராந்திய மாநாடு	20.11.2024	21.11.2024	1	ஏற்புடையதல்ல
119	கதிர்வீச்சு எச்சரிக்கைகளின் இரண்டாம் நிலை மற்றும் மதிப்பீடுகள் என்பவற்றுக்கான செய்முறைகள் மற்றும் கருவிகள் குறித்த IAEA தொழில்நுட்பக் கூட்டம், கெயிரோ, எகிப்து	17.11.2024	21.11.2024	1	ஏற்புடையதல்ல
120	உலக சுங்க அமைப்பின் 91வது நட்புறவுத் திட்டம்	03.03.2025	18.04.2025	1	ஏற்புடையதல்ல
121	ரஷ்யா - இலங்கை சுங்க ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவி ஒப்பந்தம்	29.10.2024	30.10.2024	2	8,010.24
122	மீகொங் ட்றகன் (OMD) VI நடவடிக்கை விளக்கவுரை மற்றும் மதிப்பீட்டுக் கூட்டம்	19.11.2024	20.11.2024	2	ஏற்புடையதல்ல
123	பிரதான பொது	04.11.2024	07.11.2024	1	ஏற்புடையதல்ல

	நிகழ்வுகளுக்கான IAEA இன் 20 ஆண்டுகால ஆதரவிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் குறித்த தொழில்நுட்பக் கூட்டம்				
124	WCO INAMA திட்டம் - இடர் முகாமைத்துவத்தின் விளக்கக்காட்சிக்கான கூட்டம்	30.10.2024	30.10.2024	4	ஏற்புடையதல்ல
125	"கடல் பிரதேசத்தில் சான்றுகளைத் திரட்டுவதற்கானதொரு கூட்டான வேலைச் சட்டகம் ஒன்றை விருத்தி செய்தலும் மற்றும் இலங்கையிலுள்ள பாதுகாப்பு நடைமுறைத் தொடரும்" என்பதன் கீழான செயல்பாடுகள்	ஜனவாரி, (2025)	-	2	ஏற்புடையதல்ல
126	அரச அலுவலர்களுக்கான ஏற்றுமதி கட்டுப்பாடுகள் மற்றும் தடைகள் இடர் முகாமைத்தும் என்பவற்றிலான சிறந்த நடைமுறைகள் குறித்த கருத்தரங்கு	04.11.2024	05.11.2024	5	ஏற்புடையதல்ல
127	ஆசிய மற்றும் பசுபிக்கான RILO தேசிய தொடர்பு மையங்களது 35வது நிர்வாகக்கூட்டம்	18.11.2024	19.11.2024	1	3,823.29
128	WCO/UPU தொடர்பு குழுவின் 44வது கூட்டம்	19.11.2024	20.11.2024	1	ஏற்புடையதல்ல
129	பிராந்திய IWT பயிற்சியாளர்களுக்கு பயிற்சியளித்தல் கருத்தரங்கு	25.11.2024	29.11.2024	7	ஏற்புடையதல்ல
130	உலகளாவிய AEO மாநாடு - இந்தியா	28.11.2024	29.11.2024	1	ஏற்புடையதல்ல
131	ஊடுருவு அல்லாத ஆய்வு தொழில் நுட்பங்கள் குறித்த திறன் மேம்பாட்டுத் திட்டம்	02.12.2024	04.12.2024	3	ஏற்புடையதல்ல
132	கலாச்சார சொத்துக்களின் சட்டவிரோத கடத்தலை எதிர்த்து போராடுவது குறித்த பிராந்திய திறன் விருத்தி கருத்தரங்கு	11.12.2024	13.12.2024	2	ஏற்புடையதல்ல
133	UNODC-WCO பயணி மற்றும் சரக்கு எல்லை குழு	08.12.2024	12.12.2024	6	ஏற்புடையதல்ல
134	WCO ஒருமைப்பாட்டு நிபுணர் வருகை மற்றும் கருத்தரங்கு	25.11.2024	28.11.2024	20	26,000.00
135	9வது பிராந்திய சுங்க சட்ட அமுலாக்கல் கூட்டம் 2024	04.12.2024	05.12.2024	2	127,800.00
136	அரசிறை இணக்கப்பாடு மற்றும் மோசடி குறித்த WCO 11வது பணிக்குழு	27.11.2024	28.11.2024	5	ஏற்புடையதல்ல
137	புகையிலை ஏற்றுமதி இடர் மதிப்பீடு குறித்த UNODC பிராந்திய பயிற்சி	18.12.2024	20.12.2024	1	ஏற்புடையதல்ல
138	தற்காலிக அனுமதி குறித்த பேரவைக்கான நிர்வாகக் குழுவின் 23வது கூட்டம்	09.12.2024	10.12.2024	4	ஏற்புடையதல்ல
139	எல்லை தாண்டிய காகிதமற்ற வியாபாரம் மற்றும் வியாபார வசதியளித்தல் என்பவற்றிற்கான BIMSTEC திறன் விருத்தித் திட்டம்	21.01.2025	23.01.2025	1	ஏற்புடையதல்ல
140	4வது WCO RTC இந்தோனேசிய சர்வதேச	08.10.2024	09.10.2024	3	ஏற்புடையதல்ல

	மாநாடு 2024: சுங்கத்தில் சீர்குலைக்கம் தொழில்நுட்பங்கள் மற்றும் பல பங்குதாரர் ஒத்துழைப்பு மூலம் தடையற்ற எதிர்காலத்தை உருவாக்குதல				
141	ATA கானே அமைப்பின் டிஜிடல் மயமாக்கல்	-	-	1	ஏற்புடையதல்ல
142	இடமாற்ற முரண்பாடுகள் மற்றும் தொடர்புடைய சிக்கல்களைத் தீர்ப்பதில் சிறந்த நடைமுறைகளைப் பரிமாறிக்கொள்ளல்	29.01.2024	30.01.2024	1	ஏற்புடையதல்ல
143	உலக சுங்க அமைப்பின் தரவு மாதிரி திட்டக்குழுவின் 71வது கூட்டம்	27.01.2025	31.01.2025	2	ஏற்புடையதல்ல
144	WCO ஒருமைப்பாடு உப குழுவின் 24வது அமர்வு	03.03.2024	04.03.2024	2	ஏற்புடையதல்ல
145	பொருள் தோற்ற இடைத் தொடர்பு குறித்த WCO உலகளாவிய மன்றம்	03.02.2025	04.02.2025	2	ஏற்புடையதல்ல
145	கருத்தரங்கு 2025 : பாதுகாப்பான வர்த்தகம் மற்றும் பயணத்தை எளிதாக்க கனடா மற்றும் இந்து- பசுபிக் வலுவான கூட்டாண்மைகள்	04.02.2025	06.02.2025	1	ஏற்புடையதல்ல
146	இ-வணிகத்திலிருந்து போலிகளை நீக்குதல்" என்ற தலைப்பிலான 2வது கருத்தரங்கு	15.01.2025 - 13.00	15.01.2025 - 15.00	2	ஏற்புடையதல்ல
147	அறிவியர் உப குழுவின் 40வது அமர்வு	20.01.2025	24.01.2025	2	730,000.00
148	WCO INAMA நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு IWT கருத்தரங்கு	24.20.2025	28.02.2025	8	ஏற்புடையதல்ல

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

7.1 இணக்கப்பாட்டு அறிக்கை

இல	பொருத்தமான தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணங்கப்பட்டது / இணங்கப்படவில்லை)	இணக்கப்பாடு இன்மைக்கான விரிவான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கப்பாடு இன்மையினை தவர்க்கும் வகையில் முன்மொழியப்பட்ட உரிய நடவடிக்கைகள்
01	**பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதிக் கூற்றுகள்	இணங்கப்பட்டது		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக்கணக்கு	இணங்கப்பட்டது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக்கணக்குகள் (வர்த்தக முற்பணக்கணக்குகள்)	-		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	-		
1.5	விசேட முற்பணக் கணக்கு	இணங்கப்பட்டது		
1.6	ஏனைய	-		
02	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.2	ஆளுக்குரிய வேதனாதிகள் பதிவு /தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.3	கணக்காய்வு வினவல்களின் பதிவு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கப்பட்டது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பதிவு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது			
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணங்கப்பட்டது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.8	கையிருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.9	இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.10	பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA –N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	இணங்கப்பட்டது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது	இணங்கப்பட்டது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	இணங்கப்பட்டது		
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகளை கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு மேற்கொள்ளுதல்	இணங்கப்பட்டது		
4	**வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்**			

4.1	வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரித்தல்	இணங்கப்பட்டது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	இணங்கப்பட்டது		
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணங்கப்பட்டது		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணங்கப்பட்டது		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டது		
5	**கணக்காய்வு விசாரணைகள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	இணங்கப்பட்டது		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி. பி. 134 (2) DMA 2019 -1 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	நிதிப்பிரமாணம் 134 (2) மற்றும் DMA/1-2019 இற்கு இணங்க, கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்.	பதில்கள் கிடைக்கப் பெற்றன (ஒரு மாத காலத்திற்குள்): 31 பதில்கள் கிடைக்கப் பெற்றன (ஒரு மாத காலத்திற்கு மேலாக): 32	வழமையான தொடர் இயக்கப்பாட்டு நடவடிக்கைகளிலான வேலைப்பழுவின் காரணமாக	உடனடியான பதிலைப் பெற்று கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் கலந்தாராய்வதற்கு பல நினைவூட்டல்களை வினியோகித்தல்
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	இணங்கப்பட்டது		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்.	இணங்கப்பட்டது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	DMA 2019 -1 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காண்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன	இணங்கப்பட்டது		
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2017, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்	இணங்கப்பட்டது		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமாதொரு தொடர்பு அதிகாரி	இணங்கப்பட்டது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன்	இணங்கப்பட்டது		

	படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன			
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன	இணங்கப்பட்டது		
8.5	நி.பி 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது	இணங்கப்பட்டது		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணங்கப்பட்டது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு 06 மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	இணங்கப்பட்டது		
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்	இணங்கப்பட்டது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்து சம்பந்தமாகவும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	இணங்கப்பட்டது		
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	இணங்கப்பட்டது		
9.6	குத்தகைக் காலத்தின் பின்னர், குத்தகை வாகனங்களின் பதிவு புத்தகங்களின் முழுமையான உரித்து மாற்றப்பட்டிருத்தல்	இணங்கப்படவில்லை		
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றுப்படுத்தி அவற்றை கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	இணங்கப்பட்டது		
10.2	மீளாய்வு வருடத்தில் அல்லது அதற்கு முன்னைய வருடங்களிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	இணங்கப்பட்டது		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்.	இணங்கப்பட்டது		
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்.	இணங்கப்பட்டது		
11.2	நி.பி. 94 (1) இன் படி செய்யப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து பயன்படுத்தியதன் பின்னர் வருட இறுதியில் எஞ்சிய ஏற்பாட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் தொடர்ந்திருக்கும்.	இணங்கப்பட்டது		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணங்கப்பட்டது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்.	இணங்கப்பட்டது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	இணங்கப்பட்டது		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலாவதியான வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்	இணங்கப்பட்டது		
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும்	இணங்கப்பட்டது		

	பராமரித்தல்			
14	**முன்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப்புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	இணங்கப்பட்டது		
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்	இணங்கப்பட்டது		
14.3	நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மீறாதவாறு தற்காலிக இடைக்கால பணிமுற்பணத்தை வழங்கல்	இணங்கப்பட்டது		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	இணங்கப்பட்டது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்	இணங்கப்பட்டது		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக்கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்	இணங்கப்பட்டது		
15.3	நி.பி 176 இன் படி நிலுவைத்தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல்	இணங்கப்பட்டது		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	இணங்கப்பட்டது		
16.3	2017.09.20 எனும் தேதியிட்ட மு.சே.சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணங்கப்பட்டது		
17	**பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்து தகவல் வழங்கும் அட்டவணை ஒன்றை இற்றைப்படுத்தி பேணிவருதல்.	இணங்கப்பட்டது		
17.2	நிறுவனம் பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் / குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல்.	(i) இணங்கப்பட்டது (ii) மாற்று நடவடிக்கைகள்		
17.3	தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்.	இணங்கப்பட்டது		
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.	செயல்பாட்டிலுள்ளது		பொதுமக்கள் மற்றும் இறக்குமதியாளர்கள்/ ஏற்றுமதியாளர்கள், சுங்கத்தின் விசாரணை மையத்திற்கு 1915 எனும் இலவச தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமென்பதோடு, இலங்கைச் சுங்கத்தின் வெப்தளத்திலும் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
18.2	சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப்	செயல்பாட்டிலுள்ளது		

	பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம்/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது.			
19	**மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்.	இணங்கப்படவில் லை	மாறாக, உள்ளூர் பயிற்சித்திட்டங்க ளுக்கான வருடாந்த செயல் திட்டத்தினை மனிதவள அபிவிருத்திப் பணிப்பகம் உருவாக்கியள்ள து. இந்த செயல் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட் டுள்ளது. மேலும், இந்த செயல் திட்டம் திணைக்களத்தி ன் ஒவ்வொரு பிரிவின் பயிற்சி தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளது	சுற்றறிக்கையின் பிரகராம், மனித வள திட்டத்தினை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எதிர்காலதத்தில் மேற்கொள்ளப்படும்
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் வருடமொன்றுக்கு குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி வழங்கும் திட்டமானது மேற்படி மனித வள திட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டது		
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டது. (மேற்கண்ட வடிவமானது இலங்கைச் சுங்கத்திற்கு ஏற்றவாறு தனிப்பயனாக்கப்பட்ட து)		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்.	மனித வள அபிவிருத்தித் திட்டத்துடன் இணக்கமுறவில்லை ல. இருப்பினும், திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை ஏற்பாடு செய்து, சுற்றறிக்கைக்கு இணங்க அனைத்து திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் முன்னெடுக்கப்பட் டு நிறைவு செய்யப்பட்டன.	மேல்மட்ட சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் நடுநிலை முகாமைத்துவம் ஆகியவற்றில் இருக்கும் அதிகாரிகள் செயல் திட்டத்தினை உருவாக்குவதில் கூட்டுப் பொறுப்பினைக் கொண்டுள்ளனர்.	சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள படி, ஒரு சிரேஷ்ட அதிகாரியினை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
20	கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்	சகல கணக்காய்வு வினாக்களும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தொடர்புடைய பணிப்பகத்திற்கு அனுப்பப்பட்டன.		

8.1 சட்ட அமுலாக்கல் கொத்தணி

8.1.1 தடுப்புப் பணிப்பகம்

8.1.2 சமூக பாதுகாப்புப் பணிப்பகம்

8.1.2.1 போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு

8.1.2.2 பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமை பாதுகாப்புப் பிரிவு

8.1.2.3 நுகர்வோர் பாதுகாப்புப் பிரிவு

8.1.2.4 துறைமுக மற்றும் விமானச் சரக்கு கட்டுப்பாட்டுப் பிரிவு

8.1.3 மத்திய விசாரணை பணிப்பகம்

8.1.4 மத்திய புலனாய்வு பணிப்பகம்

8.1.5 சட்ட விவகாரங்கள் பணிப்பகம்

8.1.6 இடர் முகாமைத்துவப் பணிப்பகம்

8.1.7 மத்திய அகற்றல் (விற்பனை) பணிப்பகம்

8.1.1 தடுப்புப் பணிப்பகம்

தடுப்புப் பணிப்பகமானது இலங்கைச் சுங்கத்தின் பிரதான சட்ட அமுலாக்கற் பிரிவாகும். சுங்கத்தின் அனைத்து செயல்பாட்டுப் பகுதிகள், குறிப்பாக துறைமுகங்கள், நீர்நிலை எல்லைகள், நீர்வழிகள் மற்றும் பிராந்திய நீர்நிலைகள், சர்வதேச விமான நிலையங்கள், சுதந்திர வர்த்தக வலயங்கள், ஏற்றுமதி செய்முறைப்படுத்தல் வலயங்கள், பொருள் பரிசோதனை சாலைகள் மற்றும் உள்நாட்டு வெளியாக்கல் சாலைகள் போன்றவற்றைக் கண்காணிப்புச் செய்கிறது.

இப்பணிப்பகமானது கீழே குறிப்பிடப்பட்ட மூலோபாய ரீதியாக அமைந்துள்ள கடலோர நகரங்களில் தீவு முழுவதும் நிறுவப்பட்ட பல கிளை அலுவலகங்களையும் உப தடுப்பு காரியாலயங்களையும் கொண்டுள்ளது.

1 நிருவாகம்
2 விசாரணைகள் கிளை
3 செயல்பாட்டுக் கிளை
4 பணம் செலுத்தும் கிளை
5 கொள்கலன் அசைவு கண்காணிப்புக் கிளை
6 கடல் கிளை
7 பிரதான தடுப்பு அலுவலர்கள் அலுவலகம்
8 விற்பனைக் கிளை
9 பாரியதுறைமுக கண்காணிப்பு பிரிவு
10 தடுப்புப் பரிசோதனை பிரிவு
11 நுழைவாயில் அலுவலகம்
12 உப தடுப்புக் காரியாலயம் - நெய்க்கந்த
13 உப தடுப்பு காரியாலயம் - நீர்கொழும்பு
14 உப தடுப்பு காரியாலயம் - கொக்கல
15 உப தடுப்பு காரியாலயம் - காங்கேசந்துறை
16 உப தடுப்பு காரியாலயம் - திருகோணமலை
17 உப தடுப்பு காரியாலயம் - சின்னப்பாடு
18 உப தடுப்பு காரியாலயம் - காலி
19 உப தடுப்பு காரியாலயம் - பேருவல
20 உப தடுப்பு காரியாலயம் - ஹம்பாந்தோட்ட
21 உப தடுப்பு காரியாலயம் - பியகம

பிரதான தொழிற்பாடுகள்

- கள்ளக்கடத்தல், வர்த்தக மோசடிகள், மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றைத் தடுத்தல்.
- சுங்க குற்றங்கள் பற்றிய தகவல்களைப் பெறல், மற்றும் அத்தகைய தகவலின் அடிப்படையில் செயற்படல்.
- சுங்க மோசடிகளை கண்டறிதல், கள்ளக்கடத்தல் பொருட்களை பறிமுதல் செய்தல், புலனாய்வுகள் மற்றும் விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் குற்றவாளிகள் மீது வழக்குத் தொடுத்தல்.
- உரிய அரசிறைச் சேகரிப்பை உறுதிப்படுத்தல்.
- நாட்டின் சமூகப் பொருளாதார, கலாசார மற்றும் சுற்றுச்சூழல்/சுற்றால் சார்ந்த சிறப்பம்சங்களைப் பாதுகாத்தல் மற்றும் தொடர்புபட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தல்
- கொழும்புத் துறைமுகம் மற்றும் ஏனைய துறைமுகங்கள், பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம் மற்றும் மத்தளை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் ஆகியவற்றில் கண்காணிப்பை மேற்கொள்ளல்.
- படகுகளின் நடமாட்டத்தையும் மற்றும் எல்லைப்புற செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தல்.

அரசிறை (ரூபா)

தீர்வைகள் மற்றும் அறவீடுகள்	124,998,308.86
மேலதிக பதிவுகள்	19,303,999.00
அபராதம்	52,806,507.00
தணிக்கப்பட்ட பறிமுதல்கள்	4,366,779,079.10
மேலதிக பறிமுதல்கள்	19,200,000.00
விற்பனைகள் தொடர்பிலான வருமானம்	25,080,583.00
பாதுகாப்பு அறை கட்டணங்கள்	270,600.00
மொத்தம்	**4,608,439,076.96**

கண்டறிதல்கள்

ஆண்டுக்காலப்பகுதியில் தொடங்கப்பட்ட விடயங்களது எண்ணிக்கை	494
ஆண்டுக்காலப்பகுதியில் முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை	375

கொள்கலன்கள் /வாகனங்கள்

ஆண்டுக்காலப்பகுதியில் விடுவிக்கப்பட்ட கொள்கலன்களது எண்ணிக்கை	344
ஆண்டுக்காலப்பகுதியில் விடுவிக்கப்பட்ட வாகனங்களது எண்ணிக்கை	105

8.1.2 சமூக பாதுகாப்புப் பணிப்பகம்

8.1.2.1 போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு

அறிமுகம்

இலங்கைச் சுங்கத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு நாட்டிற்குள் சட்டவிரோத போதைப்பொருள் கட்த்தலைத் தடுப்பதில் பிரதான பங்கு வகிக்கின்றது. இந்த அறிக்கை போதைப்பொருள் பறிமுதல், கண்டறியப்பட்ட இடங்கள், மற்றும் அறிக்கையிடப்பட்ட காலப்பகுதியில் குறித்த சந்துக நபர்கள் வந்த நாடுகள் குறித்த பிரதான புள்ளிவிபரங்களை முன்வைக்கிறது.

தொலை நோக்கு

நாட்டிற்குள் போதைப்பொருட்கள் மற்றும் உளமருட்சிப் போதைகள் போன்றவற்றைக் கடத்திக் கொண்டு வருவதைத் தடுத்து நிறுத்துவதில் முன்னோடியும் இயங்காற்றல் மிக்கதுமானதொரு முகவராக விளங்குதல் மற்றும் போதை முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களை இறக்குமதி செய்தல் மற்றும் அவற்றின் சட்ட விரோதப் பாவனை போன்றவற்றைக் கண்காணித்தல் எமது தொலை நோக்காகும்.

பணி நோக்கு

- போதைப் பொருட்கள் மற்றும் உளமருட்சிப் போதைகளின் உபயோகம் மற்றும் அவற்றை சட்ட விரோதமாக கடத்திச் செல்லல் போன்றவற்றைத் தடுத்தல் மற்றும் அத்தகைய செயற்பாடுகளுக்கு எதிராக போராடுதல்.
- போதைப்பொருள் குறித்தான சட்டங்களை அமுல்படுத்தும் நோக்கில் ஏனைய அரசாங்க சட்ட சபைகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றுடன் கூட்டுறவைப் பேணிப் பணியாற்றுதல்.
- போதைப்பொருள் மற்றும் உளமருட்சிப் போதைகளின் சட்டவிரோதக் கடத்தல் குறித்து பல்வேறு சர்வதேச சமவாயங்களின் கீழான தேசிய கடப்பாடுகளை அமுல்படுத்துவதை உறுதிப்படுத்தல்.
- சம்பந்தப்பட்ட வெளிநாட்டு அதிகாரசபைகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் கூட்டுறவைப் பேணி இணைந்து பணியாற்றுதல்.
- தற்போது காணப்படுகின்றதும் வளர்ந்து வருகின்றதுமான சவால்களை மதிப்பாய்வு செய்து அவற்றைப் பகுப்பாய்வு செய்யும் நோக்கில் பணியாட்களுக்கு பயிற்சி அளித்தல்.
- போதைப் பொருள் துஷ்பிரயோகம் பற்றிய சமூக அறிவினை வழங்கும் நோக்கில் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தல்.

சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள்

- 1869ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க சுங்கக் கட்டளைச் சட்டம்
- 1984 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1929ஆம் ஆண்டின் 17அம் இலக்க நஞ்சு, அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் கட்டளைச் சட்டம்.
- 2022ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நஞ்சு, அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் (திருத்தச்) சட்டம்
- 1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க ஒப்பனைச் சாதனங்கள் மற்றும் மருந்துகள் சட்டம்
- 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க போதைப் பொருட்கள் மற்றும் உளமருட்சிப் போதைகளின் சட்ட விரோதக் கடத்தலுக்கு எதிரான சமவாயம்.
- 2010 மே 10 ஆம் திகதிய 1653/7 ஆம் இலக்க, முன்னோடி இரசாயனப் பதார்த்தக் கட்டுப்பாட்டு அதிகாரசபை ஒழுங்குவிதிகள்.
- 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டம்
- புகையிலை வரி சட்ட ஒழுங்குவிதிகள், 2009 ஜுலை 17 ஆம் திகதிய 1610/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகை
- 1993 ஆம் அண்டின் 22 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவைச் சட்டம்.
- 2018 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க மதுவரிச் சட்டம்

இலங்கைச் சுங்கத்தின் போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவில் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்படும் கடமைகள்

I. பண்டாரநாயக சர்வதேச விமானநிலையத்தில் 24 மணிநேர கண்காணிப்பினை மேற்கொள்ளல்
II. பண்டாரநாயக சர்வதேச விமானநிலையத்தில் சீசீரீவீ கண்காணிப்புக் கெமராக்கள் ஊடாக பயணிகள் மற்றும் அவர்களது நகர்வுகளை கண்காணித்தல்.
III. பயண வழி, வருகின்ற நாடு, பயண முறை மற்றும் நடத்தை சார்ந்த தன்மை போன்ற விடயங்களைக் கருத்திற்கொண்டு, இடரின் அடிப்படையில் பயணிகளை அடையாளங்கண்டு இடைமறித்தல்.

IV. விமானம் மூலமான சரக்குகள், கப்பல் சரக்குகள், தபால் மற்றும் கூரியர் பொருட்கள் தொடர்பில் எழுமாறான கண்காணிப்பினை மேற்கொள்ளல்.
V. மத்திய அஞ்சல் பரிவர்தனை மற்றும் கூரியர் சேவைகளில் தொடர்ச்சியாக சமூகமளித்தல் மற்றும் கண்காணித்தல்.
VI. மத்திய அஞ்சல் பரிவர்தனையில் இடர் போக்குகளை உபயோகித்து, போதைப் பொருள் வருகின்ற நாடுகளில் இருந்து வருகின்ற பொதிகளை எழுமாறாக தடுத்து நிறுத்துதல்.
VII. ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக இடம்பெறக்கூடிய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வாணிபங்களோடு போதைப் பொருட்கள் மற்றும் உளமருட்சிப் பதார்த்தங்கள் ஆகியவற்றின் கடத்தல்களை இனங்கண்டு அவற்றைத் தடுத்தல்.
VIII. நம்பத்தகு தகவல்கள் குறித்தான புலன்விசாரணைகளை மேற்கொள்ளல்.
IX. வீடு வீடாகவும் அதே போன்று பொது மக்களுக்கும் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள அரசாங்க அலுவலர்களுக்கும் விழிப்புணர்வூட்டல்களையும் பயிற்சித் திட்டங்களையும் முன்னெடுத்தல்.
X. முன்னோடி இரசாயனப் பொருள் இறக்குமதிகள், கப்பல் மாற்றி ஏற்றுகைகள் மற்றும் ஏற்றுமதிகள் தொடர்பில் கண்காணிப்பினை மேற்கொள்ளல்.
XI. பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம் போன்ற அமுலாக்கல் நிறுவனங்களுடன் இணைந்து கூட்டான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

போதைப்பொருள் பறிமுதல்கள் குறித்த சாராம்சம்

இக்காலப்பகுதியில், இப்பிரிவானது ரூபா. 2,472,813,179.00 பெறுமதிமிக்க 159,920 கிராம் நிறையினைக் கொண்ட பல்வேறு போதைப்பொருள்களை வெற்றிகரமாக கண்டறிந்து பறிமுதல் செய்தது.

- ஒரு கண்டறிதலுக்கான சராசரி அளவு : 1,881.41 கிராம்
- ஒரு கண்டறிதலுக்கான சராசரி பெறுமதி : ரூபா 29,091,920.00

பின்வரும் அட்டவணை பறிமுதல்களது பொறிமுறையினை விளக்குகிறது:

போதைப் பொருள் பறிமுதல்கள் பற்றிய சாராம்சம்

போதைப் பொருள்களது வகை	கண்டுபிடிக்கப்பட்டவற்றின் மொத்த அளவு (கிராம்)	மொத்த பெறுமதி(ரூபா)
மெதெம்பெட்டமைன்	20,704	449,219,000.00
மெதெம்பெட்டமைன்(ஐஸ்)	7,948	286,910,000.00
மெதெம்பெட்டமைன் / எம்.டீ.எம்.ஏ	2	34,179.00
மறிஜுவானா/ ஹஷீஷ்	120,231	1,051,580,000.00
கோகெயின்	8,514	609,600,000.00
எல்.எஸ்.டீ	11	490,000.00
ஹிரோயின்	2,450	74,300,000.00
ஏம்பிற்றமைன்	60	680,000.00







போதைப் பொருள் வகை மூலம் :

<u>கூடுதலாக கண்டறியப்பட்டவை :</u>

- மறிஜுவானா/ ஹஷீஷ் : 80,981 கிராம், ரூபா 768,819,00 (30 கண்டுபிடிப்புகள்).
- கோகெயின் : 8,514 கிராம், ரூபா 609,600,000 (12 கண்டுபிடிப்புகள்)

<u>ஒரு கண்டறிதலுகடகான அதிகபட்ச பெறுமதி:</u>

- மேதம்பெட்டமைன் (ஐஸ்) : ரூபா 286,910,000 (2 கண்டறிதல்களில் 7,948 கிராம்)

கண்டுபிடிப்புக்கள் இடம்பெற்ற இடங்கள்

பல்வேறு நுழைவு வாயில்கள் மற்றும் அஞ்சல்/சரக்கு வசதி வழங்கல் நிலையங்களில் பறிமுதல் செய்யப்பட்டது. கண்டுபிடிக்கப்பட்ட முக்கிய இடங்கள்:

- பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்
- அஞ்சல் சேவைகள் (தபால் மற்றும் தபால் பொருள் மதிப்பீடு முதலியன)
- சரக்கு கையாளுதல் வசதிகள் (டீ.எச்.எல், சீ.சீ.ஈ, மிட்கோ, கொழும்பு காகோ, ட்றைகோ முதலியன)

அட்டவணை 2: முக்கிய கண்டறிதல் இடங்கள் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட அளவுகள்

கண்டறிதல் இடங்கள்	மொத்த அளவு(கிராம்)	மொத்த பெறுமதி (ரூபா.)
பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்	115,341.164	1,677,754,000.00
அஞ்சல் சேவைகள்	7,701	232,602,179.00
சீ.சீ.ஈ	8,043	315,180,000.00
கொழும்பு காகோ	567	5,660,000.00
சீ.எஸ்.எல்	4,515	45,150,000.00
டீ.எச்.எல்	1,883	18,830,000.00
மிட்கோ	17,976	128,832,000.00
ட்றைகோ	1,977	19,770,000.00
யு.பீ.எஸ்	1,914	29,035,000.00



கண்டறியப்பட்ட இடத்தின் அடிப்படையில்:

<u>முக்கிய இடங்கள்:</u>

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் : 115,341 கிராம், ரூபா. 1,677,754,000 (14 கண்டுபிடிப்பகள்).
மத்தி சரக்குப் பரிசோதனை : 8,043 கிராம், ரூபா. 315,180,000 (9 கண்டுபிடிப்பகள்).
தபால் பொதி : 6,828 கிராம், ரூபா. 221,636,000 (31 கண்டுபிடிப்பகள்).

பிறப்பிட (மூல) நாடுகள்

கண்டுபிடிக்கப்பட்ட போதைப்பொருட்கள் பல்வேறு நாடுகளிலிருந்து வந்ததாகும். இதில் முக்கிய மூல நாடுகள் வருமாறு.

- தாய்லாந்து (அதிக அளவு மர்ஜுஆனா / ஹஸீஸ்)
- மலேசியா (குறிப்பிடத்தக்க அளவு மெத்தம்பேட்டமைன்)
- ஐக்கிய அமெரிக்கா (பல வகையான போதைப்பொருள் இடைமறிக்கப்பட்டது)
- கனடா (அதிக அளவு மறிஜுஆனா பறிமுதல்)
- பாகிஸ்தான் (ஹெராயின் கடத்தல்)
- பிரேசில், கீனியா, உகாண்டா, மடகாஸ்கர் (கோகைன் கடத்தல்)

அட்டவணை : 3 கண்டறியப்பட்ட போதைப்பொருட்களின் பிறப்பிடம்

நாடு	மொத்த அளவு (கிராம்)	மொத்த பெறுமதி (ரூபா.)
தாய்லாந்து	73,170	675,506,000.00
மலேசியா	16,175	379,485,000.00
ஐக்கிய ராஜ்யம்	1,091	12,516,000.00
ஐக்கிய அமேரிக்கா	9,708	384,935,000.00
கனடா	24,915	199,436,179.00
பாகிஸ்தான்	4,353	102,845,000.00
பிரேசில்	132	3,960,000.00
துபாய்	19,679	138,023,000.00
எதியோபியா	2,861	200,270,000.00
பிரான்ஸ்	155	3,694,000.00
ஜேர்மன்	644	11,425,000.00
குவாட்டமாலா	3,101	93,030,000.00
கீனியா	1,802	72,080,000.00
இத்தாலி	270	2,700,000.00
மடகஸ்கார்	814.164	24,800,000.00
நெதர்லாந்து	64	1,850,000.00
சியரா லியோன்	325	130,000,000.00
ஸ்பெயின்	58	788,000.00
உகண்டா	483	33,810,000.00



மூல நாடுகளின் அடிப்படையில்:

முக்கிய மூல நாடுகள்:

- தாய்லாந்து: 73,170 கிராம், ரூபா. 675,506,000 (4 கண்டறிதல்கள்).
- அமெரிக்கா: 9,708 கிராம், ரூபா. 384,935,000 (11 கண்டறிதல்கள்).
- மலேசியா: 16,175 கிராம், ரூபா. 379,485,000 (3 கண்டறிதல்கள்).

குறிப்பிடத்தக்க பறிமுதல்கள்

இந்த ஆண்டில் அதிகூடிய பெறுமதியுடைய போதைப்பொருள் தொடர்பிலான இடைமறிப்புகள் மேற்கொள்ளப்பட்டன:

- தாய்லாந்தில் இருந்து ரூபா. 436.48 மில்லியன் மதிப்புள்ள மொத்தம் 43,648 கிராம் மரிஜுஆனா / ஹஸீஸ் பறிமுதல் செய்யப்பட்டது.
- எத்தியோப்பியாவில் இருந்து ரூபா. 200.27 மில்லியன் மதிப்புள்ள 2,861 கிராம் கோகோயின் பறிமுதல் செய்யப்பட்டது.
- மலேசியாவில் இருந்து ரூபா. 254.92 மில்லியன் மதிப்புள்ள 10,197 கிராம் மெத்தம்பேட்டமைன் பறிமுதல் செய்யப்பட்டது

கண்டறிதல் போக்குகள்

- மிகவும் பொதுவான போதைப்பொருள்: அளவு மற்றும் பெறுமதி இரண்டின் அடிப்படையில் மரிஜுஆனா / ஹஸீஸ் மிகவும் அடிக்கடி கண்டுபிடிக்கப்படும் போதைப்பொருளாக உள்ளது.
- குறிப்பிடத்தக்க கண்டுபிடித்தல்கள்: ஆண்டு முழுவதும் அதிக அளவிலான கோகோயின் மற்றும் மெத்தம்பேட்டமைன் பறிமுதல் செய்யப்பட்டன.

கண்டறிதல் இடம்பெற்ற இடங்கள் மற்றும் தோற்றம்

- பல்வேறு இடங்களில் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது, அஞ்சல் சேவைகள் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் என்பன முதன்மையான கண்டறிதல் நிலையங்களாக இருந்தன.
- சந்தேக நபர்கள் ஜெர்மன், ஐக்கிய ராஜ்சியம், கனடா மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

முடிவு மற்றும் எதிர்கால உபாயங்கள்

2024 ஆம் ஆண்டுக் காலம் முழுவதும் போதைப்பொருள் கண்டறிதலில் இலங்கை சுங்கத்தின் குறிப்பிடத்தக்க முயற்சிகளை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. கண்டுபிடிக்கப்பட்ட சில போதைப்பொருட்களின் அளவு மற்றும் அவற்றின் பெறுமதிகள் பிராந்தியத்தில் போதைப்பொருள் கடத்தலை எதிர்த்துப் போராடுவதில் தொடர்ச்சியான சவால்களை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

இலங்கை சுங்கத்தின் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவானது, மேம்பட்ட கண்காணிப்பு, புலனாய்வு சார்ந்த செயல்பாடுகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு போன்ற நடவடிக்கைகள் மூலம் சட்டவிரோத போதைப்பொருட்களின் உள்வருகையை எதிர்த்துப் போராடுவதற்கான அதன் பணியில் உறுதியாக உள்ளது. முன்னோக்கிச் செல்லும் நோக்கில், போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதில் அதன் திறன்களை வலுப்படுத்தும்

நோக்கில், கண்டறிதல் தொழில்நுட்பத்தில் முன்னேற்றங்களை அடைதல் மற்றும் பணியாளர்களுக்கு அதிக பயிற்சிகளை வழங்கல் போன்றவற்றுக்கு இந்தப் பிரிவு முன்னுரிமை அளிக்கின்றது.

எதிர்கால மூலோபாயத் திட்டங்களை மேம்பாடுத்தும் வகையில், நீண்டகால போக்குகள், கடத்தல் வழிமுறைகள் மற்றும் பொருட்களை மறைத்துக் கொண்டுவரும் முறைகள் போன்றன பற்றிய மேலதிக பகுப்பாய்வுகள் அவசியமாகின்றன. சட்ட அமுலாக்க நடவடிக்கைகளைச் சீர்செய்து, எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும் குறிப்பான தரவுத்தொகுப்புகளின் விரிவான ஆய்வுகள் ஒரு ஆழமான நுண்ணறிவுகளை வழங்கக் கூடும்.

8.1.2.2 உயிர்பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமைப் பாதுகாப்பு பிரிவு

பின்புலம்

சுற்றாடல் சார்ந்த குற்றங்கள் ஒரு முக்கிய பூகோள ரீதியான விடயமாக உருவெடுத்துள்ளதோடு, இது இயற்கை உலகிற்கு மட்டுமல்ல, தேசிய மற்றும் சர்வதேச பாதுகாப்பு, சமூக-பொருளாதார வளர்ச்சி மற்றும் உலகளாவிய சுகாதாரம் போன்றவற்றிலும் கடுமையான அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகிறது. இந்த பூமியானது மனித நடவடிக்கைகளால் மட்டுமே தற்போது ஆறாவது பாரிய அழிவை எதிர்கொண்டு வருவதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். தற்போது, 166,061 இற்கும் மேற்பட்ட இனங்கள் IUCN சிவப்பு பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ளன, இதில் 46,337 க்கும் மேற்பட்ட இனங்கள் அழிந்துபோகும் அபாயத்தில் உள்ளன, இதில் 41% நீர்வாழ் உயிரிகள், 37% சுறா, திருக்கை மற்றும் சிமேராக்கள், 26% நன்னீர் மீன்கள், 21% ஊர்வன, 27% பாலூட்டிகள் மற்றும் 12% பறவைகள் ஆகியவை அடங்கும்.

சட்டவிரோத வனஜீவிகளின் வர்த்த நடவடிக்கைகள் இந்த உயிர்பல்வகைமை நெருக்கடிக்கு கணிசமாக பங்களித்துள்ளதோடு, இது உலகின் நான்காவது பாரிய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றமாகவும் விளங்குகின்றது. இது குறித்தான வருடாந்த பெறுமதி 20 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதோடு, இது போதைப்பொருள், போலித்தயாரிப்புகள் மற்றும் ஆள் கடத்தல் ஆகியவற்றை விடவும் விஞ்சியதாகவும் உள்ளது.

வெப்பமண்டலத்தில் அமைந்துள்ள இலங்கை, உலகின் மிகவும் உயிரியல் ரீதியாக வேறுபட்ட பகுதிகளில் ஒன்றாகும். இருப்பினும், நாட்டின் வளமான பூர்வீக விலங்கினங்களும் மற்றும் தாவர இனங்களும் மனித செயல்பாடுகள் காரணமாக கடுமையான அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன. கூடுதலாக, இலங்கையில் ஏராளமான கனிம வளங்கள் உள்ளனவென்பதோடு, அவற்றில் சில ஒப்பிடமுடியாத தரம் வாய்ந்தவை. இதன் விளைவாக, இந்த வளங்களை உள்ளடக்கிய ஏராளமான கடத்தல் முயற்சிகள் பல ஆண்டுகளாக பதிவாகியுள்ளன.

மேலும், கலாச்சார சொத்துக்களை கொள்ளையடிப்பது என்பது ஒழுங்கமைக்கப்பட்ட எல்லை தாண்டிய குற்றத்தின் பழமையான வடிவங்களில் ஒன்றாகும், மேலும் இது ஒரு பரவலான நிகழ்வாக உருவெடுத்துள்ளது. கலாச்சார பாரம்பரிய கடத்தல் தேசிய பாரம்பரியத்தை குறைத்து, சமூகத்தின் மிகவும் மதிப்புமிக்க கலாச்சார பொக்கிஷங்களை இழக்கச் செய்கிறது என்பதை உணர்ந்து, இலங்கை சுங்கம் இந்தப் பிரச்சினைக்கு முன்னுரிமை அளிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும், பழங்கால ஆயுதங்கள் மற்றும் ஓவியங்கள் முதல் நாணயங்கள், மதப் பொருட்கள் மற்றும் தொல்பொருள் நினைவுச்சின்னங்கள் வரை ஆயிரக்கணக்கான கலைப்பொருட்கள் அருங்காட்சியகங்கள், தேவாலயங்கள், தனியார் சேகரிப்புகள் மற்றும் பொது நிறுவனங்களில் இருந்து மறைந்து விடுகின்றன.

இந்த சட்டவிரோத நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவதன் அவசரத்தை உணர்ந்து, இலங்கை சுங்கம் 1993 இல் உயில்பல்வகைமை, கலாச்சார மற்றும் தேசிய மரபுரிமை பாதுகாப்பு பிரிவினை நிறுவியது. ஆரம்பத்தில் உயிர்பல்வகைமை பாதுகாப்பு பிரிவு என்று அழைக்கப்பட்ட இது, உலகளவில் சுங்க நிர்வாகத்திற்குள் அதன் வகையான முதல் சிறப்பு பிரிவாக கருதப்படுகிறது. அதன் தொடக்கத்திலிருந்து, இலங்கையின் அழிந்து வரும் விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள், இயற்கை வளங்கள் மற்றும் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் இந்த பிரிவு முக்கிய பங்கு வகித்துள்ளது. கூடுதலாக, இலங்கை சுங்கத்தின் சமூக மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நோக்கங்களை வலுப்படுத்துவதில் இப் பிரிவு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது, மேலும் அதன் விலைமதிப்பற்ற உயிர்பலவ்வகைமை மற்றும் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான நாட்டின் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது.

எமது தொலைநோக்கு

உயிர்ப்பல்வகைமை மற்றும் கலாசார மரபுரிமையினைப் பாதுகாப்பதில் தெற்காசியாவில் மிகச் சிறந்த சுங்கப் பிரிவாகத் திகழ்தல்.

எமது பணிநோக்கு

வர்த்தக இலகுவாக்க வசதிகளை வழங்குகின்றன அதேவேளை, உயிர்ப்பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமையினைப் பாதுகாப்பதற்கும், மற்றும் உரிய அரசிறையினை உறுதிப்படுத்துவதற்குமான சட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

கிளை அலுவலகக் கட்டமைப்பு



உயிர்ப்பல்வகைமை மற்றும் தேசிய மரபுரிமைகள் பாதுகாப்புப் பிரிவினால் நிறைவேற்றப்படும் முக்கிய தொழிற்பாடுகள்

- தாவர மற்றும் விலங்கினங்கள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட பொருட்களின் கடத்தலுடன் சம்பந்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களை அமுல்படுத்தல்.
- கனிமங்கள் போன்ற ஏனைய இயற்கை வளங்களைக் கடத்துதலுடன் சம்பந்தப்பட்ட தேசிய சட்டங்களை அமுல்படுத்தல்.
- கலாசாரச் சொத்துக்கள் மற்றும் பாரம்பரியப் பொருட்களைக் கடத்துவதுடன் சம்பந்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களை அமுல்படுத்தல்.
- உரிமப்பத்திரம் மற்றும் அனுமதிப்பத்திரங்களில் கூறப்பட்ட நிபந்தனைகளுடன் இணக்கமுறுவதை உறுதிப்படுத்தல்.
- உயிரியல், இயற்கை மற்றும் கலாசார ரீதியில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களை எல்லை தாண்டிக் கடத்திச் செல்வதை கண்காணிப்பதற்கும் அவற்றை ஒழுங்குபடுத்துவதற்குமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பல்வேறு நிரல் நிறுவனங்களுக்கான கொள்கை வழிகாட்டல்களை வழங்குதல்.
- இலங்கை சுங்க அருங்காட்சியகத்தைப் பராமரித்தல் மற்றும் பார்வையாளர்களுக்கு விரிவான விளக்கங்களை வழங்குதல்.

இயக்கப்பாடு சார்ந்த கட்டமைப்பு



2024ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை

- இவ்வாண்டுக்காலப்பகுதியில் கடத்தல் செயற்பாடுகள் மற்றும் சட்ட இசைவுறாமை போன்றன உள்ளிட்ட 50 சம்பவங்களை இப்பிரிவு இடைமறித்து நிறுத்தியுள்ளது.



உரு 01 : 20243இல் வெவ்வேறுபட்ட பொருள் வகைகளின் அடிப்படையில் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பறிமுதல்களின் எண்ணிக்கை

2024 ஆம் ஆண்டிற்கான விடயம் குறித்த புள்ளிவிபரங்கள்

விபரம்	**பெறுமானம்**
தொடங்கப்பட்ட விடயங்களின் எண்ணிக்கை	05
முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை	07
அறவிடப்பட்ட பறிமுதல்கள் மற்றும் அபராதங்களின் மொத்தத் தொகை (ரூபா)	23,469,036/-
அறவிடப்பட்ட மேலதிக பதிவுகளது மொத்த தொகை (ரூபா)	-
மொத்த விற்பனை நடவடிக்கைகள் (ரூபா)	23,469,036/-
2024ஆம் ஆண்டுக்கான மொத்த அறவீடுகள் (ரூபா)	

அட்டவணை 01

2024 ஆம் ஆண்டில் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான பறிமுதல்கள்

பொருள் வகை	**பறிமுதல் செய்யப்பட்டவைகளின் மொத்த அளவு**
உலர்ந்த கடல் வெள்ளரி	1252.5 கி.கி
பறவை இறகு	01 துண்டுகள்
பறவை கூடு துண்டுகள்	2.37 கி.கி
சிலங்கால அக்வாமின்	40 எண்ணிக்கை
உலர்ந்த மீன் ஃபில்லட்	23,000 கி.கி
உலர்ந்த மீன் மா	01 கி.கி
மீன் மா	18.1 கி.கி
கணேஷ் சிலை	01 அலகு
கோடலஹிம்புட்டு சிப்ஸ்	22.65 கி.கி
கோடலஹிம்புட்டு சிப்ஸ்	27 பொதிகள்
கோடலஹிம்புட்டு குவளைகள	13 எண்ணிக்கை
கோடலஹிம்புட்டு தேயிலை	132 பொதிகள்
உயிருள்ள அல்பினோ சிவப்பு காது ஆமை	01 அலகு
உயிருள்ள தாடி டிராகன்	05 அலகுகள்
உயிருள்ள கோமாளி கத்தி மீன்	02 துண்டுகள்

உயிருள்ள கருப்பு மார்பக இலை ஆமைகள்	01 அலகு
உயிருள்ள ஈ நதி ஆமை	08 அலகுகள்
உயிருள்ள பொதுவான ஸ்னாப்பர் ஆமை	02 அலகுகள்
உயிருள்ள மீன் இனங்கள்	335 அலகுகள்
உயிருள்ள தவளைகள்	31 அலகுகள்
உயிருள்ள உணவு புழு	665 கிராம்
உயிருள்ள முள்ளம்பன்றி	10 அலகுகள்
உயிருள்ள இந்திய கூரை ஆமைகள்	01 அலகு s
உயிருள்ள இகுவானா	04 அலகுகள்
உயிருள்ள செல்லப் பூனை	01 எண்ணிக்கை
உயிருள்ள அலங்கார மீன்	4260 துண்டுகள்
உயிருள்ள சாலமண்டர்	02 துண்டுகள்
உயிருள்ள ரோபோரோவ்ஸ்கி குள்ள வெள்ளெலி	02 துண்டுகள்
உயிருள்ள மஞ்சள் புள்ளிகள் கொண்ட நதி ஆமைகள்	01 அலகு
உயிருள்ள சல்காட்டா ஆமை	12 அலகுகள்
உயிருள்ள சர்க்கரை கிளைடர்	04 அலகுகள்
உயிருள்ள அணில்கள்	05 அலகுகள்
உயிருள்ள ஆமை இனங்கள்	30 அலகுகள்
தாவர மாதிரி	28 துண்டுகள்
மயில் இறகுகள	182 எண்ணிக்கைகள்

அட்டவணை 02

கலந்துரையாடல்கள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள், விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய ஒத்துழைப்புடன் கூடிய பணிகள்

மாதம்	செயற்பாடு
ஜனவாரி	• வனவிலங்கு வர்த்தகத்தின் திறந்த-மூல விசாரணை குறித்த மேம்பட்ட பயிற்சி.
பெப்ரவரி	• புலமைச் சொத்துரிமைச் சட்டங்கள் மற்றும் தயாரிப்பு அடையாளம் காணல் குறித்த கலந்துரையாடல். • சுகாதார மற்றும் தாவர சுகாதார நடவடிக்கைகளின் ஒப்பந்தம் குறித்த உலக வர்த்தக அமைப்பு தேசிய கலந்துரையாடல் (SPS உடன்படிக்கை).
மார்ச்	• தோற்ற விதிமுறைகள் மற்றும் இயைபுமுறை வகைப்பாடு குறித்தான செயலமர்வு • புலனாய்வுத் திறன்கள் மற்றும் சுங்கச் சட்டம் பற்றிய அறிவை வளர்த்தல் குறித்தான பயிற்சித் திட்டம். • NACWC ஆல் பேரழிவு ஆயுதங்களின் பெருக்கத்தைத் தடுப்பது. • தேசிய சிவப்புப் பட்டியல் 2020 - இலங்கையின் தாவரங்களின் பாதுகாப்பு நிலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான செயலமர்வு.
ஏப்ரல்	• மீகாங் டிராகன் செயற்பாடு - VI. • USAID ஆல் நடத்தப்பட்ட தோற்ற விதிமுறைகள் மற்றும் இயைபுமுறை வகைப்பாடு பற்றிய செயலமர்வு.
மே	• கடல் உயிரினங்கள் குறித்த ICCWC IWT பயிற்சி. • 6வது உலகளாவிய அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார செயற்படுத்துனர் மாநாடு.
ஜூன்	• INAMA இந்தியா மற்றும் தெற்காசிய திட்டம் - CITES அமுலாக்கம் பற்றிய பயிற்சி. • IWT துறையில் TOA களுக்கான முன்-சான்றுப்படுத்துகை பற்றிய செயலமர்வு • ATB இன்ரலெக்சுவல் புரோபேட்டி (பிறைவட்) லிமிடட் வழங்கும் புலமைச் சொத்துரிமை வர்த்தகச்சின்ன அடையாளப் பயிற்சி.
ஜூலை	• வனவிலங்கு மற்றும் வனஜீவிகள் சார்ந்த குற்றங்கள் பற்றிய நிதி விசாரணைகள் மீதான பயிற்சி. • PRAESIDO நடவடிக்கை III – முன்-செயல்பாட்டுச் செயலமர்வு • INTA இனால் நடத்தப்பட்ட வர்த்தகச்சின்ன அடையாள விழிப்புணர்வு பற்றிய ஆன்லைன் செயலமர்வு
ஆகஸ்ட்	• தென்கிழக்கு ஆசியா சைபர் குற்றத் திட்டம் (SACP). • வழக்குத் தொடுத்தல் மற்றும் விசாரணை செய்தல் குறித்தான செயலமர்வு • புலனாய்வுத் திறன்களை வளர்ப்பது குறித்த பயிற்சித் திட்டம். • ODS மற்றும் ODS அல்லாதவை குறித்தான செயலமர்வு.

செப்டம்பர்	• Pandora செயல்பாடு IX. • THUNDER செயல்பாடு. • வெளிப்புற நிறுவனங்களுடனான செயலமர்வு. • 2024 பெல்ட் அன்ட் றோட் சுங்க அமுலாக்க ஒத்துழைப்பு பட்டறை.
ஒக்டோபர்	• INAMA கருத்திட்டம் - IWT பயிற்சி குறித்தான ஆன்லைன் பிராந்திய பின்தொடர்தல் கூட்டம். • தேசிய உயிர்பல்வகைமை இலக்குகள் குறித்தான ஆலோசனைச் செயலமர்வு. • வெளியக நிறுவனங்களுடனான செயலமர்வு.
நவம்பர்	• பிராந்திய IWT பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி வழங்கும் செயலமர்வு • தேசிய சுங்க அமுலாக்க வலையமைப்பு பயிற்சித் திட்டம். • DFAR ஆல் கடல் அட்டைகளை அடையாளம் காண்பது குறித்தான செயலமர்வு. • உலக சுங்க அமைப்பின் பிராந்திய சட்டவிரோத வனவிலங்கு வர்த்தக செயலமர்வு - இந்தியா
டிசம்பர்	• இலங்கையில் தீர்மானங்களை மேற்கொள்வதில் இயற்கை மூலதன மதிப்பீட்டை சீரமைத்து ஒருங்கிணைத்தல் குறித்தான செயலமர்வு. • இறால் தொழிலுக்கான தரவு முகாமைத்துவம் மற்றும் தரவுத்தள அமைப்புகள். • கற்பித்தல் முறையியல் தொடர்பில் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் திட்டம் • உதவி தடுப்பு அதிகாரி தொகுதி 02 க்கான குறுங்கால துரித பாடநெறி (டிசம்பர் 2024). • புதிய சுங்க உதவி அத்தியட்சகர்கள்-2024 இற்கான புகுமுகப் பயிற்சி.

8.1.2.2 பாவனையாளர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவு

பாவனையாளர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவானது, நாட்டின் நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் நியமங்களுக்கு எதிராக இறக்குமதி செய்யப்படுகின்ற சரக்குகளின் தரம் மற்றும் தரநியமங்களைக் கட்டுப்படுத்தி அவற்றை கண்காணிக்கும் நோக்கில் 2011 இல் தாபிக்கப்பட்டதாகும். இப் பிரிவானது இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பிலான புலமைச் சொத்துரிமைகள் பற்றிய பிரச்சினைகளைப் பேணுவதற்கான இலங்கைச் சுங்கத்தின் முக்கிய பிரிவாகும். மேலும், நாங்கள் ஏனைய சம்பந்தப்பட்ட முகவரகங்களுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டு சர்வதேச சமவாயங்களின் கடப்பாடுகளை அமுல்படுத்துவதன் மூலம் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும் பங்களிப்புச் செய்கின்றோம்.

பிரதான தொழிற்பாடுகள்

- ஏதேனும் மீறல்கள் மற்றும் மோசடிகளை எதிர்க்கும் நோக்கில், சுங்கச் சட்டங்கள் தொடர்பில் எடுத்துக்கூறப்படுகின்ற புலமைச் சொத்துரிமைச் சட்டம், இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டம், தேசிய மருந்துகள் ஒழுங்குறுத்தல் அதிகாரசபைச் சட்டம், நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, சுகாதாரத் திணைக்களம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு போன்றவற்றின் தேவைப்பாடுகள் குறித்தான கட்டுப்பாட்டினை அமுல்படுத்தல். மேலே கூறப்பட்டுள்ள அதிகாரசபைகளால் மேற்கொள்ளப்படும் அனைத்து இறக்குமதிகளும், அவை சுங்க வளாகங்களில் இருந்து வெளியாக்கப்படும் முன்னர் பாவனையாளர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு பிரிவுக்கு இற்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.
- இந்த நோக்கத்திற்காக, இப்பிரிவானது மேற்படி அதிகாரசபைகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்படுகின்ற ஒப்புதல் பதிவுகளை பேணுதல்.
- சம்பந்தப்பட்ட அதிகார சபைகளுடன் தொடர்பான மேற்படி வியடம் பற்றிய சுங்க நடைமுறைகளை இற்றைப்படுத்தல்.
- அவசியமானவிடத்து இப்பிரிவிலிருந்தான பணியாளரை பரிசோதனை மேற்கொள்ளும் இடங்களில் அமர்த்துதல்.
- அடையாளங்காணப்பட்டுள்ள சுங்க கட்டளைச்சட்டங்கள் மற்றும் பிற தொடர்புடைய சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்படும் ஒழுங்குவிதிகளை மீளாய்வு செய்தல்.
- மேற்படி செயற்பாடுகள் தொடர்பான கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்டங்களோடு சேர்த்து வாசிக்கப்படுகின்ற சுங்கக் கட்டளைச் சட்டத்திற்கேற்ப சட்டங்களை பிரயோகித்தல்.
- நிராகரிக்கப்பட்ட பொருட்களின் மீள் ஏற்றுமதி மற்றும் பிற அபாயகரமான பொருட்களின் இறக்குமதிகளைக் கண்காணித்தல்
- மேற்படி விடயம் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச பேரவைகளில் இலங்கைச் சுங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தல்.
- புலமைச் சொத்துரிமைச் சட்டம் மற்றும் சுற்றாடல் பற்றிய விடயங்களுக்காக தேசிய தொடர்புகொள்ளல் மையமாகத் தொழிற்படல்.
- குறித்த விடயம் தொடர்பில் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல்.
- தேசிய மற்றும் சர்வதேச செயற்பாடுகளில் உலக சுங்க அமைப்பு, இன்டபோல், EUROPOL மற்றும் சுற்றாடல் அதிகார சபை என்பவற்றுடனான கூட்டிணைந்து செயற்படல்.

பிரதான செயற்பாடு –01 :
புலமைச் சொத்துரிமையின் கீழான பொருட்கள் தொடர்பிலான ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதில் ஆற்றல்மிக்க செயற்பாட்டினை அதிகரித்தல்

பிரதான செயற்பாடுகள்	இலக்கு	உண்மை	இதனை அடையப்பெற முடியாதவிடத்து, காரணம்
(1) உரிமையாளர்கள் பற்றிய உத்தியோகபூர்வ பட்டியலைப் பெறுதல் :- • பதிவு செய்யப்பட்ட வியாபாரக் குறியீடுகளை பெறல்; (இலங்கைக்குள் இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்டவை;) மற்றும் புலமைச் சொத்துரிமையின் கீழான பொருட்கள் தொடர்பிலான ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதில் ஆற்றல்மிக்க செயற்பாட்டினை அதிகரிக்கும் வகையில் சுங்கப்பிரகடனம் செய்முறைப்படுத்தும் சகல அலுவலகங்கள் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்கள் என்பவற்றிற்கு தரவினை பரப்புதல் ;	100%	100%	
(2) புலமைச் சொத்துரிமையுடன் தொடர்புபட்ட பொருட்களை இறக்குமதி செய்தலுடன் தொடர்பான ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் சுங்கப்பிரகடனம் செய்முறைப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்களில் கடமைபுரியும் அலுவலர்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்களை மேற்கொள்ளல்	100%	100%	
(3) சிறந்த தன்னார்வ இணக்கப்பாட்டிற்காக மேலே(2)இல் குறிப்பிட்ட தேவைப்பாடுகளை உட்படுத்தி சரக்கு வெளியாக்கல் முகவர்களின் பயிற்சி திட்டத்தினை விருத்தி செய்தல்.	100%	100%	
(4) குறித்த உரிமப்பத்திரம் உடையோர்களுக்கு சுங்க நடைமுறைகள் தொடர்பிலான அறிவினை விருத்தி செய்தல்.	100%	100%	

பிரதான செயற்பாடு - 02 :
4) தேசிய இறக்குமதி மதிப்பீட்டுத் தரவுத்தளப் பிரிவு

இடர் முகாமைத்துவப் பணிப்பகத்தின் இயக்கம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் பின்வரும் நிறுவனக் கட்டமைப்பின் பிரகாரம் முன்னெடுக்கப்படுகின்றன.

இடர் முகாமைத்துவப் பிரிவு – நிறுவனம் சார்ந்த கட்டமைப்பு



1. இடர் மைய சரக்குத் தேரிவு

இலங்கைச் சுங்கத்தின் இடர் மைய சரக்குத் தெரிவுச் செயன்முறையானது, அரசாங்க ஆவணமாக விளங்குகின்ற இடர் முகாமைத்துவ நியமதர இயக்க நடைமுறையில் குறிப்பிடப்பட்ட பணிப்புரைகளுக்கு அமைவாக விருத்தி செய்யப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டுள்ள முன்னதாகத் தீர்மானிக்கப்பட்ட இடர் அளவுகோல் மற்றும் தோற்றவிபரங்களின் அடிப்படையில் அஸிகுடா முறைமையின் தெரிவு மொடியுள் மூலமாக தானியக்க அடிப்படையில் முன்னெடுக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கும் குழுவிலுள்ள ஒரு பகுப்பாய்வாளர் குழுவானது இடர்மிக்க பிரதேசங்களை இனங்காண்டு தொடர்புடைய இடர் தோற்றவிபரங்களைத் தாபிக்கும் பொருட்டு இறக்குமதித் தரவுகளைப் பகுப்பாய்வு செய்கின்றது. இந்தச் செயலாக்கத்தின் தொடர் முன்னேற்றத்தினை இடர் முகாமைத்துவப் பிரிவின் தேர்ந்தெடுக்கும் குழுவானது, மூலோபாய அபிவிருத்தி மற்றும் ஈடுபாட்டுக் குழுவின்/ மூலோபாய அபிவிருத்திக் குழுவின் கண்டிப்பான மேற்பார்வையின் கீழான அவ்வப்போதைய மற்றும் நிகழ்நேர பகுப்பாய்வின் ஊடாக கண்காணிப்புச் செய்து வருகிறது. ஒப்புதலின் பேரில், உயர்-இடர் மிக்க சரக்குகளை அஸிகுடா முறைமையூடாக வினைத்திறன் மிக்க முறையில் இலக்குப்படுத்தும் நோக்கில் குறித்த முறைமையினை இயலச் செய்யும் வகையில், இந்த இடர் தோற்றவிபரங்கள் தேர்ந்தெடுப்பு அளவுகோல் விடயங்களுக்குள் பின்னதாக கூட்டிணைக்கப்படுகின்றன.

2024 இல் சரக்குத் தேர்ந்தெடுப்பு பற்றிய அடைவுகள்

(அ) ஊடுருவிப் பரிசோதிப்பதற்கு ஆற்றுப்படுத்தப்படும் கொள்கலன்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்.

(ஆ) தானியக்க இடர் முகாமைத்துவ முறைமையை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டமானது இரண்டு கட்டங்களாக பிரிக்கப்பட்டள்ளது. அதன் முதலாம் கட்டத்தின் அபிவிருத்திப் பணிக்கான கேள்வு நடைமுறை நிவைபெற்றுள்ளதுடன் வெற்றிகரமான கேள்வுதாரருக்கு கருத்திட்டம் வழங்கப்படுகிறது.

(இ) இடர் மைய சரக்குத் தேர்வுச் செயன்முறையின் முன்னேற்றத்திற்காக தற்போதுள்ள சரக்குத் தேர்ந்தெடுப்பு அளவுகோல் மற்றும் இடர் தோற்றவிபரம் ஆகியவற்றினை மேலும் விருத்தி செய்வதனை தொடர்தல்.

(ஈ) அஸிகுடா முறைமையிலுள்ள கொள்கலன் தேர்ந்தெடுப்பினை நிர்வகிப்பதன் மூலம் கொள்கலன் பரிசோதனை வளாகத்தின் கொள்திறன் மற்றும் எக்ஸ்-கதிர் ஸ்கேன் பரிசோதனை ஆகியவற்றை வினைத்திறன் மிக்க முறையில் உபயோகித்தல்.

(உ) மோசடி செய்கின்ற வர்த்தகர்களை இலக்குப்படுத்தும் நோக்கில் ஒரு இடர் சுட்டியாக வர்த்தகர் தொடர்புப் பொருந்துகை முறைமையினை விருத்தி செய்தல்.

(ஊ) பிற அரச நிறுவனங்களின் ஒப்புதல்களை வேண்டிநிற்கும் சரக்குகளுக்கு வெளிநிலை பரிசோதனை வசதியை அறிமுகப்படுத்துவதன் மூலம் திறமையான மற்றும் பயனுதிமிக்க கொள்கலன் முகாமைத்துவத்திற்கான தேர்ந்தெடுப்பு அளவுகோலினை செயல்படுத்தல்

(எ) பிணைப்படுத்தப்பட்ட சரக்குகளுக்கு பெறுமதி மதிப்பீட்டு அளவுகோலிளை செயல்படுத்தல்.

(ஏ) அசிகுடா முறைமையின் கண்காணிப்புச் செயற்பாட்டில் பயனர் நேயம் மிக்கதும் மற்றும் விபரமான பின்னூட்டல் மிக்கதுமான கட்டுப்பாட்டு முகப்பினை அமுல்படுத்தல்.

(ஐ) இடர் முகாமைத்துவ பணிப்பகத்திலுள்ள அலுவலர்களின் திறன்களை மேம்படுத்தல்.

2. அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் நிகழ்ச்சித்திட்டம்

உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக இலகுவாக்கல் உடன்படிக்கை 2017 பெப்ரவரி 22 ஆம் திகதி நடைமுறைக்கு வந்தபொழுது, எல்லைப்புற வர்த்தக நடவடிக்கைகள் பற்றிய வெளிப்படைத்தன்மை மற்றும் எதிர்வுகூறும் திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் குறிப்பீடு செய்யப்பட்ட, மேற்படி உடன்படிக்கையின் தரநியமங்களை எதிர்கொள்வதற்கான பல்வேறு கடப்பாடுகளை இலங்கை கொண்டிருந்தது. அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் (AEO) நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பிப்பது மேற்படி கடப்பாடுகளை நிறைவுசெய்வதற்கான ஒரு தலையாய தேவைப்பாடாக விளங்கியதோடு, இந்த நோக்கத்திற்காகவே AEO அமுல்படுத்தல் குழுவும் தாபிக்கப்பட்டது. AEO எண்ணக்கருவானது, உயர் மட்ட விநியோகத் தொடர் பாதுகாப்பு, நிதி சார்ந்த உறுதிப்பாடு மற்றும் சுங்கத்தின் சட்டத்திற்கு தொடர்ச்சியான இணக்கப்பாடு ஆகியவற்றை பின்பற்றிய சட்டத்திற்கு இணங்கிச் செல்லக்கூடிய உண்மையான இறக்குமதியாளர்களுக்கும் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கும் இலகுவாக்க வசதியை வழங்குவதனையே இலக்காகக் கொண்டதாகும். இத் தரப்பினர் குறைவான பரிசோதனை, முன்னுரிமை பெற்ற வெளியாக்கல், வழக்கமான பெறுமதி மதிப்பீட்டுப் பரிந்துரையிலிருந்து விலக்களிப்புப் பெறல் போன்ற வசதிகளைப் பெறுவதன் மூலம் பயன்பெற முடியும்.

2024 இல் அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் நிகழ்ச்சித்திட்டம் பற்றிய அடைவுகள்

அ. அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார செயல்பாட்டுத் திட்டத்தின் கட்டமைப்பு, செயற்பாடு மற்றும் அதன் ஆளுகை குறித்தான வரையறைகளை வழங்குகின்ற திணைக்களக் கட்டளையானது, 1530அ எனும் இலக்கமுடைய திணைக்களக் கட்டளையின் கீழ் தயாரிக்கப்பட்டு, மீளாய்வு செய்யப்பட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஆ. வினைத்திறன் மிக்கதும் பயனுறுதி மிக்கதுமான சரிபார்ப்பினை உறுதி செய்யும் வகையில் AEO இன் செயலாக்கப் பிரயோகமானது மதிப்பாய்வு செய்யப்பட்டு திருத்தியமைக்கப்பட்டது.

இ. அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் வரிசை 01 அந்தஸ்தானது 31 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.
ஈ. சம்பந்தப்பட்ட அறிவு மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் நோக்கில், AEO நிகழ்ச்சித்திட்டத்தில் முனைப்புடன் ஈடுபட்ட அதிகாரிகளுக்கான AEO செல்லுபடியாக்கல் குறித்தான உள்ளகப் பயிற்சியளிப்புக்கள் உள்ளடங்கலாக, சுங்க அதிகாரிகளுக்கான விழிப்பூட்டல் செயலமர்வுகளும் முன்னெடுக்கப்பட்டன.
உ. ஏனைய பங்குதாரர்களுக்கான விழிப்பணர்வு அமர்வுகள் நடாத்தப்பட்டன.

3. செயலாக்க மீள்-பொறிமுறையாக்கமும் விசாரணைகளும்

முன்னெடுக்கப்பட்ட இடர் மதிப்பாய்வுகளின் பெறுபேறுகளின் பிரகாரம், செயன்முறை மீள்-பொறிமுறையாக்கல் குழுவானது குறித்த செயன்முறையிலுள்ள குறைபாடுகள் மற்றும் இடைவெளிகளை இனங்காணும் வகையில் தற்போதுள்ள செயன்முறைப் பொருத்தப்பாட்டினை ஒரு முழுமையான பகுப்பாய்வினை மேற்கொண்டு வருகிறது. தற்போதுள்ள முறைமைகளில் இனங்காணப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பரிந்துரைகள் ஆகியன சுங்கப் பிரதிப் பணிப்பாளரைத் தவிசாளராகக் கொண்ட இடர் முகாமைத்துவத்தின் பணிப்பகத்தின் ஊடாக சிரேஷ்ட முகாமைத்துவத்தின் அவதானத்திற்கு அறிக்கை செய்யப்படுகின்றன. சிரேஷ்ட முகாமைத்துவத்தின் ஒப்புதல் மற்றும் பரிந்துரைகளின் பேரில், அமுலாக்க நடவடிக்கையானது ஏதேனும் தடைகள் மற்றும் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை இனங்காணும் வகையில் இடர் முகாமைத்துவப் பணிப்பகத்தின் நெருங்கிய மேற்பார்வையின் கீழ் தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டு வருகிறது. இது மேலதிக மேம்பாடுகளுக்கு இட்டுச் செல்லவதற்கு பயன்மிக்கதாக விளங்கும்.

2024 இல் செயலாக்க மீள்-பொறிமுறையாக்க அடைவுகள்

- இறக்குமதி கப்பற்சரக்கு வெளியாக்கல் நடைமுறையானது பல்வேறு அரச நிறுவனங்களின் ஒப்புதல்களை உள்ளடக்கியுள்ளது. ஏற்கனவே உள்ள நடைமுறைகளுக்கேற்ப, அத்தகைய சகல கொள்கலன்களும் பரிசோதனை சாலைகளுக்கு அனுப்பப்பட்டன. இந்த ஆண்டின் பிற்பகுதியில் கொள்கலன் நெரிசல் பிரச்சினையை காத்திரமாகத் தீர்ப்பதற்கானதொரு நடவடிக்கையாக, இலங்கைச் சங்கம் தவிர்ந்த பல்வேறு அரச நிறுவனங்களிடமிருந்து பல்வேறு ஒப்புதல்கள் தேவைப்படும் இறக்குமதி FCL சரக்குகளுக்கு வெளிபுற குழு வசதி அறிமுகப்படுத்தப்பட்டது. அது தொடர்பான சுங்க செயல்முறை வெற்றிகரமாக வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. இது கொள்கலன் நெரிசலினை நிர்வகிப்பதற்கும் மற்றும் சரக்கு வெளியாக்கலினை விரைவுபடுத்துவதற்கும் மிகவும் பயனுள்ள கருவியாக மாறியுள்ளது.
- இந்த ஆண்டின் பிற்பகுதியில் கொள்கலன் நெரிசல் பிரச்சினையினை காத்திரம் மிக்க முறையில் எதிர்கொள்வதற்கானதெரு நடவடிக்கையாகவும் மற்றும் குறைந்த இடப் பிரதேசத்தையும் குறைந்த வசதிகளையும் கொண்ட பரிசோதனை சாலைகளில் மிதவை கண்ணாடிகளை சோதனை செய்வதல் குறித்தான இயற்தன்மை மற்றும் சிரமங்களைக் கருத்திற்கொண்டும், மிதவைக் கண்ணாடி இறக்குமதி செய்யும் குறைந்த இடர் கொண்ட இறக்குமதியாளர்களின் பட்டியலுக்கு வெளிப்பற வசதி வழங்கப்பட்டது.

விசாரணைகள்

மிகவும் அனுபவம் பெற்ற விசாரணை அதிகாரிகளைக் கொண்ட அர்ப்பணிப்புமிக்கதொரு குழுவானது, தற்போதைய சுங்கச் செயன்முறைகளில் உள்ள இடர் பிரதேசங்களையும் குறைபாடுகளையும் இனங்காணும் நோக்குடன் உள்நோக்கம் கொண்ட மோசடிகளைக் கண்டுபிடித்து அவற்றை விசாரணை செய்து வருகிறது. இத்தகைய விசாரணைகளின் பிரதான நோக்கம் யாதெனில், பல்வேறு இடர் பிரதேசங்களை இனங்கண்டு அவற்றை திணைக்களத்தின் இடர் முகாமைத்துவக் குறிக்கோள்களை அடைவதில் தேர்ந்தெடுப்பு மற்றும் மீள்-பொறிமுறையாக்கச் செயன்முறைக்கு உபயோகிப்பதாகும். 2024 இல் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் சாராம்சம் ஒன்று கீழே அட்டவணையில் தரப்படுகிறது.

2024 இல் இடம்பெற்ற விசாரணைகள் பற்றிய அடைவுகள்

1	2024ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை	108
2	2024 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை (நிறைவுசெய்யப்பட்டவை+பொருட்கள் அகற்றப்பட்ட+நிலுவையிலுள்ள கொடுப்பனவு+வங்கி உத்தரவாதங்களுன் விடுவிக்கப்பட்டவை)	73
3	2024 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட வழக்குகளில் அறவீடுகள் மேற்கொள்ளப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	66
4	2024 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட வழக்குகளில் NFA வழக்குகளின் மொத்த எண்ணிக்கை	7
5	2024 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட வழக்குகளில் விசாரணை செய்யப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை	35
6	வெற்றியளிப்பு வீதம் (அறவீடுகள் ஈட்டப்பட்ட வழக்குகள் / தீர்ப்பளிக்கப்பட்ட விடயங்களது மொத்த எண்ணிக்கை * 100)	90.41 %
7	2024ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட வழக்குகளில் இருந்தான அபராதம் + மே.பதிவு + விற்பனை வருமானங்கள் மற்றும் பறிமுதல்களது மொத்தம் (ரூபா)	368,945,211
8	ஒரு வெற்றிகரமான வழக்கு மூலமான சராசரி அறவீடு (ரூபா)	5,590,079

9	2024ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட வழக்குகளில் இதுவரை செலுத்தப்பட்ட மொத்த அறவீட்டுத் தொகை (ரூபா)	368,945,211
10	2024ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிலுவையிலான வழக்குகளது மொத்த எண்ணிக்கை	154
11	2024ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிலுவையில் இருந்த வழக்குகளில் முடிவுறுத்தப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை	53
12	2024ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிலுவையில் இருந்த வழக்குகளில் விசாரணையில் உள்ள வழக்குகளின் மொத்த எண்ணிக்கை	101
13	2024ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிலுவையில் இருந்த வழக்குகளில் அபராதம் + மே.பதிவு + விற்பனை வருமானங்கள் மற்றும் பறிமுதல்களது மொத்தம்(ரூபா)	43,817,113

4. தேசிய இறக்குமதி பெறுமதி மதிப்பிடல் தரவுத்தள பிரவு வெப்தளம் மற்றும் தரவுநிரல் பற்றிய பராமரிப்பு

தேசிய இறக்குமதி பெறுமதியிடல் தரவுத்தள அலகானது இடர் முகாமைத்துவம் பற்றிய நோக்கத்திற்கான தரவுத்தளத்தின் விருத்தி மற்றும் விரிவாக்கப் பணிகளை துரிதப்படுத்தும் நோக்குடன் இடர் முகாமைத்துவப் பணிப்பகத்தின் நோக்கெல்லையின் கீழ் 2023 இல் கொண்டுவரப்பட்டது. இறக்குமதிப் பொருட்களுக்கான ஆற்றுப்படுத்தல் பெறுமதிகள் தவிர்ந்த பல்வேறு இயக்கப்பாட்டுக் கருவிகள் விருத்தி செய்யப்பட்டுள்ளதோடு, இவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இலகுவாக்கத்தினை அளிக்கின்ற அதேவேளை, பெறுமதி மதிப்பிடல் தரவுத்தளத்தினை அணுகும் அதிகாரமானது பெறுமதிமதிப்பீட்டுப் பணிப்பகத்தின் அதிகாரிகளுக்கும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. குறித்த தரவுத்தளமானது தானியக்க இடர் முகாமைத்துவ முறைமை ஒன்றினை அபிவிருத்தி செய்வதற்கான அடிப்படையாக மேலும் உபயோகிக்கப்படுகிறது.

பெறுமதி மதிப்பிடல் தரவுத்தளம் குறித்தான அடைவுகள்

1. 2831 எண்ணிக்கையான பரிமாற முடியாத பெறுமதிகள் இற்றைப்படுத்தப்பட்டன.
2. NIVDU தளத்தினை இடர் முகாமைத்துவ முறை வெப் தளத்திற்கு மாற்றுதல்
3. 55 NIVDU பயனர் கணக்குகள் வழங்கப்பட்டன.

இலங்கைச் சுங்கத்திற்கானதொரு தானியக்க இடர் முகாமைத்துவ முறைமையினை விருத்தி செய்தல்

தானியக்க இடர் முகாமைத்துவ முறைமை ஒன்றினை நடைமுறைப்படுத்துவதானது இலங்கையின் இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகத்தினுள் ஒரு முக்கியமான தவிர்க்க முடியாத அம்சமாக விளங்குகின்றது. தானியக்க இடர் முகாமைத்துவ முறைமை ஒன்றினை அடைந்துகொள்வதற்கான அவசரத் தேவைப்பாடு தொடர்பில் நிதி அமைச்சு உள்ளிட்ட உயர் மட்ட முகாமைத்துவத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், பொதுவான இடர் முகாமைத்துவத் தீர்வுகளுடன் சம்பந்தப்பட்ட தடுக்கத்தக்க செலவுகள் காரணமாக அத்தகையதொரு முறைமையினைப் பெற்றுக் கொள்வதற்கான தீர்மானம் பிற்போடப்பட்டது. இருப்பினும், இந்த முன்னெடுப்பின் முக்கியத்துவத்தினை உணர்ந்து, திருத்தம் செய்யப்பட்ட இடர் முகாமைத்துவ முறைமையொன்றினை விருத்தி செய்வதை மையமாகக் கொண்ட உள்ளக பிரயத்தனங்களை இடர் முகாமைத்துவப் பிரிவு முன்னெடுத்துள்ளது. தானியக்க இடர் முகாமைத்துவ முறைமை ஒன்றின் முன்மாதிரியொன்று, மேற்படி முயற்சியின் ஆரம்ப கட்டத்தினைக் குறிக்கும் வகையில் வெற்றிகரமாக விருத்தி செய்யப்பட்டுள்ளது. இதனை ஒரு முன்னேற்றகரமும் முழுத் தொழில்நுட்பமும் கொண்ட முறைமை ஒன்றாக மேம்படுத்தும் நோக்கில், மென்பாக விருத்தியாளர்கள் இது தொடர்பில் ஈடுபடவுள்ளனர். இந்த அபிவிருத்திக்கு வசதியளிக்கும் வகையில், அரசாங்கம் இ.ரூபா 100 மில்லியன் தொகையினை 2024 ஆம் நிதி ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் ஒதுக்கியுள்ளது.

15.08.2024 அன்று, மொத்த திட்டம் இரண்டு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ARMS கட்டம் 1 இன் கேள்வுமனு நடைமுறையானது 24.09.2024 - 30.12.2024 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை, ARMS கட்டம் 1 இன் அபிவிருத்திக்கான ஏலம் வழங்கும் நடைமுறை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, வெற்றிகரமான ஏலதாரருக்கு கருத்திட்டம் வழங்கப்படுகிறது. 2024 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட 100 மில்லியன் ரூபாயில் 58 மில்லியன் விசேட வைப்புத்தொகையாகப் பேணப்படுகிறது. ARMS கட்டம் 1 இன் கேள்வுமனு செயல்முறை பூர்த்திசெய்யப்பட்டு, அதன் அபிவிருத்திச் செயன்முறை இடம்பெற்று வருகிறது.

செயற்திட்டத்தின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் இடர் முகாமைத்துவப் பணிப்பகத்தின் செயலாற்றுகை

பிரதான பகுதி	இலக்குகள்	எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள்	பிரதான செயலாற்றுகைச் சுட்டிகள்	நிலைமை	
				எதிர்பார்க்கை	பூர்த்தி செய்யப்பட்டவை
இடர் அடிப்படையிலான சரக்குத் தெரிவு மற்றும் இடர் முகாமைத்துவம்					
1. இலங்கைச் சுங்கத்தின் இடர் முகாமைத்துவச் செயல்முறையினை காத்திரமான முறையில் மேம்படுத்திக் கண்காணித்தல்	1. RMC உடனான ஒருங்கிணைப்பு	1. இடர் முகாமைத்துவக் குழுவிற்கான இடர் பகுப்பாய்வு அறிக்கைகளை தயாரித்தல்	இடர் முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	50 அறிக்கைகள்
		2. வர்த்தகர்களின் கோரிக்கைகளின் பேரில் இடர் முகாமைத்துவ குழுவிற்கு அறிக்கைகளை தயாரித்தல்	இடர் முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	21 அறிக்கைகள் (இடர் முகாமைத்துவ பணிப்பக சிரேஷ்ட சுங்கப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டவை)
		3. இடர் முகாமைத்துவ குழுக் கூட்டங்களைக் கூட்டுதல்	கூட்டப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை	ஒரு வருடத்திற்கு 12	12 கூட்டங்கள் கூட்டப்பட்டன.
		4. இடர் முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் பங்கேற்றல்	சமுகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை	ஒரு வருடத்திற்கு 12	12 கூட்டங்களுக்குச் சமுகமளிக்கப்பட்டது
		5. இடர் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் கூட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் விநியோகித்தல்	தயாரிக்கப்பட்ட கூட்ட அறிக்கைகள் எண்ணிக்கை	ஒரு வருடத்திற்கு 12	கூட்டங்களின் கூட்ட அறிக்கைகள் விநியோகிக்கப்பட்டன.
	2. ஒவ்வொரு பணிப்பகத்தினதும் இடர் அறிக்கையிடல் அதிகாரிகளுடனான ஒருங்கிணைப்பு	1.இடர் அறிக்கையிடல் அதிகாரிகளுக்கு பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் அமர்வுகளை நடாத்துதல்	நடாத்தப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	அதிகாரிகள் பற்றாக்குறை, நேரமின்மை மற்றும் இடர் அறிக்கையிடல் அதிகாரிகளின் இடமாற்றங்கள் காரணமாக, இவ்வாண்டுக் காலப்பகுதியில் நிறைவு செய்ய முடியவில்லை.
		2. இடர் அறிக்கையிடல் அதிகாரிகளுடனான கலந்துரையாடல்கள்	இடம்பெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	
		3. தற்போதைய செயன்முறையிள்ள இடர்கள், பிரச்சினைகள் மற்றும் வெளியேறும் வழிகளை அடையாளங்காணல்	தீர்க்கப்பட்ட பிரச்சினைகளது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	
	3. ஏனைய ஒழுங்குபடுத்தல் அதிகார சபைகள் மற்றும் பிற எல்லை நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு	1. ஏனைய ஒழுங்குபடுத்தல் அதிகார சபைகள் மற்றும் பிற நிறுவனங்களுடனான கலந்துரையாடல்	இடம்பெற்ற கலந்துரையாடல்களின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	09 கூட்டங்கள்
		2. தொடர்புடைய புரிந்துணர்வு ஒப்பந்தம் / ஆவணங்கள் / அறிவுறுத்தல்களை தயாரித்தல்	தயாரிக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	09 கடிதத் தொடர்பு
		3. தற்போதைய செயன்முறையிலுள்ள இடர்கள்,	தீர்க்கப்பட்ட பிரச்சினைகளது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	06 தடைகள் அடையாளங்காணப்பட்டு சரி

		பிரச்சினைகள் மற்றும் வெளியேறும் வழிகளை அடையாளங்காணல			செய்யப்பட்டன
	4. பயனுறுதிமிக்க இடர் முகாமைத்துவ செயல்முறைக்கான கண்காணிப்பு	1. RMD, RRO மற்றும் RMC அதிகாரிகளுடனான கலந்துரையாடல்	இடம்பெற்ற கலந்துரையாடல்களின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	34 கூட்டங்கள்
		2.இடர் பதிவேட்டினை மீளாய்வு செய்தல்	தயாரிக்கப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	02 ஆவணங்கள்
		3. இடர் பதிவேட்டினை இற்றைப்படுத்தி, இடர் முகாமைத்துவ குழுவிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெறல்	இடர் பதிவேட்டில் இற்றைப்படுத்தப்பட்டவைகளின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	அதிகாரிகள் பற்றாக்குறை, நேரமின்மை காரணமாக, இவ்வாண்டுக் காலப்பகுதியில் நிறைவு செய்ய முடியவில்லை
2. பயனுறுதிமிக்க சரக்குத் தெரிவு செயல்முறையினை அமுல்படுத்தல்	1. மோசடியான சரக்குகளை சோதனை செய்யாமல் விடுவிப்பதைக் குறைத்தல் மற்றும் ஊடுருவிய பரிசோதனை அவசியமற்ற குறைந்த இடர் கொண்ட சரக்குகளின் விடுவிப்பை அதிகரித்தல்.	1. தற்போதைய தெரிவு விதிமுறைகள்/ தெரிவுப் பட்டியல்களை மீளாய்வு செய்தல்	இடம்பெற்ற மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	221 மீளாய்வுக் கூட்டங்கள்
		2. தெரிவு விதிமுறை மாற்றங்கள் பற்றிய சாத்தியப்பாட்டினை மதிப்பிடுதல்	தெரிவு விதிமுறைகள் மீதான மீளாய்வுகளின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	64 மீளாய்வுகள்
		3. தெரிவுப் பட்டியல் மாற்றங்கள் பற்றிய சாத்தியப்பாட்டினை மதிப்பிடுதல்	தெரிவுப் பட்டியல்கள் மீதான மீளாய்வுகளின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	267 மீளாய்வுகள்
		4. தெரிவு விதிமுறை மாற்றங்கள் தொடர்பிலான உருவகப்படுத்துதல்களை இயக்குதல்	விதிமுறை மாற்றங்கள் தொடர்பில் இயங்கும் உருவகப்படுத்தல்களின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	224 உருவகப்படுத்தல்கள்
		5. தெரிவுப் பட்டியல் மாற்றங்கள் தொடர்பிலான உருவகப்படுத்துதல்களை இயக்குதல்	பட்டடியல் மாற்றங்கள் தொடர்பில் இயங்கும் உருவகப்படுத்தல்களின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	567 உருவகப்படுத்தல்கள்
		6. தெரிவு விதிமுறைக்கான திருத்தங்களை மேற்கொள்ளல்	மேற்கொள்ளப்பட்ட விதிமுறைத் திருத்தங்களின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	37 திருத்தங்கள் (30 விதிமுறைகள்)
		7. தெரிவு பட்டியல்களுக்கான திருத்தங்களை மேற்கொள்ளல்	மேற்கொள்ளப்பட்ட பட்டியல் திருத்தங்களின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	148 திருத்தங்கள் (126 பட்டியல்கள்)
	2. சரக்குத் தெரிவு தொடர்பிலான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல்	1. தெரிவு தொடர்பிலான உள்ளக பயிற்சிகளை நடாத்துதல்	வழங்கப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	20 பயிற்சிகள்
		2. விழிப்புணர்வு அமர்வுகள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்துதல்	விழிப்புணர்வு அமர்வுகள் மற்றும் கலந்துரையாடல்களின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	07 விழிப்புணர்வூட்டல் அமர்வுகள்
	3. இடர் அடிப்படையிலான சரக்குத் தெரிவினை கண்காணித்தல்	1. இடர் அறிக்கையிடல் முகப்பினை அபிவிருத்தி செய்தல்	இடர் அறிக்கையிடல் முகப்பு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது	2024.06.30 இல் நிறைவடையும்	நிறைவடைந்துள்ளது
		2. நாளாந்த / மாதாந்த சுருக்க	தயாரிக்கப்பட்ட நாளாந்த /	ஏற்புடையதல்ல	125 அறிக்கைகள்

		அறிக்கைகளை தயாரித்தல்	மாதாந்த அறிக்கைகளின் எண்ணிக்கை		
		3. சுருக்க அறிக்கைகளை பகுப்பாய்வு செய்தல்	பகுப்பாய்வு செய்யப்பட்ட சுருக்க அறிக்கைகளின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	80 பகுப்பாய்வுகள்
		4. தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் பற்றிய கலந்துரையாடல்கள்	தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	45 கலந்துரையாடல்கள்
		5. தேவைப்பாடுகளின் பேரில் பிற ஏதேனும் பகுப்பாய்வு மற்றும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்	பகுப்பாய்வு மற்றும் கலந்துரையாடல்களின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	32 பகுப்பாய்வுகள்
	4. ஒரு தானியக்க இடர் முகாமைத்துவ முறைமையினை (ARMS) விருத்தி செய்து உபயோகப்படுத்தல்	1. முறைமையின் விபரக்குறிப்புகள் தொடர்பிலான முழுமையான ஆவணத்தினை உருவாக்கதல்	கணினி விபரக்குறிப்பு ஆவணம் நிறைவு செய்யப்படுதல்	2024.03.31 இல் நிறைவுறுகிறது	Completed நிறைவடைந்துள்ளது
		2. தானியக்க இடர் முகாமைத்துவ முறையின் முன்மாதிரியின் அபிவிருத்திப் பணியினை நிறைவு செய்தல்	முன்மாதிரி பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.	31.03.2024இல் நிறைவுறுகிறது	நிறைவடைந்துள்ளது
		3. தானியக்க இடர் முகாமைத்துவ முறையினை மேம்படுத்த மேலதிக நிதி உதவியினை கண்டறிதல்	மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் எண்ணிக்கை	31.03.2024	05 முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தானியக்க இடர் 2024 ஒதுக்கீடானது முகாமைத்துவ முறையின் 1ஆம் கட்டத்திற்கானதொரு விசேட வைப்புத் தொகைக்கு மாற்றப்பட்டதுடன் முதல் கட்ட செலுத்துகை 2025.01.31ஆந் திகதிக்குள் மேற்கொள்ளப்படும்
		4. தானியக்க இடர் முகாமைத்துவ முறையினை மேம்படுத்துவதற்கான பொருத்தமான முறை மேம்படுத்துநர் /பொறிமுறையினை கண்டறிதல்	மேம்படுத்துகையினை உருவாக்குதல்	2024.12.31 இற்குள் நிறைவு செய்தல்	திட்டமானது 15.08.2024 அன்று இரண்டு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ARMS கட்டம் 1 இன் விருத்திக்கான கேள்வு நடைமுறைகள் நிறைவடைந்துள்ளன, மேலும் வெற்றிகரமான கேள்வுதாரருக்கு திட்டம் வழங்கப்படுகிறது. தொடர்பு கையொப்பமிடுதல் நிலுவையில் உள்ளதுடன்
		5. தானியக்க இடர் முகாமைத்துவ முறை அமுல்படுத்தலினை நிறைவு செய்தல்	தானியக்க இடர் முகாமைத்துவ முறை நிறைவு செய்யப்படுதல்		

					ஆரம்பகட்ட பணிகள் நடந்து வருகின்றன.
		6. தானியக்க இடர் முகாமைத்துவ முறையினை சோதனை செய்தல் மற்றும் உருவகப்படுத்தல்	உருவகப்படுத்தப்பட்ட / பரிசோதிக்கப்பட்ட சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	தானியக்க இடர் முகாமைத்துவ முறையினை அமுல்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும்
		7. தானியக்க இடர் முகாமைத்துவ முறையினை அமுல்படுத்தலும் மதிப்பீடு செய்தலும்	தானியக்க இடர் முகாமைத்துவ முறை செய்ல்படுத்தப்படுகிறது		
		8. தானியக்க இடர் முகாமைத்துவ முறையின் தொழிற்பாட்டினை மீளாய்வு செய்தலும் மறு பரிசீலனை செய்தலும்	மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகள் மற்றும் கலந்துரையாடல்களது எண்ணிக்கை		
	5. ASYHUB திட்டத்தின் சரக்கு தேர்வு குறித்து UNCTAD மற்றும் ICT பணிப்பகத்துடனான ஒருங்கிணைப்பு	1. ICT/UNCTAD உடன் தொடர்பு கொண்டு முன்மொழியப்பட்ட ASYHUB திட்டத்தின் செயல்பாட்டின் விவரக்குறிப்புகளைப் பெறுதல்	இடம்பெற்ற கலந்துரையாடல்கள் / மேற்கொள்ளப்பட்ட தொடர்பாடல்களது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	08
		2. சரக்கு தேர்வு தொடர்பாக முன்மொழியப்பட்ட ASYHUB திட்டம் குறித்து ICT/UNCTAD உடன் கலந்துரையாடல்	இடம்பெற்ற கலந்துரையாடல்கள் / மேற்கொள்ளப்பட்ட தொடர்பாடல்களது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	08
		3. ASYHUB இல் புதிய தேர்வு நடைமுறையைத் திட்டமிடுதல்	இடம்பெற்ற கலந்துரையாடல்கள் / மேற்கொள்ளப்பட்ட தொடர்பாடல்களது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	08
		4.ASYHUB இல் தேர்வினை செயல்படுத்தல்	ASYHUB தேர்வுமுறை அமல்படுத்தப்படுகிறது		ICT மூலம் ASYHUBஇனை அமுல்படுத்த காத்திருக்கிறது
அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார செயற்படுத்துனர் திட்டம் (AEO)					
3.இணக்கப்பாட்டு பொருளாதார செயற்படுத்துனர் மற்றும் அதிகாரமளிக்கப்ட்ட பொருளாதார செயற்படுத்துனர் திட்டத்தினை மேம்படுத்தல்	1. AEO குழுவுடனான கூட்டிணைப்பு	1. AEO குழுக் கூட்டங்களைக் கூட்டுதல்	கூட்டப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	06 கூட்டங்கள்
		2. AEO குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல	பங்கேற்ற கூட்டங்களது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	06 கூட்டங்கள்
		3.AEO குழுக் கூட்டத்தின் கலந்துரையாடல் குறிப்புகளை தயாரித்தல்	கூட்டத்தின் குறிப்புகளது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	06 கூட்டங்கள்
	2. AEO திட்டம் குறித்த வழிப்புணர்வினை ஏற்படுத்தல்	1. விண்ணப்பங்களை பரிசோதித்தல் மற்றும் சரிபார்ரதல் தொடர்பில் சுங்க அலுவலர்களுக்கு விழிப்புணர்வு அமர்வுகளை நடாத்துதல்	விழிப்புணர்வு அமர்வுகளின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	12 அமர்வுகள்
		2. பொருளாதார செயற்படுத்துனருககான	விழிப்புணர்வு அமர்வுகளின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	USAID இனால் 01 அமர்வு மேற்கொள்ளப்பட்டது

		விழிப்புணர்வு அமர்வுகளை நடாத்துதல்			
	3. சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை முடிவுக்கு கொண்டுவரல்	1. சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தினை சர்பார்த்தல்	சரிபார்க்கப்பட்ட விண்ணப்பங்களது எண்ணிக்கை	20.03.2024	70 விண்ணப்பங்கள்
		2. நிறுவனங்களுக்கு AEO (நிலை 1)அந்தஸ்தினை வழங்குதல்	வழங்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை	31.03.2024	31 நிறுவனங்கள் (2024.07.30 அன்று வழங்கப்பட்டது)
	4. புதிய விண்ணப்பங்களை பெறுதல் மற்றும் செயலாக்குதல்	1. புதிய விண்ணப்பங்களை பெறுதல்	பெறப்பட்ட விண்ணப்பங்களது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	108 விண்ணப்பங்கள்
		2. புதிய விண்ணப்பங்களை செயலாக்குதல்	செயற்படுத்தப்பட்ட விண்ணப்பங்களது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	108 விண்ணப்பங்கள்
		3. வர்த்தக நிறுவனங்களுக்கு AEO (நிலை 1)அந்தஸ்தினை வழங்குதல்	வழங்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	31 நிறுவனங்கள
	5. AEOசரிபார்ப்பு குழுவினரை வலுப்படுத்தல்	1.அலுவலர்களை AEO சரிபார்ப்பவர்களாக அங்கீகரித்தல்	அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களது எண்ணிக்கை	29.02.2024	14 அலுவலர்கள்
		1. வர்பார்ப்பவர்களுக்கான பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல்	மேற்கொள்ளப்பட்ட பயிற்சித் திட்டங்களது எண்ணிக்கை		2024 மார்ச் மாதத்தில் 02 பயிற்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.
சர்வதேச இறக்குமதி பெறுமதி மதிப்பீட்டுத் தரவுத்தளம் (NIVDB)					
4. சர்வதேச இறக்குமதி பெறுமதி மதிப்பீட்டுத் தளத்தினை விருத்தி செய்தல் மற்றும் இறறைப்படுத்தல்	1.NIVDB இனை RMS இற்கு மேம்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்	1. ARMS இன் முன்மாதிரியுடன் இன் ஒருங்கிணைப்பினை நிறைவு செய்தல்	NIVDB ஆனது ARMS முன்மாதிரியுடன் ஒருங்கிணைக்கப்படுகிறது.	31.03.2024	நிறைவடைந்துள்ளது
	2. NIVD வெப் தளம் மற்றும் தரவு நிரல் என்பவற்றினை பேணுதல்	1. பரிவர்த்தனை பெறுமதிகளை பெறுமதி மதிப்பிடல் தரவுநிரலுக்கு உட்சேர்த்தல்	உட்சேர்க்கப்பட்ட குறிப்பு பெறுமதிகளது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	2831 பெறுமதிகள்
		2. பரிவர்த்தனையற்ற பெறுமதிகளை பெறுமதி மதிப்பிடல் தரவுநிரலுக்கு உட்சேர்த்தல்	உட்சேர்க்கப்பட்ட குறிப்பு பெறுமதிகளது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	00 (பணியாளர்கள் பற்றாக்குறை)
		3. NIVDB இற்கான ஈயைபுமுறை வழிகாட்டியினை மேலும் மேம்படுத்தல்	சேர்க்கப்பட்ட இயைபுமுறைக் குறியீடுகளது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	00 (பணியாளர்கள் பற்றாக்குறை)
		4. பயனர்களுக்கு கிடைக்கத்த குநன்மைகளை மேம்படுத்தல்	மேற்கொள்ளப்பட்ட மேம்பாடுகளது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	08 மேம்பாடுகள்
		5. NIVDB இன் பயன்பாட்டை விரிவாக்குதல்	வழங்கப்பட்ட பயனர் கணக்குகளது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	55 பயனர் கணக்குகள்
மீள்-பொறிமுறையாக்க செய்முறை மற்றும் விசாரணை					
5. மீள்-பொறிமுறையாக்க செய்முறை மற்றும் விசாரணை	1. தற்போதுள்ள சுங்க செயல்முறைகளில் உள்ள பலவீனங்களைக்	1. செயல்பாட்டு பிரிவுகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்	மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	15 கலந்துரையாடல்கள்

	குறைக்கும் வகையில் இடர் மற்றும் சிக்கல்களைக் கொண்ட தற்போதைய செயல்முறைகளை மீள்-பொறிமுறையாக்கல்	2. தற்போதுள்ள செயல்முறையினை வரைபடமாக்குதல்	வரைபடமாக்கப்பட்ட செய்முறைகளது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	02 செய்முறைகள் (வெளிநிலை மற்றும் OGA வெளிநலை)
		3 பலவீனங்களை அடையாளங்கண்டு அதிலிருந்து விடுபடல்	மீள் பொறிமுறையாக்கம் செய்யப்பட அடையாளங்காணப்பட்ட செய்முறைகளது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	07 செய்முறைகள்
		4. மீள் பொறிமுறையாக் செய்முறையினை பூர்த்தி செய்தல்	பூர்த்தி செய்யப்பட்ட செய்முறைகளது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	02 செய்முறைகள்
		5. மீள் பொறிமுறையாக்கல் செய்முறைக்கான வழிகாட்டிகளை தயாரித்தல்	தயாரிக்கப்பட்ட வழிகாட்டல்களது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	02 வழிகாட்டல்கள்
		6. மீள் பொறிமுறையாக்கல் செய்முறையினை அமுல்படுத்தல்	மீள் பொறிமுறையாக்கல் செய்முறைகளது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	02 செய்முறைகள்
	2. இடர் சுயவிபரங்கள் மற்றும் செயல்முறைகளின் செயல்திறனை சரிபார்க்க இடர் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை ஆய்வு செய்தல்	1. கொள்கலன்களை தடுத்து வைத்தலும் பரிசோதனைகளை மேற்கொள்ளலும்	பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	108 விடயங்கள்
		2. தேர்வுக்காக தடுத்து வைக்கப்பட்ட கொள்கலன்களது பரிசோதனை பெறுபேறுகளை அறிக்கையிடல்	தடுத்து வைக்கப்பட்ட கொள்கலன் மற்றும் அறிக்கையிடப்பட்ட பெறுபேறுகளது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	133 கொள்கலன்கள்
		3. விசாரணைகளில் இருந்து உரிய கட்டணங்களை அறவிடல்	விசாரணைகளின் பின்னர் அறவிடப்பட்ட மேலதிக பதிவுகள், அபராதங்கள் மற்றும் பறிமுதல்களது தொகை	ஏற்புடையதல்ல	அபராதங்கள் (ரூபா.) 359,022,346 மேலதிக பதிவு (ரூபா.) – 9,922,865
		4. தொடங்கப்பட்ட வழக்குகளை நிறைவு செய்தல்	பூர்த்தி செய்யப்பட்ட வழக்குகளது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	71 வழக்குகள்
	3. நிலுவையில் உள்ள வழக்குகளை நிறைவு செய்தல்	1. நிலுவையிலுள்ள வழக்குகள் தொடர்பிலான விசாரணைகளை நிறைவு செய்தல்	முடிவுறுத்தப்பட்ட நிலுவையிலான வழக்குகளது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	16 வழக்குகள்
	4. தடுத்து வைக்கப்பட்ட கொள்கலன்களை விடுவித்தல்	1. நீண்ட காலமாக தடுத்துவைக்கப்பட்ட கொள்கலன்கள் தொடர்பிலான வழக்குகளை நிறைவு செய்தல் மற்றும் விடுவித்தல்	விடுவிக்கப்பட்ட கொள்கலன்களது எண்ணிக்கை	31.12.2024	04 கொள்கலன்கள்
	5. nCEN மற்றும் eCCR என்பவற்றினை இற்றைப்படுத்தல்	1. நிறைவு செய்யப்பட்ட வழக்குகளது nCEN, eCCR மற்றும் மோசடி குறியீடுகள் என்பவற்றினை இற்றைப்படுத்தல்	இற்றைப்படுத்தப்பட்ட nCEN, eCCR மற்றும் மோசடி குறியீடுகளது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	71 வழக்குகள்
	6. வெகுமதி பகிர்வு கோவைகளைத் தயாரித்தல்	1. வெகுமதி பகிர்வு கோவைகளைத் தயாரித்தல்	தயாரிக்கப்பட்ட வெகுமதி பகிர்வு கோவைகளது எண்ணிக்கை	ஏற்புடையதல்ல	08 வெகுமதி பகிர்வு பட்டியல்கள்

அறிமுகப்படுத்தப்பட்ட புதுமையான நடவடிக்கைகள்					
	1. கப்பற்சரக்கு நிலைமை குறித்த ஆய் கருவியினை விருத்தி செய்தல்	1 இடைமுகப்பினை தயாரித்தல்	இடைமுகப்பு தயார் செய்யப்படுகிறது	ஏற்புடையதல்ல	நிறைவடைந்துள்ளது
		2. நிதிகளை கண்டறிதல்	நிதி ஓதுக்கீடு	ஏற்புடையதல்ல	நிறைவடைந்துள்ளது
		3. கையடக்க தொலைபேசிக்கான ஆய் கருவியினை அறிமுகப்படுத்தல்	ஆய் கருவி அறிமுகம் செய்யபட்டுள்ளது	ஏற்புடையதல்ல	2025 மே மாதத்திற்குள் நிறைவுசெய்யப்படும்
		4. ஆய் கருவியினை விளம்பரப்படுத்தல் 5. ஆய் கருவியினை கண்காணித்தல் மற்றும் மறுபரிசீலினை செய்தல்		ஏற்புடையதல்ல	மேம்பாடுகள், கண்காணித்தல் மற்றும் மறுபரிசீலனைகள் ARMS நிலை 1 உடன் மேற்கொள்ளப்படும்
	2. வருவாய் முகப்புப் பெட்டியினை அறிமுகப்படுத்தல்	1. வருவாய் முகப்புப் பெட்டியினை அறிமுகப்படுத்தல்	வருவாய் முகப்புப் பெட்டி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது	ஏற்புடையதல்ல	நிறைவடைந்துள்ளது
	3.இடர் முகப்புப் பெட்டியினை அறிமுகப்படுத்தல்	1.இடர் முகப்புப் பெட்டியினை அறிமுகப்படுத்தல்	இடர் முகப்புப் பெட்டி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது	ஏற்புடையதல்ல	நிறைவடைந்துள்ளது
	4. அசிகுடாவின் ஆய்வுச் சட்டத்திலான திருத்தம்	1. மேம்பாடுகள் நிறைவடைந்துள்ளன. தகவல் தொடர்பாடல் பணிப்பகத்துடனான கலந்துரையாடல்.	புதிய மோசடி குறியீட்டு பதிவு முறை செயல்படுத்தப்படுகிறது	ஏற்புடையதல்ல	ஒரு புதிய மோசடி குறியீட்டு முறையானது தகவல் தொடர்பாடல் பணிப்பகத்தின் உதவியுடன் விருத்தி செய்யப்பட்டுள்துடன் தற்போது அது சோதனை மட்டத்தில் உள்ளது.
	5.செயலாக்கத்திற்கான கப்பற்சரக்குகளது தானியக்க இடர் மைய தெரிவு	1. அமுல்படுத்தப்பட்டுள்ளது	அமுல்படுத்தப்பட்டுள்ளது	ஏற்புடையதல்ல	நிறைவடைந்துள்ளது

8.1.7 மத்திய அகற்றல் (விற்பனை) பணிப்பகம்

மத்திய அகற்றல் பணிப்பகமானது, பறிமுதல் செய்யப்பட்ட / கைவிடப்பட்ட பொருட்களை அகற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும், சம்பந்தப்பட்ட உள்ளக மற்றும் வெளியக அதிகார சபைகளுடனான ஒத்துழைப்புடன் ஒருமுகப்படுத்தும் நோக்கில் அமுல்படுத்தல் கொத்தணியின் கீழ் புதியதொரு பணிப்பகமாக 2019 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது.

தோலைநோக்கு

வலுவான எல்லைப்புறப் பாதுகாப்பின் ஊடாக பாதுகாப்பும் செழிப்பும் கொண்ட நாடாக மாற்றுதல்

இலங்கை சுங்கத்தில் பறிமுதல் செய்யப்பட்ட / கைவிடப்பட்ட பொருட்களை அகற்றுவதற்கான செயல்முறைக்கு வசதியளிக்கின்ற அதேவேளை, அரசிறையினை சேகரித்தல் மற்றும் அரசின் சமூக பாதுகாப்புச் சட்டத்தினை அமுல்படுத்தல் ஆகியவற்றின் மூலம் சிறந்த இயங்காற்றல்மிக்க, காத்திரமான சேவை வழங்குனராகத் திகழ்தல்.

பணிநோக்கு

அரசிறையைப் பாதுகாக்கின்றதும், சமூதாயத்தைப் பாதுகாக்கின்றதும், மற்றும் ஒருமைப்பாட்டினையும் தொழில்வாண்மையினையும் கொண்ட தடையற்ற வர்த்தகத்தை ஊக்குவிக்கின்றதுமான சர்வதேசத் தரம் வாய்ந்த சுங்க சேவையை வழங்குதல்.

மத்திய அகற்றல் பணிப்பகமானது பின்வரும் விடயங்களுக்காக அர்ப்பணிக்கப்படுகிறது:

- இலங்கை சுங்கத்தின் சகல அகற்றல் செயல்முறையினையும் ஒருமுகப்படுத்தி அதற்கு வசதியளித்தல்.
- கேள்வு விற்பனைகள் ஊடாக வருமானத்தினை சேகரித்தல்.
- பொருட்களை அப்புறப்படுத்தும் போது சமூக பொருளாதார விடயங்களைப் பேணுதல்.
- பங்கீடுபாட்டாளர்கள் சிறந்த சேவைகளை அடையப்பெறும் வகையில் அவர்களை இயலச் செய்கின்ற அதேவேளை, அகற்றல் சட்டங்களை அமுல்படுத்தல்.

இப் பணிப்பகத்தின் பிரதான தொழிற்பாடுகள்

- கேள்வு விற்பனவுகளை முன்னெடுத்தல்.
- விற்பனை செய்ய முடியாத பொருட்களை அழித்தல்
- மோட்டார் வாகன போக்குவரத்து பதிவாளர் பிரிவில் மோட்டார் வாகனங்களை பதிவு செய்வதற்காக இணைப்பினை ஏற்படுத்தல்
- இலங்கைத் துறைமுக அதிகார சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைத் துறைமுக அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் கேள்வு விற்பனைகள்/ஏலங்கள் விடுதல் தொடர்பில் குறித்த வாகனங்களை மோட்டார் வாகன போக்குவரத்து இலத்திரனியல் வசதியளித்தலில் பதிவு செய்வதற்காக அவற்றை இணைத்தல்.

சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள்

1. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு - இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின் கால வரையறை
2. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 105(2) ஆம் பிரிவு – பணிப்பாளர் நாயகம் கப்பலேற்றுவதற்கான பொருட்களை தடுத்துவைத்தல்.
3. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 109ஆம் பிரிவு – முப்பது நாட்களினுள் வெளியாக்கப்படாத பொருட்களை விற்பனை செய்வதற்கான அதிகாரம்.
4. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 154ஆம் பிரிவு – பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள், ஒரு மாதத்திற்குள் உரிமை கோரப்படாவிட்டால், அவை உபயோகமற்றவையென அகற்றப்படுதல் வேண்டும் அல்லது உரியவாறு கையாளப்படல் வேண்டும்.
5. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 162 ஆம் பிரிவு – பறிமுதல் செய்யப்படுகின்ற அல்லது உபயோகமற்றதென அகற்றப்படுகின்ற கப்பல்கள் மற்றும் சரக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் பணிப்புரைக்கு இணங்க அகற்றப்படுதல்.
6. 06/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை
7. 2003ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க புலமைச் சொத்துரிமைச் சட்டம்.
8. 1969ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டம்.
9. 1979ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டம் (பிரிவு. 39/39 (6)/84/(84 (2)/84 (3)).
10. 1979ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டம்.

11. 1984ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க இலங்கை கட்டளைகள் நிறுவனச் சட்டம்.
12. 1980ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க உணவு சட்டம்.
13. 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க சேர் பெறுமதி வரிச் சட்டம்.
14. 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க துறைமுகம் மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்.
15. 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம்.
16. 1999ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க தாவர பாதுகாப்புச் சட்டம்.
17. 1942ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க தாவர மற்றும் விலங்கின கட்டளைச்சட்டம்.
18. 1947ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வன கட்டளைச்சட்டம்.
19. 1996ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்.
20. 2015ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க இலங்கை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்.

2024 ஆம் ஆண்டில் மத்திய அகற்றுகைப் பணிப்பகத்தின் செயலாற்றுகை

1. கேள்வு விற்பனைகள்

1.1 : 2022, 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கேள்வு விற்பனைகளின் எண்ணிக்கை

கேள்வு வகை	**மேற்கொள்ளப்பட்ட கேள்வு விற்பனைகளின் எண்ணிக்கை**		
	2022	**2023**	**2024**
பொதுவானவை	08	11	12
வாகனம்	08	11	12
விசேடமானவை	02	06	5
மொத்தம்	**18**	**28**	**29**

2024ஆம் ஆண்டில் 12 பொதுக் கேள்வு விற்பனைகள், 12 வாகன கேள்வு விற்பனைகள் மற்றும் 5 விசேட கேள்வு விற்பனைகள் என மொத்தமாக 29 கேள்வு விற்பனைகளை இப்பணிப்பகம் மேற்கொண்டுள்ளது. இப் பணிப்பகமானது, வருடாந்த மொத்த கேள்வு விற்பனைகளை ஆய்வு செய்யும் போது, 2022ஆம் ஆண்டில் 18 கேள்வுகளும் அதைத்தொடர்ந்து 2023ஆம் ஆண்டில் 28 கேள்வுகளும் மற்றும் 2024ஆம் ஆண்டில் 29 கேள்வுகளும் என்ற வகையில், சராசரி எண்ணிக்கையான 24 இற்கும் மேலாகச் சென்று குறிப்பிடத்தக்கதொரு அதிகரிப்பினை பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



மேலே உள்ள படம், 2022,2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கேள்வு விற்பனைகளின் எண்ணிக்கைக்கு இடையிலான ஒப்பீட்டினைக் காட்டுகிறது.

2024 இல் கேள்வு விற்பனைகள் மூலம் பெறப்பட்ட அறவீடுகள்

வகை	பெறப்பட்ட அறவீடுகள் (ரூபா)	(%)விகிதம்
பொதுவானவை	2,167,350,986.67	87.30
வாகனம்	267,948,290.57	10.79
விசேடமானவை	47,299,555.80	1.9
மொத்தம்	**2,482,598,833.04**	**100**



2024 ஆம் ஆண்டுக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கேள்வு விற்பனைகள் மூலம் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 2,482,598,833.04 ஆகும். அதேவேளை, பொதுவான கேள்வு விற்பனைகள் மூலமாக சேகரிக்கப்பட்ட மொத்தம் ரூபா 2,167,350,986.67 ஆகுமென்பதோடு, இது 2024 இல் பெறப்பட்ட மொத்த அறவீடுகளில் 87.03% சதவீதமாகும். விசேட கேள்வு விற்பனைகள் மற்றும் வாகன கேள்வு விற்பனைகள் மூலமான அறவீடுகள் முறையே 1.9% மற்றும் 10.79% ஆகும்.

1.2 பொதுவான பொருட்களது வினியோகம் தொடர்பிலான அறவீடு

பொதுவான பொருட்களானது விசேட மற்றும் பொது ஆகிய இரு கேள்வு விற்பனையிலும் கேள்வு ஒப்பந்தத்திற்கு விடப்படுகின்றன. சுங்கத்தின் கேள்வு விற்பனைகள் மூலமான அறவீடுகளில் பாரிய பங்களிப்புச் செய்த பொருட்கள் பற்றிய விபரம் பின்வருமாறு.



பொது கேள்வு விற்பனையில் மிகவும் கணிசமானளவு பங்களிப்புச் செய்பவை தங்கம் மற்றும் மதிப்புமிக்க பொருட்கள் ஆகும். ஏனெனில், இவை பொதுவான பொருட்கள் மூலமான நிகர அறவீடுகளில் 73% சதவீதம் பங்களிப்புச் செய்கின்றன. அதேவேளை, ஏனைய பொதுவான பொருட்களும் இணைந்து 27% சதவீத பங்களிப்பினை காட்டுகிறது.

1.3 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான செயலாற்றுகை ஒப்பீட்டாய்வு



மேலே உள்ள படத்தில் விளக்கப்பட்டுள்ளபடி, 2024ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த அறவீடுகள் முந்தைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டியுள்ளன.

2. மீளளிக்க முடியாத வைப்புக்கள் பற்றிய அறவீடு

விலைமனுதாரரினால் விலைமனு கோர எதிர்பார்க்கப்படுகின்ற ஒவ்வொரு பொருட்களுக்குமாக அக்குறித்த விலைமனுதாரருக்கு விநியோகிக்கப்படுகின்ற விலைமனுக் கோரல் விண்ணப்பப் படிவங்கள் தொடர்பில் ஒரு மீளளிக்க முடியாத வைப்புத் தொகை சேகரிக்கப்படுகின்றன. மத்திய அகற்றல் பணிப்பகத்தினால் முன்னெடுக்கப்படும் கேள்வு விற்பனையின் மீளளிக்க முடியாத வைப்புக்கள், அரச நிதிச் சுற்றுநிருபம் 06/2016 இற்கு இணங்க மத்திய அகற்றல் பணிப்பகத்தின் 1450 ஆம் இலக்க திணைக்களக் கட்டளையின் விநியோகத்துடன் 2020.05.26 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் திருத்தப்பட்டுள்ளன.

வருடம்	அறவீடுகள்	விலைமனுக் கோரல் படிவங்களின் எண்ணிக்கை
2022	1,645,800	1,098
2023	4,720,900	3,012
2024	3,291,700	2,161

3. பொருட்களை அழித்தல்

விற்பனைக்கு உதவாத பொருட்கள் (காலாவதியான பொருட்கள், குறித்த அங்கீகாரத்தை வழங்குகின்ற அதிகாரசபையின் நியமங்களுடன் உடன்படாத பொருட்கள்) பொருள் அழிவுக்கு உட்படுத்தப்படலாம். மத்திய அகற்றல் பணிப்பகமானது சம்பந்தப்பட்ட கிளை அலுவலகத்தின்/அதிகாரசபையின் வேண்டுகோளின் பேரில் அத்தகைய பொருட்களை அழிப்பதற்கான வசதிகளை வழங்கும்.

அழிப்பதற்கான கோரிக்கைகள்	பெறப்பட்டவை	முன்னெடுக்கப்பட்டவை	நிலுவையிலுள்ளவை
இதர கோரிக்கைகள்	99	25	74
இலங்கைத் துறைமுக அதிகார சபையின் கோரிக்கைகள்	29	08	21
மொத்தம்	**128**	**33**	**95**

மத்திய அகற்றல் பணிப்பகமானது 2024 ஆம் ஆண்டில் 33 வெற்றிகரமான அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதில் 2023ஆம் ஆண்டுக்கான மத்திய அகற்றல் பணிப்பகத்தின் இவ் ஆண்டுக்கான செயற் திட்டத்திற்கிணங்க 30 அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இது மத்திய அகற்றல் பணிப்பகத்தினால் முன்னெடுக்கப்பட்டதொரு சிறந்த சாதனையாகும். இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கோரப்பட்ட பொருள் அழிப்புக்களில் 27.58%வை நிறைவு செய்யப்பட்டுள்ள அதேவேளை, 25.25% இதர கோரிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. பொருத்தமான பொருள் அழிப்புத் தரப்பினர்களை நியமித்தலிலான தாமதம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட தரப்பினர் ஒத்துழைப்பு வழங்கத் தவறியமை போன்றன நிலுவையிலுள்ள பொருள் அழிப்புக்களுக்கான பாரிய தடையாக விளங்குகின்றன.

அழிப்பு தரப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், நியாயமான நேரத்திற்குள் அழிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான ஒப்புதல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து வழங்கி மத்திய அகற்றல் பணிப்பகத்தின் தேவைகளை அவர்களால் பூர்த்தி செய்ய முடியமற் போகின்றது. இது போன்ற பிரச்சினைகள் காரணமாக அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்த தரப்பினர் தயாராக இல்லை.
குறிப்பிட்ட பொருட்களுக்கு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் அழிப்பு நடவடிக்கையினை மேற்கொள்ளும் தரப்பினரை நியமிக்க ஏதேனும் நடைமுறைகள் உருவாக்கப்படும் பட்சத்தில், இதுபோன்ற சிக்கல்களைக் குறைக்கலாம்.

8.2 அரசிறை மற்றும் சேவைகள் கொத்தணி

8.2.1 பிரகடனங்கள் பணிப்பகம்

- 8.2.1.1 நீள அறை
- 8.2.1.2 மோட்டார் வாகனப் பிரிவு
- 8.2.1.3 "டீ" பிரிவு

8.2.2 கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் பணிப்பகம்

8.2.3 முதலீட்டுச் சபை ஒருங்கிணைப்புப் பணிப்பகம்

8.2.4 மத்திய சரக்குப் பரிசோதனைகள் பணிப்பகம்

8.2.5 பயணிகள் சேவை (கொழும்பு) பணிப்பகம்

8.2.6 ஏற்றுமதிகள் பணிப்பகம்

8.2.1 பிரகடனங்கள் பணிப்பகம்

அறிமுகம்

சகல கடல் மார்க்க சரக்குகள் தொடர்பில் அந்தந்த இறக்குமதியாளர்களால் சுங்கப் பிரகடனம் சமர்ப்பிக்கப்பட்டவுடன் சுங்கப் பிரகடனங்கள் (கஸ்டக் என அழைக்கப்படுகின்றன) செயலாக்கப்படும் இடமாக பிரகடனப்படுத்தல் பணிப்பகம் விளங்குகின்றது.

இப் பிரகடனப்படுத்தல் பணிப்பகமானது பின்வரும் பிரிவுகளை கொண்டுள்ளது.

.

- 'டீ' பிரிவு
- நீள அறை
- மோட்டார் வாகன பிரிவு

இப்பணிப்பகத்தின் நோக்கம்

இப்பணிப்பகத்தின் பிரதான நோக்கமானது இறக்குமதி செய்கின்ற பொருட்கள் தொடர்பில் பிரகடனங்களைச் செய்முறைப்படுத்தல் வசதிகளை வழங்குதலாகும். இக்குறிக்கோளினை நிறைவேற்றும் வகையில் பின்வருவனவற்றுக்கான ஏற்பாடுகளை இப்பணிப்பகம் விசேடமாக மேற்கொண்டுள்ளது,

- சரக்குப்பட்டியல் விபரங்களை இலத்திரனியல் முறையில் பெறுதல்.
- சுங்கப் பிரகடனங்களை DTI ஊடாகப் பெறுதல்.
- சுங்கப் பிரகடனங்கள் தொடர்பிலான தீர்வைகள் மற்றும் பிற வரிகளை ஒன்லைன் ஊடாகவும் வங்கிகள் மூலமாகவும் மேற்கொள்ளல்.
- தெரிவு செய்யப்பட்ட இறக்குமதியாளர்களுக்கு துரித வழிமுறையுடன் கூடிய செயன்முறை வசதிகளை வழங்குதல்.
- அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய அலுவலர்களைக் கொண்டு சுங்கப் பிரகடனங்களை செய்முறைப்படுத்தல்.
- இலங்கைத் துறைமுக அதிகார சபை, எஸ்.ஏ.ஜீ.ரீ மற்றும் சீ.ஐ.சீ.ரீ சாலைகளில் இருந்து முழுக் கொள்கலன் சுமை கொண்டவற்றினை அகற்றுவதற்கான வாயில் அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல்.

தன்னியக்க செயலாக்கம் தற்போது பின்வருவனவற்றின் ஊடாக முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது :

"அசிகுடா வேல்ட்" இறக்குமதியாளர்களுக்கு சுங்கப் பிரகடனங்களை எவ்வித தாமதமின்றி செய்முறைப்படுத்த உதவுகிறது. சுங்கப் பிரகடனத்தின் அனைத்து விபரங்களும் இப்போது நீள அறையில் (2ஆம் மாடி) "அசிகுடா முறைமையில்" பதிவு செய்யப்படுகின்றன. இது DTI வசதிகளைப் பயன்படுத்தி பயனர்கள் அவர்களது அலுவலகங்களில் இருந்து நேரடியாக அவர்களது சுங்கப்பிரகடனங்களை சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக அமைகின்றது.

இப் பணிப்பகத்தின் குறிக்கோள்கள்

- இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளின் வெளியாக்குதலுக்கு வசதியளித்தல்.
- பொருட்களை உரியவாறு வகைப்படுத்துவதனூடாக அரசிறை ஒழுக்குகளை/ வெளிநாட்டு நாணய மாற்று இழப்புக்களைக் குறைத்தல்.
- சுங்கக் கட்டளைச்சட்டம் மற்றும் தொடர்புபட்ட பிற சட்டங்களுக்கிணங்க அமுல்படுத்தல் செயற்பாடுகளை "டீ" கிளையூடாக மேற்கொள்ளல்.
- இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் அரசுக்குரிய அரசிறையை மதிப்பிட்டு அவற்றைச் சேகரித்தல்.
- நிதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்வைத் தள்ளுபடி தொடர்பிலான கருத்திட்டப் பொருள் வெளியாக்கலுக்கு வசதியளித்தல்.
- சலுகை அனுமதிப்பத்திரங்களை கொண்டவர்களது வாகனங்கள்/ சரக்குகளை விரைவாக வெளியாக்ககுவதற்கு வசதியளித்தல்.
- தற்காலிக சுங்கப் பிரகடனங்களுக்கு எதிரான பொருட்களை வெளியாக்கல் தொடர்பில் பல்வேறு அரச திணைக்களங்கள்/ பிற அமைப்புகள்/ பொதுமக்கள் ஆகியோருக்கு வசதியளித்தல்.
- அரச கொள்கைக்கிணங்க தீர்வை மற்றும் பிற வரிகள் தொடர்பான தீர்வைத் தள்ளுபடி/விலக்களிப்புகளை வழங்க வசதியளித்தல்.
- மட்டுப்படுத்தப்பட்டவை மற்றும் தடைசெய்யப்பட்டவைகளை திறம்பட செயல்படுத்துவதை நிர்வாகித்தல்

இப்பணிப்பகத்தின் பணியாளர்களது பொறுப்புகள்

நீள அறை அலுவலர்கள், அரசுக்கான உரிய அரசிறையினைச் சேகரிக்கும் அதேவேளை, தாமதமின்றி விரைவாக சுங்கப் பிரகடனங்களைச் செயன்முறைப்படுத்தவும் மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் வெளியாக்கத்தையும் உறுதிப்படுத்துகின்றனர். இந்த அலுவலர்கள், பொருட்களை வெளியாக்குவதற்குத் தேவையான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர், சுகாதார அமைச்சின் உணவு மற்றும் ஔடதங்கள் பரிசோதனைப் பிரிவு, தேசிய மருத்துகள் அதிகாரசபை, இலங்கை தரநிர்ணயங்கள் நிறுவனம், அணுசக்தி அதிகாரசபை, தொலைத்தொடர்பாடல்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை போன்ற பிற ஒழுங்குபடுத்தல் அதிகார சபைகளிடமிருந்தான உரிமங்கள் மற்றும்/ அல்லது விசேட அங்கீகாரங்கள் அத்துடன் ஏற்றுமதி செய்யப்படுகின்ற நாட்டினால் வினியோகிக்கப்படும் தாரவச்சுகாதாரச் சான்றிதழ், பூச்சிகொல்லிகள் சான்றிதழ், நறுமணச் சபை சான்றிதழ் மற்றும் கப்பலேற்றும் துறைமுகத்தின் ஆய்வறிக்கை போன்ற சான்றிதழ்கள் தேவைப்படுகின்ற பண்டங்கள் தொடர்பில் கண்காணித்து வருகின்றனர்.

சுங்கப் பிரகடனம் பற்றிய துரித செயலாக்கதிற்காக, இறக்குமதியாளர்கள் பின்வரும் விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர்:

- அனுப்பப்பட்ட பொருட்களின் வெளியாக்கல் கோரிக்கைக்கான அதனைக் கொண்டுவரும் கப்பலில் இருந்தான அங்கீகாரம் ;
- சரக்கு பற்றிய முழு விபரம் ;
- இயைபு முறைப் பெயரேட்டின் அடிப்படையில் அமையப்பெற்ற சுங்க இறக்குமதிகள் இறுப்புப் பட்டியலில் உள்ளவாறு சரியாக பொருட்களை வகைப்படுத்தல் ;
- பொருத்தமான நாணய வகையினைப் பயன்படுத்தி, செல்லுபடியாகும் நாணயமாற்று விகித்தில் பெறுமதியை பிரகடனப்படுத்தல் ;
- சரக்குக்கான கொடுப்பனவு தொடர்பிலான (வெளிநாட்டு சொவணி) பரிமாற்றம் ஏற்றுக்கொள்ளப்பட்ட/ அனுமதிக்கப்பட்ட வங்கியூடாக மேற்கொள்ளல் ;
- ஏற்புடையவாறான, தேவையான அதிகாரமளிக்கப்பட்ட ஆவணங்கள், அனுமதிப் பத்திரங்கள், உத்தரவாதபத்திரங்கள்,மற்றும் சான்றிதழ்கள் போன்றவற்றினை இணைத்தல் ;
- மேற்படி அனைத்து விடயங்களும் ஒழுங்குமுறையில் இருப்பின், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த பொருளின் வெளியாக்கத்திற்கான சுங்கப் பிரகடனத்தினை செயலாக்கம் செய்யலாம்.

மேற்கூறப்பட்டவாறாக இப்பணிப்பகமானது அதன் தொழிற்பாடுகளுக்கிணங்க 03 பிரதான பிரிவுகளை கொண்டுள்ளன.

8.2.1.1 நீள அறை

வரலாற்று ரீதியில், உண்மையாகவே சுங்க நிருவாகத்தின் ஒரு நீள அறையாக இது காணப்பட்டதோடு, இந்நவீன காலத்திலும் கூட இது ஒரு நீள அறையாகவே காணப்படுகிறது. இது ஆசியாவிலுள்ள அனேக பிரித்தானிய காலணித்துவ நாடுகளிலும் மற்றும் டென்மார்க், நெதர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள மிகவும் பழைமை வாய்ந்த சுங்க அமைப்புகளிலும் இது பொதுவான சிறப்பம்சமொன்றாகவுள்ளது. சுங்கமானது பிரதானமாக அரசிறை தொடர்பிலான அரச நிறுவனமாகவிருப்பதனால் நீள அறையின் முக்கித்துவம் பிரதானமானதாகும். இதன் ஒட்டுமொத்த இலக்குகள் சமூகப் பாதுகாப்புக் கடப்பாடுகளைப் பேணுவதற்காக இருந்த போதிலும், உரிய அரசிறையினைச் சேகரிப்பதற்கான முன்னுரிமையானது குறைவடைந்ததில்லை.

சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவானது சுங்கத் தீர்வையினை விதிப்பதற்கு சுங்கம் அதிகாரம் கொண்டுள்ளது எனவும் 47 ஆம் பிரிவானது பெறப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட பொருட்களது உண்மையானது சரியானதுமானதொரு பிரகடனம் செய்வதற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களது உரிமையாளர்கள் வேண்டப்படுகின்றனர். மற்றும் அத்தகைய பொருட்கள் தொடர்பில் செலுத்தத்தகு (தீர்வைகள் போன்றன) சகல தீர்வைகளும் செலுத்தவும் வேண்டப்படுகிறது.

சுங்கமானது சுங்கத் தீர்வைகளை மட்டுமல்லாது இதர பல்வேறு வரிகளையும் அறவீடுகளையும் சேகரிப்பதற்கான வசதியினை செய்துள்ளது. அதாவது ;

பெறுமதி சேர் வரி	(VAT)
துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு	(PAL)
விசேட பண்ட அறவீடு	(SCL)
உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரி	(XID)
பிற அரச நிறுவனங்கள் சார்பிலான செஸ் வரி	(CESS)
சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு	(SSCL)
சொகுசு வரி	(LXT)
வாகன உரிமை வழங்கல் அறவீடு	(VEL)

சுங்கப் பிரகடன செய்முறை அலுவலர்கள் இயைபு முறைக்குறியீடு தொடர்பில் இலகுவான கண்காணிப்பு மற்றும் கையாளுகை தொர்பில் சுங்கப் பிரகடன செய்முறைக்காக 05 பிரிவுகளாக வகுத்துள்ளனர். (ஒரு பிரிவில் இரண்டு பிரதி பணிப்பாளர்களும் நான்கு அத்தியட்சகர்(பெறுமதி மதிப்பீட்டாளர்கள்))களும் உள்ளனர்). இலகுவான கண்காணிப்பு மற்றும் கையாளுகை போன்ற நோக்கங்களுக்காக, சுங்கப்பிரகடனமானது அதன் செயன்முறைக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு பிரிவுக்கும் ஒதுக்கப்படுகிறது..

- ஏ பிரிவு - சுங்கப்பிரகடன இலக்கத்தின் இறுதி இல. 0 - 9
- பீ பிரிவு - சுங்கப்பிரகடன இலக்கத்தின் இறுதி இல. 1 - 8
- சீ பிரிவு - சுங்கப்பிரகடன இலக்கத்தின் இறுதி இல. 2 - 7
- டீ பிரிவு - சுங்கப்பிரகடன இலக்கத்தின் இறுதி இல. 3 - 6
- ஈ பிரிவு - சுங்கப்பிரகடன இலக்கத்தின் இறுதி இல. 4 - 5

சுங்கப் பிரகடனங்களைச் சமர்ப்பித்தல்

கஸ்டெக் (CusDec) என்பது சுங்கப் பிரகடனத்தின் சுருக்க வடிவமாகும். இறக்குமதியாளர்கள் சுங்கப் பிரகடனத்தினை இலத்திரனியல் மூலமாக சமர்ப்பித்தல் வேண்டும். பின்வரும் ஆதார ஆவணங்கள் சுங்கப்பிரகடனத்துடன் பீ.டீ.எப் வடிவில் அல்லது ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்களாக பதிவேற்றப்படல் வேண்டும்.

- ஏற்றுமதி ஒப்பந்தச் சீட்டு
- விநியோகக் கட்டளை
- பொருள் விலைப்பட்டியல் (என்.எப்.ஈ. அடிப்படையில் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர்த்து வங்கி மூலம் கையெழுத்திட்டு முத்திரிரை குறிக்கப்பட்டிருத்தல்)
- பொதியிடப்பட்ட பட்டியல்
- இயைபு முறைக் குறியீட்டு வகைப்படுத்தலுக்குத் தேவைப்படும் ஏதேனும் தொழில்நுட்பத் தகவல்
- பொருளுக்கான உற்பத்தி செய்யப்பட்ட நாட்டை நிரூபிப்பதற்கான ஆவணங்கள்
- மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் இறக்குமதி செய்யப்படவிருப்பின், இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரம், இலங்கை கட்டளைகள் நிறுவனம் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு போன்ற நிறுவனங்களிடமிருந்தான அனுமதிப் பத்திரம்/ உத்தரவுப் பத்திரம்.
- வரவுக் கடிதம், தந்தி மூலமான பரிமாற்றம் போன்ற கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது நிரூபனம்
- ஏதேனும் விசேட சான்றிதல் (வெளிநாட்டு ராஜதந்திரிகள், தீர்வைத் தள்ளுபடி, சுகாதார சான்றிதழ், பூச்சிகொல்லிகள் சான்றிதழ், நறுமண சபை சான்றிதழ் மற்றும் துறைமுக கப்பலேற்ற அவதானிப்பு அறிக்கை போன்றவை)

சுங்கக்கட்டளைச் சட்டத்தின் பிரிவு 12, 43 மற்றும் அட்டவணை “ஆ” ஆகியன, பொருட்களை இறக்குமதி செய்யும் வேளையில் ஏதேனும் பிற சட்டத்தின் கீழ் அமுலில் உள்ள சகல மட்டுப்படுத்தப்பட்டவைகள் மற்றும் தடைசெய்யப்பட்டவைகளை நடைமுறைக்குக் கொண்டுவருமாறு சுங்கத்தை வேண்டுகின்றன. இவ்விசாலமான ஏற்பாடுகள் காரணமாக, தற்போது அமுலிலுள்ள அனேக சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் கட்டளைச்சட்டங்களை சுங்கம் அமுல்படுத்த வேண்டியுள்ளது. இவற்றில், முதன்மையும் பிரதானமுமாகவிருப்பது 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டமாகும்.

8.2.1.2 மோட்டார் வாகனப் பிரிவு

“அசிக்குடா வேல்ட்” எனும் மென்பொருளானது தற்போது எக்சஸ் வலையமைப்பில் தொழிற்படுவதோடு, இதனைத் தனியார் வங்கிகளுடன் இணைத்து, பொருட்கள் இறக்குமதி செய்தல் தொடர்பில் அனுப்பப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியை சுங்கத்தினால் பரீட்சிக்க முடிவதோடு, இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்கள் பற்றிய விபரங்கள் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு இணையவழி ஊடாக அனுப்பப்படுகின்றன. இதன் மூலம் சுங்கத் திணைக்களத்தினால் சேகரிக்கப்படும் தீர்வைகள் மற்றும் பிற வரிகளை செலுத்தாத வாகனங்களைப் பதிவு செய்தல் தடுக்கப்படுகிறது. சுங்கப் பிரகடனங்கள் செயன்முறைப்படுத்தப்படும் போது அதிகாரிகள் பின்வரும் விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துகின்றனர் :

- அன்பளிப்பு வாகனங்கள் மற்றும் அதிகூடிய காலத்தைக் கொண்ட வாகனங்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம்.
- அரச அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முதலீட்டுச்சபை அதிகாரிகள் ஆகியோருக்கான இறக்குமதி உத்தரவுப் பத்திர சலுகைகளும் நிபந்தனைகளும்.
- வெளிநாட்டு ராஜதந்திரிகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்பு ஆகியவற்றுக்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் விநியோகிக்கப்படும் தீர்வை இலவசச் சான்றிதழ்கள்.
- கருத்திட்டங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் தொடர்பிலான தற்காலிக சுங்கப்பிரகடனம்

வாகனங்களுக்கான சுங்கப்பிரகடனங்களை செய்முறைப்படுத்தும் போது இப்பிரிவிலுள்ள அலுவலர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள விடயங்களின் உண்மைத்தன்மையினை உறுதிப்படுத்தல் வேண்டும்.
என்பவற்றுக்கிணங்க பொருட்கள் சரியாக விபரிக்கப்பட்டுள்ளமை

- பதிவுச் சான்றிதழ்
- பரிசோதனைச் சான்றிதழ்
- விலைப்பட்டியல்
- வாகன சாலைகளில் அவற்றைப் பரிசோதனை மேற்கொள்கின்ற மதிப்பீட்டாளரின் பரிசோதனை அறிக்கை
- விலைப்பட்டியலுக்கேற்ப வாகனத்தின் வயது சரியாக பதியப்பட்டுள்ளமை
- உற்பத்தி செய்த நாடு சரியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை.
- கப்பல் கட்டணங்கள் சரியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை,
- பிரகடனப்படுத்தப்பட்ட மேலதிக விடயங்களுடன் பரிசோதனைச் சான்றிதழ் இணங்குதல்.
- பல்வேறு வர்த்தமான அறிவித்தல் மூலம் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளரால் பிரகடனப்படுத்தப்பட்ட தற்காலிக இடைநிறுத்தல் வகைகளுக்கு கீழான பொருட்களாக இருந்தாலும்

வாகன வெளியாக்கலுக்கான அனுமதி சுங்க சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளரால் (மோட்டார் வாகனம்) வழங்கப்படல் வேண்டும்.

8.2.1.3 “டீ” பிரிவு

“டீ” பிரிவானது இப்பணிப்பகத்தின் செயலகமாகக் கருதப்பட முடியும். ஆரம்பத்தில் சுங்க கட்டுப்பாட்டாளர் நாயகம் 200 ஆண்டுகளுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட வேளையில் இவரின் கீழ் விடயம் ஏ, விடயம் பீ, விடயம் சீ, மற்றும் விடயம் டீ ஆகிய விடயங்களைக் கையாளுவதற்காக நான்கு இலிகிதர்கள் பணியாற்றியிருந்தனர். காலப்போக்கில் விடயம் ஏ பிரிவானது இலிகிதர் “துறைமுக அறவீடுகளைக்” கையாண்டு வந்ததோடு, இதுவே பின்னர் இலங்கைத் துறைமுக அதிகாரசபையாக மாறியது. பழைய டீ கிளையானது திறைசேரிக்கும் சுங்கத்திற்கும் வரலாற்று ரீதியான ஒருங்கிணைப்பினைப் பேணியிருந்ததோடு, தீர்வைத் தள்ளுபடி மற்றும் விலக்களிப்புகளை வழங்குதல், பொருள் பட்டியல்களைப் பெறுதல் போன்ற அத்தகைய செயற்பாடுகளை இன்னும் அதன் அசல் நாமத்தில் மேற்கொண்டு வருகிறது.

“டீ” பிரிவானது இறக்குமதியாளர்களுக்கு/பொதுமக்களுக்கு வசதிகளை வழங்கும் வகையில் பல்வேறு கூறுகளாக்கப்பட்டுள்ளன. அவை :

- டீ.ஆர்.ஏ பிரிவு
- வங்கி உத்தரவாதக் பிரிவு
- தீர்வை விலக்களிப்புப் பிரிவு
- தொகையான சரக்கினை கண்காணிக்கும் பிரிவு
- காணே பிரிவு
- கப்பற் சரக்குப்பட்டியல் பிரிவு
- விசாரணைப் பிரிவு
- சுங்க சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளரின்(டீ) தலைமையிலான மோட்டார் வாகன சலுகை அனுமதியை ஆய்வு செய்து நீக்கம் செய்யும் பிரிவு

டீ பிரிவினால் கையாளப்படுகின்ற ஒருசில முக்கியமானதும் பிரசித்தி பெற்றதுமான தொழிற்பாடுகள்

- நிதி அமைச்சினால் வழங்கப்படும் தீர்வை விலக்களிப்புகள் தொடர்பான விடயங்களை பதிவு செய்தலும் தீர்வையற்றவை எனும் அடிப்படையில் அத்தகைய பொருட்களை வெளியாக்க வசதியளித்தலும்.
- பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அரசிறைக் காப்புக் கட்டளைக்கிணங்க தீர்வை விலக்களிப்புகளையும் சலுகைகளையும் வழங்குதல்.
- வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சினால் வினியோகிக்கப்படும் வெளியாக்கல் சான்றிதழின் அடிப்படையில் ராஜதந்திரி உத்தியோகத்தர்களது தனிப்பட்ட பொதி மற்றும் அலவலக பொருட்கள் என்பவற்றினை வெளியாக்க அனுமதித்தல்.
- பல்வேறு வர்தத்க உடன்படிக்கையின் கீழ் இறக்கமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் தீர்வை இலவசம் அல்லது முன்னுரிமை விகிதங்கள் எனும் அடிப்படையில் வழங்குதல்.
- நிதி, திட்டமிடல் அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கிணங்க தாமதக் கொடுப்பனவின் கீழ் அரச நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பொருட்களை வெளியாக்க வசதியளித்தல்.

- பல்வேறு காரணங்களின் விளைவாக உடனடியாக பூர்த்தி செய்ய முடியாதிருக்கும் சுங்கப் பிரகடனங்களை தற்காலிக அடிப்படையில் அல்லது நிகழ்வொன்றுக்காக இறக்குமதி செய்யப்பட்டு அந்த நிகழ்வு முடிவுற்றதும் அத்தகைய பொருட்களை மீள ஏற்றுமதி செய்ய வசதியளித்தல்.
- நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் தீர்மானிக்கப்பட்டவாறாக தேவைப்படுகின்ற கருத்திட்ட பொருட்களை மீள் எற்றுமதி தொடர்பில் பதிவினை மேற்கொள்ளுதலும் கண்காணித்தலும்.
- கப்பற் சரக்குப் பட்டியல்களை பெறுதல் மற்றும் கப்பல் முகவர்களால் சமர்ப்பிக்கப்பட்டவாறாக அவை தொடர்பில் திருத்தங்களை மேற்கொள்ளுதல்.
- தற்காலிக சுங்கப்பிரகடனங்கள் விடயத்தில் வங்கி உத்தரவாதங்கள்/கூட்டுறவு உத்தரவாதங்களை பாதுகாத்தலும் சுங்கப்பணிப்பாளரினால் (பிரகடனங்கள்) தீர்மானிக்கப்பட்டவாறான பிற விடயங்களை பாதுகாத்தலும்.
- கண்காணிப்பு நோக்கங்களுக்காக சி.பி.டி கானே அல்லது எ.ரி.எ கானே திட்டத்தின் கீழ் தற்காலிகமாக இறக்கமதி செய்யப்படும் வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை பதிவு செய்தல்.
- குவியலாக கொண்டுவரப்படும் பொருட்களை கண்காணித்தல் மற்றும் மேலதிக அறவீடுகளை அறவிடவேண்டின் அதனை அறவிடல்.
- நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட தீர்வை விலக்களிப்புக்கு இணங்க வழங்கப்பட்ட தீர்வை விலக்களிப்பு தொடர்பாக அறிக்கைகள் தயாரித்தல்.
இணக்கப்பாடு மற்றும் வசதியளிப்புப் பணிப்பகத்தின் பிரதான குறிக்கோள்களில் ஒன்று, வர்த்தக இலகுவாக்கத்திற்கும் சுங்கக் கட்டுப்பாட்டிற்கும் இடையிலான சமநிலையினை உறுதிப்படுத்துவதாகும். சரக்கு வெளியாக்கலுக்கும் பின்னரான கணக்காய்வும் அத்தகையதொரு சுங்கக் கட்டுப்பாடாகவே விளங்குகின்றது. சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுச் செயன்முறை என்பது, சுங்கமானது குறித்த சரக்குகளை வெளியாக்கிய பின்னர் இடம்பெறுகின்ற ஒரு கட்டமைக்கப்பட்ட பரிசோதனையாகும். இந்தப் பரிசோதனை சம்பந்தப்பட்ட வர்த்தகத் தரவுகள், விற்பனைத் தொடர்புகள், நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத பதிவுகள், பௌதீக இருப்புகள் மற்றும் வர்த்தகர்களின் ஆதனங்கள் போன்ற தொடர்பில் இடம்பெறக்கூடும். வர்த்தகர்களின் இணக்கப்பாடுகளை அளவீடு செய்தல் மற்றும் அதனை மேம்படுத்தல் போன்றனவே இதன் நோக்கமாகும். சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வானது, உலக வர்த்தக அமைப்பின் சுங்கப் பெறுமதி மதிப்பிடல் உடன்படிக்கையுடனான இணக்கப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் சுங்கத்தின் கட்டுப்பாடுகள் வினைத்திறன் மிக்கதாகத் திகழ்வதை உறுதிப்படுத்துகின்ற அத்தியவசியமிக்கதொரு கருவியாகும் என நிரூபித்துள்ளது. மேலும் இது வினைத்திறன் மிக்கதொரு சுங்க இடர் முகாமைத்துவ மூலோபாயத்தினை அமுல்படுத்துவதில் ஒரு வகிபாகத்தினை வழங்கி வருவதோடு, இது இணக்கப்பாடுகளை அளவிடுவதன் மூலம் ஒவ்வொரு வர்த்தகருக்குமான இடர் மட்டத்தினைக் கணிப்பிடுவதற்கும் மற்றும் பெறுபேற்றின் அடிப்படையில் எதிர்காலக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பதற்கும் சுங்கத்தினை இலகுவாக்குகின்றது.

இடர்-மைய சரக்கு வெளியாக்கலின் பின்னரான அணுகுமுறை ஒன்றினைப் பிரயோகிப்பதன் மூலம், சுங்க நிர்வாகத்தினால் தமது வளங்களை வினைத்திறன் மிக்க வகையில் உபயோகிப்பதற்கு இலக்குப்படுத்தக்கூடியதாக இருப்பதோடு, சட்டத்திற்கு முழுமையாகவும் தன்னார்வமாகவும் இணக்கமுறுகின்ற வர்த்தகர்கள் மத்தியில் வெற்றிகரமான கூட்டாண்மைகளை உருவாக்கவும் வழியமைக்கிறது.

சுங்கப் பிரகடனங்களின் துல்லியத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையைச் சரி பார்த்தல் மற்றும் சர்வதேச வர்த்தகத்திற்கு வசதியளிக்கின்ற அதேவேளை, சுங்கத் தேவைப்பாடுகளுடன் இணக்கமுறுவதை உறுதிப்படுத்தல் போன்றனவே சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வின் பிரதான குறிக்கோள்களாகும். சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வானது, சர்வதேச வர்த்தகத்திற்கு இலகுவளிக்கின்றதோடு, வணிகச் சமூகத்திற்கான சுங்க நடைமுறைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் சிறந்த புரிதலை வழங்கின்ற அதேவேளை, சுங்கத்துடனான தமது இணக்கப்பாட்டினை மேம்படுத்துவதற்கு வர்த்தகர்களை ஊக்குவிக்கின்றது.

சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுகளில் இரண்டு பிரதான வகைகள் காணப்படுகின்றன. அவையாவன, பரிமாற்ற-மையக் கணக்காய்வு (TBA) மற்றும் முறைமை-மையக் கணக்காய்வு (SBA) என்பனவாகும். பரிமாற்ற-மைய கணக்காய்வு என்பது, இறக்குமதி அல்லது ஏற்றுமதிப் பிரகடனம் ஒன்றின் குறிப்பான விபரங்களைப் பரிசோதிப்பதாகும். இங்கு ஏதேனும் ஒரு கேள்வி எழும்பட்சத்தில், சுங்கக் கணக்காய்வாளர் இறக்குமதியாளரை/சரக்குதாரரை அல்லது அவரது முகவரை தொலைபேசி ஊடாக அல்லது மின்னஞ்சல் ஊடாக மேலதிக விபரங்களை வேண்டித் தொடர்புகொள்வர். வேண்டப்பட்ட சான்றுகள் சுங்க அலுவலகத்திலுள்ள சுங்க கணக்காய்வாளருக்கு அனுப்பி வைக்கப்படும். முறைமை-மையக் கணக்காய்வு என்பது, இறக்குமதியாளர் அல்லது ஏற்றுமதியாளரின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை பற்றியதொரு முறைமை சார்ந்த மதிப்பீடாகும். இது உணரப்பட்ட பலங்கள் மற்றும் பலவீனங்கள் தொடர்பில் ஆராய்ந்து பரிசோதனை செய்யும் வகையில் விளங்குகிறது. இந்தக் கணக்காய்வானது, சமர்ப்பிக்கப்படுகின்ற சுங்கப் பிரகடனங்களின் துல்லியத் தன்மையினைப் பரிசோதித்தல் மற்றும் வணிக நடவடிக்கை தொடர்பில் சம்பந்தப்பட்ட சட்ட இணக்கப்பாட்டு மட்டம் குறித்தானதொரு கருத்தினை வகுப்பத்தல் மற்றும் உறுதிசெய்யப்பட்ட பலவீனங்களை சரிசெய்வதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல் போன்ற நோக்கங்களைக் கொண்டுள்ளது.

மேற்படி இரண்டு பிரதான கணக்காய்வு வகைகளுக்கும் மேலதிகமாக, சரக்கு வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வானது மேலும் இரண்டு கணக்காய்வு வகைகளைக் கொண்டுள்ளது. அதாவது, கருப்பொருள்-மைய கணக்காய்வுகள் மற்றும் விசாரணை வகைக் கணக்காய்வு போன்றனவே அவையாகும். இலங்கை போன்ற நாட்டினைப் பொறுத்தவரை, சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற பெரும்பாலான வர்த்தகர்கள் முறைசாரா வர்த்தகர்களாவர். இத்தகைய வர்த்தகர்கள் தொடர்பிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே கருப்பொருள்-மைய கணக்காய்வுகளும் விசாரணை வகைக் கணக்காய்வுகளும் எமக்கு அவசியமாகின்றன.
கடந்த காலப்பகுதியில் ஆசிய அபிவிருத்தி வங்கி நிபுணர் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் இலங்கைச் சங்கத்தில் பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு முறைகளை நடைமுறைப்படுத்துவதில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளது. முறைமை மைய கணக்காய்வுகள் உள்ளிட்ட கணக்காய்வின் புதிய பகுதிகளை உள்ளடக்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி சுங்க அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்கியுள்ளது. முறைமை மைய கணக்காய்வுகளின் நோக்கம் இறக்குமதியாளர்களின் இடர் மட்டத்தினை கண்டறிவதாகும். இணக்கப்பாட்டுப் பொருளாதார இயக்குனர் /அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் பற்றிய நிலைப்பாட்டினை வழங்குவதன் மூலம் இடர் முகாமைத்துவச் செயன்முறைக்கானதொரு உள்ளீடாக இணக்கப்பாடு மிக்க வர்த்தகர்களுக்கு விரிவான வசதிகளை வழங்கும் நோக்கில் அதற்கானதொரு அளவுகோலாக முறைமை-மையக் கணக்காய்வுகளின் பெறுபேறுகளை பயன்படுத்த முடியும்.

இப்பணிப்பகத்தின் நிறுவன கட்டமைப்பு



வரைபடம் 1.1

31.12.2024 ஆந் திகதி இருந்தவாறான அலுவலர்கள்



வரைபடம் 1.2

இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகத்தின் பிரிவுகளும் தொழிற்பாடுகளும்



உரு 1.3

8.3.2.1 வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வுக் கிளை

வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வு அல்லது கணக்காய்வை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாடுகள் என்பது மீளாய்வு செய்யப்பட்ட கியோடோ சமவாயத்தினால் குறித்த நடவடிக்கைகளாக வரையறுக்கப்படுகிறது. இந்நடவடிக்கைகள் சுங்கமானது குறித்த நபரின் பிரகடனங்களின் உண்மைத்தன்மை மற்றும் அதிகாரத்தன்மைகளை அந்நபரின் தொடர்புபட்ட புத்தகங்கள், பதிவேடுகள், வர்த்தக முறைமைகள் மற்றும் வணிகத் தரவுகள் ஆகியவற்றைப் பரிசோதனை செய்வதன் ஊடாக உறுதி செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படக்கூடியனவாகும். வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வானது சுங்கத்திற்கும் ஏனைய எல்லைப்புற அதிகார அமைப்புகளுக்கும் கடினமானதொரு கட்டுப்பாட்டு முறையியலாகும். ஏனெனில், இது கண்டிப்பான பரிமாற்ற மைய கட்டுப்பாட்டுச் சூழலிலிருந்து ஒரு வலிமையான கணக்காய்வு மைய நிருவாகத்திற்கு மாறுவதன் ஊடாக அவர்கள் பல்-அடுக்கு இடர் மைய கட்டுப்பாட்டு அணுகல் முறையினை பிரயோகிப்பதற்கு வழியமைப்பதாகவுள்ளது.பரிமாற்ற மையக் கட்டுப்பாடுகள் என்பது பொருட்களின் பௌதீகப் பரிசோதனை, பெறுமதி சரிபார்ப்பு, அவற்றின் உற்பத்தியிடம் மற்றும் வகைப்பாடு, மாதிரிப்பொருள், சான்றிதழ், உரிமம் மற்றும் அனுமதிப் பத்திரங்கள் ஆகியவற்றின் சரிபார்ப்பு போன்ற செயற்பாடுகளின் போதான ஒவ்வொரு பிரத்தியேக கப்பலேற்றுகைக்கும் பிரயோகிக்கப்படுகின்ற கட்டுப்பாட்டு முறைகளாகும்.
(மூலம்: உலக சுங்க அமைப்பு)

வெளியாக்கத்திற்குப் பின்னரான கணக்காய்வுகள் ஒவ்வொரு விடயமாகத் தனித்தனியாகக் கொண்டு, இலக்குப்படுத்தப்பட்ட செயற்பாட்டாளர் மீது அவதானம் செலுத்துவதன் அடிப்படையில், சமுதாயம் மற்றும் வர்த்தகர் தொடர்பான இடர் பகுப்பாய்வு குறித்து தெரிவுசெய்வதன் அடிப்படையில், அல்லது வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறு திட்டமிடப்பட்ட ஒழுங்குமுறையான வழிமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட முடியும். மேலும், இக் கணக்காய்வானது குறித்த சில பொருளாதார நடவடிக்கையாளர்களை விசேடமாக கையாளும் வகையிலும் பயன்படுத்தப்பட முடியும்.

வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுப் பிரிவின் பிரதான குறிக்கோள்கள்

சுங்கச் சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்க சுங்கப் பிரகடனங்கள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதே சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுப் பிரிவின் ஒட்டுமொத்தக் குறிக்கோளாகும். பின்வருவன குறிப்பான குறிக்கோள்களாக விளங்குகின்றன:

- சட்டபூர்வமாகச் செலுத்த வேண்டிய அரசிறை கணிப்பிடப்பட்டு அத்தொகை செலுத்தப்படுவதை உறுதிப்படுத்தல்.
- இலங்கையிலுள்ள உள்வரவு மற்றும் வெளியேறுகை வாயில்களில் குறைந்தபட்ச தலையீடுகளுடன் சர்வதேச வர்த்தகத்திற்கு வசதியளித்தல்.
- சம்பந்தப்பட்ட அனைத்து ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாட்டினை அதிகரித்தல்.

- ➢ சுங்கப் பிரகடனங்களிலான முரண்பாடுகளைச் சரிசெய்தல்.
- ➢ நபர் ஒருவர் பொருத்தமான கணக்கீட்டுப் பதிவுகளைப் பேணுவதை உறுதிப்படுத்தல் மற்றும் சுங்கப் பிரகடனங்கள் யாவும் சரியானதும் துல்லியமானதுமாகும் என்பதை அவர்களது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் உறுதி செய்வதை உறுதிப்படுத்தல்.
- ➢ சுங்கக் கட்டுப்பாட்டிலான விளைவுத்திறனை உறுதிப்படுத்தல்.

வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வின் பிரதான தொழிற்பாடுகள்

- ❖ கணக்காய்வுத் திட்டங்களை விருத்தி செய்தல்
- ❖ அசிகுடா முறைமையிலுள்ள வர்த்தகர்களின் கடந்த காலப் பதிவுகளை உபயோகித்து கணக்காய்வு செய்யப்படுவதற்கான நபர் ஒருவரைத் தெரிவு செய்தல்.
- ❖ கருமபீடக் கணக்காய்வு மற்றும் ஏனைய அவசியமான கணக்காய்வு முறைகளை மேற்கொண்டு கணக்காய்வுகளுக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளல்.
- ❖ கருமபீடக் கணக்காய்வானது ஏதேனும் முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டுமாயின், களவிஜய கணக்காய்வுகளை முன்னெடுத்தல்.
- ❖ கணக்காய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்படுகின்ற மோசடிகளை புலன்விசாரணை செய்தல்.
- ❖ புலன்விசாரணைகள் மற்றும் அறிக்கைகளை நிறைவுசெய்தல்.
- ❖ ஏதேனும் மோசடி மிக்க நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதா என்பதைச் சோதனை செய்வதற்கான விசாரணைகளை முன்னெடுத்தல்.
- ❖ குறித்த குற்றச் செயலானது சுங்க மீறுதலை உறுதிப்படுத்தும் வகையில் போதுமான சான்றினைக் கொண்டிருப்பின், அபராதங்களை விதித்தல் மற்றும் ஏனைய சீராக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.
- ❖ கணக்காய்வுக்கு உட்படுபவருக்கு பின்னூட்டல்களை வழங்குதல்.
- ❖ இறுதியாக இடர் முகாமைத்துவச் செயன்முறைக்கானதொரு உள்ளீடாக உபயோகிக்கும் நோக்கில் குறித்த தகவல்களைக் கொண்டு மத்திய புலன்விசாரணை அலகின் தரவுத்தளத்தினை இற்றைப்படுத்தல்.
- ❖ அவசியமான நவீன மாற்றங்களை மேற்கொள்ளும் நோக்கில் ஒட்டுமொத்த கணக்காய்வுச் செயன்முறையினையும் மதிப்பாய்வு செய்தல்.

வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வில் சரிபார்க்க வேண்டிய விடயங்கள்

வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வானது, கீழே வழங்கப்பட்டுள்ள அட்டவணைக்கு ஏற்ப ஒரு முக்கிய சுங்கப் பிரகடனத்திற்கும் தேவையான ஒவ்வொரு விடயங்கள் மீதும் கவனம் செலுத்துவதோடு, அதற்கிணங்க குறித்த கம்பனிகளின் இணக்கப்பாட்டு மட்டத்தினையும் கணிப்பிடுகின்றது. அதன் பின்னர், சம்பந்தப்பட்ட கம்பனிகள் தொடர்பில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது மோசடியான செயற்பாடுகள் உள்ளனவா என்பது பற்றி தீர்மானிக்கின்றது. அவ்வாறு இருப்பின், மேலதிக பதிவுகள் மூலம் குறித்த அரசிறை மீட்டெடுக்கப்படுகிறது அல்லது சுங்கக் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 235) பிரகாரம் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு அது சரி செய்யப்படுகிறது.

தொடர்புபட்ட பொருட்கள் அடிப்படையிலான தீர்வை	தீர்வை விகிதம் தொடர்புபட்ட பொருட்கள்	தீர்வைத் தொகை தொடர்புபட்ட பொருட்கள்	ஏனையவை
- பெறுமதி - அளவு - நாணயம் - நாணயமாற்று விகிதம்	- வகைப்படுத்தல் - பொது விகிதங்களது விண்ணப்பங்கள் - முன்னுரிமை விகிதங்கள்	- விலக்களிப்புகள் - நியாயமானமுறையில் தீர்மானிக்கப்பட்ட தொகை - சரியான தீர்வைக்கணிப்பீடு	- மட்டுப்படுத்தப்பட்டவைகள் - தடைசெய்யப்பட்டவைகள் - இறக்குமதி அனுமதிப்பத்திரம் - புலமைச் சொத்துரிமை - CITES - உரிமத் தொகை - நாணயமாற்றுக் கட்டுப்பாடு

சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு (PCA) மேற்கொள்ளப்பட முன்னர் சுங்க வெளியாக்கலில்/ அல்லது வெளியாக்கலுக்கு முன்னரான சரிபார்க்கையின் பொழுது மேற்படி பொருட்கள் பரிசோதிக்கப்பட முடியும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அவற்றுக்கிடையிலான தேவையற்ற இரட்டிப்பினைத் தவிர்க்கும் வகையிலும் மற்றும் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வின் சிறப்புத் தகுதியினை அதிகரித்து அதன் குறைபாட்டினைக் குறைக்கும் வகையிலும் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்விலான அணுகுமுறையானது சுங்க வெளியாக்கலில் (வெளியாக்கலுக்கு முன்னரான சரிபார்க்கை) ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட முடியும். வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வானது (PCA) அதன் அதிகாரிகள் சுங்கப் பிரகடனத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை மாத்திரம் அல்லாது கணக்காய்வுக்குரியவரின் வளாகத்தில் கடந்த சில காலமாக பேணப்பட்டு வந்த கணக்கீட்டுப் பதிவேடுகள் போன்ற சம்பந்தப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவுகளையும் பரிசோதனை செய்வதற்கும் அவர்களை இயலச் செய்தமையினை ஒரு சிறப்பம்சமாகக் குறிப்பிட முடியும். சரக்கு வெளியாக்கத்திலிருந்தான 3 மாதங்களினுள் மாதிரிகள் அழைப்பிக்கப்படுகின்றன. குறுங்கால

அறவீடுகள் இரண்டு வருடங்களினுள் மீட்கப்படுவதோடு, ஏதேனுமொரு மோசடி கண்டறியப்படின், கருத்திற்கொள்ளத்தக்க காலப் பகுதி எவ்வாறிருப்பினும் பறிமுதல் செய்யும் வகையில் அபராதம் விதிக்கப்படும்.

நியமதர இயக்கப்பாட்டு நடைமுறை (SOP)

இலங்கை உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதியாக்க உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. மேற்படி உடன்படிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வானது "C" வகை குறித்தான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது. இதனால் "C" வகைக்குரிய அர்ப்பணிப்புக்களை அமுல்படுத்துவதற்கு ஒரு நன்கொடையாளர் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும். இதற்கிணங்க, உலக சுங்க அமைப்பு மற்றும் உலக வர்த்தக அமைப்பு ஆகியவற்றின் நியமதரங்களுக்கு அமைய பொருத்தமான வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு முறைமையினைத் தாபித்து அதனை அமுல்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியானது வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு பணிப்பகத்தின் பணியாட்டொகுதியினருக்கு பயிற்சியளித்தலுக்கான தொழில்நுட்ப உதவியை ஏற்கனவே வழங்கியுள்ளதோடு, வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வின் கையேடு ஒன்றாக உபயோகிக்கப்படவுள்ள நியமதர இயக்கப்பாட்டு நடைமுறை (SOP) ஒன்றை வரைவு செய்வதற்கான தொழில்நுட்ப உதவியையும் வழங்கியுள்ளது. வரைவு SOP ஆனது ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு, அது அண்மிய எதிர்காலத்தில் பிரசுரிக்கப்படும். SOP ஆனது நிறைவு செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டது.

வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு தொடர்பிலான பயிற்சித் திட்டங்கள்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப உதவியின் ஒரு பகுதியாக, வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு பிரிவிலுள்ள அலுவலர்களுக்கான பயிற்சி ஒரு தொடர்ச்சியான திட்டமாக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்படுகிறது. முதலாவது பயிற்சி அமர்வானது 2019ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டதுடன் அதைத் தொடர்ந்து பயிற்சித்திட்டங்கள் 2021 மற்றும் 2022 இல் நடாத்தப்பட்டன.
மற்றுமொரு விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது உலக சுங்க அமைப்பின் வளவாளர்கள் மூலம் PCA இலுள்ள அலுவலர்களுக்கு 2023இல் நடாத்தப்பட்டது.

இடர் முகாமைத்துவ பணிப்பகத்தினால் (RMD) நடத்தப்பட்ட CEO/AEO நிகழ்ச்சித்திட்டம் பற்றிய வசதியளிப்பு

இடர் முகாமைத்துவ பணிப்பகமானது, எல்லைப்-புற பரிமாற்றங்களுடன் சம்பந்தப்படுகின்ற நேரம் மற்றும் செலவு என்பவற்றினை குறைப்பதன் மூலம் சரக்குகளின் நகர்வு, விடுவிப்பு மற்றும் வெளியாக்கலை துரிதமாக்குவதன் மூலம் உலகளாவிய வர்த்தகத்தை பாதுகாத்து அவற்றுக்கு வசதியளிப்பதனை நோக்காகக் கொண்டு, உலக சுங்க அமைப்பின் SAFE தரநியம வேலைச்சட்டகம் மற்றும் உலக வர்த்தக அமைப்பின் வியாபார வசதியளித்தல் உடன்படிக்கை என்பவற்றுக்கு இணங்க குறித்த CEO/AEO திட்டத்தினை ஆரம்பித்துள்ளது.

இந்த AEO திட்டமானது இரண்டு மட்டங்களில் சான்றிதழ்களை வழங்குகிறது. அதாவது, சட்டபூர்வ மற்றும் இயக்கப்பாடு சார்ந்த உயர் இணக்கப்பாட்டினைக் கொண்ட இயக்குநர்களுக்கான இணக்கமான பொருளாதார இயக்குநர் (CEO) மற்றும் CEO தேவைப்பாட்டிற்கு மேலாக, விநியோகத் தொடர் பாதுகாப்புத் தரநியமங்களைப் உயர்வாகப் பேணுகின்ற இயக்குனர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் (AEO) என்பனவாகும்.

வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுப் பிரிவிலான செயலாற்றுகை - 2024

விபரம்	2024
இவ்வாண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட கணக்காய்வு விடயங்களது எண்ணிக்கை	185
முடிவுறுத்தப்பட்ட கணக்காய்வுக்குப்பின்னரான விடயங்களது எண்ணிக்கை (முன்னமே பதிவு செய்யப்பட்டவை அடங்கலாக)	154
மேற்கொள்ளப்பட்ட முறைமை மையக் கணக்காய்வுகளின் எண்ணிக்கை	04
கணக்காய்வின் பின்னர் நிரூபிக்கப்பட்ட குற்றங்களதும் மற்றும் விதிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது எண்ணிக்கை	152
விதிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது மொத்தத் தொகை (ரூபா)	4,285,393,606
சேகரிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது மொத்தத் தொகை (ரூபா)	4,518,638,513
சேகரிக்கப்பட்ட விற்பனை வருமபடிகளது மொத்தத் தொகை(ரூபா)	47,499,403
மேலதிக பதிவுகளாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகை (ரூபா)	41,979,247
அறவிடப்பட்ட மொத்தத் தொகை (ரூபா)	**4,608,117,163**

2020 தொடக்கம் 2024 வரையிலான செயலாற்றுகை

	2020	2021	2022	2023	2024
இவ்வாண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட கணக்காய்வு விடயங்களது எண்ணிக்கை	91	119	87	130	185
முடிவுறுத்தப்பட்ட கணக்காய்வுக்குப்பின்னரான விடயங்களது எண்ணிக்கை (முன்னமே பதிவு செய்யப்பட்டவை அடங்கலாக)	39	35	61	117	154
நிரூபிக்கப்பட்ட குற்றங்களதும் மற்றும் விதிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது எண்ணிக்கை	8	27	53	80	167
அறவிடப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது மொத்தத் தொகை (ரூபா)	72,295,530	811,681,719	1 ,146,354,720	2,587,765,702	4,285,393,606
சேகரிக்கப்பட்ட விற்பனை வரும்படிகளது மொத்தத் தொகை	-	-	-	இருக்கவில்லை	47,499,403
மேலதிக பதிவுகளாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகை (ரூபா)	இருக்கவில்லை	16,304,877	10,107,147	32,632,397	41,979,247
அறவிடப்பட்ட மொத்தத் தொகை (ரூபா)	**72,295,530**	**853,483,565**	**1 ,156,461,867**	**2,980,308,099**	**4,608,117,163**

செயலாற்றுகை ஒப்பீட்டாய்வு (2020 – 2024)

வருடம்	இவ்வாண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு விடயங்களது எண்ணிக்கை	முடிவுறுத்தப்பட்ட வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு விடயங்களது எண்ணிக்கை (முன்னமே பதிவுசெய்யப்பட்டவை அடங்கலாக)	கணக்காய்வு மூலம் நிரூபிக்கப்பட்ட குற்றங்களும் மற்றும் விதிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது எண்ணிக்கை
2020	91	39	8
2021	119	35	27
2022	87	61	53
2023	130	117	80
2024	185	197	167



அரசிறை சேகரிப்பு

வருடம்	சேகரிக்கப்பட்ட அரசிறை (ரூபா)
2020	72,295,530
2021	853,483,565
2022	1,156,461,867
2023	2,980,308,099
2024	4,608,117,163



2020,2021, 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மற்றும் முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை

வருடம்	பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை	முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை
2020	91	8
2021	119	35
2022	87	53
2023	130	117
2024	185	197



8.3.2.3 மீளளிப்புக் கிளை

மீளளிப்புக் கிளையானது கூட்டுறவுக் கொத்தணியின் கீழான இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகத்தின் ஒரு பகுதியாகும். இப்பிரிவானது, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளது தீர்வைகள் மற்றும் கட்டணங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக செலுத்துகைகளை மீளளித்தல் மற்றும் சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235) பிரிவு 18 மற்றும் 22 என்பவற்றின் கீழ் எந்தவொரு துறைமுகத்திலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் எந்தவொரு வெளிநாட்டுத் துறைமுகத்திற்கும் மீள் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பிலான மீளளித்தலை பிரதானமாகக் கையாளுகின்றது.

சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ், ஒரு இறக்குமதியாளர் தன்னால் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பில் மிகையாகச் செலுத்திய தீர்வைகள் மற்றும் கட்டணங்களை, அவை செலுத்தப்பட்ட நாளில் இருந்து இருபத்தி நான்கு மாதங்களுக்குள் அதற்கான கோரிக்கையினை மேற்கொள்ளுமிடத்து, குறித்த இறக்குமதியாளர் அதனை மீளப் பெறுவதற்கு தகுதியுடையவராவர். சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ், இறக்குமதியாளர் எந்தவொரு வெளிநாட்டு துறைமுகத்திலிருந்தும் இறக்குமதி செய்யப்படும் மற்றும் எந்தவொரு வெளிநாட்டுத் துறைமுகத்திற்கும் மீள் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு பத்தில் ஒன்பது பங்கிற்கும் மேற்படாத தீர்வைக் கழிப்பிற்கும் தகுதியுடையவராவர்.

மீளளிப்புக் கோரிக்கைகளது நிலைமை

	2024
பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகளின் எண்ணிக்கை	116
நிறைவடைந்த நிதி மீளளிப்புகளின் (முன்பு பதிவு செய்யப்பட்டவை உள்ளடங்கலாக) எண்ணிக்கை	37
நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகளின் எண்ணிக்கை	13

மீளளிப்புக் கோரிக்கைகளது நிலைமை – கடந்த காலங்கள் (2020 தொடக்கம் 2024 வரை)

வருடம்	2020	2021	2022	2023	2024
பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகள்	53	75	93	77	116
நிறைவடைந்த நிதி மீளளிப்புகள் (முன்பு பதிவு செய்யப்பட்டவை உள்ளடங்கலாக)	45	96	79	98	37
நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகள்	7	32	15	6	13



முடிவுரை

2024 ஆம் ஆண்டானது, நிதி அமைச்சினால் நிர்ணயிக்கப்பட்ட அரசிறை இலக்குகளை அடைவதில் சுங்கத்திற்கு சவாலான ஆண்டாக விளங்கியது. இலங்கையின் பொருளாதார பாதுகாப்பிற்காக அவ்வப்போது எடுக்கப்படும் அரச கொள்கைத் தீர்மானங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் ஊடாக பொருட்களை இறக்குமதி செய்தல் தொடர்பில் பல்வேறு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் அதேபோல் கொடுப்பனவு விதிமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

மேலே கூறப்பட்ட சூழ்நிலையில், இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகத்தின் இலக்குகளை அடைவதற்கும் மற்றும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்குமான அதன் நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்வது சவாலக இருந்தது. எனினும், இப்பணிப்பகத்தினால் ஒதுக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும் மற்றும் உயர்மட்ட செயல்திறனை குறிக்கும் இலக்குகளை அடைவதற்கும் இயலுமாக இருந்தது.

2024 ஆம் ஆண்டில், இப்பணிப்பக அதிகாரிகள் 185 பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு விடயங்களை பதிவு செய்துள்ளனர், மேலும் முந்தைய ஆண்டுகளின் வழக்குகள் உட்பட 197 வழக்குகளை அவர்களால் பூர்த்திசெய்ய முடிந்தது. சுங்கக் குற்றங்கள் என நிரூபிக்கப்பட்ட பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு விடயங்களின் எண்ணிக்கை 167 ஆகும். மேலதிக அறவீடாக சேகரிக்கப்பட்ட மொத்த தொகை ரூ. 4,608,117,163/-. அபராதங்கள்/ பறிமுதல்களாக அறவிடப்பட்ட மொத்த தொகை ரூ. 4,285,393,606/-. விற்பனை செய்யப்பட்ட பொருட்களிலிருந்து மீட்கப்பட்ட மொத்த தொகை ரூ. 47,499,403/-, இதில் மேலதிக பதிலுகளாக அறவிடப்பட்ட மொத்த தொகை ரூ. 41,979,247/-. ஆகும்.

செயலாற்றுகை தொடர்பான தரவுகளை பகுப்பாய்வு செய்கையில், முந்தைய 4 ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டில் அதிக அளவு அறவீடு செய்யப்பட்டுள்ளது என்பதைக் காணலாம். பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விட அதிக எண்ணிக்கையிலான வழக்குகளை நிறைவுசெய்வதற்கு அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார் என்பதைக் கவனத்தில் கொள்வது முக்கியமாகும். எனவே, நிலுவையில் உள்ள வழக்குகளையும் நிறைவுசெய்வதற்கு தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது. மேலும், 80% இற்கும் மேற்பட்ட வழக்குகளை குற்றங்களை நிரூபித்தல் மற்றும் அபராதங்களையும் பறிமுதல்களையும் விதித்தல் மூலம் நிறைவுசெய்ய இயலுமாக இருப்பதானது, பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு விடயங்களை நடத்துவதிலான செயல்திறனையே எடுத்துக்காட்டுகிறது. இது வர்த்தகர்களின் இணக்க நிலை இன்னும் திருப்திகரமான மட்டத்தில் இல்லை என்பதைக் குறிக்கிறது.

இந்த பணிப்பகத்துடன் இணைக்கப்பட்ட மீளளிப்புக் கிளை, 116 மீளளிப்பு விண்ணப்பங்களைப் பெற்றுள்ளதுடன் இக்கோரிக்கைகளில் 50 இனை பூர்த்தி செய்துள்ளது.

இறுதியாக, தேவையான வளங்களை ஒதுக்கவும், அவ்வப்போது பயிற்சிகளை வழங்கவும் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டால், இப்பணிப்பகத்தின் செயல்திறனை மேலும் விளைவுத்திறன் மிக்க முறையில் மேம்படுத்த முடியும் என்பதைக் குறிப்பிடுவது இங்கு அவசியமாகும்.

8.3.3 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பணிப்பகம்

அறிமுகம்

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பணிப்பகத்தின் குறிக்கோள் யாதெனில், சுங்கப் பிரகடனச் செயலாக்கத்தினை தொடர்ந்து செயற்படுத்துவதிலும் மற்றும் முழுமணிநேர தொடர்ச்சியான இணையச் சேவைகளை வழங்குவதிலும் குறித்த தொழில்நுட்பச் சேவைகளையும் அதற்கான வசதிகளையும் திணைக்களத்திற்கு வழங்குவதாகும். சுங்கப் பிரகடனச் செயலாக்கம் பற்றிய முழுத் தானியக்கச் சேவையானது வினைத்திறன்மிக்க மற்றும் பயன்மிக்க சுங்க நிர்வாகம் ஒன்றுக்குத் தேவையான விரைவான, தரமிக்க மற்றும் நம்பகமான தகவல் முறைமைகளை உறுதிப்படுத்துகின்றது. இப்பணிப்பகமானது அனைத்து சுங்கப் பிரகடனங்களையும் மற்றும் துணை ஆவணங்களையும் இலத்திரனியல் முறையில் சமர்ப்பிப்பதனைப் பேணும் வகையிலான மேலும் புதிய வினைத்திறன்மிக்க அம்சங்களையும் கணினி அடிப்படையிலான பழுது-காப்பு முறைமைகளையும் நிறுவி வருகின்றது.

பிரதான தொழிற்பாடுகள்

- தன்னியக்க முறையினை பயன்படுத்தி நிறுவன இலக்குகளை அடைவதற்கு உதவுதல்.
- முறைமை வலைப்பின்னல், கணனிப் பாகங்கள் மற்றும் தரவு நிரல்களைத் திறம்படப் பராமரித்தல்.
- சுங்க நிர்வாகம், சுங்கத்தின் பிற பிரிவுகள், பிற அரச முகவரகங்கள் மற்றும் பங்கீடுபாட்டாளர்கள் ஆகியவர்களுக்கு உரிய வேளையிலான துல்லியமான தகவல் முறைமைகளையும் அறிக்கைகளையும் வழங்குதல்.
- பூகோள முன்னேற்றங்களுடன் இணைந்து செல்லுவதற்கு ஏற்றவாறு அசிகுடா சரக்குக் கட்டுப்பாட்டு முறைமை, மோட்டார் கட்டுப்பாட்டு முறைமை, மற்றும் தினீத் முறைமைகளை விரிவாக்குவதற்காக மதிப்பீடுகள் மேற்கொள்ளல் மற்றும் அமுல்படுத்துகைகளை இற்றைப்படுத்தலும்.
- விரும்பிய செயற்பாட்டு இலக்குகளை எய்துவதற்காக தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப பணிப்பக அலுவலர்களினது கணனித் திறமைகளையும் தொழில்சார் தரத்தையும் விரிவாக்கல்.
- தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப அறிவு தொடர்பிலான பயிற்சிகளையும் திணைக்களத்துக்கான தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப மொடியுள்களை இயக்குதல் பற்றிய பயிற்சிகளையும் வழங்குதல்.

1. முறைமை மேம்பாடுகள்	
பணி	**நிலை**
அசிகுடா வேல்ட் அமைப்பில் இறக்குமதி பணம் அனுப்பும் நடைமுறைகளை ஒருங்கிணைத்தல்	நிறைவடைந்துள்ளது
சுங்கப்பிரகடனத்தின் புதுப்பிப்புகள் மற்றும் நிலை மாற்றங்களை குறுஞ்செய்திகள் மூலம் வர்த்தகர்களுக்கு அறிவிப்பதற்கான ஒரு எச்சரிக்கை அமைப்பு	நிறைவடைந்துள்ளது
பயணிகள்உடன் வராத பொதி களஞ்சியசாலைகளில் அசிகுடா அமைப்பில் சுங்க அறிவிப்பை அறிமுகப்படுத்துவதன் மூலம் வரிகளை சேகரிப்பதனை தானியங்குபடுத்துதல்	நிறைவடைந்துள்ளது
சுங்க தலைமையகத்தில் பழைய/ஏற்கனவே உள்ள வலைப்பின்னல் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்	நிறைவடைந்துள்ளது
பாதிப்புறுதன்மைகளைக் குறைக்கும் வகையில் இறுதிப் புள்ளி சாதனங்களின் பாதுகாப்பு மேம்படுத்தப்பட வேண்டும்.	நிறைவடைந்துள்ளது
இலங்கை சுங்கத்தின் பயன்பாட்டிற்காக இலங்கை இராணுவத்தால் முன்மொழியப்பட்ட உள்ளக அஞ்சல் மற்றும் ஆவண வழிமுறை முகாமைத்துவ அமைப்பு.	நிறைவடைந்துள்ளது
விமான நிலையத்தில் தீர்வையற்ற அனுமதி செயல்முறையை எளிதாக்குவதற்காக COPA உத்தரவுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு வரும் ஒரு கணினி அமைப்பு	நிறைவடைந்துள்ளது
இலங்கை சுங்கத்தின் தற்போதைய கனணி வலைத்தளத்தை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	நிறைவடைந்துள்ளது
இலங்கை சுங்கத்தில் உள்ள கனணி அமைப்புகள் குறித்து இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழுவால் வழங்கப்பட்ட பாதுகாப்பு தொடர்பான கருத்து	இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது
பிற அரச நிறுவனங்களை அசிகுடா அமைப்பில் ஒருங்கிணைத்து அவற்றின் ஒப்புதல் செயல்முறையை தானியக்கமாக்குதல்	இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது
சுங்க இல்ல முகவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட சுங்கப் பிரகடனங்களுக்கான ஒப்புதல்களை வர்த்தகர்களிடமிருந்து அவர்களின் TIN எண்களுடன் பெறுவதற்கான ஒரு அமைப்பு	இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது
காகிதமற்ற சுங்கப்பிரகடன செயலாக்கத்திற்கான டிஜிட்டல் கையொப்பம்	இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது
சர்வதேச தரநிலைகளுக்கு இணங்கும் கப்பல் தரவு வழங்குநர்களின் சுங்க அசிகுடா வேல்ட் மற்றும் ICT அமைப்புகளுக்கு இடையில் ASYHUB ஐ நிறுவுவதன் மூலம் உலகளாவிய கடல்சார் வர்த்தகத்தை டிஜிட்டல் மயமாக்குதல்.	இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது

ஏற்றுமதிப்பிரிவினை தானியங்கியமாக்கல் - ஏற்றுமதி பணிப்பகத்தில் காகிதமில்லா செயலாக்கம் நிறுவப்படல்	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது
பிணைப் பிரிவினை தானியங்கியமாக்கல் - பிணை பணிப்பகத்தில் காகிதமில்லா செயலாக்கம் நிறுவப்படல்	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது
செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதன் மூலம் வருமான முன்னறிவிப்புக்களைப் பெறுவதற்கான சுங்க Ai கருத்திட்டம்	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது

2. முறைமை பேணுகை	
பணி	**இற்றைப்படுத்துகைகளது எண்ணிக்கை**
வரிவிதிப்பு விதிமுறை இற்றைப்படுத்தல் மற்றும் இறுப்பு இற்றைப்படுத்தல்கள்	~187
கணினி முறைமையிலுள்ள தவறுகளை சரிசெய்தல்	~420
கட்டுப்பாட்டு அட்டவணை இற்றைப்படுத்தல்கள்	~245
தரவுத்தளச் செயலாற்றுகையினை நவீனப்படுத்தல்	~228

3. புள்ளிவிபரவியல்கள் மற்றும் அறிக்கையிடல்				
வகை	**கோரப்பட்டவை**	**நிறைவு செய்யப்பட்டவை**	**முடிவுறாதவை**	**சேகரிக்கப்பட்ட கட்டணம் (ரூபா)**
அறிக்கைகளின் எண்ணிக்கை – சுங்கத்திற்கு வெளியில் இருந்தானவை	361	361	0	
அறிக்கைகளின் எண்ணிக்கை – சுங்கத்திலிந்தானவை	1018	1018	0	
				1,624,550

4. கணக்காய்வு			
வகை	**ஆரம்பித்துவைக்கப்பட்டவை**	**நிறைவு செய்யப்பட்டவை**	**முடிவுறாதவை**
விடயங்களின் எண்ணிக்கை	95	55	40
	தடுத்துவைக்கப்பட்டவை	**விடுவிக்கப்பட்டவை**	
கொள்கலன்களின் எண்ணிக்கை	46	32	14
			மொத்த அறவீடுகள்
அறவீட்டுத் தொகை (ரூபா)			182,483,000

5. உதவிக் கருமபீடம்		
அறிக்கையிடப்பட்ட பிரச்சினைக்குரிய விடயங்களின் வகை	பெறப்பட்டவை மற்றும் நிறைவு செய்யப்பட்டவை	முடிவுறாதவை
WH,CDN, Blend Sheet, பணம் அனுப்புதல் மற்றும் சுங்கப் பிரகடனம் போன்ற சிக்கல்களைக் கையாளுதல்	1729	இல்லை
இ-செலுத்துகை பற்றிய சிக்கல்கள்	1021	இல்லை
THINETH முறைமை சிக்கல்களைத் தீர்த்தல்	521	இல்லை
கையடக்கத் தொலைபேசி உடனடிச் சேவை மூலமாக வாடிக்கையாளர் உதவி	நாளாந்தம் 200-250 வரையிலான அழைப்புகள்	இல்லை
சுங்க விண்ணப்பப்பத்திரம் கையாளுகை	211	இல்லை
இ-பொருட்பட்டியல் பதிவு மற்றும் தவறு சரிப்படுத்தல்	929	இல்லை

6. இணைய வலைப்பின்னல் நிர்வாகம்			
பணி	பெறப்பட்டவை மற்றும் நிறைவு செய்யப்பட்டவை		முடிவுறாதவை
Firewalls, WAF, EDR, QMS, NAC, NMS போன்ற பல்வேறு பாதுகாப்பு முறைமையிலிருந்தான பாதுகாப்பு எச்சரிக்கைகள் மற்றும் புகுபதிவுகளை கண்காணித்தல்	12483	12483	இல்லை
முறைமைகள், வலைப்பின்னல்கள், மற்றும் மென்பொருள் பிரயோகங்கள் மீதான வழக்கமான பாதுகாப்பு சோதனைகள் மற்றும் விசாரணை மேற்கொள்ளல்	341	341	இல்லை
பாதுகாப்புச் சார்ந்த விடயங்களை மதிப்பாய்வுசெய்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பதிலளித்தல்	239	239	இல்லை
Firewalls, WAF, EDR, QMS, NAC, NMS சார்ந்த நிர்வாகப் பணிகள்	592	592	இல்லை
வலைப்பின்னல் மற்றும் இணையப் பாதுகாப்பு தொடர்புபட்ட	39	39	இல்லை

கூட்டங்கள்/கலந்துரையாடல்கள்/கருத்து மன்றங்களில் பங்கேற்றல்			
APN/Router வினியோகம் மற்றும் தொலைதூர இடங்களில் கருவி உள்ளமைவுப் பணிகள்	133	133	இல்லை
நிறுவனத்தின் இணைய வலைப்பின்னல் உட்கட்டமைப்பினை வடிவமைத்தல் மற்றும் திட்டமிடுதல்	69	69	இல்லை
வலைப்பின்னல் பராமரிப்பு பணிகள்	871	871	இல்லை
பிரதான வலைப்பின்னல் சார்ந்த சிக்கல்களை சரிசெய்து அவற்றை நிவர்த்தி செய்தல்	699	699	இல்லை
இணைப்பினை நிறுவுவதற்காக/பராமரிப்பதற்காக பிற முகவர்களுடன் ஒருங்கிணைத்தல்	71	71	இல்லை

7. முறைமை நிர்வாகம்		
பணி	**பெறப்பட்டவை மற்றும் நிறைவு செய்யப்பட்டவை**	**முடிவுறாதவை**
சிம்றா (Zimbra) மின்னஞ்சல் சேவையக நிர்வாகம் மற்றும் கண்காணிப்புப் பணிகள்	≈520 (தினசரி கண்காணிப்புடன்)	இல்லை
சிம்றா (Zimbra) பயனர் பதிவு மற்றும் அமைப்பாக்கப் பணிகள்	≈165 (வேண்டுகோள் களின் பேரில்)	இல்லை
IBM AIX சேவையகக் கண்காணிப்பு மற்றும் நிர்வாகப் பணிகள்	≈322 (தினசரி கண்காணிப்புடன்)	இல்லை
Oracle Vmware நிர்வாகப் பணிகள்	≈347 (தினசரி கண்காணிப்புடன்)	இல்லை
முன்னேற்பாட்டுச் சேவையகக் கண்காணிப்பு மற்றும் அமைப்பாக்கம்	≈6350 (தினசரி கண்காணிப்புடன்)	இல்லை
அவசியமான மென்பொருட்களை சேவையகங்களில் நிறுவுதல்	~125	இல்லை
ஒழுங்குமுறையான சேவையக நிர்வாகப் பணிகள் (புதுப்பித்தல், சேமிப்பகத்தினை விரிவாக்கல் போன்ற)	~175	இல்லை
முனைப்பான கோப்பக பயனர் பதிவு மற்றும் அமைப்பாக்கம்	~520	இல்லை
Oracle EXAData நிர்வாகப் பணிகள்	~230	இல்லை
EXSI Dell Node VM அமைப்பாக்க மாற்றங்கள்	~85	இல்லை
VM நினைவக அமைப்பாக்க மாற்றங்கள்	~50	இல்லை
புதிய VM சேவையக ஏற்பாடளிப்பு மற்றும் அமைப்பாக்கம்	~25	இல்லை

8. இணையத்தளம்		
பணி	**பெறப்பட்டவை மற்றும் நிறைவு செய்யப்பட்டவை**	**முடிவுறாதவை**
இணையத்தளத்தில் இருப்பு மாற்றங்களை இற்றைப்படுத்தல்	15	இல்லை
இணையத்தளத்தில் நாணயமாற்று விகிதங்களை வெளியிடுதல்	52	இல்லை
இணையத்தளத்தில் கேள்வு விற்பனையினை வெளியிடுதல்	28	இல்லை
மனிதவள அபிவிருத்தி பணிப்பகத்தின் முகப்புப்பக்கத்தினை இற்றைப்படுத்தல்	0	இல்லை
BCNP வலைப்பக்கத்தினை இற்றைப்படுத்தல்		இல்லை
முகப்புப்பக்க பதாகை குறித்த இடர் முகாமைத்துவ பிரிவின் அறிவித்தல்களை வெளியிடுதல்	0	இல்லை
முதலீட்டுச் சபை ஒருங்கிணைப்பு முகப்புப்பக்கத்தினை இற்றைப்படுத்தல்	0	இல்லை
தீர்வைத் திருத்த வர்த்தமானிப் பத்திரிகைகளை வெளியிடுதல்	5	இல்லை
இறக்குமதியாளர்களுக்கு ஒன்லைன் பதிவு தொடர்பிலான அறிவித்தல்களை வெளியிடுதல்	0	இல்லை
BCNP இணையப்பக்கத்தில் சர்வதேச அமைப்புகளின் பட்டியலை இற்றைப்படுத்தல்	0	இல்லை
முகப்புப் பக்கத்தில் சுங்கத்துடன் தொடர்புடைய உள்ளக திணைக்களங்களின் விபரங்களை இற்றைப்படுத்தல்	4	இல்லை
முகப்புப்பக்கத்தில் பதாகை ஆவணங்களை இற்றைப்படுத்தல்	8	இல்லை
இணையத்தில் அசிகுடா மாற்று இணைப்பை இற்றைப்படுத்தல்	0	இல்லை
நீள் அறையின் அங்கீகரிக்கப்பட்ட கொவிட்-19 புதிய வெளியாக்கல் பற்றிய நடைமுறையினை வெளியிடுதல்	0	இல்லை

8.3.4 விசேட சேவைகள் பணிப்பகம்

அறிமுகம்

இப்பணிப்பகத்தின் குறிக்கோளானது திணைக்களம் மற்றும் திணைக்களத்துடன் தொடர்புடையவர்கள் ஆகியோருக்கான சேவைகளை வழங்குதலாகும். இறக்குமதி செய்யப்படும்/ ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் உரிய இயைபுமுறைக் குறியீட்டினைத் தீர்மானித்தல், இறக்குமதி செய்யப்படும்/ ஏற்றுமதி செய்யப்படும் இரசாயணப் பொருட்களைப் பகுப்பாய்வு செய்தல், இறக்குமதி அல்லது ஏற்றுமதிக்கான இரத்தினக் கல், பெறுமதிமிக்க உலோகங்கள் மற்றும் ஆபரணங்களை மதிப்பிடல், சுங்க இல்ல முகவர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வினியோகித்தல் மற்றும் இறக்குமதி/ ஏற்றுமதி சுங்கப் பிரகடனங்களை இலகுபடுத்தல் வசதிகளை செயன்முறைப்படுத்தும் வகையில் அசிக்குடா முறைமைகளில் ஏற்றுமதியாளர்களையும் இறக்குமதியாளர்களையும் பதிவு செய்தல் போன்ற சேவைகள் இப்பணிப்பகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரதான தொழிற்பாடுகள் :

- பண்டங்கள் / பொருள் வகைப்படுத்துகை
- இரசாயனங்கள் மற்றும் அதனோடு இணைந்த தயாரிப்புகளை அடையாளப்படுத்தலும் வகைப்படுத்தலும்.
- இரத்தினக்கற்கள், பெறுமதிமிக்க உலோகங்கள் மற்றும் ஆபரணங்களை அடையாளப்படுத்தல், வகைப்படுத்தல் மற்றும் விலை மதிப்பிடல்.
- சுங்க இல்ல முகவர்களுக்கான உரிமங்களை வழங்கல், மற்றும் இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்தல்.

8.3.4.1 பொருள் வகைப்படுத்தல் பிரிவு

இப் பிரிவானது, இறக்குமதி செய்யப்படும்/ ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு சரியான இயைபுமுறைக் குறியீட்டினைத் தீர்மாணிப்பதற்குப் பொறுப்பாகவுள்ளது. சுங்கப் பிரகடனம் செயன்முறைப்படுத்துகின்ற பிரிவு அல்லது சரக்குப் பரிசோதனைப் பிரிவுகள் ஆகியவற்றிலான பொருட்களது இயைபுமுறைக் குறியீடு தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் எழும் போது அவர்கள் அதனை இப்பிரிவுக்கு அனுப்புவார்கள். அத்தகையதொரு சந்தர்ப்பத்தில், இப்பரிவானது MSDS மற்றும் ஏனைய வழிமுறையூடாகச் செல்லுகின்ற சர்ச்சைக்குரிய பொருள் தொடர்பில் மிகவும் பொருத்தமான இயைபுமுறைக் குறியீட்டினை பிரேரிப்பதன் மூலம் உள்ளக ஆலோசனையொன்றை வழங்குகிறது.

வியாபார இலகுபடுத்தலில் ஒரு அளவீடாக, இப்பிரிவான இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்படவிருக்கும் பொருட்களுக்கான முன்கூட்டிய இறுப்பு வகைப்படுத்தல் வசதியினை விநியோகிக்கின்றது. இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் குறித்த விண்ணப்பத்தினைப் பூரணப்படுத்தி அதனை இப்பிரிவுக்கு சமா்ப்பிப்பதன் மூலம் இவ்விதிமுறைகளைப் பெறமுடியும். விண்ணப்பமானது சுங்கத் திணைக்களத்தின் வெப் தளத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். இவ் விதிமுறை ஒரு முறை விநியோகிக்கப்பட்டதும், அதே தயாரிப்பாளரிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் அதே பொருள் தொடர்பில் இது விநியோகிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்கு செல்லுபடியாகும்.

எவ்வாறிருப்பினும், ஏதேனும் சுங்கப்பிரகடன பதிவு மையத்திலிருந்தான சுங்கப் பிரகடனங்களை ஆற்றுப்படுத்துகின்ற அலுவலர்கள் அல்லது வழங்கப்படும் தீர்ப்புக்களுடன் உடன்படாத இறக்குமதியாளர்கள்/ஏற்றுமதியாளர்கள், தமது பொருட்களை பொருள் வகையேட்டுக் குழுவிற்கு ஆற்றுப்படுத்த முடியும் அல்லது உலக சுங்க அமைப்பக இயையுபடுத்தப்பட்ட முறைமைக் குழுவிற்கு கூட, சுங்கத்திணைக்களம் ஊடாக தமது பொருட்களுக்கான உரிய வகைப்படுத்தலைப் பெறுவதற்காக சமா்ப்பிக்க முடியும்.

விபரம்	வருடம்			
	கடந்தகால முன்னேற்றம்	31/12/2024 இலுள்ளவாறு முன்னேற்றம்		
விண்ணப்ப வருடம்	2023	2023*	2024	ஓட்டு மொத்த முன்னேற்றம்
முன்கூட்டிய வகைப்படுத்தல் விதிமுறைகள்				
பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	456	137	465	602
வினியோகிக்கப்பட்ட விதிமுறைகளின் எண்ணிக்கை	319	127	378	505
முடிவு செய்யப்படாத விண்ணப்பங்கள்	137	10	87	97
நிறைவு விகிதம்	69.96%	92.70%	81.08%	83.88%
உள்ளக ஆலோசனை விதிமுறைகள்				
பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	153	48	150	198

வினியோகிக்கப்பட்ட விதிமுறைகளின் எண்ணிக்கை	105	41	113	154
முடிவு செய்யப்படாத விண்ணப்பங்கள்	48	7	37	44
நிறைவு விகிதம்	68.63%	85.42%	75.33%	77.78%
வெளியக ஆலோசனை விதிமுறைகள்				
பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	17	1	17	18
வினியோகிக்கப்பட்ட விதிமுறைகளின் எண்ணிக்கை	16	0	17	17
முடிவு செய்யப்படாத விண்ணப்பங்கள்	1	1	0	1
நிறைவு விகிதம்	94.12%	0.00%	100%	94.44%

* 2023 இல் பெறப்பட்டு 2024 இல் முடிக்கப்பட்ட கோப்புகள்

31/12/2024 க்குப் பிறகு பெறப்பட்ட கோப்புகள் - 89
31/12/2024 க்குப் பிறகு பெறப்பட்ட மற்றும் 31/12/2024 அன்று பூர்தி செய்யப்பட்ட கோப்புகள் - 17
31/10/2024 க்குப் பிறகு பெறப்பட்ட மற்றும் 31/12/2024 அன்று நிலுவையில் உள்ளவை - 62

8.3.4.2 சுங்க ஆய்வு கூட பிரிவு

இப்பிவானது, ஏற்றுமதி செய்யப்படும் / இறக்குமதி செய்யப்படும் இரசாயனங்கள் மற்றும் அதனோடு இணைந்த தயாரிப்புகளை அடையாளப்படுத்தல் தொடர்பில் திணைக்கள மற்றும் திணைக்களத்துடன் தொடர்புபட்டவர்களுக்கு உதவும் வகையில் நிறுவப்பட்டதாகும். இரசாயன மாதிரிகள் மற்றும் அதனோடிணைந்த தயாரிப்புகள் அவை சந்தேகத்திற்கிடமாக இருப்பின் அவற்றின் மாதிரிகள் மேலதிக பகுப்பாய்வுக்காக இவ் இரசாயன கூடத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. மேலும், இரசாயன மாதிரிகள் மற்றும் அதனோடிணைந்த தயாரிப்புகளின் வகைப்படுத்தல் தொடர்பில் சச்சரவுகள் எழும்பொழுது, அது பற்றிய அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொள்வதற்காக குறித்ததயாரிப்புடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இப்பிரிவிற்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

இப்பிரிவானது ஒரு தொழிற்நுட்ப கூறாகவிருந்துகொன்டு, பல்வேறு பேரவைகள் மற்றும் நடைமுறை ஒழுங்குவிதிமுறைகள் என்பவற்றினை அமுல்படுத்துவதில் திணைக்களத்துடன் தொடர்புபட்ட ஏனையவர்களுடன் கூட்டிணைப்பினையும் பேணியுள்ளன.

செயலாற்றுகை

பகுப்பாய்வு கணட்டணமாக அறவீடுசெய்யப்பட்ட தொகை : ரூபா. 8,500/-

		பெறப்பட்டவை	முடிவுறுத்தப்பட்டவை	நிறைவு விகிதம்
சுங்கப் பிரகடனங்களின் மொத்த எண்ணிக்கை	பகுப்பாய்வுக்கு மாத்திரமான சுங்கப் பிரகடனங்கள்	14	14	100%
	வகைப்படுத்தலுக்கு மாத்திரமான சுங்கப் பிரகடனங்கள்	-	-	-
	பகுப்பாய்வு மற்றும் வகைப்படுத்தலுக்கான சுங்கப் பிரகடனங்கள்	12	7	58.33%
விதிமுறைகள் மற்றும் பிற கோவைகளின் மொத்த எண்ணிக்கை	பொருள் வகைப்படுத்தல் கிளையிலிருந்து அனுப்பப்பட்ட விதிமுறை கோவைகள்	273	266	97.43%
	பிற கிளைகளில் இருந்து அனுப்பப்பட்ட பிற கோவைகள்	15	15	100%
	ஏனையவைகள்	43	43	100%
	மொத்தம்	**331**	**324**	**97.88%**

8.3.4.3 வ.அ.இ / பெ.சே.வரி மற்றும் சுங்க இல்ல முகவர்களை பதிவு செய்தல் பிரிவு

சுங்க இல்ல முகவர்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் இப்பிரிவினால் வினியோகம் செய்யப்படுகின்றன. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 115(1)ஆம் பிரிவுக்கிணங்க, குறித்த தேவைப்பாட்டினை பூர்த்திசெய்கின்ற அத்தகைய நபர்களுக்கு சுங்க இல்ல முகவர்களாக செயற்படுவதற்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரமளிக்கப்படுகிறது. இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகங்களில் அல்லது இடங்களில் ஏதேனும் கப்பல்கள், அல்லது ஏதேனும் பொருட்கள், அல்லது ஏதேனும் பொதிகளின் உள் வருகை அல்லது வெளியாக்கலுடன் சம்பந்தப்பட்ட வியாபாரத்தை பரிமாற்றம் செய்வதற்கான முகவராக உரிமமளிக்கப்பட்ட சுங்க இல்ல முகவர்களினால் மாத்திரமே செயல்பட முடியும். இவ் அனுமதிப்பத்திரமானது

ஒரு வருட காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் என்பதோடு, குறித்த காலம் முடிவடைவதன் பேரில் அதனைப் புதுப்பிக்கப்படலாம்.

வ.அ. இல/ பெ.சே.வரி சு.இ.மு	தனித்துவ உரிமையாளர்	509
	கூட்டாண்மை	106
	வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம்	1634
	வரையறுக்கப்பட்ட அரச நிறுவனம்	1
	ஒரு முறை உபயோகம் தொடர்பிலான இறக்குமதியாளர் / ஏற்றுமதியாளர்	310
	ப.உ.வராத பொதி வெளியாக்கல் (வாகனங்கள்)	1424
	வாகன சலுகை அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்கள்	884
	ஏனையவர்கள்	54
சு.இ.மு	சுங்க இல்ல முகவரகங்கள் தொடர்பிலான புதிய பதிவுகள்	149
	சுங்க இல்ல முகவர்கள் தொடர்பிலான புதிய பதிவுகள்	179
	சுங்க இல்ல முகவரகங்கள் தொடர்பிலான புதுப்பித்தல்கள்	2159
	சுங்க இல்ல முகவர்கள் தொடர்பிலான புதுப்பித்தல்கள்	5086
	சுங்க இல்ல முகவரகங்கள் தொடர்பிலான நீக்கங்கள்	14
	சுங்க இல்ல முகவர்கள் தொடர்பிலான நீக்கங்கள்	624
	பயிலுநர் அனுமதிப்பத்திரங்கள் தொடர்பிலான புதுப்பித்தல்கள்	705
	அறவிடப்பட்ட கட்டணங்கள் (ரூபா)	13,554,077

8.3.4.4 இரத்தினக் கல் பிரிவு

இரத்தினக் கல், பெறுமதி மிக்க உலோகங்கள் மற்றும் ஆபரணங்கள் போன்றவற்றின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பிலான ஆவண செயன்முறைப்படுத்தலானது இப்பிரிவில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறையில் விசேடத்துவம் பெற்ற அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இவை தொடர்பிலான பெறுமதி மதிப்பிடலானது இவ் அலுவலர்களால் தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அபிவிருத்தி அதிகாரசபை அலுவலர்களது கூட்டிணைப்புடன் கணிக்கப்படுகின்றன.

ஏற்றுமதிகள்

	தொகை (ரூபா)
இரத்தினக் கற்கள்	46,743,165,635
வைர ஆபரணங்கள்	402,349,609
ஏனைய ஆபரணங்கள்	3,746,703,904
வைரங்கள்	60,268,231,538
கியூடா மற்றும் தாதுப்பொருட்கள்	0
கண்காட்சி/சோதனை இரத்தினக் கற்கள்	60,923,283,826
கண்காட்சி ஆபரணங்கள்	101,732,844
மொத்தம்	172,185,467,356

இறக்குமதிகள்

	தொகை (ரூபா)
செப்பமிடப்படாத வைரங்கள்	24,546,641,273
வெட்டப்பட்ட மற்றும் செப்பமிடப்பட்ட வைரங்கள்	32,318,433,654
இரத்தினக்கல்	35,387,318,203
வெள்ளி	461,861,584
தங்கம்	1,902,838,228
தங்க ஆபரணம்	755,252,134
வெள்ளி ஆபரணம்	49,523,689
கண்டறியப்பட்டவைகள்	259,828,313
ஏனையவை (நுகரத்தக்கவை)	55,079,041
மொத்தம்	95,736,776,119

தீர்வை மற்றும் ஏனைய அறவீடுகள்

	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	3,335,910
EIC	42,585,598
செஸ் வரி	0
பெ.சே.வரி	260,838,332
து.வி.அ.அறவீடு	13,505,037
ச.பா.அறவீடு	35,806,862
மேலதிக நேர கட்டணங்கள்	1,301,950
O E	9,632,150
ஏனையவைகள்	165,050
அபராதம்	544,350
மொத்தம்	367,715,239

பிரகடனங்களது எண்ணிக்கை

ஏற்றுமதி	9054
இறக்குமதி	2921
மீள் இறக்குமதி	2074

- ப.ச.வி நிலையத்தில் சேகரிக்கப்பட்ட சேவைக் கட்டணம் - ரூபா 80,200/=

8.4 மனித வளங்கள் கொத்தணி

8.4.1 மனித வளங்கள் முகாமைத்துவப் பணிப்பகம்

8.4.2 மனித வளங்கள் அபிவிருத்திப் பணிப்பகம்

8.4.3 ஊழியர் சேவைகள் பணிப்பகம்

8.4.4 பொருள் விநியோகப் பணிப்பகம்

8.4.1 மனித வளங்கள் முகாமைத்துவ பணிப்பகம்

அறிமுகம்

இப்பணிப்பகத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் நோக்கில் சுங்கத் திணைக்களத்தின் தொழிற்பாடுகளை வினைத்திறன் மிக்க முறையிலும் பயனுறுதி மிக்க முறையிலும் மேற்கொள்வதற்காக மனித வளங்களை முகாமைத்துவம் செய்வதே இப்பணிப்பகத்தின் பிரதான கடமையாகும்.

இப் பணிப்பகமானது, திணைக்களத்தின் பணிநோக்கினை நிறைவேற்றுவதன் மூலம் அதன் தொலைநோக்கினை அடைந்துகொள்வதற்கான திறமையும் தகைமையும் உடைய நபர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் இந்நோக்கத்திற்குத் தேவையான மூலோபாயத் திட்டத்தினை வகுத்தல் போன்ற விடயங்களில் ஈடுபட்டு வருகிறது. மனித வளங்கள் பணிப்பகமானது, ஊழியர்களின் முழுமையான பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்கான பிரயத்தனங்களை எடுக்கின்ற அதேவேளை, அவர்களை ஊக்குவிப்புச் செய்து, அவர்களின் திறமைகளை இனங்கண்டு, மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வினை உரிய வேளையில் வழங்குவதற்குமான பிரயத்தனங்களை எடுத்து வருகின்றது.

மேலும், மனித வளங்கள் பணிப்பகமானது, ஆட்சேர்ப்பு, பதவியுயர்வுகள், இடமாற்றம் மற்றும் ஓய்வுபெறுதல் போன்ற விடயங்களுடன் தொடர்புடைய தொழிற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றதுடன் பொதுச் சேவை ஆணைக்குழு, பொது நிருவாக அமைச்சு போன்ற அரச நிறுவனங்களால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்ற கட்டளைகள், வழிகாட்டல்கள் மற்றும் விதிகளுக்கு இசைவான செயலாற்றுகையினைப் பேணியும் வருகின்றன.

பிரதான தொழிற்பாடுகள்

- ஆட்சேர்ப்பு, நடைமுறைகளுக்கு இணங்க, பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு செய்தலும் பதவியுயர்வுகளை வழங்குதலும்
- ஊழியர் கோவையினைப் பேணல் மற்றும் இரகசியம் பேணல்
- செயலாற்றுகையினை முகாமைத்துவம் செய்தல்.
- அலுவலர்களின் ஓய்வூதியத்துடன் தொடர்புபட்ட தொழிற்பாடுகளை மேற்கொள்ளல்
- உள்ளக இடமாற்றல் கொள்கையினை அமுல்படுத்தல்
- நட்டஈட்டினை செலுத்துதல் மற்றும் ஊழியர்களது ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை முகாமை செய்தல்
- நிறுவன ரீதியான திட்டங்களை தயாரித்தல்

2024 ஆம் ஆண்டுக்கான பிரேரிக்கப்பட்ட செயல் திட்டத்திற்கு எதிரான செயலாற்றுகை

	பிரதான செயற்பாடுகள்	மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை
1.	சுங்க மேலதிக பணிப்பாளர் நாயகம், சுங்க சிரேஷ்ட பணிப்பாளர், சுங்க பணிப்பாளர், சுங்க சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர், சுங்க பிரதிப் பணிப்பாளர் பதவிகளுக்கான பதவி உயர்வுகள்.	• சுங்க மேலதிக பணிப்பாளர் நாயக பதவிகள் 02 இற்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. • சுங்க சிரேஷ்ட பணிப்பாளர் பதவிகள் 08 இற்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. • சுங்க பணிப்பாளர் பதவிகளுக்கு பதில் கடமை புரிதல் அடிப்படையில் 14 பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. • சுங்க சிரேஷ்ட பிரதி பணிப்பாளர் பதவிகளுக்கு முழுநேர பணி அடிப்படையில் 30 பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. • 2024 ஆம் ஆண்டுக் காலத்தில் சுங்க பிரதி பணிப்பாளர் பதவிகளுக்கு முழுநேர பணி அடிப்படையில் 38 பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.
2.	பிரதம சுங்கப் பரிசோதகர் பதவிக்கு அலுவலர்களின் பதவி உயர்வு	2024 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 16 சுங்க பரிசோதகர்கள் பிரதம சுங்கப் பரிசோதகர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர். (அவர்களில் 10 அதிகாரிகள் சுங்க உதவி அத்தியட்சகர் தரம் 11 பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான வரையறுக்கப்பட்ட பரீட்சையில் தேர்ச்சி பெற்று சுங்க உதவி அத்தியட்சகர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்)
3.	புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் சுங்க உதவி அத்தியட்சகர் தரம் 11 பதவிக்கு 137	அரச சேவை ஆணைக்குழுவிடம் வழங்கிய கோரிக்கையின் பேரில், 207 வெற்றிடங்களுக்கு

	அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல்.	ஆட்சேர்ப்பு செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, திறந்த போட்டிப் பரீட்சை பிரிவில் 166 அலுவலர்களையும், வரையறுக்கப்பட்ட பிரிவில் 31 அலுவலர்களையும், தகுதி அடிப்படையில் 10 அலுவலர்களையும் ஆட்சேர்ப்புகள் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. திறந்த போட்டிப் பரீட்சையில் ஆட்சேர்ப்புசெய்வதற்கான பரீட்சை 23.03.2024 அன்று நடைபெற்றது. அதன்படி, பரீட்சையில் சித்தியடைந்த, வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட இரண்டு மடங்கு எண்ணிக்கையான 337 விண்ணப்பதாரிகளுக்கு செப்டம்பர் 27, 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் நடைபெற்ற நேர்முகப்பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டதுடன் 158 அலுவலர்கள் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகள் குறித்து 22 கடிதங்கள் வழங்கப்பட்டதுடன் சகலரும் கடமையினை பொறுப்பேற்றுள்ளனர். தகுதி அடிப்படையில் 10 கடிதங்கள் வழங்கப்பட்டதுடன் கசலரும் கடமையினை பொறுப்பேற்றுக்கொண்டனர்.
4.	சுங்க பரிசோதகர் பதவிக்கான அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்தல்	சுங்க பரிசோதகர் பதவியில் 185 வெற்றிடங்களை நிரப்ப ஒப்புதல் பெறப்பட்டுள்ளது, மேலும் திறந்த போட்டிப்பரீட்சையில் 145 வெற்றிடங்களையும், மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் 40 வெற்றிடங்களையும் நிரப்ப தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. திறந்த போட்டிப் பரீட்சையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சை 17.02.2024 அன்று நடைபெற்றது. அதன்படி, தகுதிவாய்ந்த 301 விண்ணப்பதாரர்களுக்கு 2024 ஆகஸ்ட் 28 மற்றும் 27 ஆகிய திகதிகளில் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. நேர்முகப் பரீட்சையிலன் முடிவுகளின் அடிப்படையில் பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன, மேலும் 139 அலுவலர்கள் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 22 நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டதுடன் அவர்கள் அனைவரும் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.
5.	வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகளை நடத்துதல்	• சுங்க பரிசோதகர் தரம் 11 பதவிக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை 29 மற்றும் 28.10.2024 ஆகிய திகதிகளில் நடத்தப்பட்டது. • சுங்க பரிசோதகர் தரம் 1 பதவிக்கான இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை நவம்பர் 2024 இல் நடைபெற திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அது 23 மற்றும் 22.02.2025 ஆகிய தேதிகளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. • சுங்க உதவி அத்தியட்சகர் தரம் 11 ஆம் பதவிக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை 23 மற்றும் 22.02.2025 ஆகிய தேதிகளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. • சுங்க காவலர் தரம் 111 பதவிக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை 2024 டிசம்பரில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது, ஆனால் அது 15.02.2025 அன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
6.	நியமனங்களை உறுதிப்படுத்துதல்	பரிந்துரைக்கப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்த 29 சுங்க உதவி அத்தியட்சகர்கள், 16 சுங்க பரிசோதகர்கள் மற்றும் 07 சுங்கக் காவலர்கள் ஆகியோரின் நியமனங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.
7.	ஓய்வு பெறவுள்ள அதிகாரிகளின் ஓய்வூதிய செயலாக்கங்களைப் பூர்த்தி செய்தல்	2024 ஆம் ஆண்டில் 73 அதிகாரிகளின் ஓய்வூதியம் தயாரிப்பது தொடர்பான கடிதங்கள் ஓய்வூதியத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன.
8.	அதிகாரிகளின் உள்ளக இடமாற்ற	2024 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், உள்ளக

	நடைமுறையை நிறைவு செய்தல்	இடமாற்ற நடைமுறை இரண்டு முறை மேற்கொள்ளப்பட்டது.
9.	செயலாற்றுகை மதிப்பீட்டின் அடிப்படையில் வருடாந்திர சம்பள உயர்வுகளை வழங்குவதற்கான செயலாக்கத்தினை நிறைவு செய்தல்	2024 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், சுங்கத் திணைக்களத்தின் 1,513 அதிகாரிகளுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டது.
10.	செயலாற்றுகையின் அடிப்படையில் பணியாளர்களுக்கு ஊக்குவிப்புத்தொகைகள் வழங்கும் செயல்முறையை நிறைவு செய்தல்	2024 ஆம் ஆண்டில், தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்த அனைத்து அதிகாரிகளுக்கும் ஊக்குவிப்புத்தொகைகள் வழங்கப்பட்டுள்ளன, மேலும் 2023 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய ஊக்குவிப்புத் தொகைகள் இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளன.
11.	மனித வளங்கள் முகாமைத்துவ பணிப்பகத்தின் வழக்கமான செயல்பாடுகளை நிறைவு செய்தல்	2023 ஆம் ஆண்டில் • தினசரி தபால் மூலம் 11,400 கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. • 125 வாகன அனுமதிபத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. • 274 அதிகாரிகளின் கடன் விண்ணப்பங்கள் பணம் செலுத்தும் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளன. • 160 அதிகாரிகள் வெளிநாட்டு கடமை விடுமுறை பெற்றுள்ளனர், மேலும் 6 அதிகாரிகள் நீண்ட காலத்திற்கு தனியார் வெளிநாட்டு விடுமுறை பெற்றுள்ளனர், அதே நேரத்தில் 353 அதிகாரிகள் குறுகிய காலத்திற்கு தனியார் வெளிநாட்டு விடுமுறை பெற்றுள்ளனர் • மேலும், இந்த பணிப்பகம் இக்காலப்பகுதியில் அதன் வழக்கமான தொடர் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

8.4.2 மனித வளங்கள் அபிவிருத்திப் பணிப்பகம்

தொலைநோக்கு

சுங்கத் திணைக்களத்திற்கான மிகச் சிறந்த பயிற்சியளிப்புப் பிரிவாகத் திகழ்தல்.

பணிநோக்கு

சர்வதேச சுங்கம், வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் ஏற்படும் மாற்றங்களை எதிர்கொண்டு தடையற்ற சேவைகளை ஒருங்கிணைப்பதற்கான திறனைக் கட்டியெழுப்புதல், மேலும் நாட்டின் தேசிய சமூக-பொருளாதார வளர்ச்சியில் இலங்கையின் சுங்க சிந்தனைக் குழுவாக விளங்கி அது குறித்தான பங்களிப்பினை வழங்கல்.

அறிமுகம்

உலகின் ஒவ்வொரு நாட்டினதும் சுங்க நிருவாகங்கள் நவீனமயப்படுத்தல், பூகோளமயமாக்கல், தொழில்நுட்பவியல் ரீதியான புத்தாக்கங்கள், மீள்கட்டமைப்புச் செயலாக்கம் மற்றும் ஊழியர் மேம்பாடு போன்ற எழுச்சி பெற்றுவரும் போக்கினைக் கொண்ட பாரிய சவால்களை எதிர்கொண்டு வருகிறது. மேற்படி அனைத்துக் காரணிகளும் சுங்க நிருவாகங்களில் மனித வள அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான அதியுயர் முன்னுரிமையினை வழங்குவதன் முக்கியத்துவத்தினைச் சுட்டிக்காட்டுகின்ற சுங்க தொழில்வாண்மை அபிவிருத்தியுடன் நேரடியாக தொடர்புபட்டவையாகும்.

இலங்கைச் சுங்கமானது இலங்கையிலுள்ள மிகவும் அறியப்படுகின்ற திணைக்களங்களுள் ஒன்றாக விளங்குவதோடு, இது நாட்டின் எல்லைப்புறக் கட்டுப்பாட்டு முகவராக 200 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டு விளங்குகிறது. அரசிறைச் சேகரிப்பு, சுங்கச் சட்ட அமுலாக்கம், சட்டரீதியான வர்த்தகத்திற்கு வசதியளித்தல் மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்றன குறித்தான பிரதான குறிக்கோள்களைக் கொண்டுள்ள இலங்கைச் சுங்கமானது நாட்டின் சமூக பொருளாதார நலனோம்புகை குறித்தான பிரதான வகிபாகத்தினையும் வழங்கி வருகிறது.

இலங்கைச் சுங்கமானது அதன் பொறுப்புக்களை வினைத்திறன் மிக்க முறையிலும் காத்திரமான தன்மையிலும் முன்னெடுப்பதற்கு, சேவை நன்னடத்தையுடனும் நேர்மறையான மனோபாவத்துடனும் தமது பொறுப்புக்களை மேற்கொள்ளக்கூடிய அறிவும் உயர் திறமையும் உடைய பணியாளர்களை உருவாக்க வேண்டிய அதேவேளை, சேவை நெறிமுறைகளை உயர்ந்த நியமதரத்தில் நடைமுறைப்படுத்துவதும் அவசியமாகும்.

இதனை ஊக்குவிக்கும் வகையில், மனிதவள அபிவிருத்திப் பணிப்பகமானது, திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு மாத்திரமல்லாது, சுங்கத்துடனும் எல்லைப்புறப் பாதுகாப்புடனும் தொடர்புடைய செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஏனைய வெளியக பங்கீடுபாட்டாளர்களுக்கும் அதற்கான வசதியளிப்பதற்கும் எப்போதும் அவதானம் செலுத்துகிறது.

இலங்கைச் சுங்கத்தின் மனித வளங்கள் அபிவிருத்தப் பணிப்பகமானது, திணைக்களத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைந்துகொள்ளும் நோக்கில் ஊழியர்களின் திறன், அறிவு, திறமை மற்றும் மனோபாவம் போன்றவற்றை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு வளங்களை பயன்படுத்தியும் மற்றும் சர்வதேச வளங்களுடன் கூட்டிணைந்தும் திணைக்களத்தின் ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளை மேற்கொண்டு வருகிறது.

இப்பணிப்பகத்தின் பிரதான தொழிற்பாடு

- **மனித வள அபிவிருத்திப் பணிப்பகமானது, பிரதானமாக இத்திணைக்களத்தின் ஊழியர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்து அவற்றை ஒருங்கிணைத்து வருகின்றது.**

- **வெளிநாட்டு நிறுவனங்களால் வழங்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.**
  உலக வர்த்தக அமைப்பு, உலக சுங்க அமைப்பு, UNODC போன்ற சர்வதேச அமைப்புகளிடமிருந்து இலங்கைச் சுங்கம் பெறுகின்ற அழைப்பிதழ்கள்/ வாய்ப்புகளின் அடிப்படையில், மனித வளக் குழுவின் ஒப்புதலுடன் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைக்கும் முழுப் பொறுப்பினையும் மனித வளங்கள் அபிவிருத்திப் பணிப்பகம் கொண்டுள்ளது.
  அத்தகைய வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களில் பன்னாட்டுத் தன்மையின் கீழான சுங்க விடயங்களுக்கு இணங்கிய கருத்தரங்குகள், செயலமர்வுப் பயிற்சிப் பாடநெறிகள், கூட்டங்கள், பட்டப்பின் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மாநாடுகள் போன்றன அடங்குகின்றன.
  இந்த வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகள் வேறுபட்ட தன்மைகளைக் கொண்டுள்ளன, இவற்றில் ஒரு சில பயிற்சிகள் வெளிநாடுகளில் நடைபெறுகின்றதனால் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் வெளிநாட்டுக்குச் சென்று அதனைப் பெறுகின்ற அதேவேளை இன்னும் சில பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வெளிநாட்டு வளவாளர்கள் இலங்கைக்கு வருகை தந்து அவர்கள் மூலம் உள்நாட்டிலும் இடம்பெறுகின்றன.

மேலும், கூட்டங்கள், கருத்தரங்குகள், வெபினார்கள் போன்ற சில வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இணையம் மூலம் நடத்தப்படுகின்றன.

- **உள்ளூர் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்**
  உள்ளூர் பயிற்சியளிப்பானது போட்டித்திறன் மேம்பாட்டுடன் இணைந்திருப்பதோடு, அது திறன்கள் மற்றும் உள்ளார்ந்த திறமைகளை அடையாளங்காண்பதுடன் கூடிய தொடர்புபட்ட துறைகளில் அறிவினையும் விழிப்பணர்வுகளையும் மேம்படுத்துகின்றன.

  மனித வளங்கள் பணிப்பகமானது அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த செயற்திட்டத்திற்கிணங்க சுங்கத்தின் ஒவ்வொரு மட்டத்திலுள்ள ஊழியர்களுக்கும் நிறுவனத்திற்குள்ளே காணப்படுகின்ற வளவாளர்களைக் கொண்டு உள்ளூர் பயிற்சித் திட்டங்களை முன்னெடுத்தும் வருகிறது. இந்த செயற்திட்டமானது திணைக்களத்தின் இற்றைப்படுத்தப்பட்ட பயிற்சித் தேவைப்பாடுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும். ஆண்டின் முடிவில், இப்பணிப்பகமானது திணைக்களத்தின் ஒவ்வொரு பணிப்பகத்திடமிருந்தும் ஆலோசனைகளைக் கோருவதோடு, அத்தகைய பின்னூட்டத்தின் அடிப்படையில் எதிர் வரும் ஆண்டுக்கான செயல்திட்டம் உருவாக்கப்படும்.

  இப்பணிப்பகமானது திணைக்களத்திலுள்ள அலுவலர்களின் திறனை விருத்தி செய்வதனையே பிரதான பொறுப்பாகக் கொண்டுள்ள அதேவேளை, பங்கீடுபாட்டாளர்களின் திறனை விருத்தி செய்தல் மற்றும் அவர்களுக்குப் பயிற்சியளித்தல் தொடர்பான பின்வருவன போன்ற விடயங்களுக்கும் பொறுப்பாகவுள்ளது.

  - பயிற்சிக் கொள்கைகள் முறைமை மற்றும் நடைமுறைகளை வகுத்தலும் அமுல்படுத்தலும்.
  - திணைக்களத்தின் குறிக்கோள்களை அடையும் வகையில் ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள ஊழியர்களினதும் திறமைகளை விருத்தி செய்வதற்கு பொறுப்பாயிருத்தல்.
  - புதிதாக ஆட்சேர்க்கப்படுகின்ற ஊழியர்களுக்கும் மற்றும் பணியாற்றும் இடங்களை மாற்றுகின்ற பொழுது அனுபவம் வாய்ந்த அதிகாரிகளுக்கும் நியமதரமுடைய பயிற்சிகளை வழங்குதல்.
  - ஊழியர்களுக்காக இற்றைப்படுத்தப்பட்ட பயிற்சியிகளை வழங்கும் நோக்கில் (உலக சுங்க அமைப்பு, உலக வர்த்தக அமைப்பு மற்றும் UNODC போன்ற) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அமைப்புகளுடன் கூட்டிணைந்து செயற்படல்.
  - திணைக்களத்தின் இலக்குகளை அடையும் வகையிலான குறிப்பான பயிற்சித்திட்டங்களை வடிவமைத்து வழங்குதல்.
  - மிகச் சிறந்த பயிற்சிகளை வழங்குவதனூடாக தொழில்வாண்மையும் திறமையும் மிக்க சுங்க அலுவலர்களை விருத்தி செய்தல்.
  - புத்தாக்கமும் காத்திரமானதுமான கற்றலுக்குரிய சூழலை வழங்குதல்.
  - சுங்க அலுவலர்களால் பேணப்படவேண்டிய சேவை நன்னடத்தையினை அனுபவத்தில் கொண்டிருக்கும் மட்டத்தினை மேம்படுத்தல்.
  - மனித வளங்கள் முகாமைத்துவத்தில் பேணவேண்டிய சர்வதேச தேவைப்பாட்டினை பேணல்.
  - பயிற்சித் திட்டங்களை வகுத்து அவற்றை அமுல்படுத்துவதன் ஊடாக பயிற்சித் தேவைப்பாடுகளுக்கு முன்னுரிமையளித்து திணைக்களத்தின் பயிற்சித் தேவைகளை மதிப்பிடுதல்.
  - வருடாந்த பயிற்சித்திட்டம் மற்றும் பாடத்திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்தல்
  - பயிற்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை முன்னெடுத்தல்.
  - பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை கண்காணித்து அவற்றை மதிப்பீடு செய்தல்.
  - தேவைப்படுத்துகின்ற பொழுது இலங்கை தரைரப்படை, கடற்படை மற்றும் காவல் துறை போன்ற சம்பந்தப்பட்ட வெளித் தரப்பினருக்கு தேவையான பயிற்சினை ஏற்பாடு செய்தல்.
  - சுங்க இல்ல முகவர்களுக்கு சான்றிதழ் பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளல்
  - சுங்க விடயங்கள் தொடல்பில் திணைக்களத்துடன் தொடர்புபட்ட பங்கீடுபாட்டாளர்களுக்கான பயிற்சித் தேவைப்பாட்டினை நிறைவுசெய்யும் வகையில் சுங்கத்திணைக்களத்திருந்து வளவாளர்களை வழங்குதல்.
  - சுங்க அலுவலர்களுக்கான நூலக வசதிகளை வழங்குதல்.

இப்பணிப்பகத்தின் பதவியணியினர்

திணைக்களம் சார் பயிற்சி இலக்குகளை அடையும் நோக்கில், பின்வரும் பதவியணினர் (அட்டவணை 01) ஏற்கனவே நிருவாகப் பணிப்பகத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளர். எவ்வாறாயினும், தற்போது இந்த பணிப்பகம் மிகவும் குறைவான பதவியணியினரைக் கொண்டு இயங்கி வருகின்ற அதேவேளை (அட்டவணை 01), திணைக்களத்தின் பயிற்சி தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக சகல கடமைகளையும் பெரும் முயற்சியுடன் உரிய நேரத்தில் செய்கிறது

அட்டவணை 01 : அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போதுள்ள பதவியணி

தரம்	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	தற்போதுள்ளவை
சுங்கப் பணிப்பாளர்	01	01
சுங்க சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்	02	01
சுங்க பிரதிப் பணிப்பாளர்	03	01
சுங்க அத்தியட்சகர்	பொருந்தாது	01
சுங்க பிரதி அத்தியட்சகர்	08	02
சுங்க உதவி அத்தியட்சகர்	08	04
சுங்க பரிசோதகர்	பொருந்தாது	02
முகாமைத்துவ சேவைகள் அலுவலர்	03	03
மொத்தம்	**25**	**15**

2024 ஆம் ஆண்டில் பணிப்பகத்தின் சாதனைகள்

உள்நாட்டு பயிற்சித் திட்டங்கள்

உள்நாட்டு பயிற்சித்திட்டங்கள் தொடர்பிலான விவரங்கள் இவ்வறிக்கையின் அத்தியாயம் 6.2இல் வெளியிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் செயல் திட்டம் மற்றும் சுங்கப் பணிப்பாளர்/மனித வள குழுவால் சுட்டிக்காட்டப்பட்ட பிற திட்டங்கள் என்பவற்றிற்கு இணங்க, இப்பணிப்பகமானது 2024 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சுங்கத்தின் பணியாட்டொகுதியினருக்கு மொத்தமாக 58 உள்நாட்டு பயிற்சித் திட்டங்களை (உள்ளக மற்றும் வெளியக) வெற்றிகரமாக நடாத்தியுள்ளது. பின்வரும் அட்டவணையானது (அட்டவணை 02) அத்தகைய பயிற்சிகளில் பற்கேற்ற அலுவலர்களின் எண்ணிக்கையை (தரம் வாரியாக) விளக்குகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட பயிற்சித் திட்டங்களில், புதிதாக நியமிக்கப்பட்ட சுங்க உதவி அத்தியட்சகர்கள் (158) மற்றும் புதிதாக நியமிக்கப்பட்ட சுங்க பரிசோதகர்கள் (140) ஆகியவர்களுக்கான பணிப்பயிற்சி திட்டங்களும் இதில் அடங்கும்.

அட்டவணை – 02 : உள்நாட்டு பயிற்சி திட்டங்களுக்காக பங்கேற்ற சுங்க அலுவலர்கள் (உள்ளக மற்றும் வெளியக)

தரம்	**பங்கேற்பு (உள்ளக மற்றும் வெளியக)**
சுங்க மேலதிக பணிப்பாளர் நாயகம்	01
சுங்க சிரேஷ்ட பணிப்பாளர்	02
சுங்கப் பணிப்பாளர்	05
சுங்க சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்	85
சுங்க பிரதிப் பணிப்பாளர்	134
சுங்க அத்தியட்சகர்	135
பெறுமதி மதிப்பீட்டாளர்கள்	10
சுங்க பிரதி அத்தியட்சகர்	91
சுங்க உதவி அத்தியட்சகர்	468
சுங்க பிரதான பரிசோதகர்	01
சுங்க பரிசோதகர்	130
முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர்	40
அலுவலக உதவியாளர்	19
ஏனயவர்கள்	9

வெளியக பங்கீடுபாட்டாளர்களின் கோரிக்கைக்கு இணங்க, மனித வள குழுவின் ஒப்புதலுடன் மனித வள அபிவிருத்திப் பணிப்பகமானது இவ் ஆண்டுக்காலப்பகுதியில் கடலோர காவல்படை, இராணுவம், பொலீஸ், அரச மற்றும் தனியார் அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களுக்காக பல பயிற்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து அவற்றை நடத்தியுள்ளது.
அத்தகைய கோரிக்கைகளின் தன்மைக்கு ஏற்ப, சில நிகழ்சித் திட்டங்கள் உள்ளக அமைப்பில் நடாத்தப்பட்டதுடன் மற்றய சந்தர்ப்பங்களில், திணைக்களத்திலிருந்து பொருத்தமான வளவாளர்கள் பயிற்சிகளை நடத்துவதற்கு வெளியில் அனுப்பப்பட்டுமுள்ளனர்

வெளியக பங்கீடுபாட்டாளர்களுக்கான பயிற்சித் திட்டங்கள்

- பயிற்சி நெறிகள் - 58

வெளிநாட்டு பயிற்சித் திட்டங்கள்

வெளிநாட்டு பயிற்சித்திட்டங்கள் தொடர்பிலான விவரங்கள் இவ்வறிக்கையின் அத்தியாயம் 6.2இல் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பணிப்பகமானது 2024 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வெளிநாடு, உள்நாடு மற்றும் இணையம் ஆகியவற்றில் நடைபெற்ற 64 வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களை வெற்றிகரமாக ஒருங்கிணைத்துள்ளது.
அட்டவணை 03 ஆனது வெளிநாட்டு பயிற்சி திட்டங்களில் சுங்க அதிகாரிகளின் பங்கேற்பை (தர வாரியாக) விளக்குகின்ற அதேவேளை அட்டவணை 04 ஆனது அவ்வாண்டுக் காலப்பகுதியில் நடத்தப்பட்ட பயிற்சி வகைகளைக் காட்டுகிறது.

அட்டவணை 03 : வெளிநாட்டு கருத்தரங்குகள்/ மாநாடு/ பயிற்சித் திட்டங்களுக்கான பங்கேற்பு (தரம் வாரியாக)

தரம்	பங்கேற்பு
சுங்க பணிப்பாளர் நாயகம்	02
சுங்க மேலதிக பணிப்பாளர் நாயகம்	06
சுங்க சிரேஷ்ட பணிப்பாளர்கள்	06
சுங்கப் பணிப்பாளர்கள்	05
சுங்க சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்கள்	23
சுங்க பிரதிப் பணிப்பாளர்கள்	29
சுங்க அத்தியட்சகர்கள்	08
சுங்க பிரதி அத்தியட்சகர்கள்	20
சுங்க உதவி அத்தியட்சகர்கள்	61
ஏனையவர்கள்	03

அட்டவணை 04 : இவ்வாண்டுக் காலப்பகுதியில் நடைபெற்ற வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களின் வகைகள்

வெளிநாட்டு நிகழ்ச்சித் திட்டம்	மொத்தம் : 197
நிகழ்ச்சித் திட்டம் - வெளிநாடு	
கருத்தரங்குகள்	08
வேலைக்களரிகள்	31
குழுக் கூட்டங்கள்	21
நிகழ்ச்சித் திட்டங்கள்	25
பயிற்சி நெறிகள்	16
கலந்துரையாடல்கள்	32
பட்டப்பின் கற்கை நிகழ்ச்சித்திட்டம்	02
மாநாடு	07
ஏனையவைகள்	37



சுங்க இல்ல முகவர் பயிற்சி மற்றும் பரீட்சை

சுங்க இல்ல முகவர்கள்/ சரக்கு மேடை உதவியாளர்களுக்கான சான்றிதழ் பாடநெறியானது, மனிதவள அபிவிருத்தி பணிப்பகத்தினால் நடத்தப்படும் மிகவும் பிரபலமான பயிற்சித் திட்டங்களில் ஒன்றாக விளங்குகின்றது. இந்தப் பயிற்சிநெறியானது சுங்க சரக்கு வெளியாக்கல் செயல்முறை, இறக்குமதி/ஏற்றுமதி நடைமுறைகள், சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் தொடர்புடைய சட்டங்கள், பொருட்களின் வகைப்பாடு, பெறுமதி மதிப்பீட்டு நுட்பங்கள், துறைமுக அதிகார சபை நடைமுறைகள், அசிகுடா முறைமை, சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பாதுகாப்பு மரபுகள் போன்ற விடயங்கள் குறித்தான ஒட்டுமொத்த அறிவினையும் வழங்குகிறது. இந்த விரிவுரைகள் அனைத்தும் அனுபவம் வாய்ந்த சுங்க அதிகாரிகளால் முன்னெடுக்கப்படுகின்றன, மேலும் சில பாடநெறி தொகுதிகளுக்கு, வெளி நிறுவனங்களிலிருந்தான வளவாளர்களின் சேவையும் பெறப்படுகின்றது.

உரிமம் பெற்ற சுங்க இல்ல முகவரை உருவாக்குவதற்கான அடித்தளத்தை இந்த நிகழ்ச்சித்திட்டம் வழங்குவதால், இந்தப் பயிற்சித் திட்டத்திற்கு அதிக கேள்வி காணப்படுகிறது. சுங்க இல்ல முகவர் அனுமதிப்பத்திதைத்தைப் பெறுவதற்கு இந்த பாடத்திட்டத்தைப் பின்பற்றி, பாடநெறியின் முடிவில் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையில் தேர்ச்சி பெறுவது அவசியமாகும். இந்த சுங்க இல்ல முகவர் அனுமதிப்பத்திரத்தினை கொண்டிருப்பவர்கள் நாட்டின் இறக்குமதி/ஏற்றுமதி வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்

அனுமதி பெற்ற சுங்க இல்ல முகவர்/சரக்கு மேடை உதவியாளர்களைத் தவிர, இந்த பரீட்சையின் முடிவில் வழங்கப்படும் சான்றிதழுக்கு கிடைக்கும் உயர் அங்கீகாரம் காரணமாக, பல பரீட்சார்த்திகள் இந்தப் பாடநெறிக்கு விண்ணப்பிக்கின்றனர்.

மனிதவளங்கள் அபிவிருத்தி பணிப்பகத்தினால் வழங்கப்படும் இந்த சான்றிதழ், உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

கீழே உள்ள அட்டவணை 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற குழு 01 சுங்க இல்ல முகவர்/சரக்கு மேடை உதவியாளர் பரீட்சையின் விவரங்களை விளக்குகிறது.

அட்டவணை 05 : சுங்க இல்ல முகவர்/சரக்கு மேடை உதவியாளர் பரீட்சையின் சாராம்சம்

பரீட்சை	பங்கேற்றவர்கள்	சித்தியடைந்தவர்கள்	விகிதம்
சுங்க இல்ல முகவர்/சரக்கு மேடை உதவியாளர் சான்றிதழ் பாடநெறி பரீட்சை	284	252	88.73%

சுங்க நூலகம்

சுங்க நூலகமானது, மனிதவள அபிவிருத்திக்கானதொரு முக்கிய கருவியான 26.01.2005 அன்று நிறுவப்பட்டதோடு, இது மனிதவள அபிவிருத்தி பணிப்பகத்தின் பணிப்பாளரின் கீழ் ஒரு இணைக்கப்பட்ட பிரிவாகவும் நிறுவப்பட்டது.

இந்த நூலக வசதிகள் துறையின் அனைத்து பணியாளர்களுக்கும் கிடைக்கப் பெறுவதோடு, அங்கத்தவர்கள் அல்லாதவர்களும் நூலகத்தைப் பயன்படுத்தலாம். புத்தகங்களுக்கு மேலாக, பல்வேறு பத்திரிகைகள் மற்றும் செய்தித்தாள்களும் கிடைக்கின்றன, நூலகமானது எதிர்கால குறிப்புக்காக திணைக்களத்தினால் வெளியிடப்படும் திணைக்களக் கட்டளைகள் மற்றும் அறிக்கைகள் என்பவற்றினையும் சேகரித்துப் பாதுகாத்து வருகிறது

நூலகத்தின் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை அவதானிக்கப்பட்டு வருகின்றமையினால், நூலகத்திற்கு பின்வரும் மேலதிக வசதிகளை வழங்க வேண்டியுள்ளது :

(அ) தனிப்பயனாக்கப்பட்ட நூலக மென்பொருளை அறிமுகப்படுத்தல் (பார்கோடு அமைப்புடன்)
(ஆ) அதிநவீன கணினிகளுடன் கூடிய இணைய வசதிகள்.

இப்பணிப்பகத்தினால் வழங்கப்படம் ஏனைய சேவைகள்

முதுகலை பட்டப்படிப்புகளுக்கான பாடநெறி கட்டணங்களை திருப்பிச் செலுத்துதல்.

சுங்க அதிகாரிகள் அவர்களது எதிர்கால பதவி உயர்வுகளுக்கு முதுகலைப் பட்டப்படிப்பு தகுதியைப் பெறுவது மிகவும் முக்கியமானது. அவர்கள் தங்கள் முதுகலைப் பட்டப்படிப்புகளுக்காகச் செலுத்தும் பாடநெறி கட்டணங்களைத் திருப்பிச் செலுத்தும் சேவையை இப்பணிப்பகம் வழங்குகிறது.

இந்தச் சேவையானது சுங்க அலுவலர்களை, அவர்களது முதுகலை தகுதிகளை அடைவதற்காக அவர்களின் உயர் கற்கைகளில் ஈடுபடுவதனை ஊக்குவிப்பது மட்டுமல்லாது, அரசாங்கத்தின் அனைத்துத் துறைகளையும் விட மிகச்சிறந்த கல்வித் தகைமையுடைய அதிகாரிகளைக் கொண்ட திணைக்களமாக சுங்கத் திணைக்களத்தினை விளங்கச் செய்வதற்கான ஊக்குவிப்பினையும் வழங்குகின்றது.

தற்போதைய நிலையிலும் மற்றும் பரிந்துரைகளிலும் இப்பணிப்பகம் எதிர்கொள்ளும் சவால்கள்

தற்போது மனிதவள அபிவிருத்திப் பணிப்பகம், அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களை விட மிகக் குறைவான பணியாளர்களைக் கொண்டு இயங்குகிறது (குறிப்பு: அட்டவணை 01). எனவே, தற்போதைய மனிதவள அபிவிருத்திப் பணிப்பகத்தின் பணியாளர்கள் திணைக்களத்தின் இலக்குகளை சரியான நேரத்தில் நிறைவேற்றுவதற்கு அதிக பணிகளைச் செய்ய வேண்டியிருப்பதால் இது ஒரு பாரிய பிரச்சியையாக உருவெடுத்துள்ளது.

முழு சுங்கத் திணைக்களத்தின் திறன் மேம்பாட்டிற்கான உச்சபட்ச பொறுப்பை மனிதவள அபிவிருத்தி பணிப்பகம் கொண்டிருப்பதால், குடிநீர் விநியோக சாதனங்கள், விரிவுரைகளை மேற்கொள்வதற்கான மடிக்கணினி போன்ற சில பொருள் கொள்வனவு குறித்தான ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன. மேலும், மனிதவள அபிவிருத்தியின் கேட்போர் கூடத்திற்கு சிறந்த தரம்வாய்ந்த உபகரணங்கள் எங்களுக்குக் கிடைத்துள்ள போதிலும், அவை இன்னும் சரியாக நிறுவப்படவில்லை. எனவே, திணைக்களத்தின் வளர்ந்து வரும் பயிற்சித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மேற்கூறிய தேவைகளை விரைவில் பூர்த்தி செய்வது அவசியமாகுமென்பதோடு, இதன் மூலம் திணைக்களத்தின் பணியாளர்களுக்கு ஒரு சீரான சேவையை வழங்க முடியும்.

அடுத்தகட்ட நடவடிக்கை

- 2025 ஆம் வருட பயிற்சி அட்டவணையை சரிசெய்யும் வகையில் பணிப்பகத்தின் பயிற்சித் தேவைப்பாடுகளை இனங்காணும் நோக்கில் பயிற்சித் தேவை பற்றிய கணக்காய்வினை மேற்கொள்ளல்.
- **வளவாளர் குழுவை அங்கீகரித்தல்** மற்றும் வளவாளர் குழுவிற்கான கற்பித்தல் முறையியல்களை முன்னெடுத்தல்.
- உள்ளூர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பயிற்சி மாதிரிகளை தயாரித்தல்.

முக்கிய சாதனைகள்

• சுங்க அதிகாரிகளுக்கான 58 உள்ளூர் பயிற்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டது.
• 284 விண்ணப்பதாரர்களுக்கு சுங்க இல்ல முகவர் சான்றிதழ் வழங்கியமை மற்றும் அடுத்த ஆண்டு பயிற்சித் திட்டத்திற்கு 300க்கும் மேற்பட்டவர்களை பதிவு செய்துள்ளமை.
• ஐந்து வருட காலப்பகுதிக்கான (2019 தொடக்கம் 2024 வரையான) விரிவானதொரு பயிற்சி தரவுத்தளத்தினை (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) தயாரித்தல்.
• சுங்க உதவி அத்தியட்சகர் பணிப்பயிற்சித் திட்டம் மற்றும் சுங்கப் பரிசோதகர் பணிப்பயிற்சித் திட்டம் என்பன நடாத்தப்பட்டன.

8.4.3 ஊழியர் சேவைகள் பணிப்பகம்

குறிக்கோள்கள்

அனைத்து நடவடிக்கைகளும் சட்டபூர்வ, உத்தியோகபூர்வ மற்றும் நிறுவன ரீதியான தரநியமங்களுடன் இசைந்து செல்வதை உறுதிப்படுத்தும் வகையில் பொறுப்புணர்வு, ஒழுக்கவுணர்வு, வகைப்பொறுப்புக்கூறல் மற்றும் நேர்மையுணர்வு ஆகியவை தொடர்ந்து நிலைநிறுத்தப்படக்கூடியதொரு சூழலை வளர்ப்பதில் கவனம் செலுத்தக்கூடிய வலுவான பணி நெறிமுறைக் கலாச்சாரத்தை விருத்தி செய்தல்.

பிரதான தொழிற்பாடுகள்

ஒழுங்கு மேலாண்மை:

I. ஒழுக்காற்று முகாமைத்துவம் :
சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராக முதற்கட்ட விசாரணைகள் மற்றும் முறையான ஒழுங்காற்று விசாரணைகளை நடத்தி, தாபன விதிக்கோவையின் தொகுதி 11 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி செயல்படல்.

II. அரச கணக்காய்வு விசாரணைகளுக்கு பதிலளித்தல் :
சகல பணிப்பகங்களுடனும் கூட்டிணைப்பினை வைத்திருத்தல் மற்றும் கணக்காய்வு அதிபதியினால் எழுப்பபடும் வினாக்களுக்கு பதிலளித்தல்

III. **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை ஒருங்கிணைத்தல்:**
நிதி அமைச்சினால் மேற்கொள்ளப்படும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்திட்டத்தினை ஒருங்கிணைத்தல்.

IV. அரச கணக்குகள் பற்றிய குழுவிற்கு (COPA) சமர்ப்பிப்பதற்கான அறிக்கைகளை தயாரித்தல்
சகல பணிப்பகங்களுடனும் கூட்டிணைந்து COPA அறிக்கைகளுக்கான பதில்களை தயாரித்து அதனை நிதி அமைச்சுக்குச் சமர்ப்பித்தல்.

V. பாராளுமன்ற வினாக்களுக்கான பதில்களை வழங்கல்
அனைத்து பணிப்பகங்களிடமிருந்தும் பாராளுமன்ற கேள்விகளுக்கான அவதானிப்புகள் / பதில்களைப் பெற்று நிதி அமைச்சுக்கு சமர்ப்பித்தல்.

VI. **சட்டவாக்க நிறுவனங்களுடனான (குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, பாராளுமன்ற உப குழு பொன்றவற்றுடன்) ஒருங்கிணைப்பினைப் பேணுதல்**

2024 ஆம் ஆண்டில் பணிப்பகத்தின் செயலாற்றுகை

- **ஒழுக்காற்று முகாமைத்துவம்**
  ஆரம்ப விசாரணைகள் :

2024 இல் இடம்பெற்ற ஆரம்ப விசாரணைகளது எண்ணிக்கை	முடிவுற்ற ஆரம்ப விசாரணைகளது எண்ணிக்கை	முடிவுறாத ஆரம்ப விசாரணைகளது எண்ணிக்கை
20	12	08

முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகள் :

இடம்பெற்ற முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகளது எண்ணிக்கை	முடிவுற்ற முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணைகளது எண்ணிக்கை	மீதமாகவுள்ள ஒழுக்காற்று விசாரணைகளின் எண்ணிக்கை
18	08	10

கணக்காய்வு வினாக்களுக்கு பதிலளித்தல் :

பெறப்பட்ட கணக்காய்வு விசாரணைகளது எண்ணிக்கை	பதிலளிக்கப்பட்ட கணக்காய்வு விசாரணைகளது எண்ணிக்கை	பூர்த்தியாகாத கணக்காய்வு விசாரணைகளது எண்ணிக்கை
19	19	-

- **பாராளுமன்ற வினாக்கள் மற்றும் தொடர் வினாக்களுக்குப் பதில்களை வழங்குதல்**

பெறப்பட்ட வினாக்களது எண்ணிக்கை	பதிலளிக்கப்பட்ட வினாக்களது எண்ணிக்கை	நிலுவையிலுள்ள வினாக்களின் எண்ணிக்கை
06	06	-

- **ஒழுக்காற்று நடவடிக்கை சார் சான்று**

கிட்டத்தட்ட 5,745 ஒழுக்காற்று விசாரணை முடிவுகள் தாபனக்கோவைக்கமைய நடவடிக்கை எடுப்பதற்காக மனித வள முகாமைத்துவ பணிப்பகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

- **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்**

2024 ஆம் ஆண்டிற்காக நிதி அமைச்சினால் நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

- **ஊழியர் சேவை பணிப்பகத்தினை வலுப்படுத்தல்**

பயிற்சிகள்

ஊழியர்களுக்கு சிறந்த கற்றல் வாய்ப்புக்களை எளிதாக்கும் வகையில் ஊழியர்களுக்கு இரண்டு பயிற்சித் திட்டங்கள் வழங்கப்பட்டன.

முதற்கட்ட விசாரணையின் செயல்முறையை விரைவுபடுத்துதல்

முதற்கட்ட விசாரணைகள் தேவையற்ற காலதாமதமின்றி முடிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இதனால், அத்தகைய விசாரணைகள் தேவைப்படுகின்ற காலப்பகுதியினுள் நிறைவுசெய்யப்படுவதை உறுதி செய்ய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

8.4.4 பொருள் விநியோகப் பணிப்பகம்

அறிமுகம்

பொருள் விநியோகப் பணிப்பகமானது, அரசாங்கத்தால் ஒதுக்கப்படுகின்ற இன்றியமையாத கடமையை நிறைவேற்றுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இப்பணிப்பகத்தின் முக்கிய நோக்கம் யாதெனில், சேவைகள் உள்ளிட்ட அனைத்துத் தேவைகளையும், உற்பத்தி ரீதியாகவும் வெளிப்படையாகவும் திணைக்களத்தின் ஒவ்வொரு பணிப்பகத்திற்கும் வழங்குவதாகும்.

பிரதான தொழிற்பாடுகள்

- திணைக்களத்தின் சகல தொழிற்பாடுகளை தடையின்றி தொடர்ந்து பேணும் வகையில், உரிய நேரத்தில் தரமான பொருட்களையும் சேவையினையும் வேண்டுகின்ற பிரிவுகளுக்கு வழங்குதல்.
- திறைசேரி சுற்றுநிரூபங்கள் மற்றும் தேசிய பொருள் கொள்வனவு வழிகாட்டிக்கு இணங்க தெளிவான முறையில் பொருள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்தல்.
- உரிய முறையில் களஞ்சியப்படுத்தல் மற்றும் அவற்றினைப் பாதுகாக்கும் வகையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை பொருள் பதிவேட்டில் பதிதல் மற்றும் உரிய களஞ்சியக் கட்டுப்பாடு, திறமையான களஞ்சிய முகாமைத்துவ முறைகள் என்பவற்றை உறுதிப்படுத்தி அனுகூலமான பலன்களைப் பெறுதல்.
- திணைக்களத்தினது சகல அசையும், அசையாச் சொத்துக்களை முகாமை செய்தல்.
- அட்டவணைக்கேற்ப புதிய சுங்கத் தலைமை அலுவலகத்தின் நிர்மானப் பணியின் திருப்திகரமான பூர்த்தி மற்றும் உரிய வளாகங்களது முகாமைத்துவத் திட்ட அமுலாக்கத்தை உறுதிப்படுத்தல்.
- செயற்பாட்டு நிலையிலுள்ள சுங்கத் திணைக்களத்தின் மோட்டார் வாகனத் தொகுதிகளை பராமரிப்பதில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2024 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை

2024 ஆம் ஆண்டுக் காலத்தின் பொழுது, இலங்கை சுங்கத்தின் பௌதீக வளங்களை மேம்படுத்துதல் மீதான கவனம் மிக அதிகமாக இருந்தது. இந்தப் பொறுப்பு முழுமையாக பொருள் விநியோகப் பணிப்பகத்தின் மீது சுமத்தப்பட்டது. எனவே, திணைக்களத்தின் செயல்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான பொருட்கள் மற்றும் சேவைகளை சரியான நேரத்தில் வழங்குவது இப் பணிப்பகத்தின் முக்கிய கடமையாகும். இருப்பினும், எதிர்பார்த்தவாறு, 2024 ஆம் ஆண்டிற்குள் அந்த விநியோக மற்றும் சேவைத் தேவைகளை பணிப்பகத்தினால் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது.

பொருள் விநியோகப் பணிப்பகத்தால் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக, 2024 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டு, திருத்தப்பட்ட மதிப்பீட்டுத் தொகையாகிய ரூபா. 1,321.81 மில்லியன் ஆன தொகையில் ரூபா 1,247.21 மில்லியன் ஆன தொகை உபயோகிக்கப்பட்டுள்ளது. பயன்பாட்டு வீதமானது 94% முன்னேற்றத்தைக் காட்டுகிறது. அதேபோல், மூலதனச் செலவினங்களுக்காக திருத்தப்பட்ட மதிப்பீட்டுத் தொகையாகிய ரூபா. 593.47 மில்லியன் தொகையில், ரூபா 462.90 மில்லியன் ஆன தொகை உபயோகிக்கப்பட்டுள்ளது. பயன்பாட்டு வீதமானது 78% முன்னேற்றத்தைக் காட்டுகிறது. மேற்படி முன்னேற்றத்துடன் தொடர்புடைய பல முக்கிய பொருட்கள் மற்றும் சேவைகளின் செயலாற்றுகையானது கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட முக்கிய செயல்பாடுகள்

பொருள் குறியீடு முக்கிய செயல்பாடு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ. மில்லியன்) நிதி முன்னேற்றம் மற்றும் பௌதீக முன்னேற்றம்

பாருள் குறியீடு	முக்கிய செயல்பாடு	ஒதுக்கப்பட்ட ஏற்பாடு (ரூ. மில்.)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்
			(ரூபா. மில்)	%	
	பொருட்கள்	**698.67**	**575.70**	**82**	
1201	எழுதுகருவி பொருள்	70.00	68.62	98	85 காகிதாதிப் பொருட்கள் இவ் ஆண்டுக்காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டன
1203-002	சீருடைகள்	44.20	38.25	87	இவ் ஆண்டுக்காலப்பகுதியில் சீருடை துணி 1300 மீட்டர், காலணிகள் 1,994, காலுறைகள 3,988 மற்றும் 20 எண்ணிக்கையிலான பிற சீருடை பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டன
1205	பிற கொள்முதல்கள்	51.00	40.74	80	படுக்கை விரிப்புகள் 4,495, தலையணை உறைகள் 4,443, TSS பைகள் 3,217, பொலிசக் பைகள் 65,300, மேசைப் பொருட்கள் 924 மற்றும் பிற பொருட்கள் (ஒரு முறை பயன்பாட்டு முகக் கவசம் 5,500, கை சுத்திகரிப்பான்கள் 4 லிட்டர் கேன் - 50, 500 மி.லீ போத்தல் -100, கையுறைகள் - 2500 போன்றவை) கொள்வனவு செய்யப்பட்டன
2102	தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	17.97	13.45	75	படுக்கைகள் 05, சாப்பாட்டு மேசைகள் 06, சாப்பாட்டு நாற்காலிகள் 04, பிளாஸ்டிக் நாற்காலிகள் 16, அலுவலக மேசை 07, நாற்காலிகள் 74, நான்கு தள இரும்பு அலமாரி 32, இரட்டை கதவு அலமாரி 19, துணி ரேக் 08, லொக்கர் தொகுதி 12
2103	இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள்	364.50	363.73	100	32 அச்சுப்பொறிகள், 25 காற்றுச் சீராக்கி இயந்திரங்கள், 85 யு.பீ.எஸ்கள், நிறுவன தரவு மையம், நிறுவன மின்னஞ்சல் மற்றும் காப்பு தீர்வு, எண்ட்பாயிண்ட் தனியுரிமை (EDR & PAM தீர்வு), ஆய்வக உபகரணங்கள் (EDXRE இயந்திரம்) மற்றும் பிற மினசார சாதனங்கள். 2024.07.10 இல் 211,473.80 அமெரிக்க டொலர் மதிப்புள்ள கொள்கலன் ஸ்கேனிங் முறைமையின் சேவை நிறுத்தி வைப்பு கட்டணம்)
2106	மென்பொருள் மேம்பாடு	51.00	50.91	100	சுங்க மென்பொருள் அமைப்பிற்கான முடிவுமைய கண்டறிதல் மற்றும் மறுமொழி உரிமம் மற்றும் ஆதரவு மற்றும் சலுகை அணுகல் முகாமை தீர்வு உரிமத்தை கொள்வனவு செய்தல்.
005-2106	இலங்கை சுங்கத்தில் இடர் முகாமைத்துவ மென்பொருளை உருவாக்குதல் மற்றும் அமுல்படுத்தல்	100.00	0.00	50	கொள்வனவு நடைமுறைகளின் பின்னர், ஒப்பந்தமானது 2024 டிசம்பர் 30 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.
	பணிகள்	**48.00**	**22.26**	**46**	
1303 2001	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளின் பராமரிப்பு மற்றும் மறுசீரமைப்பு	48.00	22.26	46	**சுங்க தலைமையக கட்டிடத்தின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு** 9வது மாடியிலுள்ள சிற்றுடிச்சாலையில் சேதமடைந்த தரை ஓடுகளை மாற்றும் பணி, பொழுதுபோக்கு பகுதியை பழுதுபார்க்கும் பணி, உள்ளக விவகார பிரிவை மேம்படுத்துதல் (பிரித்தல் பணி), CHA/VAT அலகினை பிரிவுகளாகப் பிரித்தல்,

					CHA/VAT பிரிவில் சேதமடைந்த மென்மையான கண்ணாடியை மாற்றுதல், கூரை அடுக்குகளில் சேதமடைந்த ஓடுகளை மாற்றுதல், சுத்திகரிப்பு நிலையத்தில் அடிவால்வை நிறுவுதல், சுங்க அருங்காட்சியகத்தில் ஓவியம் வரைதல், சுங்க அருங்காட்சியகத்தில் உள்ள கலைப்பொருட்களைப் பாதுகாத்தல் **சுங்க பிராந்திய கட்டிடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு** மோகன் வீதியிலுள்ள சுங்க விடுதிகளை புதுப்பித்தல், நைகந்த உப தடுப்பு அலுவலகத்தில் உள்ள தண்ணீர் தொட்டி அமைப்பை நிர்மாணித்தல், கட்டுநாயக்க விமான நிலைய சுங்க ஓய்வறையில் பழுதுபார்க்கும் பணி, கட்டுநாயக்க ஓய்வு மையத்தில் மின்பிறப்பாக்கியினை நிறுவுதல், பாதுகாப்பு நோக்கத்திற்காக ஜப்பானிய களஞ்சியசாலையில் சுவர் கட்டுமானம், சுங்க காவலர் விடுதியிலான பழுதுபார்ப்பு பணி (கழிப்பறை, கதவுகள், நீர் கசிவுகள்), பாதுகாப்பு நோக்கத்திற்காக பொருள் காப்பறையில் இரும்பு சட்டகத்தை நிர்மாணித்தல், திருகோணமலை உப தடுப்பு அலுவலகத்தில் கட்டிட மற்றும் நீர் தொட்டி பழுதுபார்க்கும் பணிகள், சின்னப்பாடு உப தடுப்பு அலுவலகத்தினை புதுப்பித்தல், மத்தள விடுதிகளின் பழுதுபார்க்கும் பணிகள்

பொருள் குறியீடு	முக்கிய செயல்பாடு	ஒதுக்கப்பட்ட ஏற்பாடு (ரூ. மில்.)	நிதி முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்
			(ரூபா. மில்)	%	
	சேவை	**1,168.60**	**1,112.14**	**95**	
1202-009	வாகனங்களுக்கான எரிபொருள்	100.00	91.00	91	127 வாகனங்களுக்கு எரிபொருள் (தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகம்)
1203-001	உணவுமுறைகள்	73.10	72.40	99	சுங்க அதிகாரிகளுக்கான மதிய உணவு, இரவு உணவு மற்றும் சிற்றுண்டி வழங்கப்பட்டது (கொழும்பு துறைமுகம், ஹம்பந்தோட்டா துறைமுகம்)
1302	இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள்	42.00	37.89	90	காற்றுச் சீராக்கி, கணினிகள், அச்சுப்பொறிகள், பிரதியெடுத்தல் இயந்திரம், சுத்திகரிப்பு நிலையங்கள், ஸ்கேனர்கள் போன்றவற்றை பராமரித்தல்.
1304	மென்பொருள் பராமரிப்பு	2.93	-	0	
1402	தபால் மற்றும் தொலைத்தொடர்பு	110.20	110.05	100	தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகத்தின் மாதாந்த கட்டண பட்டியல்களை செலுத்துதல்
1403	மின்சாரம் மற்றும் நீர்	245.00	242.96	99	தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகத்தின் மாதாந்த கட்டண பட்டியல்களை செலுத்துதல்
1404	வாடகை மற்றும் உள்நாட்டு வரிகள்	97.20	95.64	98	தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகத்தின் வாடகை மற்றும் உள்நாட்டு வரிகளை செலுத்துதல்
1405	துப்புரவு மற்றும் துப்புரவாக்கல் சேவைகள்	89.70	89.45	100	சேவை ஒப்பந்தம் (தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகம்)

1407	பாதுகாப்பு சேவைகள்	40.00	39.26	98	2024.04.01 முதல் 2025.03.31 வரை கையொப்பமிடப்பட்ட சேவை ஒப்பந்தம் (தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகம்)
1408	செயல்பாட்டு குத்தகையின் கீழ் அமர்த்தப்பட்ட வாகனங்களுக்கான குத்தகை வாடகை	60.00	57.94	97	இயக்கப்பாட்டுக் குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 17 வாகனங்களுக்கான குத்தகை வாடகை செலுத்துதல்
1409-138	இயந்திர சாதனங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் சேவை ஒப்பந்தங்கள்	81.20	60.03	74	18 சேவை ஒப்பந்தங்கள் மற்றும் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படாத மேலதிக பராமரிப்பு பணிகள் குறித்தான கொடுப்பனவுகள்
1409-139	வாகன காப்புறுதி	5.00	2.30	46	வாகனத் தொகுதியினை காப்புறுதி செய்தல் (அனைத்து வாகனங்களும் முழுக் காப்புறுதியைக் கொண்டுள்ளன)
1409-140	இதர சேவைகள் குறித்த செலவு	21.27	19.43	91	சுங்கக் காணிகளில் பெயர் பலகைகளை நிறுவுதல் மற்றும் எல்லைக் கோட்டுகளை நிறுவுதல் போன்ற பல்வேறு சேவைகளுக்கான செலவுகள்.
001-1304	அசிகுடா தகவல் தொழில்நுட்ப அமைப்பு	95.00	94.10	99	அசிகுடா தகவல் தொழில்நுட்ப முறைமைக்கான கேட் பயர்வோல் தொகுதியினை கொள்வனவு செய்து நிறுவுதல்
003-1403 003-1409-140	புதிய கொள்கலன் ஸ்கேனிங் திட்டம்	41.00	35.67	87	2024 ஆம் ஆண்டுக் காலத்தில், மின்சாரம் மற்றும் நீர் கட்டணப் பட்டியல்களுக்கான கொடுப்பனவுகள், தீ பாதுகாப்பு மற்றும் மின்பிறப்பாக்கி சேவை ஒப்பந்தங்கள்
1301 2003	வாகன மறுசீரமைப்பு மற்றும் பராமரிப்பு	65.00	64.02	98	ஆண்டுக் காலப்பகுதியில் திணைக்களத்தின் 108 வாகனங்கள் தொடர்பில் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகள்
	மொத்த செலவினம்	**1,915.27**	**1710.11**	**89**	

8.5 பிராந்தியக் கொத்தணி

8.5.1 பயணிகள் சேவை (கட்டுநாயக்க) பணிப்பகம்

8.5.2 பயணிகள் சேவை (கொழும்பு) பணிப்பகம்

8.5.3 அரசிறை மற்றும் சேவைகள் (கட்டுநாயக்க)பணிப்பகம்

8.5.4 அரசிறை மற்றும் சேவைகள் (மாகாணம்) பணிப்பகம்

8.5. 1 பயணிகள் சேவை (கட்டுநாயக்க) பணிப்பகம்

அறிமுகம்

பயணிகள் சேவை (கட்டுநாயக) பணிப்பகமானது இலங்கைச் சுங்கத்தின் பிராந்தியக் கொத்தணியின் கீழ் செயல்படுகிறது. பயணிகளினதும் பயணிகள் பொதிகளினதும் இயக்கத்தினை எளிதாக்குகின்ற அதேவேளை, அரசின் அரசிறையினையினையும், நாட்டின் சமூக பொருளாதார, கலாச்சார மற்றும் சுற்றுசூழல் நலன்களை பாதுகாக்கும் நோக்கில், நாட்டின் எல்லையில் சுங்கச் சட்டம் மற்றம் ஏனைய தொடர்புபட்ட சட்டங்களை திறம்பட அமுல்படுத்தல் போன்றன இப்பணிப்பகத்தின் பிரதான இலக்காகும்.

பிரதான குறிக்கோள்கள்

- நியாயமான நோக்கத்தின் அடிப்படையில் பயணிகள் மற்றும் பொதி வெளியாக்கலினை எளிதாக்குதல்.
- தடைசெய்யப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை நாட்டின் எல்லை வழியாக நகர்த்துவதைக் கட்டுப்படுத்தலும் தடைசெய்தலும்.
- நாட்டின் சமூக பொருளாதார, கலாச்சார மற்றும் சுற்றுச்சூழல் நலன்களைப் பாதுகாத்தல்.
- அரச வருவாயினை பாதுகாத்தல்.

தொழிற்பாடுகள்

- உள்வருகின்ற மற்றும் வெளிச்செல்லுகின்ற நேர்மையான பயணிகளினதும் மற்றும் அவர்களின் பொதிகளினதும் போக்குவரத்து தொடர்பில் வசதியளித்தல்.
- இடைத்தங்கல் பயணிகளினதும் அவர்களது பொதிகளினதும் நகர்வு தொடர்பில் வசதியளித்தல்.
- அதிமிக முக்கியமான நபர்கள், முக்கியமான நபர்கள், பட்டுப்பாதை மற்றும் வணிக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பயணிகள் ஆகியோர்களது நகர்வுகள் மற்றும் அவர்களது பொதிகள் தொடர்பில் வசதியளித்தல்.
- இலங்கைக்குள் வந்திறங்குகின்ற மற்றும் இலங்கையிலிருந்து புறப்படுகின்ற விமானங்கள் மற்றும் விமான பணியாட்கள் குறித்தான செயன்முறை.
- வெளிச் செல்லும் விமானங்களுக்கு அனுமதியினை வழங்குதல்.
- பயணிகள் பொதி தொடர்பில் தீர்வையற்ற பொதி கொடுப்பனவுகளை வழங்குதல்.
- வியாபாரத் தன்மையுடைய மற்றும் வியாபார அளவுகளுடைய பொருட்களைக் கொண்ட பொதிகளுக்கான தீர்வைகளையும் மற்றும் பிற அறவீடுகளையும் சேகரித்தல்.
- ஏ.ரீ.ஏ கானே, உத்தரவாதங்கள் மற்றும் விசேட வைப்புகள் போன்றவை தொடர்பிலான பொருட்களை விடுவித்தல் மற்றும் தேவையான பின்தொடரல் நடவடிக்கைகளை எடுத்தல்.
- உள்வரும் மற்றும் வெளிச் செல்லும் இரத்தினக்கல் பொதிகளை செய்முறைப்படுத்தல்.
- உள்வருகின்ற மற்றும் வெளிச்செல்லுகின்ற பயணிகளால் மேற்கொள்ளப்படும் அந்நியச் செலலவணி பற்றிய பிரகடணங்கள் பற்றிய ஒன்லைன் மூலமான சமர்ப்பணம்மற்றும் அவை தொடர்பில் உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டினை வழங்குதல்.
- பயணி வெளிச்சென்றதன் பின்னர் குறித்த பயணியுடன் வராத பொதிகளை வெளியாக்குவதற்கு குறித்த அதிகாரமளிக்கப்பட்ட நபர்களை இயலச்செய்கின்ற அற்றோணித் தத்துவத்தின் பேரில் மீதமான பொதி கொடுப்பனவுகளுக்கு ஒப்புதல் வழங்குதல்.
- தவறாக கையாளப்பட்ட பொதிகளை வெளியாக்குதல்.
- இராஜதந்திர பொதியினை வெளியாக்குதல்.
- தேவைப்படின் நபர்களை பரிசோதனை செய்தல்.
- மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்வதை முறியடித்தல்.
- சுங்க குற்றங்களைக் கண்டறிகின்ற விடத்து அது குறித்தான விசாரணைகளையும் புலன் விசாரணைகளையும் முன்னெடுத்தல்.
- சந்தேக நபர்களை நீதிமன்றங்களுக்கு ஆஜர்படுத்தல், மற்றும் தேவைப்பட்டால் நீதிமன்ற செய்முறை ஊடாக அபராதங்களை அறவீடு செய்வதற்கும் மற்றும் மேலதிக பறிமுதல்களை மேற்கொள்வதற்குமான தகுந்த நடவடிக்கைகளை எடுத்தல்.
- சுங்க கண்காணிப்பின் கீழ் கோரப்படாத பொருட்களை அகற்றுவதற்கான வசதியினை வழங்குதல்.
- பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்கத்தின் மேற்பார்வையின் கீழ் விவசாயத் திணைக்ளத்தினால்தடுத்து வைக்கப்பட்டுள்ள பொருட்களை அழித்தல் குறித்தான மேற்பார்வையினை வழங்கல்.
- பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் தடுத்து வைக்கப்பட்ட பொருட்களை பாதுகாத்தலும் விற்றுத் தீர்த்தலும்.
- பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை விற்றுத் தீர்த்தல், அபராதங்களைக் கணக்கிட்டுச் சேகரித்தல் மற்றும் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235ஆம் அத்தியாயம்) ஏற்பாடுகளுக்கிணங்க மேலதிக பறிமுதல்களை மேற்கொள்ளல்.
- விமான நிலையத்தில் செயற்படுகின்ற ஏனைய நிறுவனங்களுடன் சிறந்த ஒருங்கிணைப்பினைப் பேணுதல்.

அரசிறை சேகரிப்பு – 2024

தீர்வைகளும் ஏனைய அறவீடுகளும் (ரூபா.) :

	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	141,693,495.00
பெ.சே.வரி	456,073,887.00
து.வி.அ	64,337,092.00
இறக்குமதி செஸ் வரி	210,727,801.00
மேலதிக கட்டணம்	406,831.00
உற்பத்தி வரி	38,435.00
சமூக பாதுகாப்பு அறவீடு	66,083,838.00
அபராதம்	357,769,245.00
விடயங்கள் தொடர்பிலான அபராதம்	178,005,808.00
வி.ப.அறவீடு	714,770.00
பிற	102,700.00
மொத்தம்	**1,475,953,902.00**

ஏனைய கட்டணங்கள் (ரூபா.) :

	தொகை (ரூபா)
காப்பறைக் கட்டணம்	1,765,550.00
மேலதிக நேர கட்டணம்	8,751,900.00
டீ.எப்.எஸ்.சீ சுங்க கட்டணங்கள்	409,600.00
கணனி கட்டணம்	5,706,750.00
போட்டோ பிரதி	166,265.00
மொத்தம்	**16,800,065.00**

மொத்த அரசிறை சேகரிப்பு (ரூபா.) : 1,492,753,967.00

கண்டுபிடிக்கள்	
கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களின் எண்ணிக்கை	145
பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது பெறுமதி (ரூபா)	1,638,777,256.00
பறிமுதல் செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயங்களது பெறுமதி	201,283,564.60
பறிமுதல் செய்யப்பட்ட இரத்தினக்கற்களது பெறுமதி (ரூபா)	38,526,038.00
பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தினது பெறுமதி (ரூபா)	218,527,974.00
பறிமுதல் செய்யப்பட்ட ஏனைய பொருட்களது பெறுமதி(ரூபா)	1,180,439,679.40
கண்டுபிடிக்கப்பட்ட போதைப்பொருட்களது அளவு (கி.கிராம்)	**104.80**

கண்டுபிடிக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட/ தடைசெய்யப்பட்ட பொருட்களது அளவு

வகை	**தங்கம் (தங்கம்/ தங்க ஆபரணம்)**	**தங்கக் களிமம்/ கூழ்**	**ஏலக்காய்**	**அழகுசாதனப் பொருட்கள்**	**பூச்சிகொல்லிகள்/ கிருமிநாசினிகள்**	**மருந்து**
நிறை(கி.கி)	21.7	21.2	1926.8	1111.1	82.3	1023

வகை	**கையடக்க தொலைபேசிகள்**	**ஈ- சிகரெட்டுகள்**	**சிகரெட் குச்சிகள்**
அலகுகளின் எண்ணிக்கை	6884	6546	7,039,202

2024ஆம் ஆண்டில் பயணிகளுக்கு வழங்கப்பட்ட சேவைகள்

வந்திறங்கிய விமனங்களது எண்ணிக்கை	25,932
வந்திறங்கிய பயணிகளது எண்ணிக்கை	4,085,127
வெளிச்சென்ற விமனங்களது எண்ணிக்கை	26,355
வெளிச்சென்ற பயணிகளது எண்ணிக்கை	4,244,462
தீர்வை மற்றும் ஏனைய அறவீடுகளை செலுத்தியதன் பின்னர் சிவப்பு வாயில் ஊடாக வெளியாக்கப்பட்ட பயணிகளது எண்ணிக்கை	22,872
தீர்வையற்ற கொடுப்பனவினை பெற்ற பயணிகளது எண்ணிக்கை	48,285
தவறாக கையாளப்பட்ட பொதிகள் தொடர்பில் வெளியாக்கப்பட்டவைகளது எண்ணிக்கை	27,148
வருகை கருமபீடத்தில் VIP களின் நகர்வுகளது எண்ணிக்கை	1,342
வெளிச்செல்லுகை கருமபீடத்தில் VIP களின் நகர்வுகளது எண்ணிக்கை	1,275

மூலம் : ப.ச.வி. நிலைய விடயப் பதிவேடு, ப.ச.வி. நிலைய காப்பறை பதிவு
*** தங்க ஜெல்/பேஸ்ட் கண்டறிதல்களின் பெறுமதி உள்ளடக்கப்படவில்லை, அத்தகைய பொருட்களில் எத்தனை சதவீத தங்கம் உள்ளது மற்றும் இப் பொருள் எத்தகைய இயைபு முறை வகைப்பாட்டுக்குள் வரும் என்பவை குறித்து இடம்பெறும் செயல்முறைக்குப் பிறகு மதிப்பிடப்படும்.*

2018 தொடக்கம் 2024 வரையான வருமானம்

வருடம்	மொத்த தொகை	முந்தய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருவாய் அதிகரிப்பு %
2018	404,875,536.00	
2019	452,738,967.00	12
2020	139,679,711.00	-69
2021	124,119,902.00	-11
2022	637,675,154.00	414
2023	1,313,385,295.00	106
2024	1,492,753,967.00	12





8.5.2 பயணிகள் சேவை (கொழும்பு) பணிப்பகம்

பிரதான தொழிற்பாடுகள்

- வருகை தருகின்ற மற்றும் வெளிச் செல்லுகின்ற பயணிகள் செயன்முறை மற்றும் பொதிகளின் வெளியாக்கத்திற்கு வசதியளித்தல்.
- மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியைத் தடுத்தல் மற்றும் அரசிறையினை பாதுகாத்தல்,
- சமூக-பொருளாதார, கலாசார மற்றும் மக்களின் சுற்றுச் சூழல் சார்ந்த நலன்களைப் பாதுகாத்தல்.
- பயணிகள் உடன் வராத பொதிகளடங்கிய குத இல்லங்களை கட்டுப்பாட்டின் கீழ் வைத்தலும் கண்காணித்தலும்.

பயணிகள் உடன்வராத பொதி களஞ்சியசாலைகள் குறித்த பட்டியல்

- பொதி அலுவலகம் – விற்பனைகள்
- பொதி அலுவலகம் – றேன்க் கொள்கலன் சாலை
- பொதி அலுவலகம் – புதிய நுகே வீதி
- லக்சிறிசேவா – கொழும்பு
- லக்சிறிசேவா – நிந்தவூர்
- ட்றான்ஸ்கோ – வத்தளை
  ட்றான்ஸ்கோ – தம்புள்ள
- மிட்கோ
- ட்றைகோ - கொழும்பு
- சிலோன் சிப்பிங் லைன்ஸ் - கொழும்பு/அட்டாளைச்சேனை

குறிப்பு : ட்றைகோ காலி, ட்றைகோ குருநாகல, சீ எஸ் எல் கண்டி ஆகிய பொதி களஞ்சியசாலைகள் 2023ஆம் ஆண்டில் பயணிகள் சேவை பணிப்பகத்தின் கீழ் அமையப்பெற்றிருந்ததுடன் அவை 2024ஆம் ஆண்டில் மாகாண பணிப்பகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன.

வருவாய் சேகரிப்பு (ரூபா.)

பொதி அலுவலகம் (விற்பனை)		**பொதி அலுவலகம் (றேன்க் கொள்கலன் சாலை)**	
பிரகடனங்களது எண்ணிக்கை	-	பிரகடனங்களது எண்ணிக்கை	6,408
பொதிகளது எண்ணிக்கை	-	பொதிகளது எண்ணிக்கை	187054
	தொகை (ரூபா)		**தொகை (ரூபா)**
சுங்க இறக்குமதித் தீர்வை	61,291,907.14	சுங்க இறக்குமதித் தீர்வை	19,672,247.00
பெ.சே.வரி	56,975,254.67	பெ.சே.வரி	44,831,289.00
து.வி.அ. அறவீடு	18,256,108.63	து.வி.அ. அறவீடு	19,332,838.00
செஸ் வரி	1,977,230.82	செஸ் வரி	43,660,385.00
உற்பத்தி வரி	351713.00	உற்பத்தி வரி	2,154,031.00
மேலதிக கட்டணம்	622,408.00	மேலதிக கட்டணம்	9,225.00
ச.பா.அ	1,656,206.75	ச.பா.அ	8,806,873.00
வி.ப.அறவீடு	78,955.00	வி.ப.அறவீடு	18,300.00
VAL	-	VAL	-
காப்பறைக் கட்டணம்	11,995,780.00	காப்பறைக் கட்டணம்	10,600.00
சீல் கட்டணங்கள்	271,100.00	சீல் கட்டணங்கள்	-
மேலதிக நேரம்	43,828,780.58	மேலதிக நேரம்	221,650.00
அபராதம்	2,652,364.00	அபராதம்	23,870,036.00
ஏனைய கட்டணங்கள்	66,776,940.96	ஏனைய கட்டணங்கள்	430,650.00
TW கட்டணங்கள்	20,990,250.00	TW கட்டணங்கள்	-
மொத்த தொகை	**284,724,999.55**	**மொத்த தொகை**	**163,018,124.00**

பொதி அலுவலகம் (புதிய நுகே வீதி)	
பிரகடனங்களது எண்ணிக்கை	13,582
பொதிகளது எண்ணிக்கை	70,816
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	16,389,339.00
பெ.சே.வரி	27,077,135.00
து.வி.அ. அறவீடு	10,847,290.00
செஸ் வரி	22,305,773.00
உற்பத்தி வரி	2,073,973.00
மேலதிக கட்டணம்	484,469.00
ச.பா.அ	5,170,218.00
வி.ப.அறவீடு	40,083.00
VAL	2,000.00
காப்பறைக் கட்டணம்	260,108.00
சீல் கட்டணங்கள்	34,171.00
மேலதிக நேரம்	-
அபராதம்	646,051.00
ஏனைய கட்டணங்கள்	146,012.00
TW கட்டணங்கள்	1345.00
மொத்த தொகை	**85,477,967.00**

லக்சிறிசேவா (கொழும்பு)	
பிரகடனங்களது எண்ணிக்கை	23,565
பொதிகளது எண்ணிக்கை	60,463
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	17,212,902.00
பெ.சே.வரி	31,133,903.00
து.வி.அ. அறவீடு	14,585,441.00
செஸ் வரி	30,402,785.00
உற்பத்தி வரி	2,104,638.00
மேலதிக கட்டணம்	299,064.00
ச.பா.அ	6,741,240.00
வி.ப.அறவீடு	790,755.00
VAL	-
காப்பறைக் கட்டணம்	132,400.00
சீல் கட்டணங்கள்	193,750.00
மேலதிக நேரம்	7,216,860.00
அபராதம்	3,137,054.00
ஏனைய கட்டணங்கள்	-
TW கட்டணங்கள்	-
மொத்த தொகை	**113,950,792.00**

லக்சிறிசேவா (நிந்தவூர்)	
பிரகடனங்களது எண்ணிக்கை	3,370.00
பொதிகளது எண்ணிக்கை	7,618.00
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	1,025,720.00
பெ.சே.வரி	1,857,418.00
து.வி.அ. அறவீடு	883,608.00
செஸ் வரி	2,132,610.00
உற்பத்தி வரி	155,949.00
மேலதிக கட்டணம்	36,390.00
ச.பா.அ	404,686.00
வி.ப.அறவீடு	49,200.00
VAL	-
காப்பறைக் கட்டணம்	12,650.00
சீல் கட்டணங்கள்	-
மேலதிக நேரம்	-
அபராதம்	317,012.00
ஏனைய கட்டணங்கள்	-
TW கட்டணங்கள்	-
மொத்த தொகை	**6,875,243.00**

ட்றான்ஸ்கோ (வத்தளை)	
பிரகடனங்களது எண்ணிக்கை	37,361
பொதிகளது எண்ணிக்கை	131,954
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	10,171,347.00
பெ.சே.வரி	25,917,085.00
து.வி.அ. அறவீடு	19,011,565.00
செஸ் வரி	52,331,250.00
உற்பத்தி வரி	1,088,756.00
மேலதிக கட்டணம்	1,028,566.00
ச.பா.அ	8,671,319.00
வி.ப.அறவீடு	139,819.00
VAL	-
காப்பறைக் கட்டணம்	208,000.00
சீல் கட்டணங்கள்	200,750.00
மேலதிக நேரம்	5,561,674.00
அபராதம்	4,167,279.00
ஏனைய கட்டணங்கள்	-
TW கட்டணங்கள்	-
மொத்த தொகை	**128,497,410.00**

மிட்கோ	
பிரகடனங்களது எண்ணிக்கை	21,362.00
பொதிகளது எண்ணிக்கை	95,003.00
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	15,845,846.00
பெ.சே.வரி	38,119,588.00
து.வி.அ. அறவீடு	15,633,932.00
செஸ் வரி	35,428,045.00
உற்பத்தி வரி	1,630,965.00
மேலதிக கட்டணம்	969,275.00
ச.பா.அ	7,122,208.00
வி.ப.அறவீடு	12,220.00
VAL	-
காப்பறைக் கட்டணம்	238,950.00
சீல் கட்டணங்கள்	101,100.00
மேலதிக நேரம்	5,549,242.00
அபராதம்	2,179,001.00
ஏனைய கட்டணங்கள்	65,633.00
TW கட்டணங்கள்	-
மொத்த தொகை	**122,896,005.00**

ட்றான்ஸ்கோ (தம்புள்ள)	
பிரகடனங்களது எண்ணிக்கை	47
பொதிகளது எண்ணிக்கை	87
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	900.00
பெ.சே.வரி	1,512.00
து.வி.அ. அறவீடு	10,400.00
செஸ் வரி	30,450.00
உற்பத்தி வரி	-
மேலதிக கட்டணம்	-
ச.பா.அ	4,340.00
வி.ப.அறவீடு	-
VAL	-
காப்பறைக் கட்டணம்	-
சீல் கட்டணங்கள்	-
மேலதிக நேரம்	-
அபராதம்	-
ஏனைய கட்டணங்கள்	-
TW கட்டணங்கள்	-
மொத்த தொகை	**47,602.00**

ட்றைகோ - கொழும்பு	
பிரகடனங்களது எண்ணிக்கை	29,998.00
பொதிகளது எண்ணிக்கை	79,533.00
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	29,541,057.00
பெ.சே.வரி	48,138,392.00
து.வி.அ. அறவீடு	20,236,906.00
செஸ் வரி	38,101,737.00
உற்பத்தி வரி	3,476,383.00
மேலதிக கட்டணம்	1,539,092.00
ச.பா.அ	9,709,637.00
வி.ப.அறவீடு	254,180.00
VAL	-
காப்பறைக் கட்டணம்	292,658.00
சீல் கட்டணங்கள்	374,900.00
மேலதிக நேரம்	4,959,266.00
அபராதம்	6,319,879.00
ஏனைய கட்டணங்கள்	449.00
TW கட்டணங்கள்	-
மொத்த தொகை	**162,944,536.00**

சிலோன் சிப்பிங் லைன்ஸ் - கொழும்பு	
பிரகடனங்களது எண்ணிக்கை	38,839.00
பொதிகளது எண்ணிக்கை	130,646.00
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	33,549,923.00
பெ.சே.வரி	60,120,365.00
து.வி.அ. அறவீடு	26,453,407.00
செஸ் வரி	54,039,213.00
உற்பத்தி வரி	2,383,191.00
மேலதிக கட்டணம்	1,194.265.00
ச.பா.அ	12,251,022.00
வி.ப.அறவீடு	90,705.00
VAL	-
காப்பறைக் கட்டணம்	400,250.00
சீல் கட்டணங்கள்	203,750.00
மேலதிக நேரம்	5,687,290.00
அபராதம்	5,677,862.00
ஏனைய கட்டணங்கள்	5,895,825.00
TW கட்டணங்கள்	78,000.00
மொத்த தொகை	**208,025,068.00**

சிலோன் சிப்பிங் லைன்ஸ் - அட்டாளைச்சேனை	
பிரகடனங்களது எண்ணிக்கை	655
பொதிகளது எண்ணிக்கை	1882
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	287,925.00
பெ.சே.வரி	502,354.00
து.வி.அ. அறவீடு	255,450.00
செஸ் வரி	664,205.00
உற்பத்தி வரி	17,400.00
மேலதிக கட்டணம்	
ச.பா.அ	118,378.00
வி.ப.அறவீடு	
VAL	
காப்பறைக் கட்டணம்	2,450.00
சீல் கட்டணங்கள்	
மேலதிக நேரம்	195,000.00
அபராதம்	5,000.00
ஏனைய கட்டணங்கள்	
TW கட்டணங்கள்	
மொத்த தொகை	**2,048,162.00**

செரன்டிப்	
பிரகடனங்களது எண்ணிக்கை	11,221.00
பொதிகளது எண்ணிக்கை	36,846.00
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	7,855,687.00
பெ.சே.வரி	19,225,892.00
து.வி.அ. அறவீடு	8,933,749.00
செஸ் வரி	21,071,489.00
உற்பத்தி வரி	1,210,284.00
மேலதிக கட்டணம்	261,409.00
ச.பா.அ	4,068,750.00
வி.ப.அறவீடு	-
VAL	-
காப்பறைக் கட்டணம்	163,350.00
சீல் கட்டணங்கள்	25,000.00
மேலதிக நேரம்	4,241,813.00
அபராதம்	2,539,350.00
ஏனைய கட்டணங்கள்	-
TW கட்டணங்கள்	-
மொத்த தொகை	**69,596,773.00**

இப்பணிப்பகத்திலான மொத்த அறவீடுகள்

பிரகடனங்களது எண்ணிக்கை	186,408
பொதிகளது எண்ணிக்கை	801130
	தொகை (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	212,844,800.14
பெ.சே.வரி	353,900,187.67
து.வி.அ. அறவீடு	154,440,694.63
செஸ் வரி	302,145,172.82
உற்பத்தி வரி	16,647,283.00
மேலதிக கட்டணம்	6,444,163.00
ச.பா.அ	64,724,877.75
வி.ப.அறவீடு	1,474,217.00
VAL	2,000.00
காப்பறைக் கட்டணம்	13,717,196.00
சீல் கட்டணங்கள்	1,404,521.00
மேலதிக நேரம்	77,239,925.58
அபராதம்	51,510,888.00
ஏனைய கட்டணங்கள்	70,537,159.96
TW கட்டணங்கள்	21,069,595.00
மொத்த தொகை	**1,348,102,681.55**

2023ஆம் ஆண்டில் பயணிகள் சேவை பணிப்பகத்திலான மொத்த அறவீடுகள் ரூபா.1,144253491.80
(சீ எஸ் எல் கண்டி, ட்றைகோ காலி மற்றும் ட்றைகோ குருநாகல நீங்கலாக)
2024ஆம் ஆண்டில் பயணிகள் சேவை பணிப்பகத்திலான மொத்த அறவீடுகள் ரூபா. 1,348,102,681.55
சதவீத வேறுபாடு = + 17.82%

சுற்றுச் சூழல் பாதுகாப்பு

இலங்கையின் எல்லைப் பாதுகாப்பு நிறுவனங்களில் ஒன்றான இலங்கைச் சுங்கம், நாட்டின் எல்லைக்குள் தடைசெய்யப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை நுழைவதைத் தடுக்கும் வகையில் செயல்படுகிறதுடன் சுற்றுச்சூழல் சமூகப் பாதுகாப்பை உறுதி செய்கிறது. தடுத்து வைக்கப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

தொ. இல	விபரம்	களஞ்சியசாலை							
		லக்சிறிசேவா	செரன்டிப்	சீ.எஸ்.எல்	ஹட்கோ	ட்ஜேகோ	என்.என்.ஆர்	ட்ரான்ஸ்கோ	ஆர்.சீ.ரீ
1.	ஆண்டின் தொடக்கத்தில் இருந்த பறிமுதல் செய்யப்பட்ட பொதிகளது எண்ணிக்கை	303	1	194	32	123	75	62	-
2.	ஆண்டின் இறுதியில் இருந்த பறிமுதல் செய்யப்பட்ட பொதிகளது எண்ணிக்கை	249	148	339	23	225	82	74	48

பயிற்சி திட்டம்

பயணிகளுக்கு சுமூகமானதொரு சேவையினை வழங்கும் வகையில் பயணிகள் சேவை பணிப்பகமானது நிறுவப்பட்டதால் (இறக்குமதியாளர்கள் அல்லது ஏற்றுமதியாளர்கள் அல்லாதவர்கள்), இது திறமையான சுங்க அலுவலர்களை கொண்டிருப்பது அவசியமானதாகும். பொதுவான பயணிகள் தொடர்ந்து இலங்கையில் இருந்து வெளிச் செல்லுவதனாலும் மற்றும் இலங்கைக்கு வருகை தருவதனாலும் அவர்கள் சுங்கத்திலிருந்து எவ்வித இடையூறும் இன்றிய தடையற்ற சேவையை எப்போதும் கோருகிறார்கள். எனவே, இப்பணிப்பகமானது பயணிகளை கையாளுதல் குறித்தான பயிற்சி திட்டங்களை மேற்கொள்ளுவதன் மூலம் சுங்க அலுவலர்களது திறன்களை விருத்தி செய்தல் தொடர்பில் அதிக கவனம் செலுத்துகிறது.

அதிகாரிகள் பின்வரும் சந்தர்ப்பங்களில் பயிற்சித் திட்டங்களுக்கு வழிகாட்டப்பட்டனர்

தொ. இல	பயிற்சித் திட்டத்தின் பெயர்	அலுவலர்களது எண்ணிக்கை
1	வரை. ஏ.ரீ.பீ இன்ரலெக்சுவல் புறபேட்டி நிறுவனத்தினால் புலமைச் சொத்துரிமை தர அடையாளங்காணல் குறித்த பயிற்சி	உ.சு.அ - 05
2	சுங்க உதவி அத்தியட்சகர்களுக்கான திறன் விருத்தித் திட்டம்	உ.த.உ - 02
3	பணமோசடி, பயங்கரவாத நிதியிடல் மற்றும் பல்பகும் நிலை நிதியிடல் குறித்த சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனைகள்	சு.பி.ப – 01 , உ.சு.அ - 05
4	பிராந்திய எல்லை தாண்டிய புலனாய்வு குறித்த கருத்தரங்கு	உ.சு.அ -01
5	NDDCB இனால் வழங்கப்பட்ட பயிற்சித் திட்டம்	சு.சி.பி.ப - 01, உ.த.உ - 02
6	தோற்ற இடைத் தொடர்பு குறித்த WCO உலகளாவிய மன்றம்	சு.பி.ப - 01, உ.சு.அ - 01
7	தேசிய சுங்க அமுல்படுத்தல் வலைப்பின்னல் (nCEN) பயிற்சித் திட்டம்	சு.சி.பி.ப - 02, சு.பி.ப - 07,
8	ஒழுக்கம் குறித்த விழப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்	உ.சு.அ - 01
9	INAMA இந்தியா மற்றும் தெற்காசிய திட்டம்	உ.சு.அ - 01
10	அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார இயக்குநர்கள் பயிற்சித் திட்டம்	உ.சு.அ - 01
11	அரச புலனாய்வு சேவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட சுங்க அலுவலர்களுக்கான புலனாய்வுப் பயிற்சி	சு.பி.ப - 01
12	WCO - ஜப்பான் தொழில் மேம்பாட்டுத் திட்டம்	உ.சு.அ - 01
13	சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு குறித்த தொழில்நுட்ப மற்றும் செயல்பாட்டு ஆலோசகர்களுக்கான WCO பிராந்திய முன்-அங்கீகார கருத்தரங்கு	சு.சி.பி.ப - 01
14	புலமைச் சொத்துரிமைச் சட்டம் மற்றும் தயாரிப்பு அடையாளங்காணல் குறித்த கருத்தரங்கு	உ.சு.அ - 03
15	அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார இயக்கநர்கள் குறித்த பயிற்சித் திட்டம்	உ.சு.அ - 01
16	டிஜிடல் வியாபாரத்தினை அளவிடுவது குறித்த இணையவழி பாடநெறி	உ.சு.அ - 03
17	புலமைச் சொத்துரிமைச் சட்டம் மற்றும் தயாரிப்பு அடையாளங்காணல் குறித்த கருத்தரங்கு	உ.சு.அ - 04
18	முதல் பதிலளிப்பவர் கணினி முன்னறிவிப்புகள் மற்றும் சைபர்-குற்ற விசாரணைகள் குறித்த கருத்தரங்கு	உ.சு.அ - 01
19	USAID இனால் நடாத்தப்பட்ட தோற்ற விதிமுறைகள் மற்றும் இயைபு முறை வகைப்படுத்தல் குறித்த கருத்தரங்கு	உ.சு.அ - 03

20	சி.சு.பி.ப மற்றும் சு.பி.ப ஆகியோரிகளுக்கான சுங்க விசாரணை குறித்த கருத்தரங்கு	சு.பி.ப - 08 சு.சி.பி.ப - 04
21	USAID சர்வதேச நிபுணருடனான தோற்ற விதிமுறை மற்றும் வர்த்தக வசதியளித்தல் உடன்படிக்கை குறித்த விரிவாக கருத்தரங்கு	சு.பி.ப - 03, உ.சு.அ - 11
22	சுங்க இடர் முகாமைத்துவத்தின் நடைமுறைப் பயன்பாடு குறித்த பயிற்சித் திட்டம்	உ.சு.அ - 04
23	JAICA அறிவாற்றல் கூட்டு உருவாக்கத் திட்டம்	உ.சு.அ - 12, சு.பி.ப - 03
24	பெறுமதி மதிப்பீட்டாளர்களுக்கான மிகு விரைவுத் திட்டம்	பி.சு.அ - 01
25	வரை. ஏ.ரீ.பீ இன்ரலெக்சுவல் புறபேட்டி நிறுவனத்தினால் புலமைச் சொத்துரிமை தர அடையாளங்காணல் குறித்த பயிற்சி	உ.சு.அ - 07
26	பணமோசடி, பயங்கரவாத நிதியிடல் மற்றும் பல்பகும் நிலை நிதியிடல் குறித்த சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனைகள்	உ.சு.அ - 05 சு.பி.ப - 01
27	விசாரணை செய்கின்ற திறன்களை விருத்தி செய்தல் குறித்த பயிற்சித் திட்டம்	உ.சு.அ - 01
28	வழக்குத் தொடுத்தல் மற்றும் விசாரணை செய்தல் குறித்த கருத்தரங்கு	உ.சு.அ - 01
29	கற்பித்தல் முறைகள் குறித்த பயிற்சியாளர்களுக்கான பயிற்சித் திட்டம்	சு.பி.ப - 01 உ.சு.அ - 05
30	முன்கூட்டிய விதி வகைப்பாடு குறித்த பயிற்சி அமர்வு	சு.சி.பி.ப - 01, சு.பி.ப - 01

வர்த்தக வசதியளித்தல் குறிக்கோள்களின் கீழ் திட்டமிடப்பட்ட பிரதான செயற்பாடுகள்

பயணிகள் சேவை பணிப்பகத்தின் பிரதான நோக்கம், பயணிகளின் உடன் வராத தனிப்பட்ட பொருட்களை ளெியாக்குவதாகும். இந்த பயணிகளில் பெரும்பாலோர் வெளிநாடுகளில் பணிபுரிந்த இலங்கை ஊழியர்களாவார்கள் என்பதோடு, இவர்கள் இலங்கைக்கு வெளிநாட்டு நாணயத்தை அனுப்பியுள்ளவர்களாவர். அதிகரித்து வரும் வர்த்தக பற்றாக்குறைக்கு எதிராக கணிசமான அனுகூலத்தை வழங்கும் இலங்கையின் வெளிநாட்டு நாணய வருவாயின் முக்கிய தூணாக தொழிலாளர்களின் பணம் அனுப்புதல் இருந்து வருகிறது. UPB கொடுப்பனவு திட்டத்தின் கீழ் அவர்களின் உடன் வராத தனிப்பட்ட பொருட்களை விடுவிப்பதன் மூலம் இலங்கை தொழிலாளர்களின் நலனை மேம்படுத்துவதில் பயணிகள் சேவை பணிப்பகம் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த செயல்முறையை வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதி கொண்டதாகவும் முன்னெடுப்பதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதைத் தவிர, அவர்களால் அன்பளிப்பாக அனுப்பப்படும் பொருட்கள் தீர்வை மற்றும் பிற வரிகள் விதிக்கக்கூடிய வகையில் பெறுநர்களுக்கு விடுவிக்கப்படுகின்றன. அத்தகைய விடுவிப்புகளின் விவரங்கள் பின்வருமாறு :

நடவடிக்கை	**பிரதான பணிகள்**	**பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள்**									
களஞ்சியசாலை செயற்பாடுகளை நெறிப்படுத்துதல்	2024			ட்றைகோ	லக்சிறிசேவா	சீ.எஸ்.எல்	மிட்கோ	செரன்டிப்	ட்றான்ஸ்கோ	என்.என்.ஆர்	றே.கொ.சாலை
	பயணிகளுக்கு வசதியாக தொந்தரவு இல்லாத இலகுவான வெளியாக்கல் முறையை உறுதி செய்தல்	வெளியாக்கப்பட்ட பயணிகளது எண்ணிக்கை	பயணிகள் உடன் வராதவை	14,524	12905	18,968	9,236	4844	13248	7804	953
			அன்பளிப்பு	15,474	14030	20,526	12,126	6377	24,160	5778	5455
		வெளியாக்கப்பட்ட பொதிகளது எண்ணிக்கை	பயணிகள் உடன் வராதவை	36,982	37,657	60,973	28,481	10,594	38,852	42,461	93673
			அன்பளிப்பு	42,551	30,424	71,555	66,522	26,252	93,189	28,355	93381
		வெளியாக்கப்பட்ட கொள்கலன்களது எண்ணிக்கை		1322	463	1247	384	240	566	360	895

பொருட்களை அகற்றுதல்

UPB களஞ்சியசாலைகளில், கைவிடப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட சரக்குகள் படிப்படியாகக் குவிந்து வருவதனால், இது சேமிப்புப் பகுதியின் இடவசதியில் பற்றாக்குறைக்கு வழிவகுக்கிறது. எனவே, இதனை அகற்றும் செயல்முறை தொடர வேண்டும்.
களஞ்சியசாலைகளில் மீதமுள்ள கைவிடப்பட்ட பொதிகளின் எண்ணிக்கையை பின்வருமாறு :

		லக்சிறிசேவா	செரன்டிப்	சீ.எஸ்.எல்	மிட்கோ	ட்றைகோ	என்.என்.ஆர்	ட்றான்ஸ்கோ	ஆர்.சீ.ரீ
1.	ஆண்டின் தொடக்கத்தில் இருந்த கைவிடப்பட்ட பொதிகளது எண்ணிக்கை	152	34	427	15	2388	21	179	இல்லை
2.	ஆண்டின் இறுதியில் இருந்த கைவிடப்பட்ட பொதிகளது எண்ணிக்கை	127	34	2053	54	5440	123	226	இல்லை

8.5.3 அரசிறை மற்றும் சேவைகள் (கட்டுநாயக) பணிப்பகம்

அறிமுகம்

இப்பணிப்கமானது கட்டுநாயக, பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தின் விமானச் சரக்கு முனையத்தில் அமையப்பெற்றுள்ளது. இப்பணிப்பகமானது உரிய அரசிறையினை சேகரிப்பதற்கான பொறுப்பினை கொண்டுள்ளதுடன் சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் பிற தொடர்புபட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் ஏற்பாடுகளின் கீழ் அமுல்படுத்தப்படும் எல்லைக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்பாகவுள்ளன.

இலங்கைச் சுங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் சேவைகளை வழங்கும் நோக்கில், ஸ்ரீலங்கன் விமான சேவைகள் லிமிடட் ஆனது விமானச் சரக்குத் தளத்தில் பாரியளவில் பொருட்களைக் கையாளுகின்ற முகவராக தொழிற்படுவதுடன் எஸ்.எல்.எப்.எப்.ஏ. கார்கோ சேவிசஸ் லிமிடட் மற்றும் எக்ஸ்போ ஏவியேசன் லிமிடட் என்பன சரக்குத் தளம்-II இல் பிற பொருட்களைக் கையாள்கின்ற முகவர்களாகவும் சுயமாகக் கையாள்கின்ற சேவைகளை வழங்குபவர்களாகவும் செயற்படுகின்றனர். கூரியர் சரக்கினை மிக விரைவாக வெளியாக்கும் வகையில் எம்/எஸ் டீ.எச்.எல். (பிறைவட்) லிமிடட் மற்றும் எம்/எஸ் கொழும்பு கார்கோ எக்ஸ்பிரஸ் (பிறை) லிமிடட் ஆகியவற்றால் செயற்படுத்தப்படுகின்ற பிணைப்படுத்தப்பட்ட களஞ்சிய சாலைகளில் முன்னுரிமை அடிப்படையில் கவனம் செலுத்தப்படுகின்றது.

பிரதான தொழிற்பாடுகள்

- விமானம் மூலம் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் சுங்கத் தீர்வை, செஸ் வரி மற்றும் ஏனைய கட்டணங்களை மதிப்பிடலும் சேகரித்தலும்.
- பொருள் பிரகடனங்களை செய்முறைப்படுத்தலும் வெளியாக்க அனுமதித்தலும்.
- கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் பணிப்பகத்தின் கீழ் செயற்படுகின்ற பல்வேறு ஏற்றுமதி நோக்கிய வசதியளித்தல்கள் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை வெளியாக்கல் செய்வதற்கான அங்கீகாரத்தை வழங்கல்.
- இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வியாபாரங்களுக்காக அனுப்பப்பட்ட இறக்குமதிப் பொருட்களை வெளியாக்குவதற்கான அங்கீகாரத்தை வழங்குதல்.
- பழுதடையக்கூடிய பொருட்கள், கூரியர் சரக்கு, இராஜதந்திரிகளின் பொருட்கள் மற்றும் அஞ்சற் பொதி போன்றவை அடங்கலாக விமானம் மூலம் இறக்குமதி செய்யப்படும் அவசரப் பொருட்களை விரைவாக வெளியாக்கும் வகையில் முழு நேரமும் செயற்படல்.
- நாட்டுக்கு திரும்பி வருகின்ற பயணிகளது அவர்கள் உடன் வராத பொதிகளை பல்வேறு பயணிகள் உடன் வராத பொதி இல்லங்களுக்கு மாற்ற வசதியளித்தல்.
- முதலீட்டுச் சபை, முதலீட்டுச் சபை சாராத, கூரியர் மற்றும் பழுதடையக் கூடிய பொருட்கள் என்பவற்றுடன் தொடர்புபட்ட இறக்குமதிச் சரக்குகள் சுங்கப் பிரகடனங்களைச் செய்முறைப்படுத்தலும் மற்றும் ஏற்றுமதிக் கப்பல் ஏற்றுகைக்காக வெளியாக்கல் அனுமதியினை வழங்குதலும்.

2024 ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலான செயலாற்றுகை (ரூபா.)

தொ. இல	விபரம்	குறியீடு	விமானச் சரக்கு (KTIM 2/3/4)	டீ.எச்.எல் (KTDH 2/3)	கொழும்பு காகோ	யூ.பீ.எஸ் (KTF T2)	மொத்தம்
1	சுங்க இறக்குமதித் தீர்வை	CID	4,011,393,047.00	496,128,304.00	286,032,966.00	177,367,732.00	**4,970,922,049.00**
2	பெறுமதி சேர் வரி	VAT	31,101,197,139.00	2,285,089,209.00	1,345,701,338.00	769,658,177.00	**35,501,645,863.00**
3	துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு	PAL	8,830,734,308.00	666,847,897.00	402,410,939.00	236,016,229.00	**10,136,009,373.00**
4	சமூக பாதுகாப்பு அறவீடு	SRL	0	0	0	850.00	**850.00**
5	விசேட பண்ட அறவீடு	SCL	341,958,575.00	318,549.00	123,514.00	1,310,708.00	**343,711,346.00**
6	சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு	SSL	4,711,915,824.00	0	193,899,582.00	114,551,508.00	**5,020,366,914.00**
7	ஒருங்கிணைந்த வரி	CON	16,283,926.00	0	0	0	**16,283,926.00**
8	சுங்க இறக்குமதி மேலதிகக் கட்டணம்	SUR	15,968,855.00	0	6.00	1,668,627.00	**17,637,488.00**
9	உற்பத்தி வரி	XID	3,952,595.00	29,267.00	38,114.00	945,422.00	**4,965,398.00**
10	காப்பறைக் கட்டணங்கள்	SR	0	0	0	16,000.00	**16,000.00**
11	தேச கட்டுமான வரி	NBT	0	0	0	0	**0**
12	இறக்குமதி செஸ் வரி (ஏ.அ.ச)	EIC	1,820,927,592.00	202,324,539.00	93,653,130.00	64,925,195.00	**2,181,830,456.00**
13	கனணிக் கட்டணம்	COM	15,285,208.00	8,227,750.00	4,186,004.00	1,970,200.00	**29,669,162.00**
14	பரிசோதனைக் கட்டணம்	EXM	16,191,600.00	9,394,400.00	4,276,700.00	2,362,800.00	**32,225,500.00**
15	மேலதிக செலுத்துகை	OVP	784.00		0.00	1,270.00	**2,054.00**
16	மேலதிக நேரக் கட்டணங்கள்	OTC	55,465,408.00	10,176,600.00	715,801.00	0	**66,357,809.00**
17	சீல் கட்டணங்கள்	SEL	219,850.00	0	0	0	**219,850.00**
18	அபராதம்	PTY	77,087,295.00	12,235,583.00	2,037,071.40	3,651,928.00	**95,011,877.40**
19	சரிபார்ப்புக் கட்டணம்	VCS	0.00	9,229,800.00	1,210,733.24	0	**10,440,533.24**
20	ஏனையவைகள்	MISC	18,346.00	0	0	100.00	**18,446.00**
21	விசேட வைப்புகள்	SPD	0.00	0	0		**0**
22	வாகன உரித்துடைமை அறவீடு	VEL	185,065.00	0	0		**185,065.00**
23	ஏனைய (இ-மிகை கொடுப்பு)	EOP	0.00	0	0		**0**
24	முன் கட்டணம்	PP	55,600.00	0	0		**55,600.00**
25	ஏனையவை (திருத்தம் தொடர்பிலான கட்டணங்கள்)	AMD	0.00	237,002.00	0		**237,002.00**
	மொத்தம் (ரூபா.)		**51,018,841,017.00**	**3,700,238,900.00**	**2,334,285,898.64**	**1,374,446,746.00**	**58,427,812,561.64**

தொ. இல	விபரம்	குறியீடு	விமானச் சரக்கு (KTIM 2/3/4)	டீ.எச்.எல் (KTDH 2/3)	கொழும்பு காகோ	யூ.பீ.எஸ் (KTF T2)
26	பெறப்பட்ட சுங்கப் பிரகடணங்களது எண்ணிக்கை	55,397	5,393	14,256	7,881	**82,927**
27	பிணையிடல் ,இன்பக் மற்றும் ரீப் ஆகியவற்றின் கீழ் அனுமதிக்கப்பட்ட சுங்கப் பிரகடணங்களது எண்ணிக்கை	3,764	2,481	438	0	**6,683**
28	முதலீட்டுச் சபையின் கீழ் அனுமதிக்கப்பட்ட சுங்கப் பிரகடணங்களது எண்ணிக்கை	36,827	25,718	10,862	0	**73,407**
29	என்றிபோட்களாக அனுமதிக்கப்பட்ட சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை	69	0	0	0	**69**
30	எஸ்.ஆர். விண்ணப்பங்களின் எண்ணிக்கை (டீ.ஆர்.ஏ.)	20	0	0	0	**20**
31	தற்காலிக ஏற்பாடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட சுங்கப் பிரகடணங்களின் எண்ணிக்கை	0	0	0	0	**0**
32	19அ/விலக்களிப்புகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட சுங்கப் பிரகடணங்களின் எண்ணிக்கை	1,408	0	0	0	**1,408**
33	மாற்றிஏற்றலின் கீழ் அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்களது எண்ணிக்கை	7,948	0	624	0	**8,572**
34	வெளிநாட்டு தூதுவராலய பொருட்களது எண்ணிக்கை	254	0	0	0	**254**
35	கூட்டுறவு உத்தரவாதத்தின் கீழான அனுமதிக்கப்பட்ட சுங்கப்பிரகடன எண்ணிக்கை	17	0	0	0	**17**
36	கானே இன் கீழ் அனுமதிக்கப்பட்ட சுங்கப் பிரகடணங்களின் எண்ணிக்கை	59	0	0	0	**59**
37	வங்கி உத்தரவாதத்தின் பேரில் (ஏ.சீ.ரீ/டீ.எச்.எல்/சீ.சீ) அனுமதிக்கப்பட்ட சுங்கப் பிரகடணங்களின் எண்ணிக்கை	97	0	0	0	**97**
38	ISAFTA/SAFTA இன் கீழ் அனுமதிக்கப்பட்ட சுங்கப் பிரகடணங்களின் எண்ணிக்கை	129	0	0	0	**129**
39	தனிப்பட்ட உத்தரவாதத்தின் பேரில் (ஏ.சீ.ரீ /டீ.எச்.எல்/சீ.சீ) அனுமதிக்கப்பட்ட சுங்கப் பிரகடணங்களின் எண்ணிக்கை	2	0	0	0	**2**
40	இலவச இறக்குமதிச் சான்றிதழ் பதிவு	53	0	0	0	**53**
41	இரத்தினக்கல் தொடர்பிலான பதிவு	396	0	0	0	**396**
	மொத்தம்	**106,440**	**33,592**	**26,180**	**7,881**	**174,093**
42	வினியோகிக்கப்பட்ட பொதிகளது எண்ணிக்கை	-	-	-	-	**0**
43	பிற	-	-	-	-	**0**

8.5.4 அரசிறை மற்றும் சேவைகள் (மாகாணம்) பணிப்பகம்

அறிமுகம்

இலங்கைச் சுங்கத்தின் வருமானம் மற்றும் சேவைகள் (மாகாணம்) பணிப்பகமானது, சுங்க சீர்திருத்தங்கள் மற்றும் நவீனமயமாக்கல் திட்டத்தின் ஊடாக 2010 ஆகஸ்ட் மாதத்தில் பிராந்தியக் கொத்தணியின் கீழ் நிறுவப்பட்டது. இப்பணிப்பம் சுங்க தலைமயலுவலக கட்டிடத்தின் 7 வது மாடியில் அமைந்துள்ளது.

இப்பணிப்பகத்தின் கட்டமைப்பு

- மாகாண பணிப்பகமானது சுங்க மேலதிக பணிப்பாளர் (பிராந்தியம்) நாயகத்தினால் நிர்வகிக்கப்படுகிறது
- சுங்க பணிப்பாளர் (மாகாணம்) அனைத்து மாகாண அலுவலகங்களுக்கும் பொறுப்பானவராவார்.

நிறுவன கட்டமைப்பு



வருமானம் மற்றும் சேவைகள் (மாகாணம்) பணிப்பகத்தினால் நிறைவேற்றப்படும் கடமைகள்

- சுங்க வரி மற்றும் பிற அறவீடுகளை சேகரிக்கும் செயற்பாட்டினை நிர்வகித்தல்
- பிராந்தியக் கொத்தணியில் மேற்கொள்ளப்படும் வர்த்தகம் மற்றும் தொழில்களை எளிதாக்குதல்
- பயணிகளுக்கு விரைவான வெளியாக்கலினை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு வசதி செய்தல்
- சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் பிராந்தியத்தில் வருவாய் மற்றும் சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள் தொடர்பான பிற சட்டங்களின் கீழ் செய்யப்படும் குற்றங்களை விசாரித்து வழக்குத் தொடுப்பதன் மூலம் சட்டத்தை அமுல்படுத்துதல்.
- சுங்க நடவடிக்கைகளில் ஈடுபடும்போது இலங்கை சுங்கத்தின் பிற பணிப்பகங்களுடன் ஒருங்கிணைத்து செயற்படல்.

செயலாற்றுகை பற்றிய சாராம்சம் (அரசிறை)

விமான நிலையங்கள்

பிரதான செயலாற்றுகை குறிகாட்டி	ம.ரா.ச.விமான நிலையம்	பலாலி	மொத்தம்
சேகரிக்கப்பட்ட சுங்கத் தீர்வை மற்றும் பிற அறவீடுகள்	22,801.00	839,015.00	861,816.00
அபராதங்கள்	103,038.00	103,400.00	206,438.00
தடுத்துவைக்கப்பட்ட / பறிமுதல் செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை	-	-	-
சேகரிக்கப்பட்ட மேலதிக நேர மற்றும் ஏனைய கட்டணங்கள்	1,287,100.00	862,200.00	2,149,300.00
மொத்தம் (ரூபா.)	**1,412,939.00**	**1,804,615.00**	**3,217,554.00**

உப தடுப்பு அலுவலகங்கள்

பிரதான செயலாற்றகை குறிகாட்டி	ஹம்பாந்தோட்டை	காலி	கொக்கல	திருகோணமலை	காங்கேசன்துறை	மொத்தம்
சேகரிக்கப்பட்ட சுங்கத் தீர்வை மற்றும் பிற அறவீடுகள்	19,561,583.53	1,242,934.64	-	2,836,429.00	11,323,051.00	34,963,998.17
அபராதங்கள்	75,00.00	375,000.00	-	195,956.00	4,222,073.00	4,868,029.00
தடுத்துவைக்கப்பட்ட / பறிமுதல் செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை	-	-	-	-	-	-
சேகரிக்கப்பட்ட மேலதிக நேர மற்றும் ஏனைய கட்டணங்கள்	21,877,029.43	9,167,772.00	-	21,266,605.00	525,950.00	52,837,356.43
மொத்தம் (ரூபா.)	**41,513,612.96**	**10,785,706.64**	**-**	**24,298,990.00**	**16,071,074.00**	**92,669,383.60**

பயணிகள் உடன் வராத பொதி களஞ்சியசாலைகள்

பிரதான செயலாற்றகை குறிகாட்டி	ட்றைகோ - காலி	ட்றைகோ - குருநாகல	சீ.எஸ்.எல் - கண்டி	மொத்தம்
சேகரிக்கப்பட்ட சுங்கத் தீர்வை மற்றும் பிற அறவீடுகள்	16,031,362.00	27,936,722.00	25,383,673.00	69,351,757.00
அபராதங்கள்	371,494.00	995,000.00	352,440.00	1,718,934.00
தடுத்துவைக்கப்பட்ட / பறிமுதல் செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை	-	-	1	1
சேகரிக்கப்பட்ட மேலதிக நேர மற்றும் ஏனைய கட்டணங்கள்	7,064,958.00	6,645,555.00	7,766,506.00	21,477,019.00
மொத்தம் (ரூபா.)	**23,467,814.00**	**35,577,277.00**	**33,502,620.00**	**92,547,711.00**

தபால் பொதி பெறுமதி மதிப்பிடல் பிரிவுகள்

பிரதான செயலாற்றகை குறிகாட்டி	காலி	கண்டி	திருகோணமலை	யாழ்ப்பாணம்	மொத்தம்
சேகரிக்கப்பட்ட சுங்கத் தீர்வை மற்றும் பிற அறவீடுகள்	8,918,812.00	15,815,403.00	12,493,754.00	30,428,081.00	67,656,050.00
அபராதங்கள்	30,400.00	75,926.00	-	2,506,934.00	2,613,260.00
தடுத்துவைக்கப்பட்ட / பறிமுதல் செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை	2	-	-	-	2
சேகரிக்கப்பட்ட மேலதிக நேர மற்றும் ஏனைய கட்டணங்கள்	13,150	2,950	1,900.00	10,350.00	28,350.00
மொத்தம் (ரூபா.)	**8,962,364.00**	**15,894,279.00**	**12,495,654.00**	**32,945,365.00**	**70,297,662.00**

பயணிகளுக்கான வசதி

பயணிகள் உடன் வராத பொதி களஞ்சியசாலைகள்

பிரதான செயலாற்றுகை குறிகாட்டி		ட்றைகோ - காலி	சீ.எஸ்.எல் - கண்டி	ட்றைகோ - குருநாகல	மொத்தம்
வெளியாக்கப்பட்ட பொதிகளது எண்ணிக்கை	ப.உ.வ.பொதி	12,056	14,256	23,062	49,374
	அன்பளிப்பு	5,757	8,140	9,650	23,547
பொதி வெளியாக்கலுக்கு எடுக்கப்பட்ட காலநேரம் (நிமிடம்) *சரக்குகளை பொறுத்தது		40	60	30	-

விமான நிலையங்கள்

பிரதான செயலாற்றுகை குறிகாட்டி	ம.ரா.ச.விமான நிலையம்	பலாலி	மொத்தம்
வழங்கப்பட்ட விமான வெளியாக்கல் அனுமதிகளின் எண்ணிக்கை	648	774	1,422
வெளியாக்கப்பட்ட பயணிகளது எண்ணிக்கை	100,708	38,901	139,609
வெளியாக்கப்பட்ட விமான பணியாளர்களின் எண்ணிக்கை	4,672	-	4,672
பொதிகளை வெளியாக்குவதற்கான நேரம் (நிமிடங்கள்)	பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, பொருட்களை அகற்றும் நேரம் விமானத்திற்கு விமானம் வேறுபடும்	பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, பொருட்களை அகற்றும் நேரம் விமானத்திற்கு விமானம் வேறுபடும்	-
பீடர் பிணைக்குதம் / தீர்வையற்ற கடைகளில் இருந்தான சட்டரீதியற்ற கசிவுகளின் எண்ணிக்கை	-	-	-

உப தடுப்பு அலுவலகங்கள்

பிரதான செயலாற்றுகை குறிகாட்டி	ஹம்பாந்தோட்டை	காலி	கொக்கல	திருகோணமலை	காங்கேசன்துறை	மொத்தம்
வழங்கப்பட்ட கப்பல் வெளியாக்கல் அனுமதிகளின் எண்ணிக்கை	579	164	-	188	44	975
வெளியாக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை	-	-	-	-	5508	5508
அனுமதிக்கப்பட்ட கப்பல் பணியாளர்களின் எண்ணிக்கை	-	இருக்கவில்லை	-	1663	-	1663
பொருட்களை அகற்றவதற்கான கால நேரம்	-	-	-	-	பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து கப்பலுக்குக் கப்பல் மாறுபடும்.	-
பீடர் பிணைக்குதம் / தீர்வையற்ற கடைகளில் இருந்தான சட்டரீதியற்ற கசிவுகளின் எண்ணிக்கை	-	-	-	-	-	-

தபால் பொதி பெறுமதி மதிப்பிடல் பிரிவுகள்

பிரதான செயலாற்றுகை குறிகாட்டி	காலி	கண்டி	திருகோணமலை	யாழ்ப்பாணம்	மொத்தம்
அகற்றப்பட்ட பொதிகளி எண்ணிக்கை	6,351	7,851	2,690	8,380	25,272
பொதிகளை அகற்றவதற்காக எடுக்கப்பட்ட நேரம் (நிமிடம்)	10	12	15	15	பொருந்தாது

சுற்றுச்சூழல்-சமூகப் பாதுகாப்பு

விமான நிலையங்கள்

பிரதான செயலாற்றுகை குறிகாட்டி	ம.ரா.ச.விமான நிலையம்	பலாலி	மொத்தம்
அடையாளம் காணப்பட்ட இடர் மிக்க பயணிகளின் எண்ணிக்கை	-	-	-
பரிசோதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை	-	-	-
அபராதங்கள்	இருக்கவில்லை	இருக்கவில்லை	இருக்கவில்லை
பறிமுதல்களின் எண்ணிக்கை	-	-	-
தடுத்துவைக்கப்பட்டுள்ள பொருட்களது எண்ணிக்கை	24	81	105

உப தடுப்பு அலுவலகங்கள்

பிரதான செயலாற்றுகை குறிகாட்டி	காலி	கொக்கல	திருகோணமலை	ஹம்பாந்தோட்டை	காங்கேசன் துறை	மொத்தம்
அடையாளம் காணப்பட்ட ஆபத்தான பயணிகளது எண்ணிக்கை	-	-	113*	-	-	-
பரிசோதிக்கப்பட்ட பயணிகளது எண்ணிக்கை	-	-	-	-	-	-
அபராதங்கள்	இருக்கவில்லை	இருக்கவில்லை	இருக்கவில்லை	இருக்கவில்லை	இருக்கவில்லை	இருக்கவில்லை
பறிமுதல்களின் எண்ணிக்கை	-	-	-	-	-	-
தடுத்துவைக்கப்பட்டுள்ள பொருட்களது எண்ணிக்கை	-	-	-	-	-	-

*மியன்மார் அகதிகள்

பயணிகள் உடன் வராத பொதி களஞ்சியசாலைகள்

பிரதான செயலாற்றுகை குறிகாட்டி	ட்றைகோ - காலி	ட்றைகோ - குருநாகல	சீ.எஸ்.எல் - கண்டி	மொத்தம்
அடையாளம் காணப்பட்ட இடர் மிக்க பயணிகளது எண்ணிக்கை	-	-	1	1
பரிசோதிக்கப்பட்ட பயணிகளது எண்ணிக்கை	-	-	1	1
அபராதங்கள்	இருக்கவில்லை	இருக்கவில்லை	இருக்கவில்லை	இருக்கவில்லை
பறிமுதல்களின் எண்ணிக்கை	-	-	-	-
தடுத்துவைக்கப்பட்டுள்ள பொருட்களது எண்ணிக்கை	-	-	1	1

தபால் பொதி பெறுமதி மதிப்பிடல் பிரிவுகள்

தபால் பொதி பெறுமதி மதிப்பிடல் பிரிவுகள்	**தபால் பொதி பெறுமதி மதிப்பிடல் பிரிவுகள்**	**தபால் பொதி பெறுமதி மதிப்பிடல் பிரிவுகள்**	**தபால் பொதி பெறுமதி மதிப்பிடல் பிரிவுகள்**	**தபால் பொதி பெறுமதி மதிப்பிடல் பிரிவுகள்**	**தபால் பொதி பெறுமதி மதிப்பிடல் பிரிவுகள்**
அடையாளம் காணப்பட்ட இடர் மிக்க பயணிகளது எண்ணிக்கை	1	-	1	-	1
பரிசோதிக்கப்பட்ட பயணிகளது எண்ணிக்கை	6,3510	7,851	2,690	8,380	25,272
அபராதங்கள்	30,400.00	75,926.00	இருக்கவில்லை	2,506,934.00	2,613,260.00
பறிமுதல்களின் எண்ணிக்கை	1	1	2	19	23
தடுத்துவைக்கப்பட்டுள்ள பொருட்களது எண்ணிக்கை	2	-	47	59	108

செயல்திட்டம் 2024 இன் சாதனைகள்

வருவாய் குறிக்கோள்



- 2023 உடன் ஒப்பிடும்போது விமான நிலையங்களிலிருந்து 33% வருவாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
- 2023 உடன் ஒப்பிடும்போது உப தடுப்பு அலுவலகங்களிலிருந்து 41% வருவாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
- 2023 உடன் ஒப்பிடும்போது ப.உ.வ.பொதி களஞ்சியசாலைகளிலிருந்து 34% வருவாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
- 2023 உடன் ஒப்பிடும்போது அஞ்சல் மதிப்பீட்டு கிளைகளிலிருந்து 79% வருவாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
- 2023 உடன் ஒப்பிடும்போது ஒட்டுமொத்தமாக 47% வருவாய் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

01. வருவாய் குறிக்கோளின் கீழான பிரதான செயற்பாடுகள்	
பிரதான செயல்பாடு	**தற்போதைய முன்னேற்றம்**
1.1 கண்காணிப்பு மற்றும் பயணிகள் உடனான பொருட்கள் பரிசோதனை 1.1.1 தபால் கிளைகளில் உரிய வருவாய்களை அறவிடல். பொருட்களை சோதனை செய்து சரியான வகைப்பாடு மற்றும் பெறுமதி மதிப்பீட்டை திர்மானித்தல். பொருந்தினால், பரிசோதிக்கப்பட்ட பொருட்களிலிருந்து உரிய வருவாயை சேகரித்தல்.	அமுல்படுத்தப்பட்டது. மத்திய அஞ்சல் பரிவர்த்தனையினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து பொதிகளும் சோதனை செய்யப்பட்டு உரிய வருவாய் சேகரிக்கப்பட்டு வருகின்றன. வணிக அளவுகள் என கண்டறியப்பட்டால், அவை தொடர்பில் அபராதம் விதிக்கப்பட்டன.
1.2. JIA மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தில் (விமானம் மற்றும் படகு) பயணிகளிடமிருந்து உரிய வருவாயை சேகரித்தல் பொருட்களை சோதனை செய்து சரியான வகைப்பாடு மற்றும் பெறுமதி மதிப்பீட்டை தீர்மானித்தல். பொருந்தினால், பரிசோதிக்கப்பட்ட பொருட்களிலிருந்து உரிய வருவாயை சேகரித்தல். தேவைப்பட்டால் சுங்க கட்டளைச் சட்டத்தினைப் பிரயோகித்தல்	அமுல்படுத்தப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலும், காங்கேசன்துறை துறைமுகத்திலும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
1.1.3. தடுப்பு அலுவலகங்களிலிருந்து உரிய வருவாகளை சேகரித்தல்	அமுல்படுத்தப்பட்டது
1.2 மேலதிக நேரக் கட்டணங்களை சேகரித்தல் 1.2.1 மேலதிக நேரக் கட்டணங்களைப் பதிவுசெய்து உரிய கட்டணங்களை சேகரித்தல்.	அமுல்படுத்தப்பட்டது

2. வர்த்தக வசதியளித்தல் குறிக்கோளின் கீழான பிரதான செயற்பாடுகள்	
பிரதான செயல்பாடு	**தற்போதைய முன்னேற்றம்**
2.1. பயணிகளுக்கு வசதியாக தொந்தரவு இல்லாத வெளியாக்கல் செயல்முறையை உறுதி செய்தல்	அமுல்படுத்தப்பட்டது
2.2. பயணிகளுக்கு வசதியாக தொந்தரவு இல்லாத வெளியாக்கல்	அமுல்படுத்தப்பட்டது

செயல்முறையை உறுதி செய்தல்	
2.3. தம்முடன் கொண்டுவரும் பொருட்களின் தடையற்ற வெளியாக்கல் செயல்முறையை உறுதி செய்தல்	அமுல்படுத்தப்பட்டது
2.4. பயணிகள் தீர்வையற்ற வசதிகளில் கொள்முதல்களை செய்வதற்கு அனுமதித்தல்	அமுல்படுத்தப்பட்டது
2.7. காங்கேசன்துறைத் துறைமுகத்தில் சரக்கு செயல்பாடு/பயணிகள் அனுமதியை எளிதாக்குதல் 1. HRM உடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதன் மூலம் பொருள் செயல்பாட்டிற்கு போதுமான பணியாளர்களை ஒதுக்குதல் 2, பொருள் கொள்வனவு பணிப்பகத்தின் ஒருங்கிணைப்புடன் பௌதீக வளங்களை வழங்குதல் 3. காங்கேசன்துறைத் துறைமுகத்தில் சரக்கு செயல்பாட்டிற்கான SOP (நிலையான செயல்பாட்டு நடைமுறை) தயாரித்தல்	படகு சேவையின் செயல்பாடுகள் சீராக நடைபெற்று வருகின்றன. திணைக்களத்தின் பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக குறைந்தபட்ச ஊழியர்களுடன் செயல்படுகிறது. படுக்கை முறை ஸ்கேனர் இயந்திரம் அடுத்த ஆறு மாதங்களுக்குள் சரிசெய்யப்பட உள்ளது. செயல்படுத்தப்பட்டது.

03. சுற்றுச் சூழல் - சமூக பாதுகாப்பு

பிரதான செயல்பாடு	தற்போதைய முன்னேற்றம்
3.1. 3.1.1. தடைசெய்யப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களைத் தடுத்து வைப்பதற்கான சட்டத் தேவைகளுடன் இணங்குதல் (யாழ்ப்பாணம் - தபால் கிளை)	அமுல்படுத்தப்பட்டது. அனுமதிப்பத்திர தேவைப்பாடுகள் இல்லாததால் 29 பார்சல்கள் தடுத்து வைக்கப்பட்டன அல்லது/மற்றும் பறிமுதல் செய்யப்பட்டன.
3.1.2. JIA மற்றும் KKS துறைமுகத்தில் (விமானம் மற்றும் படகு) தடைசெய்யப்பட்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் நாட்டிற்குள் வருவதனை கட்டுப்படுத்துதல்	அமுல்படுத்தப்பட்டது. 66 பொதிகள் தடுத்து வைக்கப்பட்டு JIA இல் உள்ள தாவர மற்றும் விலங்கு தனிமைப்படுத்தல் பிரிவுகளிடம் ஒப்படைக்கப்பட்டன. அனுமதிப் பத்திர தேவைப்பாடுகள் இல்லாததால் 06 பொதிகள் தடுத்து வைக்கப்பட்டன அல்லது/மற்றும் பறிமுதல் செய்யப்பட்டன.

04. நிறுவன மேம்பாட்டின் கீழான பிரதான செயற்பாடுகள்

பிரதான செயல்பாடு	தற்போதைய முன்னேற்றம்
4.1. மாகாண அலுவலகங்களுடன் ஒருங்கிணைத்து தொடர்பாடல்களை மேற்கொள்ளுதல். 4.1.1. பிற பணிப்பகங்கள் மற்றும் பங்குதாரர்களின் தேவைக்கேற்ப மாகாண அலுவலகங்களுடன் சரியான நேரத்தில் தொடர்பு கொள்ளுதல். 4.2.2. தேவைக்கேற்ப மாகாண அலுவலகங்களில் சுமூகமான செயல்பாட்டை உறுதி செய்ய பிற பணிப்பகம் மற்றும் பங்குதாரர்களுடன் ஒருங்கிணைத்தல்.	உடனடி செய்தி அனுப்புதல், விரைவான புதுப்பிப்புகள் மற்றும் நிகழ்நேர ஒத்துழைப்புக்கான தொடர்பு கருவியாக WhatsApp ஐப் பயன்படுத்துதல். சரியான நேரத்தில் மற்றும் பயனுள்ள தகவல்தொடர்புகளை வழங்குவதில் 100% வெற்றி விகிதத்தை அடைந்துள்ளது.
4.2. மாகாண அலுவலகங்களில் பணியாளர்களை வலுப்படுத்துதல் 4.2.1. யாழ்ப்பாணப் பகுதியில் முறையான சுங்க நடவடிக்கைகளை உறுதி செய்ய போதுமான பணியாளர்களைக் கோருதல்	திணைக்களத்தின் தற்போதைய பணியாளர் பற்றாக்குறை காரணமாக, அனைத்து மாகாண அலுவலகங்களும் குறைந்தபட்ச ஊழியர்களுடன் செயல்படுகின்றன.

4.3. ஊழியர்களுக்கு போதுமான மற்றும் சரியான தங்குமிட வசதியை உருவாக்குதல் 4.3.1. யாழ்ப்பாணப் பிராந்திய ஊழியர்களுக்கு போதுமான மற்றும் சரியான தங்குமிட வசதிகளை வழங்க சுங்க நிர்வாகத்தின் கவனத்தை ஈரத்தல் 4.3.2. திட்டத்தை முடிக்க பொருள் கொள்வனவு பணிப்பகத்துடனான ஒருங்கிணைந்து செயற்படல்	வடக்கு மாகாண அலுவலகங்களில் பணிபுரியும் சுங்க ஊழியர்களுக்கு முறையான தங்குமிட வசதியை உருவாக்க சுங்க பணிப்பாளரின் (மாகாண) தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.
4.5. யாழ்ப்பாணத்தில் உள்ள நிலங்கள் தொடர்பில் "அரசாங்க நிறுவனங்களுக்கு நிலங்களை விடுவிப்பதற்கான சான்றிதழ்" பெறுதல் 4.5.1. நிலங்களை அடையாளம் கண்டு உரிமையை நிரூபிக்க தொடர்புடைய ஆவணங்களை சேகரித்தல். 4.5.2. சர்ச்சைக்குரிய நிலங்களையும் குறித்த சர்ச்சையின் வகையையும் அடையாளம் காணுதல். 4.5.3. சர்ச்சையுள்ள நிலம் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்து ஒரு உடன்பாட்டிற்கு வாருதல். 4.5.4. பொருள் கொள்வனவு பணிப்பகம் மூலம் நில அளவைத் திட்டத்தைப் பெறுங்கள். 4.5.5. தளவாட இயக்குநரகம் மூலம் நிலத்தை வேலி அமைத்து பாதுகாத்தல். 4.5.6. "நிலங்களை விடுவிப்பதற்கான சான்றிதழ்" பெற ஏற்பாடு செய்யுங்கள்.	இப்பகுதியில் பதின்மூன்று நிலங்கள் சுங்க நிலங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த நிலங்களில் இரண்டு நிலங்கள் தொடர்ந்து சர்ச்சைகளில் உள்ளன. ஒரு நிலத்தின் ஒரு பகுதி இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது, மற்றொரு பகுதி வலிகாமம் வடக்கு பிரதேச சபையால் வாகன நிறுத்துமிடத்திற்காக கோரப்பட்டுள்ளது. முல்லைத்தீவில் உள்ள நிலமானது, இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு நிலத்தை மாற்றும் செயல்முறை நடந்து கொண்டிருக்கும் போது, மீன்பிடிகள் மற்றும் நீர்வள திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. மீன்பிடிகள் மற்றும் நீர்வள திணைக்களமானது தேவையான அனுமதிகளைப் பெறாமல் அந்த நிலத்தில் மீனவர் ஓய்வு இல்லத்தைக் கட்டத் தொடங்கியது. ஜூலை 17 ஆம் திகதி மெரிடைம்பற்று பிரதேச செயலகத்தில், சுங்கம், முல்லைத்தீவு மீன்பிடி மற்றும் நீர்வளங்கள் திணைக்களம் மற்றும் மணல்குடியிருப்பு கிராம மீன்பிடி சங்கத்தின் பங்கேற்புடன், சம்பந்தப்பட்ட தரப்பினருடன் இந்த விவகாரம் குறித்து கலந்துரையாடும் வகையில் ஒரு கூட்டம் நடத்தப்படவுள்ளது.
4.6. மாகாண ஊழியர்கள் குறித்து போதைப்பொருள், இயைபுமுறைக் குறியீடுகள் மற்றும் பிற சுங்க நடைமுறைகள் தொடர்பான அறிவை மேம்படுத்தல். 4.6.1. மனிதவள அபிவிருத்தி பணிப்பகம் மற்றும் தொடர்புடைய துறையில் நிபுணத்துவம் பெற்ற பிற கிளைகளுடன் கலந்துரையாடுதல். 4.6.2. கலந்துரையாடலினை ஏற்பாடு செய்தல்.	சுங்க நடைமுறைகள் மற்றும் சட்டவிரோத குடியேற்றம் குறித்து ஆவுஸ்திரேலிய எல்லைப் படையின் உதவியுடன் இரண்டு கல்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

8.6 சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழான பணிப்பகங்கள்

8.6.1 அரசிறை இலக்கு செயலணிப் பணிப்பகம்

8.6.2 மேல்முறையீடுகள் பணிப்பகம்

8.6.3 முறைமை மற்றும் நடைமுறை இணக்கப்பாட்டுக் கணக்காய்வுப் பணிப்பகம்

8.6.4 நிதி முகாமைத்துவப் பணிப்பகம்

8.6.5 உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) பிரிவு

8.6.1 அரசிறை இலக்கு செயலணி பணிப்பகம்

அறிமுகம்

அரசிறை இலக்குச் செயலணிப் பணிப்பகமானது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் நேரடியான கண்காணிப்பின் கீழ் இயங்கி வருவதோடு, இப்பணிப்பகமானது ஒருமைப்பாட்டினை ஊக்குவித்தல் மற்றும் ஒழுங்கற்ற நடைமுறைகளையும் அத்துடன் சுங்கத்தின் சீரான தொழிற்பாட்டினைப் பாதிக்கின்ற ஏனைய ஏதேனும் ஒழுங்கற்ற விடயங்களையும் நீக்கும் நோக்கில், விரைந்து செயற்பட்டு, சுங்கத் திணைக்களத்தின் ஒட்டுமொத்தச் செயற்பாடுகளையும் கண்காணித்தல்.

இப் பணிப்பகமானது ஒரு சுங்கப் பணிப்பாளரின் தலையின் கீழ், சுங்கப் பிரதிப் பணிப்பாளர்கள், சுங்க அத்தியட்சகர்கள், சுங்கப் பிரதி அத்தியட்சகர்கள், சுங்க உதவி அத்தியட்சகர்கள், சுங்கப் பரிசோதகர்கள், சுங்க காவலர்கள் மற்றும் எழுதுவினைஞர் பணியாளர்கள் போன்றோரைக் கொண்டுள்ளது.

மேலும் இப் பணிப்பகமானது, அனைத்துச் சரக்குகளும் பிற அனைத்து விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய, சம்பந்தப்பட்ட அனைத்து உரிய அறவீடுகளையும் செலுத்தியுள்ளமையினை உறுதிப்படுத்தும் நோக்கில் அனைத்து இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளைக் கண்காணிப்புச் செய்வதுடன், பிரத்தியேகப் பொதிகள், அஞ்சல் மற்றும் கூரியர் பொதிகள் உள்ளடங்கலாக ஏதேனும் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது ஏற்றுமதி செய்யப்படவிருக்கின்ற பொருட்களையும் விசாரணை செய்வதற்காக அவை தொடர்பில் தலையீடு செய்து அவற்றை மீள்-பரிசோதனை அல்லது பறிமுதல் செய்வதற்குரிய அதிகாரத்தைக் கொண்டுள்ளது. மேலும் இப் பணிப்பகமானது, விமான நிலையங்கள், விமானச் சரக்கு இல்லம், கூரியர் பொதிக் களஞ்சிய சாலைகள், பயணிகளுடன் வராத பொதிக் களஞ்சியசாலைகள், அஞ்சல் பொதி, பொதுவான சரக்கு, முதலீட்டுச்சபைச் சரக்கு, பிணைப்படுத்தப்பட்ட சரக்கு மற்றும் ஏற்றுமதிச் சரக்கு போன்றவற்றில் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்கின்றது.

இப்பணிப்பகத்தின் பிரதான குறிக்கோள், திணைக்களத்தின் ஒட்டுமொத்தச் செயற்பாடுகளையும் கண்காணிப்பதோடு முழுக் கட்டுப்பாடு தொடர்பில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு பக்கபலமாகவிருத்தலுமாகும். மேலும் பொதுமக்கள் வழங்குகின்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டும் பணியாட்கள் திரட்டுகின்ற உளவுத் தகவல்களைக் கொண்டும் பல்வேறு சட்ட அமுலாக்கங்களையும் மேற்கொள்கின்றது.

அரசிறை இலக்குச் செயலணியானது நீள் அறை, களஞ்சியசாலைகள், விமானச் சரக்கு, தபால் மூலமான பொதி, கூரியர் சேவைகள் மற்றும் பொருள் வெளியாக்கத்திற்கான ஏனைய விசேட நடைமுறைகள் தொடர்பில் பொருட்களது வெளியாக்கல் மீதான கண்காணிப்பினையும் மேற்கொள்கின்றன.

பிரதான தொழிற்பாடுகள்

- திணைக்களத்தினுள் ஒருமைப்பாட்டினை ஊக்குவித்து, அங்கு காணப்படுகின்ற ஒழுங்குமுறையற்ற நடைமுறைகளை நீக்குதல்.
- முறைப்பாடுகள் மற்றும் குற்றச்சாட்டுகள் எழுகின்றவிடத்து அது தொடர்பில் உடனடியாக பதிலளித்தல்.
- நெருக்கடிமிகு நிலைமைகளின் போது தேவையான வளங்களை ஒன்றுதிரட்டி சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு உதவுதல்.
- இறக்குமதி செய்யப்படுகின்ற அல்லது ஏற்றுமதி செய்யப்படுகின்ற எந்தவொரு பொருளையும் இடைமறித்து மீள் பரிசோதனை செய்வதோடு, அது தொடர்பில் பின்பற்றியுள்ள நடைமுறைகளின் சரியான தன்மையினையும் உறுதிசெய்தல்.
- விமானநிலையத்திலோ அல்லது பயணிகள் உடன் வராத பொதி களஞ்சியசாலைகளிலோ பயணிகளையும் அவர்களது பொதிகளையும் இடைமறித்துப் பரிசோதித்தல்
- தபால் பொதி, கூரியர் சேவைகள் மூலம் வருகின்ற பொருட்களின் வெளியாக்கல் மற்றும் அவற்றை வெளியாக்குதல் தொடர்பிலான ஏனைய விசேட நடைமுறைகள் என்பவற்றில் விழிப்புடனான கண்காணிப்பினை பேணுதல்

2024ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இப்பணிப்பகத்திலான செயலாற்றுகை (ரூபா.)

இலக்கு 1 – அரசிறையினை அதிகப்படுத்துதல்							
குறிக்கோள்	உபாயம்	செயல்பாடுகள்	முக்கிய குறிகாட்டிகள் சாதனைகள்	சாதனைகள்			
				Q1	Q2	Q3	Q4
1.1 வருவாய் கசிவுகளைக் குறைத்தல்/ அரசிறையினைப் பாதுகாத்தல்	1.1.1 வணிக இறக்குமதி/ஏற்றுமதி அனுமதி குறித்த கண்காணிப்பு (கடல் மற்றும் வான்வழி)	விசாரணைக்காக சந்தேகத்திற்கிடமான சரக்குகளைத் தேர்ந்தெடுத்து தடுத்து வைத்தல் (எப்.சீ.எல், எல்.சீ.எல், விமானச் சரக்கு)	தடுத்து வைக்கப்பட்ட/ இடைமறிக்கப்பட்ட சரக்குகளின் எண்ணிக்கை	235	149	144	241
		இயைபுமுறை குறியீடு திருத்தங்கள் மற்றும் பெறுமதி மதிப்பு சரிசெய்தல் தொடர்பிலான மேலதிக அறவீடுகளை அறவிடல்	அறவிடப்பட்ட மேலதிக அறவீடுகளது தொகை	59,838,838	55,644,227	59,058,412	68,059,804
		மோசடி நடவடிக்கைகள் தொடர்பில் பறிமுதல்கள் மற்றும் அபராதங்களை விதித்தல்	பறிமுதல் மற்றும் அபராதங்களாக அறவிடப்பட்ட தொகை	469,174,887	477,475,689	304,347,261	594,528,004
	1.1.2 UPB, APB ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் தலையிடுதல்	சந்தேகத்திற்கிடமான UPB கொள்கலன்கள் மற்றும் பொருட்களைத் தேர்ந்தெடுத்து தடுத்து வைத்தல்	தடுத்து வைக்கப்பட்ட/ இடைமறிக்கப்பட்ட சரக்குகளின் எண்ணிக்கை	15,053	7,749	10,454	14,002
		வரி விதிக்கக்கூடிய பொருட்கள் தொடர்பில் வரிகளை அறவிடல்	அறவிடப்பட்ட அறவீடுகளது தொகை	4,512,921	11,429,018	11,749,971	20,103,706
		மோசடி நடவடிக்கைகள் தொடர்பில் பறிமுதல்கள் மற்றும் அபராதங்களை விதித்தல்	பறிமுதல் மற்றும் அபராதங்களாக அறவிடப்பட்ட தொகை	109,757,973	117,513,289	93,339,334	140,846,702
		ப.ச. விமான நிலையத்தில் சோதனைகளை நடத்துதல்	விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளது எண்ணிக்கை	5	14	18	13
			விமான நிலையத்திலான சோதனைகள் தொடர்பிலான அறவீடு	166,549	22,036,820	11,660,592	61,271,368
	1.1.3 கொள்கை வகுப்பிற்கான பரிந்துரைகளை வழங்குதல்	பாதிப்புறுநிலைகள், கசிவுகள் குறித்து சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் சரியான நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளை வழங்குதல	அடையாளம் காணப்பட்டு அறிக்கையிடப்பட்ட பாதிப்புறுநிலைகள் / கசிவுகளின் எண்ணிக்கை	-	-	-	2
1.2 மேலதிக வருவாயை உருவாக்குதல்	1.2.1 அரசிறை செயலணியிலான காப்பறையில் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல்	விற்பனை செய்யக்கூடிய பொருட்களை விற்றுத்தீர்த்தல்	சேகரிக்கப்பட்ட அரசிறை தொகை	-	-	1,689,180 *	20,426,467
		விற்பனை செய்ய முடியாத பொருட்களை அழித்தல்	அழிக்கப்பட்ட பொருட்களின் அளவு	-	-	-	இ கழிவு உணவுப் பொருள்

* பயன்படுத்திய வாகன இருக்கைகள்

8.6.2 மேல்முறையீடுகள் பணிப்பகம்

அறிமுகம்

உலக சுங்க அமைப்பின் மீளமைக்கப்பட்ட கியோட்டோ பேரவை மற்றும் உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதி ஒப்பந்தம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட சர்வதேச வர்த்தக நடைமுறைகளுக்கு இணங்க இலங்கை சுங்கத்தின் மேல்முறையீட்டு பணிப்பகம் நிறுவப்பட்டுள்ளது. இப்பணிப்பகம் சுங்க பணிப்பாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் செயல்படுகிறது.

சுங்க பணிப்பாளர் நாயகத்திடம் எழுத்துப்பூர்வமாக சமர்ப்பிக்கப்பட்ட மேல்முறையீடுகளை பரிசீலித்து வர்த்தகத்தை எளிதாக்குவதும், உண்மைகளை சரிபார்த்த பிறகு பொருத்தமான பரிந்துரைகளை வழங்குவதும், பின்தொடர் நடவடிக்கைகளை எடுப்பதும் இதன் நோக்கமாகும்.

மீளாய்வுக்கான பயனுள்ள மேல்முறையீட்டு பொறிமுறையை நிறுவுவதற்கும், பொருத்தமான இடங்களில், நிர்வாக நடவடிக்கை அல்லது பணியைத் திருத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்கும், மேல்முறையீட்டுக் குழு உருவாக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. சுங்க பணிப்பாளர் (மேல்முறையீடுகள்), தனது பதவியின் மூலம் உறுப்பினராக இருக்கின்ற அதேவேளை, மற்ற உறுப்பினர்கள் இந்தக் குழுவில் சீரான முறையில் செயற்பட்டு அவருக்கு உதவுவார்கள்.

சுங்க பணிப்பாளர் நாயகத்தினால் சுங்க பணிப்பாளருக்கு (மேல்முறையீடுகள்) அனுப்பப்படும் மேல்முறையீடுகளில், மேல்முறையீடுகளின் செல்லுபடித்தன்மை மற்றும் நோக்கத்தை உறுதி செய்வதற்காக, சுங்க பணிப்பாளர் (மேல்முறையீடுகள்) அதை ஆய்வு செய்வார். மேலதிக தகவல்கள் மற்றும் ஆதாரங்கள் தேவைப்படும் மேல்முறையீடுகள், விரிவான அறிக்கைகள் மற்றும் குறித்த விடயம் தொடர்பில் மேலதிக விவரங்களைப் பெறுவதற்காக தொடர்புடைய பணிப்பகங்களுக்கு பரிந்துரைக்கப்படுகின்றன.

இந்த விவரங்களைப் பெற்ற பின்னரே, சுங்க பணிப்பாளர் (மேல்முறையீடுகள்) எந்தவொரு நிவாரணத்தையும் பரிசீலிப்பதற்காக மேல்முறையீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்க முடியும்.

எனவே, ஒவ்வொரு ஆண்டும் மேல்முறையீட்டுக் குழுவிற்கு அனுப்பப்படும் மேல்முறையீடுகளின் எண்ணிக்கை, சுங்க பணிப்பாளர் நாயகத்தால் இந்த பணிப்பகத்திற்கு பரிந்துரைக்கப்படும் மேல்முறையீடுகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இப்பணிப்பகத்தின் செயலாற்றுகை

	செயலாற்றுகை	சதவீதம்
2024 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மேல்முறையீடுகளின் எண்ணிக்கை	101	-
2023 டிசம்பர் இறுதியில் நிலுவையில் உள்ள மேல்முறையீடுகளின் எண்ணிக்கை	32	-
2024 ஆம் ஆண்டில் பரிசீலிக்கப்பட வேண்டிய மொத்த மேல்முறையீடுகளின் எண்ணிக்கை	133	-
2024 ஆம் ஆண்டில் பரிசீலிக்கப்பட்ட மேல்முறையீடுகளின் எண்ணிக்கை	76	57.142
2024 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட மேல்முறையீடுகளின் எண்ணிக்கை	70	52.631
பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட மேல்முறையீடுகளின் எண்ணிக்கை	70	52.631

8.6.3 முறைமைகள் மற்றும் நடைமுறைகள் இணக்கப்பாட்டுக் கணக்காய்வுப் பணிப்பகம்

அறிமுகம்

இப் பணிப்பகமானது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கீழ் நேரடியாகத் தொழிற்படுவதுடன், இலங்கைக் கணக்காளர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்த அதிகாரியினால் தலைமை வகிக்கப்படுகின்றது. இப்புதிய பணிப்பகம் உருவாக்கப்பட்டதன் எதிர்பார்ப்புகளானது, ஒழுங்கீனங்கள் அடிக்கடி நிகழ்வதனையும் மற்றும் ஒருமைப்பாட்டிலான தளர்வுகளையும் தடுக்கும் வகையில் முறையான விருத்தியில் செயற்பாட்டு முகாமையாக உதவுதல், மற்றும் உள்ளாக்கப்படும் இடர்களுக்கு ஏற்ப உள்ளகக் கட்டுப்பாடுகளை பராமரித்தலும் விருத்தி செய்தலுமாகும்.
திறமையான முறையில் கணக்காய்வு மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் சகல முக்கிய செய்முறைகளில் வளப்பயன்பாட்டினை சிக்கனப்படுத்தல் மற்றும் திணைக்களத்தினூடாக சகல பிரிவுகளையும் உள்ளடக்கிய செய்முறைகளை ஆதரித்தல் என்பன இப்பணிப்பகத்தின் நோக்காகும்.

பிரதான தொழிற்பாடுகள்

- எவ்வேளையிலும் சாத்தியமாகின்ற கணக்காய்வுச் சேவையினை மேம்படுத்துவதன் மூலம் அமைப்பகத்திற்கான இதன் மேலதிக பெறுமதியினை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளகக் கணக்காய்வினை திறமையாக முகாமை செய்தல்.
- பின்வருவன உள்ளடங்கலாக நிறுவன ஆளுகை, செயற்பாடுகள் மற்றும் தகவல் என்பவற்றில் சூழ்ந்துள்ள கட்டுப்பாடுகளை திறமையான முறையிலும் போதிய வகையிலும் மதிப்பிடல்.
    - நிதி மற்றும் செயற்பாட்டுத் தகவலின் ஒருமைப்பாடும் நம்பகத்தன்மையும்
    - செயற்பாடுகளது நற்பயனளிக்கக் கூடிய தன்மையும் திறமையும்
    - சொத்துக்களைப் பாதுகாத்தல்.
    - சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் உடன்படிக்கைகளுடனான இணக்கப்பாடு.
- இடர் முகாமையினை விருத்திசெய்வதற்கான இடர் மதிப்பீட்டின் அடிப்படையிலான கணக்காய்வுத் திட்டங்களை வரைதலும் நிறுவன செயற்பாடுகளை விருத்தி செய்தலும்.
- குறிப்பிடத்தக்க இடர் வெளிப்பாடுகளையும் கட்டுப்பாட்டுப் பிரச்சினைகளையும் மற்றும் தேவைப்படும் அல்லது சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் வேண்டப்படும் பிற விடயங்களை அறிக்கையிடல்.
- உத்தேசிக்கப்பட்டவாறு செயற்பாடுகள் மற்றும் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா அல்லது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை தீர்மானிப்பதற்காக நிறுவப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுடன் அதன் விளைவுகள் எந்தளவு முரண்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் அச் செயற்பாடுகள் மற்றும் திட்டங்களை மீளாய்வுசெய்தல்.
- பின்வரும் குறிக்கோளினை நிறைவேற்றுகையில் ஆளுகைச் செயன்முறையினை மேம்படுத்துவதற்கான பொருத்தமான பரிந்துரைகளை மதிப்பீடு செய்து தயாரித்தல்.
    - நிறுவனங்களுக்கிடையே உரிய நடத்தை மற்றும் கீர்த்தியினை மேம்படுத்தல்.
    - திறமையான நிர்வாக செயலாற்று முகாமைத்துவத்தினையும் பொறுப்பினையும் உறுதிப்படுத்தல்.

இப்பணிப்பகத்தின் இணக்கப்பாட்டு அறிக்கை

<table>
<tr><th>இல</th><th>பொருத்தமான தேவைப்பாடு</th><th colspan="2">இணக்கப்பாட்டு நிலைமை (இணங்கப்பட்டது / இணங்கப்படவில்லை)</th><th>இணக்கப் பாட்டின்மைக்கான விரிவான விளக்கம்</th><th>எதிர்காலத்தில் இணக்கப்பாட்டின்மையினை தவர்க்கும் வகையில் முன்மொழியப்பட்ட உரிய நடவடிக்கைகள்</th></tr>
<tr><td>6</td><td>உள்ளக கணக்காய்வு</td><td colspan="2"></td><td></td><td></td></tr>
<tr><td>6.1</td><td>உள்ளக கணக்காய்வுத் திட்டமானது, 134(2) DMA/1-2019 ஆம் நிதிப் பிரமாணத்திற்கு இணங்க கணக்காய்வு அதிபதியின் ஆலோசனைக்குப் பின்னர் வருடத்தின் தொடக்கத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.</td><td colspan="2">நிதிப்பிரமாணம் 134 (2) மற்றும் DMA/1-2019 இற்கு இணங்க, கணக்காய்வாளர் அதிபதியுடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது</td><td></td><td></td></tr>
<tr><td rowspan="2">6.2</td><td rowspan="2">சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளும் ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கப்பட்டுள்ளன.</td><td>பதில்கள் கிடைக்கப்பெற்றன (ஒரு மாதத்திற்குள்)</td><td>பதில்கள் கிடைக்கப்பெற்றன (ஒரு மாதத்திற்கு மேலாக)</td><td rowspan="2">வழமையான தொடர் இயக்கப்பாட்டு நடவடிக்கைகளிலான வேலைப்பழுவின் காரணமாக</td><td rowspan="2">உடனடியான பதிலைப் பெற்று கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் கலந்தாராய்வதற்கு பல நினைவூட்டல்களை வினியோகித்தல்</td></tr>
<tr><td>31</td><td>32</td></tr>
<tr><td>6.3</td><td>2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(4)ஆம் உப பிரிவிற்கு இணங்க சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.</td><td colspan="2">ஆம்</td><td></td><td></td></tr>
<tr><td>6.4</td><td>134(3)ஆம் நிதி ஒழுங்கு விதிக்கிணங்க உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் சகல பிரதிகளும் கணக்காய்வுத் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.</td><td colspan="2">ஆம்</td><td></td><td></td></tr>
<tr><td>7</td><td>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு</td><td colspan="2"></td><td></td><td></td></tr>
<tr><td>7.1</td><td>2019 ஆம் ஆண்டின் DMA சுற்றுநிரூபம் 1 ற்கு இணங்க, குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் இவ் ஆண்டுக்காலப்பகுதியில் இடம்பெற்றன.</td><td colspan="2">ஆம்</td><td></td><td></td></tr>
</table>

8.6.4 நிதி முகாமைத்துவப் பணிப்பகம்

1. நிதி முகாமைத்துவப் பணிப்பகத்தின் வகிபாகம்

அரச வருமானத்தினைச் சேகரித்துக் கணக்கிடுதல், இலங்கைச் சுங்கத்திற்கான ஆதரவுமிக்க நிதி முகாமைத்துவச் சேவையினை வழங்குதல் மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற நோக்கங்களுக்காக சுங்கத் திணைக்களத்திற்குரிய வினைத்திறனும் வெளிப்படைத்தன்மையும் கொண்டதொரு நிதி முகாமைத்துவ முறைமையினை பேணுவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.
இலங்கைச் சுங்கமானது அரசாங்கத்திற்குரிய வரி வருமானத்தில் சுமார் 50% சதவீதத்திற்கும் அதிகமானளவினை ஈட்டிக்கொள்வதில் பங்களிப்புச் செய்கின்றதொரு அரசாங்கத்தின் பிரதான உழைப்பாளியாகத் திகழ்கின்றது. இந்த வகையில் நிதி பணிப்பகமானது ஒரு பாரிய வகிபாகத்தினை வகிப்பதோடு, திணைக்களத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கான நிதி சார்ந்த செயற்பாடுகள் தொடர்பில் பின்வரும் பிரதான விடயங்களுக்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

அ. செலவினம் மற்றும் வருமானம் ஆகியவற்றுக்கான வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரித்தல்.
ஆ. வரி வருமானத்தினை சேகரித்தல், பதிவு செய்தல் மற்றும் அறிக்கையிடல்.
இ. அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தினுள் செலவினத்தினை முகாமை செய்தல் மற்றும் தேவைப்படின் மேலதிக ஒதுக்கீட்டுக்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
ஈ. வழங்கப்படுகின்ற காலக்கெடுவிற்கு ஏற்ப, நிதி தொடர்பான தகவல்களை திறைசேரி செயற்பாட்டு திணைக்களம், அரசிறைக் கொள்கைத் திணைக்களம், கணக்காய்வுத் தலைமையதிபதி மற்றும் பிற ஆர்வமுள்ள குழுக்களுக்கு சமர்ப்பித்தல்.
உ. பல்வேறு வகையான நிதிகள் மற்றும் கணக்குகளை நிருவாகித்தல்
   i. சுங்க வைப்புக் கணக்குகள்
   ii. சுங்க வெகுமதி நிதியம்
   iii. சுங்க மேலதிக நேரம், வெளிநிலை பரிசோதனைகள் கட்டணம், தகவல் மற்றும் தொடர்பாடல் கட்டண நிதியம்
   iv. சுங்க அலுவலர்களது நஷ்டஈட்டு மற்றும் முகாமைத்துவ நிதியம்
   v. பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் கைது செய்யப்பட்ட பொருள் தொடர்பிலான அதிகாரமளிக்கப்பட்ட முற்பணக் கணக்கு
   vi. அரச உத்தியோகத்தர்கள் முற்பண "பீ" கணக்கு

ஊ. வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டம் மற்றும் தேசிய கணக்காய்வுச் சட்டம் என்பவற்றிற்கு இணங்க, மேற்கூறப்பட்ட கணக்குகளுக்கான வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து வழங்குதல்.

எ. கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் உள்ளக கணக்காய்வு பணிப்பாளர் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட கணக்காய்வு வினாக்கள் மற்றும் அறிக்கைகள் தொடர்பில் பதில்களையும், விளக்கங்களையும் மற்றும் அவதானிப்புகளையும் வழங்குதல்

1.1 பிரதான தொழிற்பாடுகள்

நிதி முகாமைத்துவ பணிப்பகமானது பிரதம நிதி அதிகாரியின் நோக்கெல்லையின் கீழ் அமைந்து காணப்படுவதோடு, இவர் இலங்கை கணக்காளர்கள் சேவையின் ஒரு விசேட தர அதிகாரியாவார். பிரதம நிதி அதிகாரி திணைக்களத்தின் உபாயம் சார்ந்த நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ள அதேவேளை, நிதி பணிப்பகத்தின் பணிப்பாளருக்கு மேற்பார்வை, ஒருங்கிணைப்பு மற்றும் திணைக்களத்தின் நிதி சார்ந்த முகாமைத்துவத் தொழிற்பாடுகளை நிருவகிப்பதற்கான பொறுப்பு வழங்கப்படுகிறது. இவருக்கு உதவியாக நான்கு பிரதிப் பணிப்பாளர்களும் ஒரு நிருவாக உத்தியோகத்தரும் உள்ளனர். மேலும், 114 எண்ணிக்கையுடைய துணை பணியாட்டொகுதியினர் (அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவைகள் அலுவலர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள்) நிதி பணிப்பகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளனர்.

நிதி பணிப்பகத்தின் தொழிற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கில், பின்வரும் உப பிரிவுகளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

- வருமானப் பிரிவு
- கொடுப்பனவுகள் பிரிவு
- சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரப் பிரிவு
- நிதி முகாமைத்துவப் பிரிவு
- வரி மற்றும் இதர சேவைகள் பிரிவு
- சிறாப்பர் பிரிவு

2. செயலாற்றுகை

2.1 வருமானப் பிரிவு

பிரதிப் பணிப்பாளரின் (வருவாய்) நேரடி கண்காணிப்பின் கீழ் வருகின்ற இப் பிரிவானது, இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளை மற்றும் மக்கள் வங்கியின் டியூக் வீதி கிளையில் இயக்கப்படும் இரு பிரதான சேகரிப்பு கணக்குடன் தொடர்புபடுத்தப்பட்ட 19 உப சேகரிப்பு வங்கி கணக்குகள் மூலம் செயற்படுத்தப்படுகின்ற 43 சேகரிப்பு நிலையங்கள் ஊடாக வருவாயினை சேகரிப்பதற்கு பொறுப்பாயுள்ளது. மேலும், இவ்வாறு சேகரிக்கப்படுகின்ற வருமானமானது, அரசாங்கம் தனது நிதி சார்ந்த கடப்பாடுகளை எதிர்கொள்ளும் வகையில் அதனை இயலச் செய்வதற்காக, திறைசேரியின் பிரதிச் செயலாளரின் கணக்கிற்கு இலத்திரனியல் முறையூடாக தினமும் அனுப்பிவைக்கப்படுகிறது.

வருமானப் பிரிவின் பிரதான தொழிற்பாடுகள்

i. திணைக்களத்திற்காக வருடாந்த அரசிறை மதிப்பீட்டினை தயாரித்தல்.
ii. வருவாய் சேகரிப்பு நிலையங்களிலிருந்து நாளாந்த காசு பதிவுப் பத்திரங்களை சேகரித்தது அவற்றை வங்கிக் கூற்றுக்களுடன் சரிபாரத்தல்.
iii. அரச முகவர்களிடமிருந்தான வருமான நிலுவைகளைச் சேகரித்தல்.
iv. நாளாந்த மற்றும் மாதாந்த அரசிறை இலக்குகள் மற்றும் அரசிறை சேகரிப்பு செயலாற்றுகைகளை திறைசேரிக்கு வழங்குதல். (திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம் / அரசிறைக் கொள்கைத் திணைக்களம்)
v. வருமான சேகரிப்பு குறித்த மாதாந்த சிகாஸ் சாராம்சத்தினை அரச கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்
vi. வருடாந்த நிதிக்கூற்றுக்களில் ஒருபாகமாகவுள்ள அரசிறைக் கணக்கினை தயாரிப்பதற்கு உதவுதல் மற்றும் அதனை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல்.
vii. சேகரிக்கப்படும் 3% பெறுமதி சேர் வரியினை மாதாந்த அடிப்படையில் கணக்கிடலும் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் செயற்படுத்தப்படும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணக்கிற்கு மாற்றுதலும்.
viii. பின்வரும் மூன்று வகைகளின் கீழ் வருமானத்தினை மீளளிப்புச் செய்தல்
   - சுங்கக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 18 மற்றும் 22 இல் உள்ள ஏற்பாடுகளுக்கிணங்க, மீளளிப்பதற்காக திறைசேரியின் ஒப்புதலைப் பெறுவதற்குச் சமர்ப்பித்தல்.
   - நிதிப்பிரமானம் 118 இன் கீழ் கூடுதலான செலுத்துகை மற்றும் மேலதிக கொடுப்பனவுகளுக்கான மீளளிப்பு விண்ணப்பத்தினை சமர்ப்பித்தல்.
   - 1/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் கீழ், ஒன்றுக்கு மேற்பட்ட தடைவை செலுத்தல்களை மேற்கொண்டு வருகின்றன இலத்திரனியல் செலுத்துகை முறைக்கு மீளளிப்புச் செலுத்தலை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

2023 மற்றும் 2024 ஆம் நிதி ஆண்டுகளுக்கான மதிப்பிடப்பட்ட அரசிறையுடன் உண்மையாக சேகரிக்கப்பட்ட அரசிறை ஆகியவற்றுக்கியிலான ஒப்பீட்டாய்வு கீழே குறிப்பிடப்படுகிறது

வருடாந்த மதிப்பீடு மற்றும் உண்மையாக சேகரிக்கப்பட்ட அரசிறை ஆகியவற்றின் ஒப்பீட்டாய்வு (ரூபா.மில்)

அரசிறைக் குறியீடு	விபரம்	2023		2024	
		மதிப்பிடப் பட்டது	அடையப் பெற்றது	மதிப்பிடப் பட்டது	அடையப் பெற்றது
1001.01.00	இறக்குமதித் தீர்வை	88,000	105,120	175,000	111,147
1001.02.00	ஏற்றுமதித் தீர்வை	28	27	35	27
1001.04.00	துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு	166,000	175,486	175,000	170,014
1001.05.01	இறக்குமதி செஸ் அறவீடு	51,000	54,956	58,000	79,133
1001.05.02	ஏற்றுமதி செஸ் அறவீடு	2,000	2,228	2,000	1,995
1001.08.00	விசேட பண்ட அறவீடு	50,000	51,327	95,000	115,199
1002.05.01	உற்பத்தி வரி - சிகரெட்டுகள்	120,000	117,467	143,000	117,145
1002.05.03	பெற்றோல் மற்றும் டீசல்	114,000	143,642	135,000	200,200
1002.05.04	மோட்டார் வாகனம்	30,000	32,526	30,000	58,562
1002.05.99	ஏனையவைகள்	4,000	4,713	5,000	8,039
2003.07.10	வாகன உரித்துடைமை அறவீடு	115	979	165	240
2003.02.17	ஆடைகள் விற்பனை	123	171	122	121
2003.03.01	தண்டங்களும் பறிமுதல்களும்	2,696	5,438	1,500	8,024
	மொத்த சுங்க வருமானம்	**627,962**	**694,081**	**819,822**	**869,846**
2004.04.02	பொருளாதார சேவைக் கட்டணம்	8	12	12	201
1002.12.03	தேசக் கட்டுமான வரி	10	260	26	8
1002.01.04	இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர் வரி	220,500	225,236	660,000	597,493

1002.16.00	சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு	48,000	51,274	55,000	64,392
1003.01.00	சொகுசு வாகன வரி	591	2,693	2,000	2,772
2003.02.99	இதர	191	546	393	297
2003.99.00	ஏனைய பெறுகை	39	362	210	122
மொத்த பிற வருமானம்		**269,339**	**280,384**	**717,641**	**665,285**
மொத்த வருமானம்		**897,301**	**974,465**	**1,537,463**	**1,535,131**

2.2 கொடுப்பனவுகள் பிரிவு

பிரதிப் பணிப்பாளரின் (கொடுப்பனவுகள்) நேரடி கண்காணிப்பின் கீழ் வருகின்ற கொடுப்பனவுகள் பிரிவானது, பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறாக வருடாந்த மதிப்பீடுகளில் மேற்கொள்ளப்படுகின்ற நிதி ஏற்பாடுகளின் கீழ் சகல கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளுவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. அத்துடன், சுங்க அலுவலர்கள் முகாமைத்துவ மற்றும் நஷ்டஈட்டு நிதியக் கணக்கு, பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் கைதுசெய்யப்பட்ட பொருள் தொடர்பிலான முற்பணக் கணக்கு, அரச உத்தியோகத்தர்களது முற்பணக் கணக்கு, சுங்க வெகுமதி நிதியம் மற்றும் வைப்புக் கணக்குகளின் கீழான வெகுமதிக் கொடுப்பனவு ஆகியவற்றின் ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரதான தொழிற்பாடுகள்

i. மீண்டெழும் மற்றும் மூலதன செலவினத்திற்கான வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினைத் தயாரித்தல்.
ii. அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கிற்கான எல்லைகளை தீர்மானித்தல்.
iii. திணைக்களத்தின் இரு அலுவலக வங்கி கணக்குகளை நிருவாகித்தல் மற்றும் பேணுதல்.
iv. வருடாந்த செலவினத்தினை 4.5 பில்லியன் பாதீட்டு எல்லைக்குள் கட்டுப்படுத்தல்.
v. சம்பளங்கள், விநியோகங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றிற்காக கொடுப்பனவுகளை சான்றுபடுத்துதலும் செலுத்துதலும்.
vi. மாதாந்த கணக்குகளை CIGAS ஊடாக திறைசேரிக்கு சமர்ப்பித்தல்.
vii. வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு என்பவற்றினை திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கும் வகையில் தயாரித்தல்.
viii. 2,300 இற்கு மேற்பட்ட பணியாளர்களது ஊதியங்களாக சம்பளங்கள், மேலதிக நேரம், வெகுமதிகள், குழுக் கொடுப்பனவு, பொதுவான கொடுப்பனவு, ஊக்குவிப்பக் கொடுப்பனவு போன்றவற்றினை SLIP முறைமையூடாக உரிய நேரத்தில் செலுத்துதல்

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுக் காலத்தின் போது வருடாந்த மதிப்பீடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் சம்பந்தப்பட்ட ஆண்டுக்குரிய வரவுசெலவுத் திட்டத்துடன் கீழே ஒப்பாய்வு செய்யப்படுகிறது.

செலவின முகாமைத்துவம் (ரூபா.மில்)						
விபரம்	**2023**			**2024**		
	மதிப்பிடப் படவை	**உண்மையாக அடையப்பட்டவை**	**உபயோக வீதம்**	**மதிப்பிடப் படவை**	**உண்மையாக அடையப்பட்டவை**	**உபயோக வீதம்**
மீண்டெழும் செலவினம்	4,798	3,801	79	3,878	3,684	95
மூலதனச் செலவினம்	483	240	50	594	459	77
அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு செலவினம்	60	28	47	55	32	58
மொத்தம்	**5,341**	**4,069**	**77**	**4,527**	**4,175**	**92**

2.3 சம்பளம் மற்றும் மேலதிக நேரப் பிரிவு

பிரதிப் பணிப்பாளரின் (சம்பளம் மற்றும் மேலதிக நேரம்) நேரடி கண்காணிப்பின் கீழ் வருகின்ற இப் பிரிவானது திணைக்களத்திலுள்ள சுமார் 2300 ஊழியர்களுக்கான சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. எனவே, தமது இறக்குமதி மற்றும் ஏற்றுமதியுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளை துரிதப்படுத்திக்கொள்வதற்காக பொதுவான அலுவலக நேரங்களின் பின்னர் சுங்கத்தின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்ற இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடமிருந்து அறவீடு செய்து குறித்த பணியின் போதான மேலதிக நேரத்தைக் கணிப்பிட வேண்டியுள்ளது. இவ்வாறு அறவிடப்படுகின்ற பணத்தொகையானது சுங்க மேலதிக நேரம், சரக்குப் பரிசோதனைக் கட்டணங்கள் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியக் கணக்குகள் போன்றவற்றுக்கு மத்தியில், அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுத் திட்டங்களின் பிரகாரம் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

பிரதான தொழிற்பாடுகள்

I. திணைக்களத்தின் 2300 இற்கும் மேலான ஒழியர்களுக்கு சம்பளங்களைச் செலுத்துதல்.
II. மேலதிக நேரம், சரக்கு பரிசோதனைக் கட்டணம் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதிக்கான வருடாந்த வரவு செலவுத்திட்டத்தினை தயாரித்தல்.
III. சம்பந்தப்பட்ட தரப்பினர்களிலிருந்து (கப்பல் முகவர்கள், விமான நிறுவனங்கள், களஞ்சியசாலைகள்) மேலதிக நேர வருவாய்களை மதிப்பீடு செய்து சேகரித்தல்.
IV. சகல பணியாளர்களுக்கும் மேலதிக நேர கொடுப்பனவினை மேற்கொள்ளல்.
V. காலத்திற்கு காலம் மேலதிக நேர கட்டணங்களை மீளாய்வு செய்வதற்கும் அவற்றைத் திருத்துவதற்கும் சிபாரிசினை மேற்கொள்ளல்.
VI. சுங்க மேலதிக நேரம், சரக்கு பரிசோதனைக் கட்டணம் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதி தொடர்பிலான இறுதிக் கணக்குகளை தயாரித்தல்.

இதற்கிணங்க, கடந்த இரண்டு வருடங்களுக்கான சுங்க மேலதிக நேரம், சரக்குப் பரிசோதனைக் கட்டணங்கள் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியக் கணக்குகள் குறித்தான ஒட்டுமொத்த நிதி சார்ந்த செயற்பாடுகள் பின்வருமாறு

சுங்க மேலதிக நேரம், சரக்குப் பரிசோதனைக் கட்டணங்கள் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியம்

(அ) சுங்க மேலதிகநேர நிதியம்

விபரம்	ரூபா. மில்	
	2023	**2024**
ஆரம்ப மீதி	1,777.71	1,651.56
பெறுவனவுகள்	821.39	908.23
அரசாங்கத்திற்கான பங்களிப்பு	82.06	88.66
மேலதிக நேர கொடுப்பனவுகள்	865.48	957.28
இறுதி மீதி	1,651.56	1,513.85

(ஆ) சரக்குப் பரிசோதனை மற்றும் தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப நிதியங்கள்

விபரம்	(ரூபா.மில்)			
	சரக்குப் பரிசோதனைக் கட்டண நிதியம்		**தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியம்**	
	2023	**2024**	**2023**	**2024**
ஆரம்ப மீதி	398.48	334.01	4.99	7.49
பெறுவனவுகள்	243.39	307.10	13.73	14.96
செலுத்துகைகள்	154.02	115.52	8.99	13.97
அரசாங்கத்திற்கான பங்களிப்பு	153.84	115.51	2.25	3.49
இறுதி மீதி	334.01	410.08	7.49	4.99

(இ) சம்பளம் செலுத்துகை பற்றிய விபரங்கள் வருமாறு

வருடம்	**ஊழியர்களின் எண்ணிக்கை**	**செலுத்திய மொத்தத் தொகை (ரூபா.மில்)**
2023	2,124	1,569.29
2024	2,265	1,875.47

2.4 நிதி முகாமைத்துவப் பிரிவு

பிரதிப் பணிப்பாளரின் (நிதி முகாமைத்துவம்) நேரடி கண்காணிப்பின் கீழ் வருகின்ற இப் பிரிவானது பின்வரும் கணக்குகளுக்காக பெறப்படும் சகல பெறுவனவுகளையும் பெறுதல், பதிவுசெய்தல் மற்றும் கணக்கிடுதல் என்பவற்றிற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. இத்தகைய பெறுதல்களில் அபராத விதிப்பனவுகள், விற்பனை வருமானங்கள் மற்றும் ஏனைய பல்வேறு வைப்புகள் போன்றன உள்ளடங்குகின்றன. அபராதங்கள் மற்றும் விற்பனை வருமானங்கள் போன்றன முதலில் பிரதான வைப்பனவுக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதோடு, விசாரணை மற்றும் மேன்முறையீட்டு நடவடிக்கைகள் நிறைவடைந்ததும், அத்தகைய பெறுகைகள், சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 153 ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் சுங்க வெகுமதி நிதியம், சுங்க அலுவலர்கள் இழப்பீட்டு நிதியம் மற்றும் பிற பொதுவான நிதியம் ஆகியவற்றுக்கு மாற்றப்படுகின்றன.

பிரதான தொழிற்பாடுகள்

I. சுங்க வெகுமதி நிதியம் மற்றும் சுங்க அலுவலர்கள் நஷ்டஈடு மற்றும் முகாமைத்துவ நிதியத்திற்கான வரவு செலவுத்திட்டங்களை தயாரித்தல் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரத்தினை பெறல்
II. அதிகாரமளிக்கப்பட்ட முற்பணக் கணக்குகளின் (ARABA கணக்கு) எல்லைகளை தீர்மானித்தல்.
III. சட்டபூர்வமான கொடுப்பனவுகள், கேள்வு வைப்புகள் மற்றும் ஏனைய நானாவித வைப்புகளுக்கான தற்காலிகத் தடுத்துவைத்தல் வைப்புக் கணக்குக்கான பண வைப்புப் பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் வங்கிகள் மற்றும் காசாளர் ஊடான வைப்புகள் மூலம் பெறப்பட்ட சகல பற்றுச்சீட்டுகளையும் பதிவு செய்தல்.
IV. வருமானப் பிரிவின் கணக்கிடல் மற்றும் அறிக்கையிடல் நோக்கங்களுக்காக, காசாளர் கரும பீடங்களுக்கான நாளாந்த காசுப் பதிவுகளைத் தயாரித்துச் சமர்ப்பித்தல்.
V. வெகுமதிகள் செலுத்தும் போது, தற்காலிக பேணுகை வைப்புக் கணக்கிலிருந்து வெகுமதி நிதியம், சுங்க அலுவலர்கள் முகாமைத்துவ நிதியம், திரட்டு நிதியம் மற்றும் ஏனைய நிதியங்களுக்கு மாற்றுக் கட்டளை மூலம் பற்றுச்சீட்டுத் தொகைகளை அனுப்புதல்.
VI. வெகுமதிக் கோவைகள் தொடர்பிலான கொடுப்பனவுகளை செயன்முறைப்படுத்தும் போது பதியப்பட்டுள்ள விற்பனைகள் மற்றும் அபராதங்களை சரிபார்த்தல்.
VII. குழுக் கட்டணம், பொதுவான கட்டணம் மற்றும் பரிசோதனைக் கட்டணங்களை சுங்க அதிகாரிகளுக்கு செலுத்துவதற்கான கோரிக்கைகளைத் தயாரித்தல்.
VIII. சுங்க வெகுமதி நிதியம், சுங்க அலுவலர்கள் நஷ்டஈட்டு மற்றும் முகாமைத்துவ நிதியம், தற்காலிக பேணுகை வைப்புகள் கணக்குகள், பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் அரசுடமையாக்கப்பட்ட முற்பணக் கணக்கு (ARABA) என்பவற்றுக்கான இறுதிக் கணக்குகளை அல்லது வருடாந்த கணக்கிணக்கக் கூற்றுக்களை தயாரித்தல்.

2.4.1 இதற்கிணங்க, பின்வரும் நிதிக் கூற்றுக்கள் மாற்றியமைக்கப்பட்ட அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்படுவதோடு, அத்தகைய கூற்றுக்கள் கணக்காய்வுக்காக கணக்காய்வுத் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

சுங்க அலுவலர்களது வெகுமதி நிதியம்

சுங்க அலுவலர்கள் இழப்பீடு மற்றும் முகாமைத்துவ நிதியம்

விபரம்	சுங்க வெகுமதி நிதியம் (ரூபா மில்)		சுங்க அலுவர்களது முகாமைத்துவ மற்றும் நஷ்டஈட்டு நிதியம் (ரூபா மில்)	
	2023	**2024**	**2023**	**2024**
வருமானம்	5,611.80	8,975.90	2,463.30	3,413.70
செலவினம்	5,187.50	8,507.20	63.30	66.70
மிகை/ பற்றாக்குறை	424.30	468.70	2,400.00	3,347.00
நிலையான சொத்துகள்	-			5.00
நிதி மீதி	1,844.60	2,313.30	12,485.10	15,837.10

2.4.2 மேலும்,"பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பிலான முற்பணக் கணக்கு" எனும் முற்பணக் கணக்கானது, சட்டவிரோதமாக இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்படுகின்ற மற்றும் சுங்கத்தினால் பறிமுதல் செய்யப்படுகின்ற பொருட்களை அல்லது பண்டங்களை அகற்றுவதுடன் தொடர்புடைய செலவினங்களை எதிர்கொள்ளும் நோக்கில், இந்தப் பிரிவினாலேயே கையாளப்படுகின்றது. இத்தகைய செலவினங்கள் குறித்த பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை விற்றுப் பெறப்படும் வருமானங்கள் மூலம் ஈடு செய்யப்படுகின்றன.

பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் முற்பணக் கணக்கு தொடர்பிலான கடந்த இரண்டு வருடங்களுக்கான விபரங்கள் பின்வருமாறு,

விபரம்	2023 (ரூபா மில்)			2024 (ரூபா மில்)		
	செலவினம்	**பெறுவனவுகள்**	**மீதி**	**செலவினம்**	**பெறுவனவுகள்**	**மீதி**
வரையறைகள்	16.0	4.0	75.0	16.0	05	70
உண்மை	15.9	14.1	31.5	10.80	14.30	28.00

2.4.3 மேற்படி நிதியங்கள் மற்றும் கணக்குகளுககுக மேலதிகமாக, பின்வரும் வைப்புக் கணக்குகளும் இப்பிரினால் பேணப்படுகின்றன.

விபரங்கள்	வைப்புக் கணக்கின் பெயர் (ரூ.மில்)					
	கேள்வுமனு		சட்டபூர்வ செலுத்துகை பற்றிய தற்காலிக பிடிமானம்		பயணிகளால் கொண்டுவரப்பட்ட பொருட்களுக்கான வைப்புகளை நிறுத்திவைத்தல்	
	2023	**2024**	**2023**	**2024**	**2023**	**2024**
ஆரம்ப மீதி	86.2	73.9	11,890.7	16,250	6.7	0.9

ஆண்டுக் காலப் பகுதியிலான பெறுவனவுகள்	430.5	669.5	34,040.6	46,033	18.3	10.7
	516.7	**743.4**	**45,931.3**	**62,283**	**25.0**	**11.6**
ஆண்டுக் காலப் பகுதியிலான செலுத்துகைகள்	442.8	637.2	29,680.8	44,527	24.2	11.2
இறுதி மீதி	**73.9**	**106.2**	**16,250.5**	**17,756**	**0.8**	**0.4**

2.5 வரி மற்றும் இதர சேவை பிரிவு

நிதிப் பணிப்பகமானது, உத்தரவாதங்களை வறியோகித்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றுக்கும், மற்றும் திணைக்களத்தின் ஊழியர்களுக்கான உழைக்கும் போது செலுத்தும் வரி பற்றிய தரவுத் தளத்தனை நிர்வகிப்பதற்குமான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் ஊழியர்கள், தமது சாதாரண சம்பளங்களுக்கும் மேலதிகமாக மேலதி நேரக் கொடுப்பனவு, ஊக்குவிப்புப் படிகள், வெகுமதிப் படிகள், குழு பரிசோதனைப் படிகள் மற்றும் பொது ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் போன்ற இன்னோரன்ன நிதி சார்ந்த அனுகூலங்களைப் பெறுவதற்கு சலுகையுடையவர்களாக இருக்கின்ற காரணத்தினால் ஏனைய அரச ஊழியர்களுடன் ஒப்பிடுகையில் பிரதான வரி செலுத்துனர்களாக விளங்குகின்றனர். இப் பிரிவானது, ஒவ்வொரு ஊழியர்களுக்குமான உழைக்கும் போது செலுத்தும் வரியைக் (PAYE) கணிப்பிட்டு (அவர்களின் ஒப்புதலுன்) அத்தகைய அறவீடுகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கிரம அடிப்படையில் அனுப்பி வைக்கிறது.

பிரதான தொழிற்பாடுகள்

வரிப் பிரிவு

i. திணைக்களத்தின் 2300 இற்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு செலுத்தப்படுகின்ற சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் மீதான உழைக்கும் போது செலுத்தும் வரியினை (வெகுமதி, பொதுவானது, குழு) மாதாந்த அடிப்படையில் கணிப்பிடுதல்.
ii. உழைக்கும் போது செலுத்தும் வரியினை அறவீடு செய்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல்.
iii. வரித் தரவுத்தளத்தினைப் பேணுதல்.
iv. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கும் ஊழியர்களுக்கும் வரித் திரும்பல்களை (படிவம் ரீ.10) விநியோகித்தல்

இதர சேவைகள் பிரிவு

i. நிதிப் பணிப்பகத்திற்கான பொது நிர்வாக உதவியினை வழங்குதல்.
ii. வரவு, விடுப்பு, களஞ்சியங்கள் போன்றவற்றைக் கண்காணித்தல்.
iii. அலுவலர்களுக்கு வருமான அறிக்கைகளை விநியோகித்தல்.
iv. இப் பிரிவின் அஞ்சல்களை நிர்வகித்தல்.

உழைக்கும் போது செலுத்தும் வரி பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

வரி ஆண்டு	ஊழியர்களின் எண்ணிக்கை	அறவிடப்பட்ட உழைக்கும் போது செலுத்தும் வரி (ரூ.மில்)
2023ஏப்ரல் – 2024 மார்ச்	1,838	1,614.2
2024 ஏப்ரல் – 2025 மார்ச் 01	3,312	1,937.7

2.6 சிறாப்பர் பிரிவு

இப்பிரிவானது பிரதிப் பணிப்பாளரின் (வருமானம்) கண்காணிப்பின் கீழ் நிர்வாக உத்தியோத்தர் ஒருவரின் தலைமையில் உள்ளது. தற்போது, இப்பிரிவில் சிறாப்பர்களாக பணியாற்றுவதற்காக 22 முகாமைத்துவ உதவி அலுவலர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.
ஹம்பாந்தோட்டை, கட்டுநாயக்க விமானநிலையம், பலாலி விமான நிலையம், மத்தளை விமான நிலையம், கொழும்புத் துறைமுகம் மற்றும் தலைமை அலுவகம் உள்ளடங்கலாக 15 சிறாப்பர் கருமபீடங்கள் நாடளாவிய ரீதியில் உள்ளன. 10 கரும பீடங்கள் வாராந்தம் 24 மணித்தியாலங்களும் திறந்துள்ளன.

8.6.5 உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) பிரிவு

அறிமுகம்

1990ஆம் ஆண்டின் 40ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1994ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டமானது இலங்கை அரசாங்கத்தின் உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) கொள்கைகளை அமுல்படுத்துவதற்கான சட்டமாகும்.
நிதி அமைச்சின் கீழான இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் கீழ் இயங்கிவருகின்ற இப்பிரிவானது உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தவதற்கான பொறுப்புடனும் தேசத்தின் நலனுக்காகச் செய்யப்படும் ஒழுங்கு விதிகளுடனும் பொறுப்புள்ள அரச முகவராக முக்கிய பணியினை நிறைவேற்றுகிறது.

பிரதான தொழிற்பாடுகள்

1. சிகரெட்டுகள் மற்றும் பிற தயாரிப்பு நிறுவனங்களை கண்காணித்து அவற்றைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக உரிய அரசிறையினைத் துல்லியமாக சேகரித்தல்
2. உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரிச் சட்டத்திற்கேற்ப சட்ட அமுல்படுத்தல் அதிகார சபையாக செயற்பட்டு, இறக்குமதி செய்யப்படுகின்ற மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்தி வரி விதிக்கத்தகு பொருட்களில் இருந்து உற்பத்தி வரியினை சேகரித்தல்
3. உற்பத்தி வரியை விதித்தலுடன் தொடர்புபட்ட சகல நடவடிக்கைகளிலும் ஈடுபடல்

நோக்கெல்லையும் குறிக்கோள்களும்

இப்பிரிவின் நோக்கெல்லையானது இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அல்லது இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் பொருள் மீது விதிக்கப்படும் உற்பத்தி வரி வருமானத்தை திறமையாக சேகரிப்பதற்கும் மற்றும் அதன் மூலம் தேசிய அபிவிருத்திச் செயன்முறைக்கு உதவுவதுமாகும்.

இப்பிரிவின் குறிக்கோள்கள் வருமாறு;

அ. 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினை அமுல்படுத்தல்
ஆ. பெற்றோலியம், சிகரெட்டுகள், மென் பானங்கள், பந்தய வெளியீடுகள், உள்நாட்டில் பொருத்தப்படும் வாகனங்கள், கொழுப்பு அமிலம், பழரச பானங்கள் மற்றும் ஏனைய உற்பத்தி வரி விதிக்கத்தகு பொருட்களிலிருந்தான வருவாய்களை பாதுகாப்பாக சேகரித்தல்.

முறைமை மற்றும் நடைமுறைகள்

இப்பிரிவின் தொடக்கம் முதற்கொண்டு, குறித்த சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளைக் கொண்ட வர்த்தமான அறிவித்தலானது காலத்திற்குக் காலம் பிரசுரிக்கப்பட்டுள்ளன. மேலும் உற்பத்தி வரியின் கட்டமைப்பானது மேற்படி ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளுக்கு ஏற்ப அமுல்படுத்தப்பட்டன.

2024 ஆம் ஆண்டுக் காலத்தில் சிகரெட்டுகள் / மென் பானங்களுக்கான உற்பத்தி வரி தொடர்பிலான முக்கிய மாற்றங்கள்

